# சட்டமும் தமிழும்

## (CHATTAMUM THAMIZHUM)

செ. சிறீக்கந்தராசா அ. இ.
வழக்குரைஞர்

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

வெளியீடு
இரஞ்சனா பதிப்பகம்
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு—13.

# சட்டமும் தமிழும்

ஆசிரியர்: செ. சிறீக்கந்தராசா

முதலாம் பதிப்பு: ஒத்தோபர் '71

படிகள்: 1000

விலை: ரூபா 5-00

அச்சுப்பதிப்பு: இரஞ்சனா அச்சகம்,
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு-13.

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# பதிப்புரை

தாய்மொழி மூலம் கல்வியே தக்கது. தன்மானத்திற்குப் பொருந்துவது. தொழில் வளத்திலும் அறிவியற் சாதனையிலும் முன்னணியிலுள்ள நாடுகள் தாய்மொழி மூலம் கல்வியின் செழுமைக்குச் சான்று. தாய் மொழி மூலம் கல்வி நமது நாட்டிலே சகல துறைகளிலும் விரிவடைந்துள்ளமை சங்கைக்குரியது. சங்கையுடன் இசையும் வகையில், சட்டத்துறை சார்ந்த இந்நூல் வெளிவருதல் உவகைக்குரியது.

சட்டத்துறை சார்ந்து, இலங்கையில், தமிழிலே வெளிவரும் முதலாவது நூலென்ற பெருமையும் இதற்கே உரியது எனவும் நம்புகின்றோம். முதலாவது நூலே முழுமையானதாக அமைதல் அரிது. அந்த அருமை இங்கு கைகூடியுள்ளது. இது நூலாசிரியருக்கு இத்துறையிலுள்ள அகன்ற புலமைக்கும், திறமைக்கும் சான்றாய் அமையும். அடைப்புக் குறிக்குள் வரும் சட்ட இலக்கங்களைச் சிரத்தையிற் கொள்ளாது இந்நூலை வாசிக்கும் பொழுது, பொதுமக்களுக்காகவே எழுதப்பட்ட நூலின் சுவையே ஏற்படுகின்றது. இது நூலின் தலைமைச் சிறப்பு என்பதைச் சட்ட மாணுக்கரும் உணருவர்.

ஆங்கில மொழி மூலம் சட்டம் பயின்ற பொழுது இலத்தீன் மொழி அறிவு வற்புறுத்தப்பட்டது. தமிழில் சட்டம் பயிலும் பொழுது, பிறமொழி அறிவும் வற்புறுத்தப்படலாமோ என்ற அச்சம் எழுதல் இயல்பு. இந்நூலிலே ஆளப்பட்டுள்ள தூய தமிழ் இந்த அச்சத்தைப்

போக்கி விடுகின்றது. நூலின் நடை இறுக்கமானது. கிரந்த எழுத்துக்கள் இயன்றவரை தவிர்க்கப்பட்டுள்ளன. புணரியலும், ஏனைய இலக்கண விதிகளும் கட்டுப்பாட்டுடன் கையாளப்பட்டுள்ளன. விடயஞானத்திற்கு மொழிப் புலமை இன்றியமையாதது என்பதை இஃது எண்பிக்கின்றது.

'சொற்றொகுதி' என்னும் தனி அத்தியாயம் இறுதியிலே சேர்க்கப்பட்டுள்ளது. இந்நூலின் தேவைக்கு அப்பாலுமுள்ள, சட்டத்துறை சார்ந்த சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் தரப்பட்டுள்ளன. இவ்வத்தியாயத்தில் இயற்றப்பட்ட சொல்லாக்கப்பணி நற்பயன் தேக்கியது.

சட்டத்துறை மொழிபெயர்ப்பாளர்களுக்கு இது தக்க கைந்நூல். உரிய காலத்தில், சரியான திசையில் இயற்றப்படும் இந்த நன் முயற்சிக்கு, ஈழத் தமிழர் மத்தியில் மட்டுமல்லாமல், கடல் கடந்த நாடுகளிலே வாழும் தமிழர்கள் மத்தியிலும் பரந்த ஆதரவு கிட்டும் என நம்புகின்றோம்.

இரஞ்சனு பதிப்பகம்,
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு-13.
17-10-71

ஆ. நடராசா

# முன்னுரை

1971 ஆம் ஆண்டிலிருந்து சட்டக்கல்வியானது சட்டக் கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும் தமிழ்மொழி மூலம் மாகவும் கற்பிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனல், மாணவர்க்குத் தேவையான சட்டநூல்கள் தமிழில் இல்லாமையால் மாணவரும் ஆசிரியரும் மறுகினர். தமிழில் சட்டக் கல்வி பயில முடியுமா என்ற ஐயமும் இடையிடையே எழுந்தது. தமிழில் முடியுமா முடியாதா என்பதை நிதானிப்பதற்குச் சட்டநூல் ஒன்று அவசியம் என்று கருதினேம். அப்படியான நூல்தானும் குறிப்பிட்ட ஒரு சட்டத்துறை பற்றியதாய் இருப்பதைக்காட்டிலும் பரந்த ஒன்ருக இருப்பது விரும்பத்தக்கது என்று தோன்றியது; ஆழமாக இல்லாவிட்டாலும் அகன்றதாக இருப்பது அவசியம் எனத் தீர்மானித்தோம்.

சட்டத்துறை மொழிபெயர்ப்பில் பலகால அனுபவமுடைய நாம் முயன்ருலொழிய வேறெவரும் முயலமாட்டார்கள் என்ற எண்ணமும் எம்மை முடுக்கியது. சட்டங் கற்பிக்கும் ஆசிரியர்களும் சட்ட அறிஞர்களும் எம்மை ஊக்கினர்கள். இதன் விளைவுதான் இந்த நூல். இது கன்னி முயற்சி என்பதையும் ஈழத்தில் தமிழில் வெளியாகும் முதலாவது சட்டநூல் என்பதையும் கருத்திற் கொண்டு குறை பொறுத்தல் அறிஞர் கடன். மேலுஞ் சில சட்டநூல்களை உடனடியாக வெளியிடுவதற்கு ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கும் எமக்குத் தமிழ்ப்பெருமக்கள் ஆதரவு தருதல் வேண்டும்.

சட்டநூல் எழுத முயல்வோர்க்கும் சட்டமாணவர்க்கும் சட்டவறிஞர்க்கும் சட்டக்கல்வி புகட்டும் ஆசிரியர்க்கும் இந்நூல் வழிகாட்டியாக உதவுமேல் எங்கள் நோக்கம் நிறைவேறும். சட்டநுணுக்கங்களை இயன்றவரை தவிர்த்

துச் சாதாரணபாணியில் எழுதியுள்ளோமாதலால், சட்டத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்பும் எவர்க்கும் இந்நூல் பயன்தரும் என்று நம்புகிறோம்.

அச்சுக்குப் போகுமுன் இந்த நூலை வாசித்துப் பார்த்து ஆக்கம்பயக்கும் கருத்துக்கள் பலவற்றைக் கூறியதோடு உள்ளம்உவந்து முகவுரையும் நல்கிய வழக்குரைஞர் எஸ். சர்வானந்தா, பி. ஏ. (இலண்டன்) எல்எல். பி. (இலண்டன்) அவர்களுக்கு என்றென்றும் நன்றியுடையோம்.

நூல் அச்சாகிக் கொண்டிருக்கும்போது பார்வைப்படிகளைப் பார்ப்பதில் பேருதவி செய்த காவலூர் கா. சிவபாலன் அவர்கட்கும் வழக்குரைஞர் கே. கதிரைவேலுப்பிள்ளை அவர்கட்கும் எமது நன்றி உரித்தாகுக. நூலை அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த இரஞ்சனா அச்சகத்தின் தொண்டினைப் பாராட்டுகின்றோம். அதே சமயத்தில் அச்சக ஊழியரின் திறமையையும் பொறையையும் போற்றுகிறோம்; அவர்கட்கும் நன்றி.

தமிழுலகம் எமது முதல் முயற்சியைப் பாராட்டி உற்சாகம் தரும் என்று அமைகிறோம்.

வணக்கம்

செ. சிறீக்கந்தராசா

154, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு—13.
15—10—1971.

# முகவுரை

இன்று இருக்கும் நீதிமன்றங்களுக்கு நிகரான நீதிமன்றங்களோ, இப்போது நடைமுறையிலிருக்கும் நீதிநிருவாகம் போன்ற நீதிநிருவாகமோ, தற்போது புழக்கத்தில் இருக்கின்றவற்றையொத்த சட்டத் தொகுப்புக்களோ சங்ககாலத் தமிழரிடம் இருந்திருக்காது விட்டாலும், அந்தக் காலச் சமுதாயத்துக்கேற்ற நீதிமன்றங்களும் நீதிநிருவாக முறையும் அக்காலத்தில் இருந்திருத்தல் வேண்டும். மற்றெல்லா விதங்களிலும் முன்னேற்றம் அடைந்திருந்த தமிழர் சட்டத்துறையில் முன்னேற்றம் அடையாது இருந்திருக்கமாட்டார்கள். ஆனல் சட்டத்துறை அல்லது நீதித்துறை பற்றிய குறிப்புக்கள் தமிழ் இலக்கியத்தில் காணப்படாதது விந்தையே!

பரந்த அடிப்படையில் அமைந்த நீதிநிருவாகம் தமிழ்நாட்டில் இருக்கவில்லையெனினும் நீதிமன்றங்கள் இருந்தன என்பதற்கு இலக்கிய ஆதாரங்கள் பல உள. நீதிசெய்தல், அதாவது முறைசெய்தல் மன்னனின் தலையாய கடனுக இருந்தது; தலையான கடனுக மட்டுமன்றித் தலையான உணர்வாகவும் இருந்தது. **முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்** என்ற குறள் இந்த உண்மையை வெளிப்படுத்துகின்றது. ''நாட்டினைக் காப்பது அரசு; அந்த அரசினைக் காப்பது நீதி'' என்ற தமிழ்நாட்டுக் கொள்கையை ''இறை காக்கும் வையகமெல்லாம், அவனை முறைகாக்கும் முட்டாச் செயின்'' என்று வள்ளுவர் வடிவாகச் சொல்லுகிறுர். ''சமன் செய்து சீர் தூக்குதல்'' என்ற குறளடி ''*To administer justice evenly*'' என்ற ஆங்கிலச் சொற்றொடரின் கருத்தை அழகாக விளக்குகின்றது.

சிலப்பதிகாரப் பாண்டியன் நீதிநிருவகித்த முறை எமக்குத் தெரியும். கண்ணகி தனது காற்சிலம்பை உடைக்க, மன்னவன் வாயிலே படும்படி தெறிந்த மணியைக் கண்ட பாண்டியன் தான் செய்த தவற்றுக்காக வருந்தினான். இருபுறமும் கேட்டுத் தீர்ப்பளித்திருக்க வேண்டியவன் ''பொன் செய் கொல்லன் தன் சொல்'' கேட்டதன்றி கோவலனை விசாரியாமல் விட்டபிழையை எண்ணி உள்ளம் வெதும்பினான். ''இருபுறமும் கேட்க'' (*Audi Alteram partem*) என்ற சட்ட நெறியைப் பின்பற்றுதலை நினைத்து தன்னெஞ்சு எனப்படும் நீதிமனச்சாட்சியின் சூட்டினைப் பொறுக்கமாட்டாமல் பாண்டியன் உயிர்விட்டான். இத்தகைய நீதிமுறையை வேறு எந்த உலக இலக்கியத்திலும் காணமுடியாது. கற்பனை என்று வைத்துக்கொண்டாலுங்கூட எந்த நாட்டு இலக்கியத்திலும் இந்த மாதிரியான நீதியுணர்வுக் கற்பனையைக் காண முடியாது.

வடநாட்டு இலக்கியங்களில் நாம் சந்திக்கும் சீதையின் கண்ணீரால் இராவணன் மனம் இளகவில்லை. துரோபதையின் அழுகை துரியோதனனை வாட்டவில்லை; ஆனால், ஒரு மாடு, அதுவும் பசுமாடு, வடித்த கண்ணீரைக் கண்டு ஒரு தமிழரசன் வாடிவதங்கினான்; அதன்பயனாக 'அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றாக்கடை'' என்பதை உணர்ந்து தன் மகனையே தேரால் நெரித்துக் கொன்றான் மனுநீதிகண்ட சோழன். இவையெல்லாம் தமிழரின் நீதியுணர்வையே பறைசாற்றுகின்றன. வெறும்புளுகு என்று எறிவது அறிவன்று.

திருத்தொண்டர் புராணத்தில் தடுத்தாட்கொண்ட கதையில் வரும் வழக்கு விசாரணை வேறுஞ் சில செய்திகளைக் கூறுகின்றது. அந்தப் புராணத்தில் வரும் ஒரு பாட்டை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

"ஆட்சியில் ஆவணத்தில் அன்றிமற்றயலார்தங்கள்
காட்சியில் மூன்றிலொன்று காட்டுவாய்என்னமுன்னே
மூட்சியில் கிழித்த வோலை படியோலை மூல ஓலை
மாட்சியில்காட்டவைத்தேன்என்றனன்மாயை
வல்லான்"

ஒரு விடயத்தை *(fact)* நிரூபிப்பதற்கு, ஆட்சிச்சான்று *(Proof of possession)* ஆவணச் சான்று *(Documentary Proof)* அல்லது கண்டார் சாட்சி *(Eye Witness)* தேவையாக இருந்தது என்ற கருத்தை மேலே காட்டிய பாடல் விளக்குகின்றது. சாதித்தல் *(Prove or maintain)* மேலெழுத்திடுதல் *(endorse)* கைச்சாத்து *(Signature)* அரண் தருகாப்பு *(Record Room)*, வருமுறை மரபுளோர் *(Heirs and Successors)*, மூலஓலை *(Original)* படிஓலை *(Duplicate)* ஆகிய சிறந்த தமிழ்ச் சொற்களையும் இங்கே காணமுடிகிறது.

இவையெல்லாம் பழங்கதைகளேயாயினும் இவற்றைப் பற்றி அறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. சட்டங்களைத் தமிழிலே படிக்கவும் எடுத்துரைக்கவும் வேண்டிய காலம் வந்து விட்டது. காலத்தின் தேவையை உணர்ந்து "சட்டமும் தமிழும்" என்ற நூலை எழுதியிருக்கிறார் வழக்குரைஞர் செ. சிறீக்கந்தராசா, பி. எஸ்சி. அவர்கள்; தமிழ்ப்புலமையும் ஆங்கில ஆற்றலும் சட்ட அறிவும் ஒருங்கே அமையப் பெற்ற இவருடைய நூலைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது; சட்ட நூலானலும் அங்கே இலக்கியம் கமழ்கின்றது. சொல்ல வேண்டிய செய்திகளை நேர்த்தியாகவும் இலகுவாகவும் சொல்லி இருக்கிறார். முதலாவது அத்தியாயம் சிந்தனையைத் தூண்டுவதாயும் தமிழ்ப்பற்றை ஊட்டுவதாயும் அமைந்துள்ளது. சட்டத் தொழிலும் வழக்குரையும் என்ற அத்தியாயம் வேறெந்த நூலிலும் காணமுடியாத விடயங்களைக் கூறுகின்றது. நீதிமன்றங்களைப்பற்றியும், அரசியலமைப்புச் சட்டம் பற்றியும் பாராளுமன்றத் தேர்தல்கள் பற்றியும் எழுத்தாணைகள் பற்றியும் விரிவாக எழுதிய ஆசிரியர் சட்ட

முறைகள் பற்றியும் சற்று விரிவாக எழுதியிருப்பின் சட்ட மாணவருக்குப் பேருதவியாயிருந்திருக்கும். சட்ட முறைகள் பற்றித்தனியான ஒரு நூலை அவர் எழுதுவார்என நம்புகிறேன். கடைசி அத்தியாயமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் தமிழ்—ஆங்கிலச் சொற்றொகுதியில் முக்கியமான சட்டச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம், இலத்தீன் ஆகிய மொழிகளில் அமைந்த சொற்களை அவர் அழகாக மொழிபெயர்த்துள்ளனர். சட்டநூல்எழுதுவோர்க்கும் சட்டக்கல்விபுகட்டும் விரிவுரையாளர்க்கும் இவைபெரிதும்உதவும். இலங்கையில் தமிழில் வெளியாகும் முதலாவது நூல் இது என்று நம்புகிறேன். பயனுள்ள தமிழ் நூல் என்பதால் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் இந்த நூலைப் படிக்க வேண்டும். ஆசிரியரின் பணி வெல்க;

எஸ். சர்வானந்தா

துவாரகை,
6/1, ரொறிங்ரன் பிளேஸ்,
கொழும்பு—7.
17—10—1971

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சட்டச் சிந்தனை<br>Legal Thoughts | 1 |
| 2. | சட்டத் தொழிலும் வழக்குரையும்<br>Legal Profession | 36 |
| 3. | நீதிமன்றங்கள்<br>Law Courts | 53 |
| 4. | சட்டம் பலவிதம்<br>Laws are manifold | 80 |
| 5. | அரசியலமைப்புச் சட்டம்<br>Constitutional Law | 107 |
| 6. | திருமணங்களும் சமூகங்களும்<br>Marriages and Societies | 129 |
| 7. | சட்டச் சொற்றொகுதி<br>Legal Glossary | I — XV |

## உள்ளுறை


பக்கம்

1. சட்டச் சிந்தனை 1
Legal Thoughts

2. சட்டத் தொழிலும் வழக்குரைஞரும் 36
Legal Profession

3. நீதிமன்றங்கள் 53
Law Courts

4. சட்டம் பலவிதம் 80
Laws are manifold

5. அரசியலமைப்புச் சட்டம் 107
Constitutional Law

6. திருமணங்களும் சங்கங்களும் 129
Marriages and Societies

7. சட்டச் சொற்றொகுதி I—XX
Legal Glossary

க. குகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# 1

# சட்டச் சிந்தனை

## சட்டமும் மொழியும்

அப்பன் செத்தால் தெரியும் அப்பன் அருமை; உப்புச் சமைந்தால் தெரியும் உப்பின் அருமை என்று ஒரு பழமொழி உண்டு. எந்தப் பொருளினதும் அருமை பெருமை பற்றியும் அது எம் கையில் இருக்கும் வரையில் தெரிவதில்லை. அது எம்மைவிட்டுப் போனதன் பிறகு அல்லது அதை எம்மிடமிருந்து பறித்தெடுத்ததன் பிறகுதான் அதைப்பற்றி எண்ணிப் பார்க்கிறோம். அதன் அருமையை உணருகிறோம்.

தமிழரின் மொழியுரிமை பற்றி எண்ணிப்பார்க்கும் போது மேற்கண்ட பழமொழிதான் நினைவுக்கு வருகின்றது. வெள்ளையர் எம்மை ஆண்டபோது தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமநிலை (சம அந்தஸ்து) இருந்தது. ஆங்கிலம் அரசகரும மொழியாக இருந்தபோதும், தமிழையோ சிங்களத்தையோ அவர்கள் புறக்கணிக்கவில்லை. தமிழரோடு தொடர்பு கொள்வதற்குத் தமிழையே அவர்கள் பயன்

படுத்தினர். சட்டத்துறையிலுஞ் சரி, நிர்வாகத்துறையிலுஞ் சரி தமிழனோடு தொடர்பு கொள்வதற்குத் தமிழே பயன்படுத்தப்பட்டது. இப்படியாக அந்த வேற்றுநாட்டு அந்நியன் எமக்கு மொழியுரிமை வழங்கியிருந்தும் தமிழை நாங்கள் புறக்கணித்து, ஆங்கிலத்தை அணைத்தோம்; அதன் விளைவாகத் தமிழை மறந்தோம்; எங்கெங்கெல்லாம் தமிழ் மொழிக்கு உரிமை இருக்கின்றது என்ற விபரங்களை மறந்தோம்; எந்தெந்தச் சட்டங்களினால் தமிழ்மொழிக்கும் தமிழருக்கும் உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதனைச் சிறிதளவாகுதல் சிந்திக்க மறந்தோம். அவ்வாறு மறந்ததால், எங்களுடைய பாராளுமன்றத்தினர் இயற்றி எமக்காக அளித்திருக்கின்ற 1956ஆம் ஆண்டின் முப்பத்து மூன்றாம் இலக்க அரசகரும மொழிச்சட்டத்திலும், 1958ஆம் ஆண்டின் இருபத்தெட்டாம் இலக்கத் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திலும், அதன் கீழாக்கப்பட்ட 1966ஆம் ஆண்டின்ஒழுங்குவிதிகளிலும், அரசியலமைப்புச் சட்டத்தின் 29ஆம் பிரிவிலுந்தான் தமிழரின் உரிமைகள் அடங்கியுள்ளன என்று நம்பும் நிலைமைக்கு உள்ளாகியுள்ளோம். உண்மை நிலைமை என்ன? இதைப்பற்றித் தமிழரைச் சிந்திக்குமாறும் செயற்படுமாறுஞ் செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாதலால் இன்னுமோரிரு கருத்துக்களை மட்டும் குறிப்பிடுகின்றோம்.

1958ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கத் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டந்தான் தமிழர்க்கு மொழியுரிமைகளைக் கொடுக்கின்றனவென்றால் அதற்கு முன்னர், அதாவது 1958ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழர்க்கு மொழியுரிமை எதுவும் இருக்கவில்லை என்றா அர்த்தம்? இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 29ஆம் பிரிவுதான் தமிழ் மொழியுரிமையையும் தமிழரின் உரிமையையும் பாதுகாக்கின்றதென்றால் 1948ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழர் உரிமையற்ற பேர்வழிகளாக இலங்கையில் வாழ்ந்தனர் என்று கொள்வதா? அப்படி அல்ல; இந்தச் சட்டங்கள் இயற்றப்படுவதற்கு முன்னரே தமிழர்க்கு இந்த நாட்டில், மொழியுரிமை இருந்தது. கொஞ்சமல்ல இருக்கவில்லை; இலங்

கைச் சட்டங்கள் பலவற்றில் இருந்தன; இன்றும் இருக்கின்றன; அவற்றைத் தமிழர் மறந்துவிட்டனர்; நினைக்க வேண்டிய நிலைமை வந்துவிட்டது; எனவே நினைப்பூட்டுகின்றோம்.

உதாரணத்துக்கு, பிறப்பு இறப்புப் பதிவுக்கட்டளைச் சட்டத்தைப் புரட்டிப் பாருங்கள்; உறுதியெழுத்தாளர் கட்டளைச் சட்டத்தைப் புரட்டிப்பாருங்கள்; திருமணப் பதிவுக்கட்டளைச் சட்டத்தைத் திருப்பிப் பாருங்கள்; இன்னும் அண்மைக் காலச் சட்டம் வேண்டுமானால், 1956ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச்சட்டத்தை உற்று நோக்குங்கள்; இங்கே இவற்றைப் பார்த்தீர்களானால், பதிவேடுகள், இடாப்புகள் என்பன தமிழில் பேணப்பட்டு வரவேண்டும் என்று சட்ட ஏற்பாடு இருப்பதைக் காணமுடியும். இவை மட்டுமா? குற்ற வழக்கு நடவடிக்கை முறைச் சட்டக்கோவையைப் புரட்டிப் பாருங்கள்; உரிமைவழக்குநடவடிக்கை முறைக்கோவையையும் உற்று நோக்குங்கள். குறித்த சிலசந்தர்ப்பங்களில் தமிழ் பயன்படுத்தப்பட வேண்டுமென்று கூறும் ஏற்பாடுகளை அங்கே காணலாம். இவையெல்லாம் இப்படி இருக்க, எங்கள் பாராளுமன்றத்தினர் எமக்குப்பிச்சையாகப் பிய்த்துத் தந்த தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்திலே தான் தமிழின் உரிமை தொங்கி நிற்கின்றது என்று சிங்களச் சகோதரரும் எம்மவரிற் சிலரும் நினைப்பது எத்துணை மடமை!

தெருக்களின் பெயர்கள் தமிழில் எழுதப்படவில்லையா? புகைவண்டி நிலையங்களின் பெயர்கள் தமிழில் இல்லையா? அஞ்சலகம், பொலீசு நிலையம், திணைக்களங்களின் பெயர்கள், அமைச்சுகளின் பெயர்கள், ''நாய் கவனம்'' பலகை, ''கோச்சுவரும் கவனம்'' பலகை என்பன தமிழில் எழுதப்பட்டிருக்கவில்லையா?

காசுத்தாளிலே தமிழ் இருக்கிறது; அஞ்சல் முத்திரைகளிலே தமிழ் வாழ்கிறது. அரிசிப்புத்தகங்களிலே தமிழ் அடிபடுகிறது. கசற்று அறிவித்தல்கள் தமிழிலே வெளியிடப்படுகின்றன. கோட்டை என்ற சொல் கோட்ட,

கொட்டை, கோட, கோடை என்று பலவிதமாக எழுதப் பட்டாலும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வசுக் களின் பெயர்ப்பலகைகளில் தமிழ் மொழியும் காணப்படு கின்றது.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ்ப் பாராளு மன்ற உறுப்பினர் இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ் மொழியில் பேசுகின்றனரே! இவையெல்லாம் எந்தச் சட் டத்தால் வழங்கப்பட்ட உரிமைகள்? நிச்சயமாக, தமிழ் மொழி விசேட ஏற்பாடுகளால் வழங்கப்பட்ட உரிமைகள் அல்ல; 1956ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தால் இந்த உரிமைகள் அழிக்கப்படவு மில்லை.

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியவுடனும் ஆங் கிலம் அரசகருமமொழி ஆகிற்று. ஆங்கிலம் அரசகரும மொழி என்பதால், ஆங்கிலம் விளங்காத தமிழருடன் ஆங் கிலத்திலே தான் தொடர்பு கொள்வேன் என்று அவன் அநியாய ஞாயம் பேசவில்லை. மனிதாபிமானத்தை மதித்து அதற்கேற்ப நடந்து கொண்டான். ''சட்டம் தெரியாது என்பது சமாதானம் ஆகாது'' என்ற சட்டச்சித்தாந்தத் தைப் போற்றிய அவன் அதற்கேற்ப, இயற்றிய சட்டங் கள் எல்லாவற்றையும் தமிழிலும் சிங்களத்திலும் மொழி பெயர்ப்பித்தான். ஆங்கிலத்திலே சட்டத்தை இயற்றி அதனை ஆங்கிலந் தெரியாத தமிழரும் சிங்களவரும் எப்ப டியோ விளங்கிக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க வில்லை. அப்படி எதிர்பார்த்தால் ''சட்டந்தெரியாது என் பது சமாதானமாகாது'' என்ற சட்டச் சித்தாந்தத்தில் அர்த்தமே இருக்காது என்பது அவனுக்கு விளங்காதா என்ன? எனவே தான் இயற்றிய சட்டங்கள் எல்லாவற்றை யும் மொழிபெயர்ப்பித்தான்.

1956ஆம் ஆண்டு சிங்களமொழி இலங்கையின் தனி அரசகருமமொழியாக இருத்தல் வேண்டும் என்று சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதன் பிறகு எத்தனையோ சட்டங் கள் இயற்றப்பட்டன. ஆனால் எல்லாச்சட்டங்களும் தமி

ழில் மொழிபெயர்க்கப்பட்டனவா என்றால் மொழி பெயர்க்கப்படவில்லை என்ற கசப்பான உண்மையைத் துயரத்தோடு கூறவேண்டியுள்ளது. மொழிபெயர்க்கப் படாத நிலையில், ''சட்டந் தெரியாது என்பது சமாதான மாகாது'' என்ற சட்டச் சித்தாந்தம் இன்றைய இலங்கை யில் அநுசரிக்கப்படுகின்றதா என்ற கேள்வியும் எழுகின் றது. இந்தச் சட்டச் சித்தாந்தத்துக்கு மதிப்புக் கொடாத பட்சத்தில் இலங்கையில் நீதித்துறையின் கதி என்ன? நீதி சாகடிக்கப்பட்டு விடுமா? தமிழரின் கதி என்ன? தமிழின் கதி என்ன?

அரசகரும மொழி சிங்களமாக இருத்தலால் நீதிமன்ற மொழியும் சிங்களமே என்றும், சிங்களமாகவே இருக்க வேண்டும் என்றும் சிலர் தவறாகக் கருதி வருகின்றார்கள். தமிழர் பலரும் அதை நம்பியும் வருகின்றார்கள். அரசகரும மொழியும் நீதிமன்ற மொழியும் ஒன்றென்று கருத வேண் டிய அவசியம் இல்லை என்ற உண்மையைத் தக்க காரணங் களுடன் முதன்முதல் எடுத்துக்காட்டிய பெருமை, மூதவை யுறுப்பினரான S. நடேசன், கியூ. சி. அவர்களையேசாரும்.

## ஏன் வேண்டும் சட்டம்

சமுதாயத்திலே கண்ட கடையர்களும் காடையர் களும் பெருகிச் சமுதாயம் சீர்கெட்டுவிடக் கூடாது என்ப தற்காகவே சட்டதிட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. எல் லாரும் நல்லவர்களாய் இருந்துவிட்டால் சட்டமே தேவை யில்லை. ஆனால் அதுதான் கிடையாது. நமது சமுதாயத் திலே ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதம். இந்த விதம்வித மான ஆட்களுக்காகத்தான் சமுதாயத்திலே சட்டம் தேவைப்படுகின்றது என்ற உண்மையை திருவள்ளுவன் தெளிவாகக் கூறுகிறான். அவன் சொல்கிறான்—

**''சொல்லப் பயன்படுவர் மேலோர், கரும்புபோல்**
**கொல்லப் பயன்படும் கீழ்''.**

நல்லவர்களிடமிருந்து பயன் பெற வேண்டுமானல் அவர்களிடம் ஒரு சொல்லுச் சொன்னல் போதும்; சொன்னபடி செய்வார்கள்; பிரச்சினையே இல்லை. ஆனல் இன்னெரு வகையினர் இருக்கிருர்கள். அவர்களிடம் வெறுமனே சொல்லிப் பயனில்லை. எருமை மாட்டிலே மழை பெய்தது போலத்தான்; சுணை இருக்காது; அப்படியானவர்களிடமிருந்து ஏதேனும் பயன்பெற வேண்டுமானல் வேறு வழிவகைகளைக் கையாண்டால்தான் பயனுண்டு. இதை வேருெருவிதமாகவும் விளங்கப்படுத்தலாம். திராட்சைப்பழத்திலிருந்து சாறு பெறவேண்டுமானல் அதைக் கையாலே பிழிந்தாலே போதும்; சாறு வந்துவிடும்; ஆனல் தோடம்பழத்திலிருந்து சாறெடுக்க வேண்டுமானல் அது எளிதான காரியமல்ல; கொஞ்சம் கடினமாக முயன்ருல் தான் பயன்பெறமுடியும். சொல்லப் பயன்படுகின்ற மேலோர் திராட்சை போன்றவர்கள். கீழ் மக்கள் தோடம்பழத்தைப் போன்றவர்கள். இந்தக் கீழ் மக்களுக்குச் சாதாரணமாகச் சொல்லிப் பயனில்லை. கரும்பை ஆலையிலே போட்டுப் பிழியுமாப்போலப் பிழிந்தால் தான் அவர்களிடமிருந்து பயன்பெற முடியும். ''சொல்லப் பயன்படுவர் மேலோர், கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்''. வள்ளுவன் சொல்லாட்சியை நாம் கொஞ்சம் கவனிக்க வேண்டும். ''பயன்படுவர் மேலோர்'' என்று மிகவும் பண்பாக அழைக்கிருர். கரும்பைப் போலப் பிழிந்து கடைய வேண்டிய அந்தக் கூட்டத்தைக் குறிக்கும் போது, ''பயன்படும் கீழ்'' என்கிருன். மேலோர் என்று அவர்களைக் குறித்தவன் இங்கே இவர்களைக் ''கீழோர்'' என்று குறிக்கவில்லை ''கீழ்'' என்கிருன். சொல்லப் பயன் படுவர் என்றவன் இங்கே கொல்லப்பயன்படும் என்கிருன். சொல்லப்பயன்படுகின்ற அந்த மேலோருக்குச் சட்டம் தேவையில்லை; கரும்பு போலக் கொன்ருல் அல்லாமல் பயன்தராத கீழ் மக்களுக்குத்தான் – அச்சத்தையே ஆசாரமாகக் கொண்டிருக்கும் கீழ்களுக்குத்தான் சட்டம் தேவை.

**''அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது''.**

இந்தச் சட்டம் வள்ளுவன் காலத்திலே இருந்தது. **''கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களை கட்டதனோடு நேர்''** என்று அவன் சொல்வதனால் சட்டமும் தண்டனையும் அன்றும் இருந்தன என்பது விளங்கும்.

## சட்டம் ஏன் மாறவில்லை?

காலம் மாறக் கருத்தும் மாறுகின்றது. ஆனால் சிலவிடயங்களில் சட்டம் மட்டும் மாறவில்லை. சட்டமானது திட்டவட்டமான ஒன்றேயெனினும், அது உயிரற்ற, வளர்ச்சியற்ற, குருத்து அடைத்த ஒரு பொருளல்ல, அது என்றும் வளர்ந்து கொண்டிருக்கும் ஒன்று. வளர்ச்சியும், அதற்கின்றியமையாததான நெகிழ்ச்சியும் இல்லாவிட்டால் சட்டம் அதன் பணியைச் செய்ய முடியாததாகிவிடும். சட்டத்தின் பணி அமைதிகாத்தலாகும். சூழ்நிலைக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு சட்டம் நெகிழ்ந்து கொடுத்து மாறாவிட்டால் அமைதியை நிலைநாட்டல் இயலாதாகிவிடும்.

சில பத்தாண்டுகளுக்கு முன்னர், ஒருவன் ஒரே சமயத்தில் பல மனைவியரை உடையனாயிருத்தலும், ஒருத்தி ஒரே சமயத்தில் பல கணவரை உடையளாய் இருத்தலும் சட்டத்திற்குட்பட்டனவாக, சமூகத்திற்கேற்றனவாக இருந்தன. ஆனால் காலத்திற்கேற்ப இந்நிலை இன்று மாறி, ஒருவன் ஒருத்தி என்ற பொதுநிலை, பல நாடுகளுக்கும் பொதுவான நிலை, ஏற்பட்டு விட்டது. ஆனாலும இலங்கையில் முசுலிம் மக்களுக்கு மட்டும் ஒருவன் ஒருத்தி என்ற சட்ட வாழ்க்கை ஏற்புடைத்தாகாததாகவுள்ளது. சட்டம் என்பது எல்லோருக்கும் பொது என்பது உண்மையேல், சட்டத்தில் இந்த முரணைத் தொடர்ந்தும் அநுமதிப்பது **(அவ்வனுமதியை அவர்களின் சமயம் வழங்கினாலுங் கூட)** முறையா என்று சிந்தனையாளர் சிலர் கேட்கிறார்**கள்**; விடையை மட்டும் காணோம்!

காலப்போக்கிற்கேற்ப, ஒழுக்க நியமங்களும் சட்டங்களும் மாற்றமுறுவது இயல்பேயெனினும் ஒரு சில மாருதிருக்கின்றன என்பதை விளக்கவே மேலே குறித்தவற்றைக் கூறினேம். இனி இவ்வாறு நிலைமை மாற வேண்டியிருந்தும் மாருமலேயுள்ள ஒரு நிலைமையைச் சுட்டிப்பாகக் காண்போம்.

தண்டனைச் சட்டக் கோவையின் 363ஆம் பிரிவு ஒரு முக்கியமான பிரிவு. இந்தப் பிரிவு வன்புணர்ச்சி (கற்பழிப்பு?) என்ற ஒரு கொடுங் குற்றத்தைக் கூறி அதற்கான வரைவிலக்கணத்தையும் வரைகின்றது. அந்த வரைவிலக்கணத்தை இங்கே தமிழாக்கித் தருகிறேம்.

**363.** பின்வரும் ஐந்து விவரணங்களுள் ஏதேனும் ஒன்றின் கீழ் அடங்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளில் பெண்ணொருத்தியோடு பாலுறவுத் தொடர்பு கொள்ளும் ஒருவன், வன்புணர்ச்சி என்னும் குற்றத்தைப் புரிந்தவனுவான்.

**முதலாவதாக:** அவள் விருப்பத்துக்கு மாருக;

**இரண்டாவதாக:** அவளது சம்மதமின்றி;

**மூன்ருவதாக:** மரணம் அல்லது காயம் விளையும் என்ற பயத்தை அவளுக்கு ஏற்படுத்தி அவளிடமிருந்து பெறப்பட்ட சம்மதத்துடன்;

**நான்காவதாக:** தான் அவளின் கணவன் அல்ல எனவும், அவள் சட்ட முறையாக மணம் செய்து கொண்ட அல்லது அவ்விதம் மணம் செய்து கொண்டதாக நம்பும் அந்த ஆள் என அவள் நம்பியதனுல் அவள் சம்மதந் தந்தாள் எனவும் அவ் ஆண் அறிந்திருந்து அவளிடமிருந்து பெறப்பட்ட சம்மதத்துடன்;

**ஐந்தாவதாக:** அவள் பன்னிரண்டு வயதுக்குக் குறைந்தவளாயின் அவளுடைய சம்மதம் இருப்பினுஞ் சரி இல்லாவிடினுஞ்சரி.

இதுதான் சட்டம். இந்தச் சட்டப் பிரிவின்படி பெண்ணுக்கு மட்டுந்தான் கற்புண்டு; கற்பழிப்பு என்றுலே பெண்ணின் கற்பு அழிதல் என்று தான் இந்தப் பிரிவு கருத்துப் பிரிக்கின்றது.

இது சரியா? அதுதான் கேள்வி. ஒருத்திக்கு ஒருவன் தான் இருக்கலாம், அதாவது கணவனுக இருக்கலாம் என்று கூறும் கணவர்கள், ஒருவனுக்கு ஒருத்திதான் மனைவியாக இருத்தல் வேண்டும் என்பதனை மறந்து விடுகிறுர்கள். பெண்ணிடம், ஆண்கள் எதிர்பார்க்கும் கற்பை, ஆணிடம் பெண்ணும் எதிர்பார்க்கிறுள். அவர்களின் கருத்துச் சரியென்றே ஒப்புக் கொள்கிறேம்.

பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த ஒரு பெண்ணுயின் அவளுடைய சம்மதத்தைப் பெற்றே பெருமலோ அவளுடன் உடலுறவுத் தொடர்பு கொள்ளும், அல்லது பன்னிரண்டு வயதுக்குக் கூடிய பெண்ணுயின் அவள் திருமணமானவளாயினுஞ் சரி அல்லளாயினுஞ் சரி அவளுடைய விருப்பத்துக்குமாருக அல்லது அவளுடைய சம்மதமின்றி அல்லது அவளை அச்சுறுத்திப் பெற்ற சம்மதத்தோடு, அல்லது அவள் தப்பபிப்பிராயத்திஞல் தந்த அவளது சம்மதத்தோடு அவளுடன் உடலுறவுத் தொடர்பு கொள்ளும் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட ஆடவன் எவனும் வன்புணர்ச்சி (கற்பழிப்பு) என்னும் குற்றத்தைப் புரிந்தவனுவான். இதிலே கற்பழிக்கப்படக் கூடியவள் பெண்ணுகவும் கற்பழிப்பவன் ஆணுகவும் குறிக்கப்படுகின்றனர். சட்டம் ஏன் இவ்வாறு பாகுபாடு காட்டுகிறது என்பது தெரியவில்லை.

பண்டைக்காலத் தமிழிலக்கியங்கள் பெண்களை மெல்லியலார் என்று பேசும். அது பழங்கதை; காலம் மாறிவிட்டது.

ஆண்கள் தான் பாலுணர்வும் பால்வெறியும் மிக்கவர்கள் என்று பண்டுபலகாலமாக எண்ணப்பட்டு வந்ததால் உடலுறவு கொள்வதற்கென ஆண் பெண்ணை அழைப்பானேயொழிய, பெண் ஆணை அழைக்கமாட்டாள் என்னும் தப்பெண்ணம் நிலவி வந்தது.

13 வயதுடைய ஓர் ஆண்அழகனை 30 வயதுடைய ஒரு மங்கை அணுகி, தன்னுடன் உடலுறவுத் தொடர்பு கொள்ள வரும்படி கெஞ்சுகிறுள். சிறுவன் மறுக்கிறுன். மங்கை அவனைப் பலவந்தப்படுத்தி அவனது விருப்புக்கு மாறுக உடலுறவுத் தொடர்பு கொள்கிறுள். மாசுமறுவற்றிருந்த மழலைமொழிச் சிறுவன் மாசுபடுத்தப்படுகிறுன் அந்த மானமற்ற மங்கையால். சுருக்கமாகச் சொன்னுல் சிறுவன் கற்பிழக்கிறுன் என்னலாம். இதற்கு என்ன தண்டனை என்பதைச் சட்டம் கூறவில்லை! ஏன்?

ஆண்கள், பெண்களைத் தமது இச்சைக்கு இசையும்படி கேட்பது போன்றும், இசைவு தராதபோது அவர்களது இச்சைக்கெதிராகவும் இசைவில்லாமலும் அவர்களோடு வன்முறையிற் புணர்வது போன்றும், பெண்களும், ஆண்களைத் தமது காம இச்சைக்கு இசையும் படி கேட்பதும், இசைவு தர ஆண்கள் மறுக்கும் போது, அவர்களது இச்சைக்கெதிராகவும் இசைவில்லாமலும் தேவைநேரின் அச்சுறுத்தியும் வன்முறையிற் புணர்வதும், இன்று நிகழ்கின்றன. இப்படியான சூழ்நிலைகளில் பெண்களால் மாசுபடுத்தப்படும் ஆண்களுக்கு என்ன நிவாரணத்தைச் சட்டம் அளிக்கிறது? இவ்வாறு அட்டூழியம் புரியும் பெண்களுக்கு சட்டம் அளிக்கும் தண்டனை என்ன? ஆராய்மின்.

சட்டம் சிலவற்றை ஊகிக்கின்றது. பெண்ணொருத்தி ஆணொருவனை இவ்வகையில்கெடுக்க இயலாது என்பது சட்டத்தின் ஊகம் போலும்! நீதியே நின்னைக் கேட்கிறேம்! பதில் சொல்!

## சட்டம் ஒரு கழுதை

சட்டம் ஒரு கழுதை என்று சிலர் சொல்லுகிறார்கள். சட்டம் ஓர் அழகியபெண் என்று வேறுசிலர் சொல்லிக் கொள்கிறார்கள். வேறுவிதமாகவும் வேறுபலர் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் கழுதையை அவர்கள் சட்டத்தோடு ஒப்பிடுவதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும். சட்டத்தை ஏன் கழுதை என்று சொல்லுதல் வேண்டும் என்று எண்ணிப் பார்த்தோம். பலப்பல சிந்தனைகள் எழுந்தன. கழுதையின் கழுத்திலே ஒரு கயிற்றைக்கட்டி முன்னேக்கிச் சென்றால் கயிறுபோகும் இடம் எல்லாவற்றுக்கும் கழுதையும் போகும். அதற்கு என்று சுயசிந்தனை இல்லை; கழுதைதானே! எனவே கயிறுபோன இடமெல்லாம் போகும்; இதைப் போலத்தான் சட்டமும்; சட்டம் என்கின்ற கழுதையின் கழுத்திலே காசு என்கின்ற கயிற்றைக் கட்டிவிட்டால் காசு போகின்ற பக்கத்துக்குச் சட்டத்தைத் திரிக்கலாம். இது, நாளும் பொழுதும் நிகழ்கின்ற ஒன்று. ஆனால் பலருக்குத் தெரிவதில்லை. ''திருவருட் பயன்'' தான் நினைவுக்கு வருகிறது. **"அகத்துறு நோய்க்கு உள்ளினரேயன்றி அதைச் சகத்தவரும் காண்பரோதான்"** வீட்டிற்குள்ளே உள்ள வியாதியை அந்த வீட்டிற்குள்ளே உள்ளவர்கள் தான் அறிந்திருக்க முடியும். மற்றவர்கள், வெளியேயுள்ளவர்கள் அதைப்பற்றித் தெரிந்திருக்க நியாயம் இல்லை; வாய்ப்பும் இல்லை. இவற்றை யெல்லாம் நாம் சொல்லலாமா? சொல்லக்கூடாது தான். ''ஆமை பிடிப்போர் மல்லாத்துவர்; யாமது சொன்னால் பாவம்'' என்று மாயக்கிருட்டினன் எங்கோ யார்க்கோ சொன்னது ஞாபகம்.

சட்டம் ஒரு கழுதை என்று சொல்லப்படுவதற்கு இன்னுமொரு காரணம் இருக்கலாம். கழுதைக்கு முன்னாலே போய் நின்றால் கடிக்கும்; பின்னாலே போய் நின்றால் உதைக்கும். அப்படி, யார் நின்றாலும் அது கடிக்கும் அல்லது உதைக்கும். எசமான் என்றாலும் அடிக்கும் எம்போன்றவரென்றாலும் அடிக்கும்; அப்புக்காத்துக்கும் உதைதான்

பிறக்கிருசிக்கும் உதைதான். சட்டமும் இப்படித்தான்; எவரும் சட்டத்திடம் தப்ப முடியாது. ஒரு சட்டத்தின் பிடியிலிருந்து நீங்கிஞல் இன்னெரு சட்டத்தின் பிடியில் சிக்க வேண்டும். சட்டமென்கின்ற கழுதையோடு முட்டிஞல் அரசனென்ருலென்ன ஆண்டியென்ருலென்ன ஆபத்துத்தான். Law is no respector of persons. இந்தக் காரணத்திற்காகவும் அவர்கள் சட்டத்தைக் கழுதையோடு ஒப்பிட்டிருக்கலாம். ஆஞல் உண்மை நிலே என்னவோ!

கழுதை ஒரு வெங்கு; தமிழில் அதை இப்படித்தான் சொல்லமுடியும். Ass is a stupid animal; கழுதை ஒரு மண்டு. சட்டமும் அப்படித்தான். அதற்கு நீதி நியாயம் இல்லே; அதாவது சட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் irrational ஆகத்தோன்றும்; Logic ஐப் பற்றி சட்டத்துக்கு அக்கறை இல்லே. ஒரு சட்டம் நீதியற்றதாக இருக்கலாம். ஆஞல் அது சட்டம் என்பதால் அதை மதித்துத்தாஞக வேண்டும்; மிதித்தால் கடித்துவிடும். சான்றுக் கட்டளேச் சட்டத்தின்படி, அதாவது Evidence Ordinance இன்படி 12 வயதுக்குக் குறைந்தவன் வன்புணர்ச்சி செய்யும் ஆற்றல் அற்றவன் என்று இருக்கிறது. *(It shall be an irrebuttable presumption of the law that a boy under the age of twelve years is incapable of committing rape.)* இது சட்டமாக இருப்பதால், 12 வயதுக்குக் குறைந்த ஒரு பையன் பெண்ணெருத்தியோடு வன்மையாகப் புணர்ந்தால் அவன்மீது வழக்குத் தொடுக்க முடியாது. சட்டம் அவனுக்குத் துணேயாக நிற்கின்றது. இந்தச் சட்டத்தைக் கழுதை என்று சொல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

இலங்கைத் தண்டனேச் சட்டக் கோவையின் (பீனல் கோட்) 76ஆம் பிரிவின்படி, எட்டுவயதை அடையாதவர்கள் செய்யும் செயல் எதுவும் குற்றமாவதில்லே. வழிப்பறிக் கொள்ளேக் கூட்டத்துக்குத் தலேமை தாங்கும் அளவுக்கு எட்டுவயதுப் பிள்ளேகள் பக்குவம் பெற்றுவிட்டார்கள். ஆஞலும் என்ன? சட்டம் அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கிறது.

நான் ஒருவனைக் கொலை செய்கிறேன் என்று வைத்துக் கொள்வோம். அதை நீதியரசர் அவர்களே நேரடியாகக் காண்கின்ருர். இருந்தும் குற்றவாளிக்காக வழக்காடும் வழக்குரைஞரின் வல்லமையால் குற்றவாளி விடுதலை பெற்று விடுகிருன். சட்டம் கழுதையாக இருக்கும் வரை இப்படித்தான் இருக்கும்.

நீதியை நிலை நாட்டுவதற்காகத் தான் சட்டங்கள் இயற்றப்படுவதாகச் சொல்லிக் கொள்கிருர்கள். சட்டத்தின் முன்னே எல்லோரும் சமம் என்றும் பேசுகிருேம். ஆனல் சட்ட அடிப்படைத் தத்துவங்கள் சில இந்த நீதிக்கு முரணுகவும் முட்டுக்கட்டையாகவும் உள்ளனவே! *King can do no wrong* என்று ஒரு தத்துவம் உண்டு; அதாவது அரசன் (அரசாங்கம்) பிழை இழைக்க முடியாது. இந்தத் தத்துவத்தின் பயனுகப் பல்லாண்டுகளாகவே அரசாங்கத்துக்கு எதிராக வழக்குத்தொடுக்க முடியாத ஒரு நிலைமை இருந்தது. அரசாங்கம் தனியாள் ஒருவர்க்கெதிராகத் தீங்கிழைத்து விட்டால் அரசாங்கத்திற்கெதிராக வழக்குத் தொடுக்கக் கூடிய வசதி அண்மைக் காலம் வரை இருக்கவில்லை. 1969ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கச் சட்டமாகிய முடி (தீங்கியற்பொறுப்பு) சட்டம் இந்த வசதியை இப்போது ஏற்படுத்தித் தந்துள்ளது. கோடீசுவரன் என்ற ஒரு தமிழன் அரசாங்கத்துக்கெதிராகத் தொடுத்த வழக்கின் பயனுக, அரசாங்க ஊழியன் ஒருவன் ஒப்பந்தம் தொடர்பில், அரசுக்கெதிராக வழக்குத் தொடுக்கலாம் என்ற நிலைமை தெளிவாகியுள்ளது.

சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்று பெரிய சித்தாந்தம் பேசுபவர்கள் ஒன்றை மறந்து விடுகிருர்கள். சட்டத்தின் முன்னே ஏழையும் செல்வந்தனும் சமனு? எல்லோரும் G. G. பொன்னம்பலத்தை ஏற்படுத்த முடியுமா? அல்லது கியூ. சீ. இரங்கநாதனிடமோ, செனேற்றர் நடேசனிடமோ, சர்வானந்தாவிடமோ போக இயலுமா? காசு எந்தப் பக்கமோ அந்தப் பக்கந்தான் நீதி சாயும். இதை மறுப்பதற்கில்லை.

காசின் பக்கம் மட்டுமல்ல, பெரும்பான்மையின் பக்கத்துக்கும் நீதிசாயும். இங்கே தான் சனநாயகம் சனிநாயகமாக மாறுகிறது. பெரும்பான்மை வாக்கின்படி தான் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்று மக்கள் நினைக்கிறார்கள். இந்த நிலைமையில் தமிழரின் நிலைமை எங்கே? தமிழர் அனைவரையும் நாடு கடத்த வேண்டும் என்று பெரும்பான்மையினரின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் தீர்மானித்து சட்டத்தை இயற்றிவிட்டால் சிறுபான்மையினர் என்ன செய்ய முடியும்? பெரும்பான்மையினர் அப்படிச் செய்ய மாட்டார்கள் என்று நம்புகிறோம். ஆனால் அப்படிச் செய்து விட்டால் என்ன செய்வது? இதைச் சட்டத்தின் சறுக்கல் என்பதா? சனநாயகத்தின் சாபக்கேடு என்பதா? இதனாலே தான் சட்டத்துக்கு மேலாக மனநீதி என்ற ஒன்று இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். இந்த நீதிதான் மனிதனை அழிவுப்பாதையிலிருந்து காப்பாற்றும்.

## மூதவையின் சம்மதம் வேண்டாம்

ஒரு சட்டத்திலே சட்டமாக்கு வாசகம் (Enacting clause) என்று ஒன்று இருக்கும். இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிறகு இயற்றப்பட்ட சட்டங்களில் (அவை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பின்) சட்டமாக்கு வாசகமானது பின் வருமாறு அமைந்திருக்கும்:— ''இப்போதைய இந்தப் பாராளுமன்றத்திற் குழுமியுள்ள இலங்கைப் பாராளுமன்ற மூதவையினதும் பிரதிநிதிகள் சபையினதும் ஆலோசனைப் படியும் சம்மதத்துடனும் அவற்றினதிகாரப் படியும் மாட்சிமை தங்கிய மகாராணியாரினாற் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக''. என்று இருக்கும்.

ஆக்கப்படுகின்ற சட்டம் எல்லாம் பிரதிநிதிகள் சபையினாலும், மூதவையினாலும் சம்மதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாலேயே சட்டவாக்கம் அவ்வாறு கூறுகின்றது. அவ்வாறு அவை இரண்டினாலும் அங்கீகரிக்கப்பட்டன என்று கூறும் சான்றிதழ்களைப் பெற்றாலன்றி இராணியின் பிரதிநிதியாகிய மகாதேசாதிபதி அவரது சம்மதத்தைத் தரமாட்டார்.

ஆனாலும் 1961இல் இயற்றப்பட்ட 27ஆம் இலக்கச் சட்டம் ஒரு விதிவிலக்காக உள்ளது. அந்தச் சட்டத்துக்கான சட்டமாக்குவாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது:

''இப்போதைய இந்தப் பாராளுமன்றத்திற் குழுமியுள்ள பிரதிநிதிகள் சபையினது ஆலோசனைப்படியும் சம்மதத்துடனும் அதன் அதிகாரப்படியும், 1946ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக்கட்டளையின் 33ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, மாட்சிமை தங்கிய மகாராணியாரினுற் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக'' என்று கூறுகின்றது. இந்தச் சட்டமாக்குவாசகத்தில் மூதவையைப் பற்றிய குறிப்பே இல்லை. அதாவது இந்தச் சட்டம் மூதவையின் சம்மதம் இல்லாமல் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அது எப்படி?

இந்தக் கேள்விக்கு விடையும் அதே சட்டமாக்குவாசகத்தில் தான் கிடக்கிறது. இலங்கை அரசியலமைப்புப் பேரவைக் கட்டளையின் 33ஆம் பிரிவு பற்றிய குறிப்பீடொன்றை அங்கே காண்கிறோம். 33ஆம் பிரிவு என்ன சொல்கின்றது என்பதைப் பார்ப்போம். பணம் பற்றிய சட்ட மூலங்கள் தொடர்பில் மூதவையின் தத்துவங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் விளக்கமாகக் காண்போம். பணம் பற்றிய சட்டமூலம் ஒன்று, பிரதிநிதிகள் சபையினுல் நிறைவேற்றப்பட்டதன் பிறகு, மூதவையின் அமர்வுத்தொடர் முடிவடைதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் மூதவைக்கு அனுப்பப்பட்டிருந்து, அவ்வாறு அனுப்பப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள் அச் சட்டமூலம் மூதவையினுல் நிறைவேற்றப்படாதிருப்பின், அது மூதவையினுல் நிறைவேற்றப்படவில்லை என்பது எப்படியிருப்பினும், மகாதேசாதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அச்சட்ட மூலம் மகாதேசாதிபதியின் சம்மதத்தை (வேத்தியல் சம்மதம்) பெற்றதும் பாராளுமன்றச் சட்டமாகும்.

அதாவது பணம்பற்றிய சட்டமூலங்களாயின், மூதவையின் சம்மதமில்லாமலும் அவை மகாதேசாதிபதியால் சம்மதமளிக்கப்படும். இதனுல் பணச்சட்ட மூலங்களை மூத

வைக்கு அனுப்பாமலே விட்டுவிடலாம் என்பது கருத்தல்ல. எந்தச் சட்ட மூலமாயினும் அதனை மூதவைக்கு அனுப்பித் தானாக வேண்டும். ஆனால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் பணச் சட்டமூலம் ஒன்றை நிறைவேற்ற மூதவை தவறினால், அதன் சம்மதம் இல்லாமலே அச்சட்ட மூலம் மகா தேசாதிபதிக்கு அனுப்பப்பட்டு அவரது அங்கீகாரம் பெற்றுச் சட்டமாகலாம் என்பதையே 33ஆம் பிரிவு கூறுகின்றது.

நாம் மேலே எடுத்துக் காட்டாகக் காட்டிய 1961ஆம் ஆண்டின் 27ஆம் இலக்கச் சட்டம் ஒரு பணச் சட்டம் ஆகும். ''காணிவரிச் சட்டம்'' என்பது அதன் பெயர்.

நாம் இந்தச் சட்டத்தைத் தனிப்படுத்தி எடுத்துக் காட்ட வேண்டிய காரணம் என்ன என்று சிலர் நினைக்கலாம். அரசியலமைப்புப் பேரவைக் கட்டளையின் 33ஆம் பிரிவு, மூதவையின் சட்டமாக்கற்றத்துவத்தை மட்டுப் படுத்தியிருந்துங் கூட, 1948 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரைக்கும் இந்த ஒரு சட்டம் மட்டுந்தான் மூதவையின் சம்மதமின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது. அதுதான் இந்தச் சட்டத்தின் தனித்துவமும் சிறப்பியல்பும். அதனாலே தான் குறிப்பிட்டோம். இந்நூலை எழுதிக்கொண்டிருக்கும் போது இவ்விதமாக ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதுதான் உழைக்கும் போதே வரி செலுத்துவதற்கான ஏற்பாட்டைக் கொண்ட உண்ணாட்டரசிறைத் திருத்தச் சட்டம்.

## குற்றமா? தவறா? வேறொன்றா?

குற்றம் பிழை தவறு தப்பு வழு குறை என்பன ஏறத்தாழ ஒரே பொருளில் வழங்கும் சொற்கள். பிழைவிடாது எழுதப் பேசக் கற்றுக் கொள்ள வேண்டும் என்கிறோம்; பிழைதிருத்தம் என்றும் சொல்கிறோம்; இவ்விதமாகப்பிழை என்ற சொல் பலவிடங்களில் பயன்படுத்தப்படுகிறது.

குற்றம் என்ற சொல்லும் பலவிதமாகப் பிரயோகிக் கப்பட்டு வருகின்றது. எனினும் சட்டப்பயன்பாட்டில் வரும் பொழுது அதற்குத் தனிக்கருத்தும் உண்டு. அரசு அல்லது அதன் அலுவலர்கள், பிரதிநிதிகள் முதலியோர் கள் விடுக்கும் பணிப்புகளை மீறும் ஒருவர் குற்றம் புரிந்தவ ராகச் சொல்லப்படுகிறார். ஒப்பந்த அடிப்படையிலான திருமண வாக்குறுதியை மீறுதல், வாடகைப் பணம் கொடுக்கத் தவறுதல், முதலியனவும், தீங்கியலின்பாற் படும் அவதூறு வசைமொழி என்பனவும், உரிமையியல் தொடர்பான காணிஎல்லைத் தகராறுகள் முதலியனவும் வழக்குகளுக்குக் காரணம் ஆகின்றன.

இத்தகைய செயல்கள் ஒருபுறமிருக்க, வேண்டுமென்று ஒருவரைக் கொலை செய்வதும் குற்றம். அதேபோல கடுங் காயமேற்படுத்தல், கற்பழித்தல், பொருள்களை தீயிட்டு அழித்தல், திருடுதல், கொள்ளையிடல் எல்லாம் குற்றம் தாம். சின்னஞ்சிறு செயல் ஒன்று கூட குற்றமாகலாம். அடிப்பேன் எனக் கையை ஒருவர்க்கெதிராக ஓங்கினால் போதும்; அதுவும் குற்றந்தான். வீதியில் குடிவெறியில் தகாத முறையில் நடந்தால் அதுவும் குற்றம். எனினும் நாம் மேலே காட்டிய இருவகையான விடயங்களுக்கிடை யிலும் வேறுபாடு உண்டு. முன்னையவகையைச் சேர்ந்தவை பெரும்பாலும் குடியியல் (உரிமை) வழக்குகளிலேயே சம்பந் தப்பட்டவை. பின்னைய வகையைச் சேர்ந்தவை குற்ற வியல் சம்பந்தமானவை. இவற்றைக் குறிக்க ஆங்கிலத்தில் "*offences, crimes*" என இரண்டு சொற்கள் உண்டு. முன்னை யது இருவகைக்கும் பொது, பின்னையது பின்னைய வகைக் குச் சிறப்பானது. எனவே நாமும் பொதுவானதற்குத் "தவறு" எனவும் சிறப்புக்குக் "குற்றம்" எனவும் குறிப் பிடுதல் நல்லது. குடியியல், குற்றவியல் சட்டவாக்கங்கள் யாவுமே *offences* என்ற சொல்லை எடுத்தாளுகின்றன. ஒவ் வொரு சட்டவாக்கத்திலும் தவறுகளைத் தொகுத்துக் கூறும் பிரிவு ஒன்று பெரும்பாலும் காணப்படும். எனவே *offences* என்பதற்குக் குற்றம் என்றோமென்றால் குடியியல் சார்பான சட்டவாக்கங்களில் வரும் பிரயோகத்துக்கும்

குற்றவியல் சட்டவாக்கங்களில் வரும் பிரயோகத்துக்கும் வேறுபாடு இல்லாது போகும்.

மேலும், குற்றம் என்பது ஒரு பெரும்பிரிவாக ஆராயப் பட்டு வரும் பிரிவாகும். குற்றவியல் (*criminology*) என்னும் துறை, மக்கள் ஏன் குற்றம் புரிகிறார்கள் போன்றவற்றை யும் ஏனைய இவைபோன்ற பலவற்றையும் ஆராய்வதற் கான ஒரு துறையாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. குற்றம் புரிந்தவர் *criminal* என வசைமொழி பெறுகிறார். ஆனால் எமது பொருள்படத் தவறு புரிந்தவர்கள் அவ்விதம் இழி வெய்துவதில்லை.

இவற்றால் *offence* என்பதற்குத் தவறு என்றும்; *crime* என்பதற்குக் குற்றம் என்றும் கொள்ளல் பொருத்தமா கும். இன்றேல் அவற்றின் தனித்தனிப் பொருள் புலப் படாது போகும். எங்கு பொருளைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என மொழிபெயர்ப்பாளரை எதிர்பார்க்க முடி யாது.

## விபச்சாரமா? பிறர்துணைப் புணர்ச்சியா?

ஆங்கிலத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும் போது, மொழி பெயர்ப்பாளரின் விழிகளே சில வேளைகளில் பெயர்ந்து விடுகின்றன; சில மொழிபெயர்ப்பாளர் வாசிப்போரின் விழிகளைக் கூடச் சில வேளைகளில் பெயர்த்து விடுவார்கள். மொழி பெயர்ப்பாளரைக் குறைகூறிப் பயனில்லை. அவர்கள் எல்லாந் தெரிந்த பன் மொழி விற்பன்னாகளா, என்ன!

உதாரணத்துக்கு ஒன்றைப் பாருங்கள். *Adultery* என் பதை விபச்சாரம் என்று சொல்லலாமா? 'அடல்ரறி' என்ற ஆங்கிலம் விளங்காவிட்டாலும் விபச்சாரம் என்ற வட மொழி தமிழருக்கு விளங்கும். விபச்சாரம்என்கின்றபோது, ஆடவர் பலருடன் உல்லாசஞ் செய்து நல்லாசை கொள் ளும் பொல்லாத பெண்களின் நினைவுதான் எல்லாருக்கும் வரும்.

ஆனால், திருமணமான பெண் அல்லது ஆண், திருமணமான வேறொரு ஆணுடன் அல்லது பெண்ணுடன் அல்லது திருமணமாகாத வேறொரு ஆணுடன் அல்லது பெண்ணுடன் உடலுறவு வைத்திருந்தால்தான் ஆங்கிலத்தில் *Adultery* எனப்படுகின்றது. அடல்ட்ரியானது இலங்கைச் சட்டத்தின்படி ஒரு குற்றமாகக் கருதப்படுவதில்லை. இந்தியாவில் அடல்ட்ரி ஒரு குற்றமாகக் கருதப்படுகின்றது (*Section 497 of the Indian Penel Code*). திருமணமுறிவுகோரும் ஒரு பெண், தனது கணவன் பிறிதொரு பெண்ணுடன் உடலுறவு கொண்டான் என்ற முகாந்தரத்தை அடிப்படையாக வைத்து மணமுறிவை (*divorce*) பெறலாம்; இதே போல மணமுறிவு கோரும் ஓர் ஆண், தனது மனைவி பிறிதோர் ஆணுடன் உடலுறவு வைத்திருக்கிறாள் என்ற முகாந்தரத்தை அடிப்படையாக வைத்து மணமுறிவைப் பெறலாம்.

*Adultery* என்கின்ற திருமணத் தவறு (*Matrimonial Offence*) ஆணாலும் இழைக்கப்படலாம்; பெண்ணாலும் இழைக்கப்படலாம். அத்தோடு மணமுறிவுகோருபவள் தன் கணவன் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களுடன் உடலுறவு கொண்டிருந்தான் என்று, அல்லது மணமுறிவு கோரும் ஆண், தன் மனைவி ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களுடன் உடலுறவு கொண்டிருந்தாள் என்று நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. வேறு ஒருத்தனுடன் அல்லது வேறு ஒருத்தியுடன் உடலுறவு கொண்டிருந்தாள் அல்லது கொண்டிருந்தான் என்பதே போதுமானது.

மேலே யாம் கூறியவற்றை மனக் கண்ணில் நிறுத்தி, விபச்சாரம், *Adultery* ஆகுமா என்று சிந்தித்துப் பாருங்கள். விபச்சாரம் என்பது பெண்ணுக்கே பொருந்துவது; அந்தக் குற்றத்தை இழைப்பவள் பெண்தான்; *Adultery* ஆணாலும் இழைக்கப்படலாம்; பெண்ணாலும் இழைக்கப்படலாம்; விபச்சாரம், சட்டப்படி ஒரு குற்றம்; *Adultery* சட்டப்படி இலங்கையில் குற்றமல்ல; விபச்சாரம் என்பது பணத்தை நோக்காகக்கொண்டு மேற்கொள்ளப்படுவது;

*Adultery* அந்த நோக்கை கொண்டிருக்க வேண்டும் என்று இல்லை. விபச்சாரம் செய்பவரை நீதிமன்றம் விசாரித்து தண்டனை வழங்க முடியும். *Adultery* செய்பவரை அரசாங்கம் தண்டிக்க முடியாது.

ஆகவே விபச்சாரம் என்பது ஆங்கிலத்திலேயுள்ள *Prostitution* என்ற சொல்லுக்குச் சமமானது. *Adultery* என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நல்ல ஒரு தமிழ்ச் சொல் வேண்டும்; உங்களுக்குத் தெரியுமா? ''பிறர்துணைப் புணர்ச்சி'' என்று சொன்னால் ஒப்புக் கொள்வீர்களா? நாம் ஒப்புக் கொள்ளமாட்டோம்; வேறொரு சொல் காணவேண்டும்.

கற்பழிப்பு, விபசாரம் என்ற சொற்கள் சட்ட நுணுக்கத்தை பொருட் படுத்தாது எழுந்தவை. பொதுமொழியில் பயன்படப் போதியனவாயினும் சட்ட மொழியில் பயன்படுத்தப்படவேண்டுமாயின் அவை சரியான பொருள் காட்டக் கூடியனவாதல் வேண்டும்.

## கற்பழிப்பா வன்புணர்ச்சியா?

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்று இலக்கியத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் நடைமுறையிலே, யதார்த்த வாழ்க்கையிலே 'கற்பு' என்ற சொல்லுக்கு சாதாரண மக்கள் கொடுக்கும் கருத்து வேறு. தற்கொண்ட கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனோடு மட்டும் நெறி தவறாது வாழ்கின்ற வாழ்க்கையைத் தான் கற்பு என்கின்றார்கள். இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் மனைவியானவள், தன்னை மணந்த கணவனுடன் மாத்திரம் உடலுறவு வைத்திருத்தலே கற்பு என்று கருதப்படுகின்றது. ஆகவே மனைவியானவள், தன்னை மணந்த கணவன் தவிர்ந்த ஆடவன் ஒருவனை விரும்பி அவனுடன் உடலுறவு கொண்டாளேயானால் அவளுடைய கற்பு அழிந்துவிடும். இந்த மனைவியுடன் உடலுறவு கொள்

ளும் அந்தப் பிற ஆடவன் இவளுடைய கற்பைக் கெடுத்த வனுதலால் கற்பழித்தவனுகின்ருன். எங்கள் கருத்துப்படி இந்தப் பெண்ணின் கற்பை அழித்தவன் அவன்தான். ஆனுல் சட்டப்படி அவன் கற்பழித்தவனுகான். ஏன்? வியப்பாய் இருக்கிறதா? விசித்திரக்கதையாக இருக்கிறதா? இரண்டும் இல்லே; அசல் உண்மை. நாம் மேலே எடுத்துக் காட்டிய இந்த மனேவி அந்தப்பிற ஆடவனே **விரும்பித் தான்** அவனுடன் உடலுறவு கொண்டாள். **விரும்பி** உட லுறவு கொண்டால் அது குற்றமாகாது என்று தண்டச் சட்டக்கோவையின் (பீனல் கோட்) 363ஆம் பிரிவு கூறு கின்றது. 363ஆம் பிரிவு ''றேப்'' (*Rape*) என்ருல் என்ன என்று எடுத்தோதுகின்றது.

ஆகவே, தமிழருடைய கருத்துப்படி பார்க்கும் போது *Rape* என்ற சொல்லுக்கு 'கற்பழிப்பு' என்ற சொல் பொருத்தமானது அன்று என்று தோன்றுகின்றது. 363ஆம் பிரிவின்படி, மனேவியின் சம்மதமின்றிப் பிறிதோர் ஆடவன் அவளுடன் உடலுறவு கொர்ண்டால் மட்டுமே அது *Rape* ஆகும். தமிழர் வாழ்வியலின்படி, பெண்ணு டைய சம்மதம் இருந்தாலும் சரி, இருக்காது விட்டாலும் சரி கணவனல்லாத பிறிதோராணுடன் உடலுறவு கொண்டால் கற்பு அழிந்துவிடும். எனவே பீனல் கோடில் பேசப்படும் *Rape*உம் தமிழர் கூறும் கற்பழிப்பும் ஒன்றல்ல.

திருமணமான பெண்ணுக்குத்தான் கற்பு (*Chastity*) உண்டு என்ற எண்ணம் எவருக்கும் ஏற்பட்டு விடக்கூடாது. பெண்ணுய்ப் பிறந்த எவருக்கும் அது உண்டு. (ஆண்களுக்கும் கற்பு உண்டு என்ற வாதத்தில் நாம் இறங்கவேண்டாம்) பெண்ணுடைய சம்மதத்துடன் உட லுறவு கொண்டால் அது *Rape* ஆகாது என்று கூறினேம். ஆனுல் அந்தப் பெண்ணனவள் பன்னிரண்டு வயதுக்குக் குறைந்தவளாய் இருந்தால் அவளுடைய சம்மதம் இருந் தாலுங்கூட, ஆடவனெருவன் அவளுடன் உடலுறவு கொண்டால் அது *Rape* எனப்படும். தமிழர் வாழ்விய லில் வயதோ சம்மதமோ பொருட்டல்ல; திருமணமா

காத தமிழ்ப்பெண் ஆடவனொருவனுடன் உடலுறவு கொண்டால் அது கற்பழிப்பு ஆகும்; மணமான தமிழ்ப் பெண் தன் கணவன் தவிர்ந்த ஆடவனொருவனுடன் உடலுறவு வைத்தால் அவளுடைய கற்பழிந்துவிடும்.

அப்படியாயின் *Rape* என்ற சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் என்ன? வன்புணர்ச்சி என்ற சொல் தோதானதாகத் தோன்றுகின்றது. எங்கே, இப்போது நீங்கள் சொல்லுங்கள், கற்பழிப்பா வன்புணர்ச்சியா? இசைவிலாப் புணர்ச்சியா?

## பெண்ணுக்கேன் இந்த அநுகூலம்

பிறர்துணைப் புணர்ச்சியானது (அடல்ரறி) இந்தியாவிலே ஒரு குற்றமாக இருப்பினும் இலங்கையிலே அது ஒரு குற்றமல்லவென்றும், திருமணநீக்கத்துக்கான காரணமாக மட்டும் அமையும் என்றும் இந்நூலின்கண்ணே வேறோரிடத்தில் நாம் குறிப்பிட்டிருக்கிறோம். பிறர்துணைப் புணர்ச்சி குற்றமாகாது என்று நாம் கூறியமையால், பிறர்துணைப்புணர்ச்சியாகிய குற்றத்தை இழைப்பவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடலாமென்றோ, அவர்க்கெதிராக நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது என்றோ கருதிவிடுதலாகாது. நீர் திருமணமானவர் என்றும் நீர் கணவன் மனைவியாய் வாழ்ந்து வருகின்றீர் என்றும் வைத்துக்கொள்வோம். உம்முடைய வீட்டுக்கருகிலுள்ள வீட்டில் வதியும் ஒருவனுக்கும் உம்முடைய மனைவிக்கும் இடையே உறவு ஏற்பட்டு, அவர்கள், உடலுறவுவைத்து வருகிறார்கள். இதை ஒருநாள் நீர் கண்டுவிடுகிறீர். வேறொரு ஆடவனை நச்சிய ஒருத்தியைத் தொடர்ந்தும் மனைவியாக வைத்திருக்க எந்த ஆடவனுக்கு மனம் வரும்? எனவே, உம் மனைவி இன்னொருவனோடு உடலுறவு கொண்டாள் என்ற காரணத்தின் அடிப்படையில் திருமண நீக்கம் கோரி உமது மனைவிக்கெதிராக வழக்குத் தொடுக்கி

நீர். மாவட்ட நீதிமன்றத்தில் அவ்வாறு வழக்குத்தொடுக்கும்போது உம்முடைய மனைவியை முதலாவது எதிராளியாகவும் உம்முடைய மனைவியுடன் பிறர்துணைப் புணர்ச்சியில் (அதாவது அடல்ரறியில்) ஈடுபட்டவனை இரண்டாவது எதிராளியாகவும் குறிப்பிடவேண்டும். அது மட்டுமல்லாமல், அத்தகைய இழியவனால் உமக்கு ஏற்பட்ட அவமானத்துக்காகவும் இழப்புக்காகவும் நட்டஈடு கோரவும் வேண்டும், அந்த இழியவனை இரண்டாம் எதிராளியாகக் குறிப்பிட வேண்டும் என்பது சட்டத்தின் தேவைப்பாடு. உரிமை வழக்கு நடவடிக்கைமுறைக் கோவையின் 598ஆம் பிரிவு இவ்வாறு கூறுகின்றது. வெறுமனே அவனுடைய பெயரையும் முகவரையையும் குறிப்பிட்டு விட்டால் மட்டும் போதாது. அழைப்புக் கட்டளை அனுப்பி வழக்குத் தேதியன்று அவன் அங்கே வருகைதரும்படி செய்தலும் அவசியம். ஆனால், உமது மனைவி பொதுமகள் வாழ்வு வாழ்கிறாள் என்றால், அல்லது உமது மனைவியோடு கள்ளவுறவு கொண்டவரின் முகவரியை அறிய முடியவில்லையென்றால், அல்லது அந்த ஆண் இறந்துவிட்டார் என்றால், அவரை இரண்டாமெதிராளியாகக் குறிப்பிட வேண்டியதில்லை.

பிறர்துணைப் புணர்ச்சி நிகழ்ந்தது என்பதை நிரூபித்தல் உம்முடைய பொறுப்பு. குற்ற வழக்குகளிற் போல, நியாயமான ஐயத்துக்கு இடமின்றி, இந்தக் குற்றத்தை நிரூபித்தல் வேண்டும் என்று 55 புதுச் சட்ட அறிக்கைகள் 410 ஆம் பக்கத்தில் உள்ள வழக்கில் நீதியரசர் கிரேசியன் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அந்த ஆடவன் நீர் சுமத்திய அந்தக் குற்றத்தைப் புரிந்தான் என்பதை நீர் நிரூபித்தால், உமக்கு நட்டஈடு எவ்வளவு கொடுக்கப்படவேண்டும் என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

நீர் ஒரு பெண் என்று வைத்துக்கொள்ளும். உம்முடைய கணவனுடன் உம்முடைய வீட்டுக்குப் பக்கத்திலுள்ள பெண் உடலுறவு கொண்டு, பிறர்துணைப் புணர்ச்சி

யாகிய (அடல்ரறி) மணவினைக் குற்றத்தைப் புரிகிறாள் என்று வைத்துக்கொள்வோம். நீர் இருக்கவும் உம்மை நாடாது பிறிதொரு பெண்ணை நாடிப் பிறர்துணைப் புணர்ச்சியாகிய குற்றத்தை உமது கணவன் இழைத்தார் என்ற அடிப்படையில், திருமண நீக்கத்துக்காக உமது கணவர்க்கெதிராக நீர் வழக்குத் தொடுக்கமுடியும். அவ்வாறு தொடுக்கும்போது நாம் மேலே கூறியவாறு அந்தப் பெண்ணை இரண்டாம் எதிராளியாக வழக்குப் பத்திரத்தில் குறிப்பிட வேண்டியதில்லை. அந்தப் பெண்ணிடமிருந்து நீர் நட்டஈடு எதுவும் அந்தத் திருமண வழக்கில் கோரமுடியாது; ஏன்? அப்படித்தான்; சட்டம் அப்படித்தான் இருக்கிறது. கணவன், மனைவிக்கெதிராக வழக்குத் தொடுத்தால் அந்த இழியவனிடமிருந்து நட்டஈடு கோரலாம்; மனைவியானவள், கணவனுக்கெதிராக வழக்குத்தொடுத்தால், கணவனோடு கள்ள உறவுவைத்த அந்தப் பெண்ணிடமிருந்து நட்டஈடு கோரமுடியாது. விசித்திரமாக இருக்கின்றது!

பெண்ணிடமிருந்தும் நட்டஈடு கோரக்கூடிய முறையில் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று கண்ணியமான மனைவிமார் அங்கலாய்க்கின்றார்கள். சட்ட அறிஞரின் கருத்தும் இதுதான். தென்னாபிரிக்காவிலே நிலவுகின்ற சட்டப்படி, கள்ளவுறவு கொள்ளுகின்ற பெண்ணிடமிருந்து நட்டஈடு கோருவதற்கு முடியும். கள்ளவுறவு கொள்ளுகின்ற பெண்தான் இந்த வழக்காளிப் பெண்ணின் கணவனை அந்தத் தவற்றைப் புரியும்படி தூண்டியிருந்தாலும் சரி தூண்டாமல் சாதாரணமாக உடந்தையாய் இருந்தாலுஞ்சரி அவளிடமிருந்து நட்டஈடு கோரமுடியும் என்று தென்னாபிரிக்காவின் சட்டம் கூறுகின்றது.

இலங்கைச் சட்டத்திலும் இத்தகைய ஒரு திருத்தத்தைச் செய்ய வேண்டும். கள்ளவுறவு கொள்ளுகின்ற அந்தப் பெண், வழக்காளியின் கணவனை அந்தத் தவறு புரியும்படி தூண்டியிருந்தால் அவளிடமிருந்து நட்டஈடு கோரலாம் என்றுதல் சட்ட ஏற்பாடு செய்தல் வேண்டும். ஆணுக்கு ஒரு நீதி; பெண்ணுக்கு ஒரு நீதி வேண்டாம்.

## ஓய்வூதியம் பெறும் உரிமை
## அரசாங்க ஊழியனுக்கு இல்லை

கோழி மேய்த்தாலும் கோறணமேந்தில் மேய்க்க வேண்டும் என்று சாதாரணமாகச் சொல்லுவார்கள். கோறணமேந்தில், அதாவது அரசாங்கத்தில் தொழில் பார்ப்பதால் தங்களுக்குப் பாதுகாவல் உண்டு என்று பொதுமக்கள் நினைக்கிறார்கள். தொழில் பார்க்கும் வரைக்கும் சம்பளம் உண்டு. ஓய்வுபெற்றதும் ஓய்வூதியம் (பென்சன்) கிடைக்கும் என்பதாலேயே அரசாங்கத்தில் தொழில் பார்ப்பது உயர்வானது, உத்தமமானது என்று மக்கள் நம்புகிறார்கள். ''உத்தியோகம் புருட இலட்சணம்'' என்ற நனிபழம் பழமொழியைக்கூடத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்கிறார்கள்.

ஆனால் உண்மை என்ன? இவர்கள் கனவுகாணும் ஓய்வூதியம் இவர்களின் உரிமையா? தொழில் செய்தமைக்காகக் கொடுக்க வேண்டிய ஊதியத்தைப் பெறுவதற்கு அரசாங்க ஊழியனுக்கு உரிமை உண்டு. கோடீசுவரனுக்கும் இராணியாருக்கும் இடையிலான வழக்கு இதை உறுதி செய்துள்ளது. ஆனால், ஓய்வுபெற்ற அரசாங்க சேவையாளர் ஒருவர், தம்முடைய ஓய்வூதியத்தைக் கொடுக்க அரசாங்கம் மறுத்துவிட்டது என்று கூறி அரசுக்கெதிராக வழக்கெடுக்க முடியுமா?

முடியவே முடியாது; 49 புதிய சட்ட அறிக்கைகள் 359இல் குறிக்கப்பட்டிருக்கும் குணவர்தன Vs சட்டத் துறைத் தலைமையதிபதி என்ற வழக்கு இதற்குச் சான்று. அதுமட்டுமல்லாமல் ஓய்வூதியங்கள் மீதான குறிப்புக்களும் (*Pension Miniutes*) அவ்வாறு கூறுகின்றன.

## உரிமையை மறந்து தூங்கக் கூடாது

தூங்கிக்கொண்டிருப்பவர்களுக்குச் சட்டம் கை கொடுக்காது. விழிப்பாயிருப்பவர்களுக்குத்தான் அது வழி காட்டும். இலங்கையில் நடைமுறையில் இருக்கும் ஏதேனும் குற்றவியற் சட்டத்தின் கீழான ஏதேனும் குற்றத்தை ஒருவர் புரிந்து விட்டார் என்று வைத்துக் கொள்வோம். அப்படியாயின் அந்தக் குற்றம் புரிந்தவருக்கெதிராகக், குற்ற வழக்குத் தொடுக்க வேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசாங்கமே இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்; அதாவது அரசாங்கத்தின் சார்பில், சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது பொலீசு நடவடிக்கை மேற்கொள்வர். சம்பந்தப்பட்ட தவறுனது புரியப்பட்ட காலத்திலிருந்து இருபது ஆண்டுகள் கழிவதற்கு முன்னர் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இருபது ஆண்டுகள் கழிந்துவிட்டதென்ருல் வழக்கெடுக்கும் உரிமையை அரசாங்கம் அல்லது அந்தக் குற்றத்துக்கு இலக்கானவர் இழந்து விடுவார். ஆனுல் இங்கேயும் ஒரு விதிவிலக்கு உண்டு. கொலைக் குற்றம் (294ஆம் பிரிவு) அரசத் துரோகம் (120ஆம் பிரிவு) ஆகியன தொடர்பில் இத்தகைய வரையறைகிடையாது. எவ்வளவு காலம் கடந்தாலும் இத்தகைய குற்றங்களைப் புரிந்தோர்க்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்று குற்றவழக்கு நடவடிக்கை முறைச்சட்டக்கோவையின் 444 ஆம் பிரிவுகூறுகின்றது. இதுவுமல்லாமல் குறிப்பிட்ட சிலதவறுகளைப் புரிந்தோர்க் கெதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் இன்னகால எல்லைக்குள் எடுக்கப்பட வேண்டும் என்று கூறும் சட்ட ஏற்பாடுகளும் உண்டு. உதாரணமாக, தண்டனைச் சட்டக் கோவையின் 364 அ என்னும் பிரிவைக் கூறலாம். பன்னிரண்டு வயதுக்கும் பதினன்கு வயதுக்குமிடைப்பட்ட பெண்பிள்ளைகளின் தூய்மை கெடுத்தல் என்ற ஒரு தவற்றைப் பற்றி இந்தப்பிரிவு கூறுகின்றது. இந்த தவற்றைப் புரிந்தவருக்கெதிராக வழக்குத் தொடுக்க வேண்டுமானுல், தவறுபுரியப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தொடுக்க வேண்டும்.

இல்லையானல், தவறு புரிந்தவருக்கெதிராக வழக்கெடுக்க முடியாது. கொலையிற் கொடியார் தண்டிக்கப்பட வேண்டுமானல், மெலியார் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதற்கு இஃது ஓர் எடுத்துக் காட்டு.

உரிமை வழக்குகள் (சிவில் வழக்கு) தொடுத்தல் தொடர்பிலும் இத்தகைய காலவரையறை உண்டு. சாதாரணமான உரிமை வழக்குகளில் இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டால் வழக்கு வைக்கும் உரிமை அழிந்துவிடும்; அதாவது வழக்குக் காரணம் எழுந்து, இரண்டாண்டுகளில் உரிமை அழிந்து விடும்.

என்னுடைய உடைமையிலிருந்த அசைவற்ற ஓர் ஆதனத்தை வேருெருவர் சட்ட விரோதமான முறையில் என்னிடமிருந்து பறித்துவிட்டால் அவர் அவ்வாறு பறித்த தேதியிலிருந்து ஓராண்டு கழிவதன் முன் நான் உடைமை வழக்குத் (*Possessory action*) தொடுக்க வேண்டும். அப்படித் தொடுக்கும் சந்தர்ப்பங்களில், அந்த மற்றவர், என்னுடைய ஆட்சியிலிருந்த அசைவற்ற ஆதனத்தைப் பறித்துவிட்டார் என்பதை நான் நிரூபிக்க வேண்டும்; என்னுடைய உடமையிலிருந்த ஆதனத்துக்கு நான் உரித்துடையவனு என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த ஆதனம் என்னிடமிருந்தது என்பதையும் அதை வேருெருவர் பறித்து விட்டார் என்பதையும் நிரூபித்து விட்டால் காணியை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடும்படி எதிராளியைப் பணிக்கும் தீர்வை ஒன்றை நீதிமன்றம் ஆக்கும்.

ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை, வாடகையை அல்லது எழுத்துமூலப் பிணையில்லாமல் கொடுத்த ஏதேனும் கடனைப் பெறவேண்டுமானல் அல்லது அறவிடவேண்டுமானல், வழக்குக் காரணம் எழுந்த தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கழியுமுன்னர் வழக்குத் தொடுக்க வேண்டும்.

ஏதேனும் பொருளை விற்றமை தொடர்பில், அல்லது கடைக்கணக்குத் தொடர்பில் அல்லது ஒருவருக்குச்

செய்த வேலை தொடர்பில் ஒருவருக்கு வருமதியாயுள்ள தொகையை அவர் பெறவேண்டுமாஞல், அந்தக் கடன் எந்தத் தேதியளவில் அவருக்கு வந்து சேர்ந்திருக்க வேண்டுமோ அந்தத் தேதியிலிருந்து ஓராண்டுக் காலம் கழியுமுன் வழக்குத் தொடுக்க வேண்டும்.

ஆளொருவருக்கு வேருெருவரால் ஏதேனும் நட்டம், ஊறு அல்லது சேதம் ஏற்பட்டுவிட்டது என்று வைத்துக் கொள்வோம். அப்படியாயின் அத்தகைய நட்டத்தை, ஊறை அல்லது சேதத்தை ஏற்படுத்தியவரிடமிருந்து நட்டஈடு கோர முடியும். இத்தகைய கோரிக்கைக்கான வழக்குக் காரணம் எழுந்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலத்துள் ஆரம்பிக்க வேண்டும் என்று கால விதிப்புக் கட்டளைச் சட்டம் (*Prescription Ordinance*) கூறுகின்றது. எந்த எந்த விடயங்களுக்கு எந்த எந்தக் காலம் கழியுமுன் வழக்கெடுக்க வேண்டும் என்ற காலவரையறையைக் கூறும் கால விதிப்புக் கட்டளைச் சட்டத்தின் 15ஆம் பிரிவு கூர்ந்து நோக்கற்குரியது. அந்தக் கட்டளைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது எதுவும் முடிக்குரிய உரிமை எதையும் பாதிக்காது. அத்துடன் திருமண நீக்கத்துக்கான நடவடிக்கைகளுக்கும் இந்தக்கால வரையறை பொருந்தாது.

காலம் கடந்து விட்டது என்ருல் வழக்கு வைக்க முடியாது என்று அர்த்தமே ஒழிய ஆளொருவர் தரவேண்டிய கடன் அழிந்து விட்டது என்பது அர்த்தமல்ல என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

## நீதிமன்றம் தீர்ப்புக் கூறலாமா?

அரசாங்க அலுவலகங்கள் விடுதலை நாட்களிலும் நோன்மதி நாட்கள் அல்லது ஞாயிற்றுக்கிழமைகளிலும் மூடப்பட்டிருப்பது நாம் அறிந்ததே. இதனுல் இந்த நாட்களுக்குரிய தேதிகளை அலுவலகப் பத்திரங்கள் எதிலும் இடுவதில்லை. அவ்வாறு இடுவது பொய்யென்று கருதப்படும் என்பது மட்டுமல்ல, பிழையான காரியமுமாகும். ஆகவே

இத்தகைய நாட்களிற் செய்யப்படும் அரசாங்க அலுவல கக்காரியம் எதுவும் முறையாகச் செய்யப்பட்டதாகக் கருதப்படலாகாது.

பழைய உரோமாபுரியிலும் இத்தகைய சில வழக்கங்கள் இருந்தன. குறித்த சிலநாட்களில் அவர்களுடைய மக்கள் மன்றங்கள் கூடக் கூடாதென்று, அல்லது நீதி மன்றம் அதனது தீர்ப்பைக் கூறக்கூடாது என்று சட்ட ஏற்பாடுகள் இருந்தன. மக்கள் மன்றம் கூடமுடியாத அல்லது நீதிமன்றம் தீர்ப்பு வழங்காத நாள் அவர்களுடைய இலத்தீன் மொழியில் *dies nefasti* எனப்பட்டது. அதேபோல, நீதி மன்றம் தீர்ப்பு வழங்கக்கூடிய அல்லது மக்கள் மன்றம் கூடக்கூடிய நாட்கள் *dies fasti* எனப்பட்டன. நீதியரசர் நீதிமன்றத்தில் அமராத நாட்கள் *Dies non* எனப்பட்டன.

ஒரு விடுதலை நாளில் அல்லது ஞாயிற்றுக்கிழமையில் குற்றவியல் நீதிமன்றமொன்று அதன் வழக்கு விசாரணைகளை நடாத்துகின்றதென்று வைத்துக்கொள்வோம். விடுதலையாயுள்ள நாளில் அந்த விசாரணை நடாத்தப்பட்டது என்பதால் அந்தவிசாரணை வெற்றும் வெறிதுமாகிவிடுமா? அப்படி ஆகாது. ஆதாரம் எங்கேயென்று கேட்கிறீர்களா? குற்றவழக்கு நடவடிக்கைமுறைக் கோவையின் 294 ஆம் பிரிவைப் புரட்டிப் பாருங்கள். எங்கே! இப்போதே பாருங்கள்.

## சுற்றவாளியா சுத்தவாளியா?

குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றக் கேள்விக் கூண்டிலே நிற்பவனைப் பார்த்து, *Are you guilty or not* என்று நீதிவான் கேட்பதுண்டு. அதாவது நீ குற்றம் புரிந்தவனா குற்றம் புரியாதவனா என்று கேட்பதுண்டு. *Are you guilty or not* என்ற ஆங்கில வசனத்துக்கு இணையான தமிழாக, குற்றவாளியா சுற்றவாளியா என்று நீதிமன்றத்துப் பேச்சு

மொழிபெயர்ப்பாளர் (தொலுக்கு முதலியார்) கேட்பார். இங்கே குற்றவாளி என்ற சொல்லின் பொருளுக்கும் சொல்லுக்குமிடையேயுள்ள தொடர்பை விளங்கிக் கொள்ள முடிகிறது. ஆனால் சுற்றவாளி என்ற சொல்லுக்கும் அது குறிக்கும் கருத்துக்குமிடையே உள்ள தொடர்பை விளங்கிக்கொள்ள முடியவில்லை. அப்பாவி என்னும் பொருள்படவே சுற்றவாளி என்ற சொல் பயன் படுத்தப்படினும் மொழிப்பொருட் காரணம் தெளிவாக இல்லை. ஆகவே சுற்றவாளி என்ற சொல் பொருத்தமாகத் தெரியவில்லை. சுத்தவாளி அதாவது, மாசுமறு இல்லாத வன், என்ற சொல்லே சுற்றவாளி என்று அடிபடுகிறது. குற்றவாளி என்ற சொல்லுக்கு இணையாக அதே எதுகை கொண்ட சுற்றவாளி நன்ருய் ஒலிக்கிறது போலும். அடுக்குமொழி ஆசை, சொல்லைச் சிதைத்துவிட்டது. ''குற்றவாளியா சுத்தவாளியா'' என்று இருந்தது, காலப் போக்கில், தமிழரின் சோம்பற் போக்கால் குற்றவாளியா சுற்றவாளியா என்று ஆகிவிட்டது. ஆனால் வழக்கறிஞர் விழிப்பாக இருக்கவேண்டுமாதலால் சுத்தவாளி என்றே கூறுவோம். கூருவிட்டால், வருங்காலத் தமிழர் எம்மைப் பார்த்து ''பிழைத்தமிழ் எழுதிய நீங்கள் குற்றவாளியா சுத்தவாளியா'' என்று கேட்பார்கள். அந்த நிலை வேண் டாம்.

## கைது செய்யலாமா?

அடிப்படை உரிமை என்று நாம் அடிக்கடி பேசிக் கொள்ளும் ஒரு சங்கதி இருக்கிறது. என்னை மற்றவர் தாக் காமலும் என்னுடைய உடைமைகளில் மற்றவர் சருவாம லும் வாழ்வதற்கு எனக்கு உரிய உரிமை அடிப்படை உரி மைகளில் எல்லாம் தலையாய உரிமை என்று கூறுவார்கள்.

அப்படியானல், என்னுடைய வீட்டிற்குள் மற்றவர் நுழையலாமா? என்னுடைய வீட்டை மற்றவர் உடைக்க

லாமா? வீட்டை உடைத்து என்னைப் பிடிக்கலாமா? என்ற கேள்விகளுக்கு இடமே இல்லை என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் கேள்விக்கு இடம் இருக்கிறது என்பதாலேதானே இந்தக் கட்டுரையை எழுதுகிறோம்.

என்னுடைய விருப்பத்துக்கு மாறாக என்னுடைய வீட்டிற்குள் மற்றவர் நுழைதல் ஒரு குற்றம் என்று தண்டனைச் சட்டக் கோவையின் 427, 428, 429, 430 ஆகிய பிரிவுகள் கூறுகின்றன. வீடுடைத்தல் குற்றம் என்று 431 ஆம் 432 ஆம் பிரிவுகள் கூறுகின்றன.

என்னுடைய இட்டத்திற்கு மாறாக என்னை முறை கேடாகத் தடுத்துவைத்தல் அடைத்து வைத்தல் ஆகிய செயல்கள் பெரிய குற்றங்கள் என்று 330ஆம் 331ஆம் பிரிவுகள் கூறுகின்றன. அதுவே பாரிய குற்றமாக இருக்கும் போது வீட்டை உடைத்து மற்றவர் என்னைப் பிடித்தல் எத்துணைப் பாரிய குற்றமாக இருக்கும் என்பது சொல்லாமலே துலங்கும்.

உரிமை வழக்கு நடவடிக்கை முறைச்சட்டக்கோவையைப் புரட்டிப் பார்த்தால் எல்லாம் விளங்கும். அந்தக் கோவையின் 366ஆம் பிரிவைப் புரட்டிப் பாருங்கள். உங்களுக்கு அந்தச் சிரமம் வேண்டாம். இதோ:—

**366. The outer door of any dwelling house shall not be forced open in order to seize the person under civil process issued at the suit of a private individual, excepting such person shall have been rescued after having been duly arrested.**

உரிமை வழக்குத் தொடர்பில் ஒருவரைப் பிடிக்க வேண்டி இருப்பின், அவரைப்பிடிப்பதற்காக அவருடைய வீட்டையோ விட்டுக் கதவையோ உடைக்கமுடியாது. உரிமைவழக்குத் தொடர்பில் ஏலவே கைதுசெய்யப்பட்டு மறியலிலிருந்து தப்பிவந்தவரைப் பிடிப்பதற்காயின் அவ்வாறு வன்முறையில் திறக்கலாம்.

"நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய் செய்யார் நோயின்மை வேண்டுபவர்" என்று ஒரு குறளுண்டு. சமுதாயத்துக்குத் தீங்கு செய்யாதவர்களுக்குத் தான் இந்த அடிப்படை உரிமைப் பாதுகாப்பு உண்டு. குற்றம் புரிபவர்க்கு இந்த அடிப்படையுரிமைப் பாதுகாப்புக்கள் இல்லை. குற்றவியல் நடவடிக்கை முறைக்கோவையில் உள்ள சில பிரிவுகள் இதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. ஆனால் இங்கேயும் ஒன்றைக் குறிப்பாகக் கவனித்தல் வேண்டும்.

குற்றம் செய்தவரைக் கைது செய்யலாம் என்றால் எப்படியான குற்றம் செய்தவரைக் கைப்பற்றலாம்? எந்தக் குற்றம் செய்தவரையும் கைப்பற்றலாமா? குற்றங்களை இரண்டு வகையாகப் பிரித்துக் கூறுவது வழக்கம். பிடியாணை இல்லாமல் கைது செய்யக்கூடிய குற்றம் ஒருவகை (*Cognizable offence*) பிடியாணையின்றிக் கைது செய்யக் கூடாத குற்றம் இன்னொரு வகை (*Non-Cognizable Offencc*) குறித்த ஒரு குற்றம் பிடியாணையின்றிக் கைது செய்யக் கூடிய குற்றமா என்பதை எப்படி அறிவது? குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையின் அட்டவணையைப் புரட்டிப்பாருங்கள். உதாரணமாக, கொலைக் குற்றம் (பிரிவு 293) வன்புணர்ச்சி (பிரிவு 363) கொள்ளை (380) ஆகிய குற்றங்களில், பிடியாணை இல்லாமலே கைது செய்ய முடியும்; மானபங்கமேற்படுத்தல் (480) கருச்சிதைத்தல் (303) ஆகிய குற்றங்களில் பிடியாணையின்றிக் கைது செய்ய முடியாது.

குற்றஞ் செய்தவர்களையோ, குற்றஞ்செய்தவர்களாக நம்பப்படுபவர்களையோ சமாதான அலுவலர் ஒருவர் கைது செய்யலாம். கைது செய்யப்படுபவர் கட்டளைக்குக் கட்டுப்படுவதாக இணக்கம் தெரிவித்தாலொழிய கைது செய்யப்படுபவரைக் கைது செய்பவர் உண்மையிலேயே பிடித்தல் வேண்டும். கைது செய்யும் போது கைது செய்யப்படுபவர் எதிர்த்தால் அல்லது திமிறினால் சமாதான அலுவலர் தேவைப்படக்கூடிய வலோற்காரத்தைப் பயன்

படுத்தலாம். ஒருவரைக் கைது செய்யப் போகும்போது அவர் தப்பியோடிப்போய் வேறெவரதும் வீட்டிற்குள் ஒளிந்துகொண்டால், சமாதான அலுவலர் அந்த வீட்டினுள் நுழைந்து தேடுகை இடுவதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் அந்த வீட்டுக்காரர் செய்து கொடுத்தல் வேண்டும். அவ்வாறு அந்த வீட்டுக்காரர் உதவாவிட்டால், தாம் இன்னர் என்பதை அந்த வீட்டுக்காரருக்குக் கூறிவிட்டு அந்த வீட்டின் உட்கதவையோ வெளிக்கதவையோ உடைத்துத் திறந்து, தேடப்படும் ஆளைக் கைது செய்யும் உரிமை சமாதான அலுவலருக்கு உண்டு.

கைது செய்யப்பட்ட ஆள் பெண் என்றும் அவரைத் தேடுகையிட வேண்டிய அவசியம் உள்ளதென்றும் வைத்துக் கொள்வோம். ஆண் பொலீசலுவலர் பெண்ணைத் தேடுகையிடலாமா என்ற கேள்வி எழுதல் இயல்பு. குற்ற வழக்கு நடவடிக்கை முறைச்சட்டக் கோவையின் 30ஆம் பிரிவு இதற்கு மறுமொழி கூறுகின்றது. பெண்ணொருத்தியை இன்னொரு பெண்தான் தேடுகையிடமுடியும் என்று இந்தப் பிரிவு கூறுகின்றது. அந்தப் பெண்ணும் மிகவும் கண்ணியத்துடனும் நாகரிகத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

பொலீசு அலுவலர் அல்லது சமாதான அலுவலர் குற்றம் புரிவோரைக் கைது செய்ய முடியும் என்று கண்டோம். அப்படியாயின் இவர்கள் தவிர்ந்த வேறெவரும் குற்றவாளிகளைக் கைது செய்ய முடியாதோ? 35ஆம் பிரிவைப் பாருங்கள் மறுமொழி கிடைக்கும்.

பிடியாணையின்றிக் கைது செய்யக் கூடிய ஒரு குற்றத்தை (தவற்றை) ஒருவர் புரிந்து கொண்டிருப்பதை நீர் கண்டால் நீர் அக்குற்றத்தைப் புரியும் ஆளைக் கைது செய்யலாம்; தவருளி என்று பிரகடனப்படுத்தப்பட்டவரையும் நீர் கைது செய்யலாம். கைது செய்து அவரை நீர் உம் வீட்டில் வைத்திருக்க முடியாது. உடனடியாகச் சமாதான அலுவலரிடம் அவரை அழைத்துச் செல்ல வேண்டும்; அல்லது அண்மையிலுள்ள பொலீசு நிலையத்துக்கு அழைத்துச் செல்லல் வேண்டும்.

## பதிவு நீதிமன்றங்கள் — Courts of Record

இந்தத் தலைப்பிலே ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்று நாங்கள் தொடக்கத்தில் நினைக்கவில்லை. சட்ட மூலம் ஒன்றை மொழி பெயர்க்கும்போது ஏற்பட்ட ஒரு சிக்கலின் விளைவுதான் இந்தச் சிறிய கட்டுரை.

*Courts of Record* என்ற சொற்றொடரைத் தமிழில் மொழி பெயர்க்கவேண்டி ஏற்பட்டது. மொழி பெயர்ப்பாளர் ஒருவர் அதனை மொழி பெயர்த்த போது ''தண்டனை வழங்கக் கூடிய நீதிமன்றம்'' என்று மொழிபெயர்த்திருந்தார். அந்த மொழி பெயர்ப்பை வேறொரு மொழிபெயர்ப்பாளர் பார்க்க நேர்ந்தபோது *Courts of Record* என்பதைத் தண்டனை வழங்கக்கூடிய நீதிமன்றம் என்று மொழி பெயர்ப்பது சரியா என்று ஐயுற்றார்; எழுந்தது ஆராய்ச்சி; விளைந்ததிக் கட்டுரை.

ஒக்சுபோட் ஆங்கில அகராதியைப் புரட்டினோம்; *Halsbury's Laws of England (Volume III - Third Edition)* என்ற சட்ட நூலையும் துருவிப் பார்த்தோம். ''தண்டனை வழங்கக்கூடிய நீதிமன்றம்'' என்பது அவ்வளவு பொருத்தமில்லை என்று கண்டோம். பதிவு நீதி மன்றம் என்று கூறுவதே பொருத்தம் என்று தீர்மானித்தோம்.

குறித்த சில நீதிமன்றங்கள், *Courts of Record* ஆக இருத்தல் வேண்டும் என்று சட்டத்தால் வெளிப்படுத்தப் பட்டிருக்கும். உதாரணமாக, நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் ஏழாம் பிரிவு, இலங்கையின் உயர்நீதி மன்றமானது, உயர்தரப்பதிவு நீதி மன்றமாதல் வேண்டும் என்று வெளிப்படுத்துகின்றது; மேற்படி கட்டளைச் சட்டத்தின் 62ஆம் பிரிவு மாவட்ட நீதிமன்றத்தையும், 75ஆம் பிரிவு விண்ணப்ப நீதி மன்றத்தையும், பதிவு நீதி மன்றங்களாக வெளிப்படுத்துகின்றன.

அப்படியாயின், பதிவு நீதிமன்றம் ஒன்றெனவெளிப் படுத்தப்படாத ஒரு நீதிமன்றம் பதிவு நீதிமன்றமா அல்லவா என்பதைத் தீர்மானிப்பது எப்படி? தன்னை அவமதித்ததற்காக அல்லது வேறு தவறுகளுக்காக ஒரு நீதிமன்றம் ஆளொருவருக்குக் குற்றப்பணம் விதிக்க அல்லது சிறைத்தண்டனை விதிக்கத் தத்துவம கொண்டிருப்பின் அது பதிவு நீதி மன்றம் ஆகும் என்று நம்பப்படுகின்றது; குற்றவியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரையில் இதுவே கட்டளைக்கல்லாக உள்ளது. அப்படியாயின் உரிமையியல் நீதிமன்றம் ஒன்று, பதிவு நீதிமன்றமா அல்லவா என்பதைத் தீர்மானிக்க வழியில்லையா? உண்டு; கோரப்படும் கடன், சேதம் அல்லது ஆதனத்தின் பெறுமதி 40 சில்லிங்குக்குமேற்பட்டதாயுள்ள வழக்கை விளங்கநியாயாதிக்கம் ஒரு நீதிமன்றத்திற்கு இருப்பின் அது பதிவு நீதிமன்றமாகும். நாம் மேலே கூறியவற்றை நோக்க *Courts of Record* என்பதைத் தண்டனை அளிக்கக் கூடிய நீதிமன்றம் என்று கூறுவது சரியன்று என்பது புலனாகும். அன்றியும் வழக்கு நடவடிக்கைகள் பதியப்பட்டுப் பின்னைய தேவைகட்கு அவற்றைப் பேணி வைத்தலாலேயே அவை பதிவு நீதிமன்றம் எனப்படுகின்றன என்று கூறும் *Little Oxford Dictionary* உம் எமது கொள்கைக்கு ஊன்றாய் உள்ளது.

# 2

# சட்டத் தொழிலும் வழக்குரையும்

## சட்டத் தொழில்

முயற்சி திருவினை ஆக்கும் என்பது முதுரை. வாழ்வை வளமானதாக்க வல்லது முயற்சி. வாழ்வை முட்டின்றி நடாத்த மக்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கேற்ற தொழில்களைப் பின்பற்றி வருகின்றனர். ஒரு சமுதாயத்தில் அவர்கள் எல்லோரும் இயற்றிவரும் தொழில் அனைத்துமே முக்கியமானவை. சிலர் உழவுத் தொழிலை மேற்கொள்கின்றனர். சிலர் ஆசிரியர்த் தொழிலையும் வேறு சிலர் வணிகத் தொழிலையும், புரிகின்றனர். இவ்வண்ணமே பலரும் பல தொழில்களையும் போற்றி வருகின்றனர்.

ஒரு சாரார் சட்டத் தொழிலைத் தமது வாழ்க்கைக்கான தொழிலாகப் பயின்று வருகின்றனர். இவர்களின் தொழில் ஏன் அவசியமான தாகவுள்ளது? எதனுல் மக்கள் இவர்களை நாடி வருகின்றனர்? சட்டத் தொழிலில் ஈடுபட்டவர்களின் தொழில்கள் என்ன? நீதிமன்றங்களில் வழக்

காடுவோரின் வாதப்பிரதிவாதங்களை எடுத்து நன்காராய்ந்து உரையாடுவதும், சட்ட முறையாகத் தேவையான பத்திரங்களைத் தயாரிப்பதும், கட்சிக்காரர்களின் நலனுக்கான பலவகைச் செயல்களைச் செய்வதும் சட்டத் தொழிலில் ஈடுபட்டோரின் பணிகளாகும்.

நீதிமன்றங்களில் நீதிபதிகளாகவும், உயர்மன்றத்தில் நீதியரசர்களாகவும் அமர்ந்து நீதி செங்கோலோச்சும் அறிஞர்களும் சட்டத் தொழிலர்களே.

இத்தகைய தொழில் பற்றியும் இவ் அறிஞர்களின் பணிகள் பண்புகள் பற்றியும் இப்பாகத்தில் எடுத்துக் கூறப்படும்.

## வழக்குரை மரபு

இன்னலுற்றவர்க்கு நீதியும் நியாயமும் வழங்குவதற்கான நீதிமன்றங்கள் பண்டைக்காலந் தொட்டே பழங்குடியினரின் சமூகங்களிலே இருந்து வந்திருக்கின்றன. மனுநீதிகண்ட சோழனின் ஆட்சியில் பசுக்கன்றின் குறை கேட்டு முறை செய்த கதை நாமறிந்ததே; கண்ணகி பாண்டியனிடம் வழக்குரைத்து நீதிபெற்றது நமக்குப் புதிதல்ல. பொற்கைப்பாண்டியன், வழுக்கி இழைத்த பிழையால், சந்தேகத்துக்குள்ளான குடியானவனின் மனைவியின் தூய்மையை விளக்கத் தன் கை குறைத்தது எமக்குத் தெரியும். ஆனலும் இன்றுள்ளன போன்ற நீதிமன்றங்களும் நீதியரசர்களும், வழக்குரைஞர் என்போரும் தமிழ் நாட்டில் இருந்தார்களோ என்ருல் இல்லை என்பதே விடையாகும். உரோமாபுரியில் இவையெல்லாம் இருந்தன. நந்தமிழ் நாட்டில் சட்டத்துறையானது உரோமாபுரியின் சட்டத் துறை இருந்ததைப் போல விருத்தியடைந்திருக்கவில்லை.

நீதிவழங்குவதற்கான முறை மன்றுகள் அன்றும் இருந்தன, ஆனல் அரசனே அங்கு நீதிபதியாகக் கடமையாற்றினன். துன்புற்ருேனின் நிலைமையை அரசனுக்கு எடுத்துச்

சொல்ல வழக்கறிஞர் இருக்கவில்லை. துன்புற்றவனே தன் வழக்கை மன்னனுக்கு எடுத்துரைத்தான். சாட்சிகள் அழைக்கப்பட்டு மன்னனுல் விசாரிக்கப்பட்டனர். ஆனல் முதல் விசாரணை, (*Examination in Chief*) குறுக்கு விசாரணை, (*Cross Examination*) மீள் விசாரணை (*Re-examination*) என்பன இருக்கவில்லை. துன்புற்றேன் மன்றிலே வழக்காடினுன். அவனை மன்ருடி என்றனர். மன்ருடி வென்ருல் நன்றே! தோற்ருலும் அவனுல் எதுவும் செய்யமுடியவில்லை. ஏனென்ருல் மேன்முறையீட்டு நீதி மன்றம் என்ற ஒன்று அன்றிருக்கவில்லை.

எனவே, பலவிதமான நீதிமன்றங்கள், மேன் முறையீட்டு நீதிமன்றங்கள், விதம் விதமான சட்டங்கள், வழக்கறிஞர், வழக்குரைஞர், நீதிபதி, நீதவான், யூரிமார் என்பனவெல்லாம் வெள்ளையர் எமக்குத் தந்தவை.

மன்றிலே ஆடும் மன்ருடிகள் (*pleaders*) ஆன வழக்கறிஞர், வழக்குரைஞர் முதலாயினேரைப் பற்றிச் சிறிது அறிய முயல்வோம்.

## வழக்கறிஞர் — Proctor

கொழும்பு பன்னிரண்டிலுள்ள புதுக்கடையில் கறுத்தக் கோற்றும் கறுத்தக் காற்சட்டையும் போட்ட ஒருவரை நாம் கண்டால் அவர் ஓர் அப்பக்காத்தாக இருப்பார் அல்லது பிறக்கிருசியாராக இருப்பார் என்று ஊகிக்கலாம். அப்பக்காத்து, பிறக்கிருசி, கியூ சி, கிறவுண் கவுன்சில் பரிஸ்ரர் என்ற சொற்கள் எங்களுடைய மக்களின் வாயில் சர்வசாதாரணமாக அடிபடுகின்ற சொற்களேயானுலும் அந்தப் பெயருக்குரியவர்களின் தொழில் வேறுபாட்டைப்பற்றி அனேகருக்குத் தெரியாது. படித்தவர்களுக்குக் கூடத்தெரியாது; சட்டக் கல்லூரி மாணவ வாழ்க்கையை அடிப்படையாக வைத்து அப்பட்டமான ஓர் உண்மையைச் சொல்வதானுல் சட்ட மாணவர்களுக்கே

அந்த வேறுபாடு தெரியாது. அப்பக்காத்தாகவோ பிறக்கிருசியாகவோ தேறி அந்தத் தொழிலைப் புரியும்போது தான் அந்த வேறுபாடுகள் உணரப்படுகின்றன.

தமிழிலே சட்டக் கல்லூரிப் படிப்புக்கள் தொடங்கியதன் பிறகு ஆங்கிலச் சொற்களைக் கையாள்வது அழகில்லையென்பதால் இனிமேல் முடிந்தவரைக்கும் தமிழ்ச் சொற்களையே கையாள்வது நல்லதென நினைக்கிறோம். பிறக்கிருசியாரை வழக்கறிஞர் என்றும், அப்பக்காத்தை வழக்குரைஞர் என்றும், கியூசியை அரசியாரின் சட்டவுரைஞர் என்றும், கிறவுண் கவுன்சிலை முடிக்குரிய சட்டவுரைஞர் என்றும், பரீஸ்ரரை இங்கிலாந்துச் சட்டவுரைஞர் என்றும் கூறுவோம். இப்போதுள்ள வழக்கறிஞர் எல்லோரும் உயர்நீதிமன்றத்திலும் வழக்காடும் தகுதி பெற்றவர்கள். ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு வகையான வழக்கறிஞர் இருந்தனர். முதலாவது வகையினர் மாவட்ட நீதிமன்றங்களில் மட்டும் வழக்காடும் உரிமை பெற்றவர்கள்; மற்ற வகையினர் உயர் நீதிமன்றங்களிலும் வழக்காடும் உரிமை பெற்றவர்கள். முதல் வகையினர் (*Proctor d. c.*) என்று தம்மைக் கூறிக் கொண்டனர். இரண்டாம் வகையினர் (*Proctor s.c.*) என்று தம்மைக் கூறிக்கொண்டனர். ஆனால் இப்போது சட்டக் கல்லூரியில் படித்துத் தேறும் எல்லா வழக்கறிஞரும் உயர்நீதிமன்றங்களில் வழக்காடக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். மாவட்ட நீதி மன்றத்தில் மட்டும் வழக்காடும் வழக்கறிஞர் என்று ஒரு சாரார் இப்போது கிடையாது. ஆகவே எல்லா வழக்கறிஞரும் உயர் நீதிமன்ற வழக்கறிஞரே. இஃதிவ்வாறாக இன்றைய வழக்கறிஞர் தம்முடைய பதவியோடு சேர்த்து உயர்நீதி மன்றம் (S. C.) என்பதை எழுதுவதோ, சொல்லுவதோ தேவையில்லாத ஒன்று. ஆனால் தொடர்ந்து வருகின்றது.

இன்னுமொன்று, அன்றைய வழக்கறிஞரில் எல்லோருமே நொத்தாரிசுமாராய் இருக்கவில்லை. நொத்தாரிசுமாராயுள்ள வழக்கறிஞர் "*Proctor, Notary Public*" என்று போட்டுக் கொண்டனர்; அல்லாதார் "*Proctor*" என்றே

எழுதினர். இன்றைய வழக்கறிஞர் எல்லோரும் நொத்தாரிசுமாராகவே உள்ளனர். எனவே இவர்கள் *Proctor, N.P.* என்று போடவேண்டிய அவசியம் இல்லை. ஆனல் பழைய பழக்கம் காரணமின்றித் தொடர்கிறது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் (*Appeal Court*) நீங்கலாக மற்றெல்லா நீதிமன்றங்களிலும் வழக்கறிஞர் தோன்றி வழக்காட முடியும். ஆனல் கொழும்பில் உள்ள உயர் நீதிமன்றங்களில் வழக்கறிஞர் வழக்காடுவது குறைவு. வழக்குரைஞர் எனப்படும் அப்புக்காத்துமார் அநேகர் இருப்பதால் வழக்கறிஞர் உயர்நீதிமன்றங்களில் தோன்றுவதில்லை.

வழக்கறிஞர் ஆற்றும் சேவைக்காக வழக்காளி ஊதியம் கொடுத்தல் வேண்டும். வழக்காளி ஊதியம் கொடுக்கத் தவறினல் அந்த வழக்காடுநர்க் கெதிராக வழக்குத் தொடுத்து, தமக்கு வரவேண்டிய தொகையை அறவிடும் உரிமை வழக்கறிஞர்க்கு உண்டு. வழக்குரைஞர்க்கில்லை.

சட்டக் கல்லூரியில் படித்து வழக்கறிஞர்க்கான இறுதித் தேர்வில் சித்தியடையும் மாணவர் தாம் வழக்கறிஞராக ஏற்றுக் கொள்ளப்பட்டு இடாப்பில் பதியப்பட விரும்புவதாக உயர்நீதிமன்ற நீதியரசருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். இந்த அறிவித்தலை அரசாங்கக் கசற்று மூலமும், இலங்கையில் புழங்கும் நாளிதழ் மூலமும் விடுத்தல் வேண்டும். அறிவித்தல் கொடுத்து ஆறுவாரங்கள் கழிந்ததன் பின்னர், உயர்நீதி மன்றத்துக்குக் கொடுக்க வேண்டிய முத்திரைகளையும் ஆவணங்களையும் உயர்நீதிமன்றப் பதிவகத்தாரிடம் ஒப்படைத்தால், தாம் விரும்பும் ஒரு தேதியில் உயர்நீதிமன்ற நீதியரசர் முன் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வதற்கான ஒழுங்குகளைப் பதிவகம் செய்து தரும். சத்தியப் பிரமாணம் செய்த அன்றிலிருந்து அவர் இலங்கையில் வழக்கறிஞராகப் பணிபுரியலாம். மேலே கூறியன வழக்குரைஞர்க்கும் பொருந்தும்.

சத்தியப் பிரமாணம் எடுக்கும் போது கூறியவற்றுக்கிணங்கத் தமது கடமைகளைப் புரிதல் வழக்கறிஞரின் கடப்பாடு ஆகும். அந்தக் கடப்பாட்டை மீறித் தவறு புரியும் வழக்கறிஞரை, இடாப்பிலிருந்து நீக்கித் தண்டனை வழங்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு.

## வழக்குரைஞர் — Advocate

வழக்குரைஞர் என்றதும் குழப்பமடைய வேண்டாம். அப்பக்காத்தைத்தான் (*Advocate*) அவ்வாறு குறிபிடுகின்றோம். வழக்குரைஞர், வழக்கறிஞர் என்ற பெயர்கள் பொதுமக்களின் மனத்தில் ஒருவித சலனத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகின்றது. வழக்குரைஞர் என்கின்ற அப்பக்காத்து, வழக்கறிஞர் எனப்படும் பிறக்கிருசியாரிலும் பார்க்க அறிவும் ஆற்றலும் மிக்கவர் என்பது பொதுமக்களின் அபிப்பிராயம். அப்படி இருக்கப் பிறக்கிருசிமாரை வழக்கறிஞர் என்று அறிஞர் பட்டஞ் சூட்டி அழைப்பது பொருத்தமா என்று பலர் எம்மைக் கேட்டிருக்கின்றனர்கள். அறிஞர் என்பது விற்பன்னர் என்ற பொருளில் அல்ல; அறிந்திருப்பவர் என்னும் கருத்தில்தான். கட்சிக்காரர்க்கிடையேயான பிணக்குகளையும் பிரச்சனைகளையும், அறிந்திருப்பவர் பிறக்கிருசியார்; அதனாலேதான் அவரை வழக்கறிஞர் என்கிறோம்.

வழக்குரைஞர், வழக்கறிஞரால் அமர்த்தப்பட்டு வழக்கறிஞர் கூறுகின்ற கருத்துக்களை நீதிமன்றத்துக்கு எடுத்துரைப்பவர். அவருடைய பணி நீதிபதிக்கு எடுத்துரைப்பது மட்டுமே. வழக்காளிக்கும் அவருக்கும் தொடர்பே கிடையாது. ஆங்கிலத்திலும் *Advocate* என்றால் எடுத்துரைத்தல் என்றுதான் பொருள். எனவே அப்பக்காத்தை வழக்குரைஞர் என்பது பொருத்தம்தான்.

வழக்குரைஞராய் இருப்பவர் எந்த நீதிமன்றத்தின் முன்னரும் தோன்றி வழக்கெடுத்துரைக்கலாம். வழக்கறிஞர் தோன்ற முடியாத மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும்

வழக்கெடுத்துரைக்கலாம். ஆனால், வழக்கறிஞர் ஒருவரின் அநுசரணையின்றி வழக்குரைஞர் எந்த வழக்கையும் எந்த நீதிபதிக்கும் எடுத்துரைக்க முடியாது. கொள்கையளவில் பார்க்கப்போனால், வழக்குரைஞர் எனப்படுபவர், நீதியை நிலைநாட்ட, அரசாங்கத்திற்கு உதவும் ஒரு சட்ட அலுவலராகவே கருதப்படுகின்றார். இஃது இவ்வாறு இருத்தலால் வழக்காளியிடமிருந்து இவர் பணம்பெற முடியாது. வழக்காளி ஒருவர் வழக்குரைஞருக்கு ஊதியம் கொடுக்கத் தவறினால், வழக்குரைஞர் வழக்காளிக் கெதிராக வழக்குத் தொடுக்க முடியாது. இதனாற்றான் வழக்குரைஞர்மார், தமக்குச் சேர வேண்டிய பணத்தை, தம்மை ஏற்படுத்தும் (*Retain*) வழக்கறிஞரிடமிருந்து முன் கூட்டியே பெற்றுக் கொள்கின்றனர்.

வியாபார நோக்கம் வழக்குரைஞர்க்கு இருக்கக் கூடாது என்று நீதித்துறை கருதுவதால், அவர்கள் விளம்பரப்பலகை முதலியன போடுதலை அது தடுத்துள்ளது. அத்தோடு வியாபாரமுறையான அலுவலகம் எதனையும் பேணி வரக் கூடாது என்றும் தடைசெய்துள்ளது.

பணியைப் பொறுத்தவரையில் வழக்கறிஞருக்கும் வழக்குரைஞருக்கும் இடையே வேறுபாடிருப்பது போலவே அவர்கள் அணியும் துணியிலும் வேறுபாடுள்ளது. ஒருவர் வழக்கறிஞரா, வழக்குரைஞரா, என்று அறிந்துகொள்ள உதவுவது அவர்கள் அணிந்திருக்கும் உடுப்புத்தான். மேலோட்டமாகச் சொல்வதானால் வழக்குரைஞர் *Gown* ஒன்றை அணிந்திருப்பர். வழக்கறிஞருக்கு இந்த *Gown* கிடையாது. ஆனால் இதொன்றை மட்டும் வைத்து அவர்களை இனங்கண்டு கொள்ள முடியாது. ஏனென்றால், உயர் நீதிமன்றத்தில் வழக்காடும்போது, வழக்கறிஞர்கூட இப்படியான *Gown* ஒன்றை அணிந்திருப்பர். அப்படியாயின், உயர்நீதிமன்றத்தில் கறுத்தக்காற்சட்டையும் கோற்றும் அணிந்து வாதாடுபவர் வழக்குரைஞரா, வழக்கறிஞரா என்பதைக்கண்டு பிடிப்பதெப்படி? இருக்கவே இருக்கிறது வழி! வழக்குரைஞர் ஒருவித கொலரும் வெள்ளைத் துணியி

லான இரண்டு நாடாத் துண்டினைக் கொண்ட பட்டியும் அணிந்திருப்பார். இதிலிருந்து அவர் ஒரு வழக்குரைஞர் என்று அறிந்து கொள்ள முடியும்.

இன்னுமொரு வித்தியாசமும் உண்டு. வழக்குரைஞரின் ஊதியமும் வழக்கறிஞரிலும் பார்க்கக் கூடுதலானது; மிக வும் கூடுதலானது.

## இராணி வழக்குரைஞர்—இராசா வழக்குரைஞர்
## Queen's Counsel—King's Counsel

கியூ சிஎன்ருல் எல்லாருக்குந் தெரியும். Queen's Counsel என்பதன் சுருக்கம்தான் கியூ சி என்பது. இலங்கைக்குத் தலைவியான இராணியின் சார்பில் மகாதேசாதிபதியால் நியமிக்கப்படுவதால் அவர் இராணியின் வழக்குரைஞர் என்று அழைக்கப்படுகின்றனர். இதுவரையில் இலங்கையில் அறுபத்திரண்டு பேருக்குமட்டுமே இராணி வழக்குரைஞர் பட்டம், இராசா வழக்குரைஞர் பட்டம் என்பன கொடுக் கப்பட்டுள்ளது. ஆளுபவர் அரசனாய் இருந்தால் கே.சீ.பட் டமும் அரசியாய் இருந்தால் கியூ.சீ. பட்டமும் வழங்கப்ப டும். ஆளுபவர் ஆணோ பெண்ணோ என்பதைப் பொறுத்து இவர்கள் தமக்கு K.C. பட்டமோ Q.C. பட்டமோ சூட் டிக்கொள்வர். இராணி வழக்குரைஞர் என்ற பட்டம் ஒரு கவுரமான பட்டமாகும். பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு காலத்திற்கு வழக்குரைஞராகத் தொழில் பார்த்துப் புகழ் பெற்றுவிட்ட ஒருவர் (வழக்கறிஞர் அல்ல) இராணி வழக்குரைஞராக விரும்பினுல் தம்முடைய விருப்பத்தை, (அஃதாவது பட்டு அணியும் விருப்பை) சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு (அற்றேணியெனரல்) விண்ணப்ப மூலம் அறிவித்தல் வேண்டும். இப்படிப் பலர் விண்ணப்பிப்பர். இவர்களுள் தகுதியால் கூடியவர்களுக்கு இராணி வழக்கு ரைஞர் பட்டம் வழங்கலாமென பிரதம நீதியரசர் விதப்பு ரைப்பார். இந்த விதப்புரையின் பேரில் மகாதேசாதிபதி இராணி வழக்குரைஞர் பட்டத்தை வழங்குவார்.

இராணி வழக்குரைஞராகிவிட்ட ஒருவர் நீதிமன்றத்தில் தோன்றும் போது, அவருக்கு உதவுவதற்கெனக் கனிட்ட வழக்குரைஞர் ஒருவரும் அவருடன் இருப்பார். புதிய அந்தஸ்தைப் பெற்ற இந்த இராணி வழக்குரைஞர் மற்ற வழக்குரைஞரிலும் பார்க்கக் கூடுதலான ஊதியத்தையும் பெறுவர். இலங்கைச் சட்டத்துறைத் தலைமையதிபதி, மன்ருடியார் தலைமையதிபதி, (சொலிசிற்றர் யெனரல்) என்போர் அவர்களின் பதவி வழியாக கியூ.சி. பட்டம் பெற உரிமையுடையர் என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

## இராணி வழக்குரைஞர் பட்டியல்

| | பட்டம் பெற்ற தேதி |
|---|---|
| 1. பொன்னம்பலம் இராமநாதன் | 1903 |
| 2. தோமஸ் எட்வேட்த சம்பாயோ | 1903 |
| 3. அல்பிரெட் யோச் லசெல்லஸ் | 1903 |
| 4. பிரடெரிக் டோண் ஒஸ்ற் | 1903 |
| 5. யேம்ஸ் செசில் வாஸ்ரர் பெரேரா | 1904 |
| 6. பெஞ்சமின் வில்லியம்பாவா | 1911 |
| 7. யேம்ஸ் ஆதர் வான் லாங்கென்பேக் | 1911 |
| 8. அன்ரன் பேட்றம் | 1913 |
| 9. யோசப் றிச்சாட் கிரேனியர் | 1913 |
| 10. ஸரியூவாட் சினேடர் | 1919 |
| 11. என்றி கவுப்பர் கொலன் | 1919 |
| 12. அலன் ட்றீபேக் | 1921 |
| 13. தோமஸ் போறெஸ்ற் காவின் | 1921 |
| 14. சான்ஸ் புறாக் இலியொற் | 1921 |
| 15. டொன் எட்றியன் சென்ற் வலென்ரின் ஜயவர்த்தன | 1921 |
| 16. என்றின் யஸ்ரின் சாள்ஸ் பெரேரா | 1921 |
| 17- ஊயீன் வில்பிரெட் ஜயவர்த்தன | 1923 |
| 18. என்றி அலெக்ஸ்சாந்தர் பற்றிக் சந்திரசேகரா | 1924 |
| 20. எட்மண்ட் யோசெப் சமரவிக்கிரம | 1925 |
| 21. லான்சிலொற் என்றி எல்பிஸ்ரன் | 1925 |

22. பிரெடரிக் ஒஸ்ரின் எய்லி 1927
23. றிச்சாட் லயனல் பெரேரா 1928
24. பிரான்சிஸ்த சொய்சா 1928
25. இஸ்ரான்லி ஒபேசேகரா 1929
26. எட்வேட் சென் யோன் யாக்சன் 1929
27. பிரான்சிஸ் கரோல்ட் பேட்றம் கொச் 1932
28. சேர் எட்வேட் யோச் பெரேரா ஜயதிலக 1937
29. கெபேட் விக்ரர் பெரேரா 1937
30. நோமன் எட்வேட் வீரசூரியா 1938
31. சேர் லலிதா அபயா ராசபக்ஸ 1944
32. ஏமா என்றி பசநாயக 1946
33. சாமுவேல் யேம்ஸ் வேலுப்பிள்ளை
செல்வநாயகம் 1947
34. நாரிமன் கைக்குஸ்று சொக்ஸ்கி 1947
35. மாசல் பெர்ஞந்தோ சில்வெஸ்ரர் புள்ளே 1948
36. எரிக் பேட் விக்கிரமநாயக 1948
37. கணபதிப்பிள்ளை காங்கேயர் பொன்னம்பலம் 1948
38. ரூபேட் இராசையா கொறசற் தம்பையா 1948
39. செல்லப்பா தியாகலிங்கம் 1950
40. எமில் கை விக்ர்மநாயகா 1950
41. துசியூ சாமுவெல் பெர்ஞந்தோ 1953
42. சோமசுந்தரம் நடேசன் 1954
43. எச்ரர் வில்பிறெட் ஜயவர்த்தன 1954
44. ஆதர் என்றி கோணீலியஸ் டி சில்வா 1956
45. யோச் எட்மண்ட் சிற்றி 1956
46. Dr. என்றி விசயக்கோன் தம்பையா 1956
47. அசோகாவிந்திரா எமந்தா அபயசுந்தர 1956
48. முருகேசன் திருச்செல்வம் 1959
49. கங்காணிகே சிறீ பெரேரா 1965
50. அருவின் சந்திரகீர்த்தி குணரத்ன 1965
51. செல்லையா ரங்கநாதன் 1965
52. அப்துல் கபூர் மொகமெட் அமீர் 1965
53. வேணன் ஜொங்லாஸ் 1965
54. யோச் தெரன்ஸ் சமரவிக்கிரம 1965
55. விக்ரர் தென்னக்கூன் 1965

56. பரமநாதன் நவரத்தினராசா 1965
57. எஸ். யே. கதிர்காமர் 1967
58. வால்ரர் ஜயவர்த்தன 1967
59. வேணன் சி. பி. ஏ. விஜேதுங்க 1968
60. மொகமெட் இசாடீன் மொகமெட் 1968
61. நெவில் தன்பார் மிரகாவத்தை சமரக்கூன் 1968
62. லொக்கு பண்டா தென்னக்கூன் பிரேமரத்ன 1968

## முடிக்குரிய சட்டவுரைஞரும் வழக்கறிஞரும்
## Crown Counsel & Crown Proctor

தனி மனிதர் வழக்காடுவது போல, அரசாங்கமும், அதாவது, முடியும் (*Crown*) வழக்காடுவது உண்டு. முடியின் சார்பில் வழக்காடுவதற்கென முடியால் அரசாங்க சேவையில் அமர்த்தப்பட்ட சட்டவுரைஞர் முடிக்குரிய வழக்குரைஞர் எனப்படுவர். முடியினுல் அவ்வாறு நியமிக்கப்படும் வழக்கறிஞர், முடிக்குரிய வழக்கறிஞர் எனப்படுவர்.

ஆக்கப்பட்டதெல்லாம் அரசாங்கத்துக்குச் சொந்தம் என்பது ஒரு சட்டச் சித்தாந்தம் (*Legal Maxim*). எனவே, தனிமனிதன் ஒருவனுக்கு இன்னொருவன் ஊறுவிளைத்தால், அது தனக்கு இழைக்கப்பட்ட ஊருக அரசாங்கம் கருதி, ஊறுவிளைத்தவனுக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கிறது. இந்த நடவடிக்கைகளை நீதிமன்றத்தில் தொடுத்து வழக்காடுதல்தான் முடிக்குரிய சட்டவுரைஞரின் பணி.

வழக்குரைஞர், வழக்கறிஞர் என்போர் சுதந்திரப் பறவைகள். முடிக்குரிய சட்டவுரைஞர் அரசாங்க அலுவலர் ஆவார். எனவே அவர் அரசாங்கத்தின் நிர்வாகச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவராவார்.

முடிக்குரிய வழக்கறிஞர் அரசாங்க சேவை ஆணைக் குழுவால் நியமிக்கப்படுகின்ருர். இவர் சட்டத்துறைத் தலைமையதிபதியின் கீழும் மன்ருடியார் தலைமையதிபதியின் கீழும் பணிபுரிகின்ருர். இன்று சட்டத்துறைத் தலைமையதி

பதி (*Attorney General*) என்று வழங்கப்படுபவர் தொடக்க காலத்தில் ''முடியின் வழக்குரைஞர்'' என்று தான் அழைக்கப்பட்டார். இப்போது அவரின் கீழ், மன்ருடியார் தலைமையதிபதி, முடிக்குரிய சட்டவுரைஞர் என்போர் பணிபுரிவதால் அவருடைய பெயர் மாறிவிட்டது; அற்ரேணி ஜெனரல் என்று ஆங்கிலத்தில் கூறிக்கொள்கிரேம். அற்ரேணி ஜெனரலும் ஓர் அரசாங்க உத்தியோகத்தர்தான். ஆனுல் அவரை அரசாங்க சேவை ஆணைக்குழு நியமிப்பதில்லை. மகாதேசாதிபதிதான் அவரை நியமிக்கின்ருர்.

அற்ரேணி ஜெனரலின் அதிகாரங்கள் கணக்கிலடங்கா. சிறிக்கந்தராசா *Vs* அற்ரேணி செனரல் என்ற வழக்கு இதற்கு நல்ல சான்று.

## இங்கிலாந்து வழக்குரைஞர்

இங்கிலாந்திலேதான் ''பரிஸ்ரர்'' என்ற பட்டம் கொடுக்கப்படுகின்றது. எனவேதான் நாமும் இங்கிலாந்து வழக்குரைஞர் என்று அவர்களைத் தமிழில் அழைக்கின்ரேம்.

இலங்கையில் உள்ள சட்ட நீதிமன்றங்களில் சட்டத் தொழில் புரிவதற்கான வழக்கறிஞர், வழக்குரைஞர் என்போரை இலங்கைச் சட்டக்கல்லூரிதான் தயாரிக்கின்றது. இதைப்போல இங்கிலாந்து நீதிமன்றங்களில் சட்டத் தொழில் புரிவதற்கான ஆட்களை நான்கு சங்கங்கள் தயாரித்து விடுகின்றன. அந்தச் சங்கங்கள் நீதி மன்றச் சங்கங்கள் (Inns of the Court) என்று அழைக்கப்படுகின்றன.

1. இன்னர் ரெம்பிள்
2. மிடில் ரெம்பிள்
3. லிங்கன் இன்
4. கிரேஸ் இன்

என்பனதான் அந்தச் சங்கங்கள். சட்டக் கல்விப் பேரவை நடாத்தும் தேர்வில் சித்தியடைந்ததும் இவர்கள் தமது சங்கத்தின் நீதியரசரால் வழக்குரைஞர் குழாத்தில் சேர்க்கப்படுவர்.

## பெண்களும் சட்டத் தொழிலும்

பண்டைய சமூகங்களில், பெண்களுக்கு, கட்டுப்பட்ட சுதந்திரமே இருந்தது. பெண், ஆணுக்கடங்கியவள் என்றும் அவனுடைய ஆணைக்குட்பட்டவள் என்றும் கருதப் பட்டாள். தமிழ் நாட்டில் அப்படியான சில கட்டுப்பாடு கள் இருந்தாலும் அவள் தாயாகப் போற்றப் பட்டாள். பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்று ஆண்கள் அதிசயிக் கும் அளவுக்கு உரிமை பெற்றிருந்தாள். சட்டத்துறையில் மட்டில்லா உயர்ச்சி பெற்று விளங்கிய உரோமாபுரியில் பெண்ணானவள் சாதாரணசடப் பொருளாகக் கருதப்பட்டு அடிமைகள் போல நடாத்தப்பட்டாள். இந்த உரோம ரின் சட்டந்தான் 1656ஆம் ஆண்டில் ஒல்லாந்தரால் இலங் கையிலும் புகுத்தப்பட்டது. புகுத்தப்படவே இலங்கைப் பெண்களின் அந்தஸ்தும் (*Status*) அப்படியாயிற்று. உரோ மரிடச்சுச் சட்டப்படி சட்டத் தொழில் புரியும் உரிமை பெண்ணுக்குக் கிடையாது. எனவே வெகு அண்மைக் காலம் வரை அதாவது 1933ஆம் ஆண்டு வரை இலங்கைப் பெண்கள் சட்டத்துறையில் நுழைய முடியாதிருந்தனர். 1933ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட பால் வழித்தகவின்மை நீக்கல் (சட்டத் தொழில்) (*Removal of Sex Disqualification*) சட்டம் (65 ஆம் அத்தியாயம்) பெண்களும் சட்டத் தொழில் புரியலாம் என்று ஏற்பாடு செய்தது. அதன் பிறகு மெல்ல மெல்லமாகப் பெண்கள் பலர் சட்டக் கல் லூரியில் நுழைந்து சட்டம் பயின்று வழக்கறிஞராயும் வழக்குரைஞராயும் தேறி இன்று சட்டத் தொழில் புரி கின்றனர். வேறு சிலர் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து சட் டப் பட்டதாரிகளாக (*LL. B.*) வெளியேறுகின்றனர்.

இன்றைய நிலையில் ஆண்களைவிடப் பெண்களே சட்டத் தொழிலில் ஈடுபடுகின்றனர். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுவரும் சட்டப் பட்டதாரிகளுக்கும் சட்டக் கல்லூரி யில்பயின்று வெளியேறும்சட்டவறிஞருக்கும்(வழக்கறிஞர், வழக்குரைஞர்) இடையே உள்ள வேறுபாடு என்ன என்று சிலர் கேட்கலாம். பல்கலைக் கழகத்தில் படிக்கும் படிப்பு நூற்கல்வி சார்ந்ததாகும் (*Academic*) இலங்கைச் சட்டக் கல்லூரியில் படிக்கும் படிப்பு தொழிற் கல்வி சார்ந் ததாகும், (*Professional study*). சட்டக் கல்லூரியில் பயின்று தேறும் ஒருவர் (வழக்கறிஞரோ, வழக்குரை ஞரோ) நீதியரசர் முன் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டவுடனும் நீதிமன்றங்களின் முன்னர் வழக்காட லாம். சட்டப்பட்டதாரி அப்படிச் செய்யமுடியாது. சட் டப்பட்டதாரியாகத் தேறிய ஒருவர் இலங்கைச் சட்டக் கல்லூரி நடாத்தும் வழக்குரைஞர்க்கான தேர்வுப் பாடங் களில் குறிப்பிட்ட சிலவற்றில் தேறிய பின்னர் தான் சத்தி யப் பிரமாணம் எடுக்கலாம்; அதன் பின்னர்தான் வழக்கு ரைஞராகத் தொழில் புரியலாம். இங்கிலாந்திலே இங்கி லாந்து வழக்குரைஞராகத் தேறிய பின்னர் இலங்கைச் சட்டக் கல்லூரித் தேர்விற்றேறிய பிறகு சட்டத் தொழில் புரிபவர்களும் இலங்கையில் உள்ளனர்.

இன்று இலங்கையில் ஏறத்தாழ நாற்பதைம்பது பெண் சட்டவறிஞர்கள் (*Lawyers*) இருக்கின்றனர். பெண்சட்ட வறிஞரின் எண்ணிக்கை ஆண்டாண்டு தோறும் கூடிக் கொண்டே வருகின்றது.

வெளிநாடுகளில் பெண் சட்டவறிஞர் நீதிபதிகளாக வும், சட்டத்துறைத் தலைவர்களாகவும் உள்ளனர். இலங் கையில் அந்த நிலைமை வெகுவிரைவில் வரும் என்று எதிர்பார்க்கலாம். இந்தியா, இசரவேல், இலங்கை ஆகிய மூன்று நாடுகளிலும் பெண்களேநாட்டின் தலைவியராய் உள் ளனர். எனவே இம்மூன்றில் ஒன்றுதான் வழிகாட்ட வேண் டும். *Youthful offenders* சட்டத்தின் கீழ் பெண் சட்ட வறிஞர் நீதவானாக இருக்கலாம் என்பதையும் இங்கே குறிப்பிடுகிறோம்.

## வளரும் சட்டத் தொழிலர்க்கு

சட்டத்தொழில் சாதாரணமான மக்கள் நினைக்குமாறு போல எளிதான தொழிலல்ல. பணம் உழைக்க இந்தத் தொழிலைப் போல வசதியான தொழில் வேறு கிடையாது என்ற தப்பான அபிப்பிராயமும் நம் நாட்டில் நிலவி வருகின்றது. கலியாணச் சந்தையிலே, வழக்கறிஞர், வழக்குரைஞர் என்போர் ஒறுப்பான சாமான்களாகக் காணப்படுவதற்கும், முண்டியடித்து வாங்கப்படுவதற்கும் இதுதான் காரணம். ஆனால் உண்மை அதுவல்ல.

பணமுடையற்றவர்களே உரோமாபுரியில் இந்தச் சட்டக் கல்வியை மேற்கொண்டார்கள். பணக்காரர்கள் சட்டத் தொழில் புரிந்தால் நீதிநிருவாகம் நன்ருக நடைபெறும் என்று நம்பப்பட்டது. பணமுடையுள்ளவன், அல்லது பணமுடை கட்டவேண்டும் என்று விரும்புபவன் சட்டத் தொழிலில் ஈடுபட்டால் சட்டமும் நீதியும் அவற்றின் போக்கை மாற்றிவிடும் என்று உரோமானியர் நம்பினுர்கள்.

சட்டக்கல்வியும் சட்டத்தொழிலும் இலங்கைக்குட் புகுத்தப்பட்ட காலத்தில் பணக்காரர்கள் தான் சட்டம் படித்தார்கள். இன்றுவரைக்கும் சட்டப்படிப்பானது பணக்காரரின் படிப்பாகவே இருந்து வருகின்றது. சட்டப் படிப்பைக் கற்பிக்கும் சட்டக்கல்லூரியானது சட்ட மாணவரிடமிருந்து கட்டணமாக அறவிடும் தொகை பெருந் தொகையாக இருப்பதொன்றே இதற்குச்சான்று.

வரலாறும் வழக்காறும் எப்படி இருந்தபோதும் மேலே கூறிய தப்பபிப்பிராயம் தோன்றிவிட்டது. அதை அழிப்பது கடினம்.

சட்டத்தொழிலே, பொறுத்திருக்க வேண்டியதொழில் என்று கூறுவது உண்டு, அதாவது *waiting profession* என்று கூறுவது உண்டு. எனவே இந்தத் தொழிலைப் பொறுத்த வரையில், மூளை, அல்லது கெட்டித்தனம் என்ற ஒன்று

பெரிதல்ல என்று பொதுவாகச் சொல்லுவார்கள். எத் தகைய கெட்டிக்காரனுக இருந்தாலும், எடுத்த எடுப்பி லேயே இந்தத் தொழிலில் மிளிர முடியாது. இதற்கு வேறு காரணங்களும் உண்டு. சட்டக் கல்லூரியிலே தேர்வுகளில் சித்தி பெறுவதை நோக்காகக் கொண்டு நாம் படிக்கின்ற முறையும் வேறு; நீதிமன்றத்திலே வழக்குரைஞர் அவரது வழக்கை எடுத்துரைப்பதற்கு அவருக்கு வேண்டிய திறமும் வேறு. சட்டக் கல்லூரித் தேர்விலே திறமையாகத் தேறிய வர், சட்டத் தொழிலிலும் திறமையும் வெற்றியும் பெறு வார் என்று கூறுவதற்கில்லை. சட்டக் கல்லூரித் தேர்வு களில் சாதாரண சித்திகளைப் பெற்ற பலர், சட்டத் தொழிலுக்கு வந்ததும், யாரும் எதிர்பாரா வண்ணம், புக ழேணியின் உச்சப்படிக்கு வந்த வரலாறுகள் நிறைய உள.

**சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது** என்பது உண்மையே யாஞலும் பேச்சாளராயுள்ளவர்கள் சட்டத் தொழிலில் மின்னுவார் கள் என்று எண்ணுவதும் சரியல்ல. ஆனுல் **"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச் சொல்லை வெல்லுஞ் சொல் இன்மையறிந்து"** என்ற குறட்படி நடக்கும் சட்டத் தொழிலர்கள் தம் தொழிலில் வெற்றி பெறுவார்கள் என்பது திண்ணம்.

கோடையிடிப் பேச்சுக்கும், அடுக்குமொழி இடிமுழக் கிற்கும், மயங்கிய நீதியரசர் நீதிமன்றங்களை அலங்கரித்த ஒருகாலம் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனுல் அது மலையேறிவிட்டது. இன்றைய நீதிமன்றங்களில், வழக் குரைஞர் கூறும் வாதமும் வாதிக்கும் முறையும் தான் முக் கியம். கரடுமுரடான நடத்தையும் தலைகனத்த தனமும் வெற்றிக்குவழியாகா! வழக்காளிகளோடு பழகும்போது கூட, வழக்கறிஞர், வழக்குரைஞர் என்போர் மிகவும் பண் பாகப் பழகிக் கொள்ள வேண்டும். புதிதாகச் சட்டத் தொழிலில் இறங்கும் சட்டத் தொழிலர், வழக்கு முறை கள் பலவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிருர் என்பதை அவர் மறந்து விடக் கூடாது. வழக்கு

முறைகளையும் நீதிமன்ற நடவடிக்கைகளையும் ஓரிரு நாட்களில் அல்லது சந்தர்ப்பங்களில் கற்றுவிட முடியாது. கைக்குழந்தையானது அசையத் தொடங்கி, உடம்பு பெயர்க்கப் பழகி, தவழக்கற்று, எழும்பமுயன்று நடக்கத் தொடங்குவதைப் போன்றது தான் இந்தத் தொழிலும். ஆகவே சட்டத் தொழிலர் ஒருவர் முன்னேற வேண்டுமானால், வழக்குகளிலே அடிக்கடி தோன்றுவதற்கு அவருக்குச் சந்தர்ப்பங்கள் தேவை. சட்டத் தொழிலர்கள் தம்மிடம் வரும் வழக்காளிகளிடம் பண்பாகவும் பவ்வியமாகவும் பழகாவிட்டால் அவர்கள் பின்னொருமுறை அந்தச் சட்டத் தொழிலரிடம் போகமாட்டார்கள்.

வழக்காளிகளோடு மட்டுமல்லாமல் நீதிமன்றத்திலே அவர் சந்திக்கும் எதிரி, எதிராளி, சாட்சிகள் ஆகியவர்களோடும் அவர் அளவாகவும் அன்பாகவும் பழகிக் கொள்ள வேண்டும். ''சாவதானமாக அவர்களுடன் சாந்தமாக உரையாடினால், நீங்கள் அவர்களிடமிருந்து பெற விழையும் செய்திகளை அவர்களே கக்கி விடுவார்கள்'' என்று என். கே. சொக்ஸ்கி, கியூ. சி. அவர்கள் கூறியுள்ளதை இளம்வழக்குரைஞர் மனங்கொளல் நன்மை தரும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் கவனிக்க வேண்டியது, சட்டத் தொழிலர்க்கும் நீதிபதிகளுக்கும் இடையிலான உறவு. மேடையிலே அமர்ந்திருக்கும் நீதிவானுடனோ நீதிபதியுடனோ மோதுவதால் ஆக்கம் விளையாது ஆபத்தே நேரும் என்பதைச் சட்டத் தொழிலர் தமது மந்திரமாகக் கொள்ளல் வேண்டும்.

இந்தத் தொழிலில் முன்னுக்கு வந்தவர் எல்லோரும் முயன்றுதான் வந்தவர்கள். இவர்கள் பின்தூங்கி முன்னெழுந்து உழைத்தவர்கள், விடிய வெள்ளென மூன்று மணிக்கு எழுந்து சட்டப் புத்தகங்களுடன் தலையையுடைக்கும் வழக்குரைஞர் பலர் உளர். அவர்கள் தான் இன்று முன்னணியில் நிற்கின்றனர். *Law is a selfish mistress* என்பதை இவர்கள் உணர்ந்தவர்கள். **''செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்தில்லாளின் ஊடிவிடும்''** என்ற குறள் சட்டத்திற்கும்பொருந்தும்.

# 3

# நீதிமன்றங்கள்

## கோமறைக்கழகம் Privy Council

இலங்கையைப் பொறுத்த வரையில் நீதிமன்றங்களின் படிவரிசையில் உச்சியில் உள்ளது பிறிவிக் கவுன்சில் எனப்படும் கோமறைக் கழகம் ஆகும். பிரித்தானியாவின் அரசியாரின் சட்ட ஆலோசகர்களைக் கொண்டு அமைந்ததுதான் இந்தக் கோமறைக்கழகம். இந்தக் கழகத்தில், பொதுவாக ஐந்து சட்ட அறிஞர்கள் உறுப்பினர்களாய் உள்ளனர். இவர்களுள் ஒருவர், பொதுநல அரசு நாடொன்றைச் சேர்ந்த சட்ட அறிஞராய் இருத்தலும் உண்டு.

பொதுநல அரசு நாடுகளின் உயர்நீதிமன்றங்களின் முடிவுகளுக்கெதிரான முறையீடுகளை வரவேற்று அவற்றை ஆராய்தல் இந்தக் கழகத்தின் பணியாகும். இந்தக் கழகத்துக்கு மேன்முறையீடுகளை வரவேற்பதற்கு அரசியார்க்கு உள்ள தத்துவத்தையும் சில சட்டங்கள் பேணிக் காத்துள்ளன.

கோமறைக் கழகத்துக்குஎப்படிமுறையீடுசெய்யலாம், செய்ய வேண்டும், என்பன பற்றிய விபரங்களை கோமறைக் கழக மேன்முறையீட்டுக் கட்டளைச்சட்டம் எடுத்துரைக்கின்றது. மேன்முறையீடு செய்யலாம் என்றால் இட்டப்படிக்கு முறையீடு செய்யலாம் என்று பொருளாகாது. சில சந்தர்ப்பங்களில் மட்டுமே அதை ஓர் உரிமையாகக் கொள்ளலாம். ஏனைய விடயங்களில் உயர்நீதிமன்றத்தின் முன்னங்கீகாரம் பெற்ற பின்னரே மேன்முறையீடு செய்யலாம். இன்னும் சில சந்தர்ப்பங்களில் கோமறைக் கழகத்தின் முன்கூட்டிய அனுமதி பெற்றபின்பே மேன்முறையீடு செய்யலாம்.

உரிமை வழக்குகளைப் பொறுத்த வரையில் சம்பந்தப்பட்ட பிணக்கு 5000 ரூபாய்க்கு மேற்பட்டதாக இருந்தால் உயர்நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறாமலே மேன்முறையீடு செய்யலாம். ஏனைய சந்தர்ப்பங்களிலும் கூட, வழக்கிற் சம்பந்தப்பட்டுள்ள விடயம் பொது முக்கியத்துவம் வாய்ந்ததாயின் அல்லது பகிரங்க முக்கியத்துவம் வாய்ந்ததாயின் அல்லது வேறுவகையில் அரசியாரின் ஆலோசனைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஒன்றாயின், நீதிமன்றமானது அதன் தற்றுணிபின்படி அந்த வழக்கை இராணியாருக்கு அனுப்பி வைக்கலாம்.

இந்தக் கோமறைக் கழகமானது, பொதுநலவரசு நாடுகளின் உச்சி நீதிமன்றமேயொழிய, இங்கிலாந்திலுள்ள நீதி மன்றங்களெல்லாவற்றுக்கும் தலையானதொன்றல்ல. இங்கிலாந்திலுள்ள மற்ற உயர் நீதிமன்றங்கள் கோமறைக் கழகத்தின் முடிவுக்கு மதிப்புத்தர வேண்டும் என்ற நியதியில்லை. இலங்கையானது இன்றைய நிலையில் இராணியைத் தலைவியாகக் கொண்டிருத்தலால் கோமறைக் கழகத்தின் முடிவுகளை இலங்கை உயர் நீதி மன்றம் அநுசரித்தே ஆகவேண்டும். ஆனால், இலங்கை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப் பட்டவுடன் இலங்கைக்கு நாம்தான் மன்னர். நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் ஆகிவிடுவோம். அதன்பிறகு இராணியார் எமது

தலைவி இல்லை. குடியரசு நாடானதன் பிறகு பொதுநலவர சில் நாம் அங்கம் வகிக்க வேண்டிய அவசியமில்லை. நாம் விரும்பினுல் அங்கத்துவ நாடாக இருக்கலாம். இல்லாது விட்டால் விலகிவிடலாம்.

இதை நாங்கள் எழுதிக் கொண்டிருக்கும் நேரத்தில் இலங்கையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்ற ஒன்றைத் தாபிப்பதற்கும், பேரவைக்கண் அமர்ந்த மாட்சிமை தங்கிய மகாராணியாருக்கு மேன்முறையீடு செய்வதனை ஒழிப்பதற்குமெனச் சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அச் சட்டத்தின் ஏற்பாடுகளைப்பற்றிச் சிறிது கூறுவோம்.

## மேல்முறையீட்டு நீதிமன்றம் Court of Appeal

ஏலவே நிலவி வருகின்ற நீதிமன்றங்களை விட ''மேல் முறையீட்டு நீதிமன்றம்'' எனப் பெயரிய நீதிமன்றம் ஒன்று இப்பொழுது அமைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகக் கோமறைக் கழகத்துக்கு இனிமேல் மேன்முறையீடு செய்யமுடியாது.

இந்நீதிமன்றம், தனியானதும் இறுதியானதுமான குடியியல், குற்றவியல் மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை உடையதாய் இருக்கும். இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு எல்லா விடயங்களிலும் முற்றும் முடிவுமானதாகும்.

இது, தலைவர் ஒருவரையும் ஆறு பேர்களுக்கு மேற்படாத வேறுநீதியரசர்களையும் கொண்டிருக்கும். மேன்முறையீடுகளைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கென அவர்கள் அனைவரும் ஒருங்கிருக்கலாம்; அல்லது குறைந்த எண்ணினரும் நீதிமன்றமாக அமரலாம். மேன்முறையீட்டு நீதிமன்றமொன்றுய் அமைவதற்குத் தேவையான நீதிபதிகளின் ஆகக் குறைந்த எண்ணிக்கை மூன்ருக இருக்கும். நீதிமன்றம், மூன்று நீதியரசர்களுக்குக் குறையாமலும் இரட்டையல்லாத எண்ணிக்கையினரைக் கொண்டதாயும் இருப்பின் அது முறையாக அமைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும். ஒரேசமயத்தில் இரு பிரிவுகளாகவும் அது அமரலாம்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைவரும் மற்றைய ஆறு நீதியரசர்களும், முதலமைச்சரின் ஆலோசனைக்கிணங்க மகாதேசாதிபதியினால் உரிமை ஓலைமூலம் நியமிக்கப் படுவார்கள். மேன்முறையீட்டு நீதியரசர் ஒவ்வொருவரும் ஐந்தாண்டுகளுக்கு நியமிக்கப்படுவர்.

இன்னலுறும் ஆளொருவர் இந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அநுமதியுடன், குற்றவியல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம், அல்லது ஏதேனும் குற்றவியல் வழக்கில் உயர் நீதிமன்றம் அதனது மேன்முறையீட்டுநியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அதனாற் கொடுக்கப்பட்ட தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யமுடியும். சட்டப்பிரச்சினையொன்று மீதான மேன்முறையீடாகவிருப்பின், நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் 42ஆம் பிரிவின் கீழ் அல்லது 45ஆம் பிரிவின் கீழ் உயர்நீதிமன்றத்துக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் எழுத்தாணை ஒன்றை வழங்குகின்றதான அல்லது வழங்க மறுக்கின்றதான அத்தகைய தீர்ப்புக்கெதிராகவும் இந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம். பொதுவான அல்லது பகிரங்க முக்கியத்துவம் வாய்ந்த ஏதேனும் உரிமையியல் வழக்கில் அல்லது கருமத்தில் உயர்நீதிமன்றம் அதனது நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் போது அதனாற் கொடுக்கப்பட்ட தீர்ப்புக்கெதிராகவும் இந்த நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்ய முடியும். அத்துடன் எழுத்திலான ஏதேனும் சட்டம் 1946ஆம் 1947ஆம் ஆண்டுகளின் இலங்கை (அரசியலமைப்பும் சுதந்திரமும்) பேரவைக் கட்டளையின் வரம்பினை இகந்துள்ளதா என்பது பற்றிய பிரச்சினை தொடர்பில் உயர்நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்புக்கெதிராகவும் மேன்முறையீடு செய்ய முடியும்.

# குற்றவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம்
# Court of Criminal Appeal

இலங்கையில் நிகழும் பாரிய குற்றங்களை விளங்கும் நீதிமன்றங்களுக்குப் பருவ நீதிமன்றம் (அசைஸ் கோட்) என்று பெயர். குறிப்பிட்ட சில காலங்களில், நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட வெவ்வேறு இடங்களில் இந்தக் குற்ற விசாரணைகள் நடைபெறுவதால் இவ்விசாரணைகளை நடத்தும் நீதிமன்றங்கள் பருவ நீதிமன்றங்கள் என்று வழங்கப் பெறுகின்றன. மேற்சொன்ன பருவநீதிமன்றங்களின் தீர்ப்புக்கெதிரான முறையீடுகளை விளங்குதலே குற்றவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பணியாகும். 1940ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் குற்றவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் என்று ஒன்று இருக்கவில்லை. எனவே பருவநீதிமன்றத்தின் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்ய வேண்டுமானால் கோமறைக்கழகத்துக்கு மேன்முறையீடு செய்ய வேண்டியிருந்தது; அல்லது, சட்டத்துறைத் தலைமையதிபதி தமது சிறப்பாணை கொண்டு, அந்தத் தீர்ப்புக்கெதிராக உயர்நீதிமன்றத்திடம் எடுத்தியம்பவேண்டியிருந்தது. இன்றோ அந்த அவலநிலை இல்லை.

குற்றவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கென்று தனியான நீதியரசர்கள் இல்லை. உயர்நீதிமன்றத்தின் நீதியரசர்களே இதிலும் நீதியரசராயிருப்பர். ஏதேனும் மேன்முறையீட்டை விளங்குவதற்கு மூவருக்குக் குறையாத எண்ணிக்கையினர் இருத்தல் வேண்டும். சில சமயங்களில் குற்றவழக்குமேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஐவர் அல்லது எழுவர் இருத்தலும் உண்டு. இந்த நீதிபதிகளில் ஒருவர், முதுமுறைப்படி மூத்தவர், தலைவராயிருத்தல் வேண்டும். உயர் நீதிமன்ற நீதியரசர் பருவ நீதிமன்ற நீதிபதியாகவிருத்தலும் உண்டு. அவர் தீர்ப்பளித்த வழக்கின் மேன் முறையீட்டில் அவர் பங்குபற்றமாட்டார்.

பருவ நீதிமன்ற நீதிபதியை பருவ நீதிமன்ற ஆணையாளர் என்போம். பருவ நீதிமன்றத்தின் தீர்ப்புக்கெதிராகக் குற்றவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்ய விரும்புவோர், அத்தகைய தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுள், தாம் அவ்வாறு செய்யப்போவதாகக் குற்றவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

மேன்முறையீடு செய்பவர், சில சமயங்களில் குற்றவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறவேண்டியிருக்கும்.

மேன்முறையீட்டில், மேன்முறையிடுபவர் தோற்றால் அவர் கோமறைக் கழகத்தின் துணையை நாடலாம்; அதேபோல மறுதிறத்தவரும், இடருற்றால், அதன் துணையை நாடலாம். இனிமேல் கோமறைக் கழகத்துக்குப் பதிலாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தை நாடலாம்.

குற்றவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், கீழ் நீதிமன்றத்தில் எடுத்துக் கூறப்படாத சான்றெதையும், புதிதாகக் கூறுதல் சாதாரணமாக இயலாது. இதனால் இந்த நீதிமன்றத்தில் சாட்சிகள் விளங்கப்படுவதும் இல்லை. ஆனால் குற்றஞ் சாட்டப்பட்டு விளக்கமறியலில் இருப்பவர் குற்றவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிகழும் வழக்கு நடவடிக்கையைப் பார்ப்பதற்கு உரிமையுண்டு.

குற்றவழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் வழக்குரைக்கும் உரிமை வழக்கறிஞருக்குக் கிடையாது.

மேன்முறையீடொன்றை விளங்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம், வழக்கை விசாரித்த பின்னர் குற்றவாளியைக் குற்றமற்றவரென விடுவிக்கலாம்; அல்லது பருவநீதிமன்றம் விதித்த தண்டனையைக் குறைக்கலாம்; அல்லது விதித்த தண்டனை போதாததென்று கருதுமிடத்து அந்தத் தண்டனையைக் கூட்டலாம்.

## உயர்நீதிமன்றம் **Supreme Court**

குற்ற வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அடுத்தபடியில் உள்ளது உயர்நீதிமன்றம் ஆகும். 1889ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்தே, உயர்நீதிமன்றமொன்று இலங்கையில் தாபிக்கப்பட்டிருந்தது. இந்தநீதிமன்றம் தொடர்ந்திருக்க வேண்டும் என்று 1889இல் இயற்றப்பட்ட நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் (*Courts ordinance*) 6ஆம் பிரிவு ஏற்பாடு செய்தது. இன்றுள்ளபடி, இன்றைய உயர் நீதிமன்றத்தில் 11 நீதியரசர்கள் இருக்கிறார்கள். 1801 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றத்தில் 2 நீதியரசர் மட்டுமே இருந்தனர். இந்த எண்ணிக்கை காலத்துக்குக் காலம் அதிகரித்து வந்து 1962 ஆம் ஆண்டில் (1ஆம் இலக்கச் சட்டப்படி) 11 ஆயிற்று. இந்தப் பதினொரு பேரில் பத்துப்பேர் இளம் நீதியரசர் அல்லது கனிட்ட நீதியரசர் என்று அழைக்கப்படுவர்; ஒருவர் பிரதம நீதியரசர் என அழைக்கப்படுவர்.

உயர் நீதிமன்ற நீதியரசர்மார் மகாதேசாதிபதியால் நியமிக்கப்படுவர். இவர்கள் அறுபத்திரண்டு வயதை அடையும் வரை பதவியில் இருக்கலாம். மகாதேசாதிபதி விரும்பினால், 62 வயதை அடைந்து விட்ட நீதியரசர் ஒருவரின் பதவிக்காலத்தை மேலும் ஓராண்டுக்கு, ஓராண்டுக்கு மட்டும், நீடிக்கலாம். நீதியரசர் ஒருவரை பாராளுமன்றம் கொண்டுவரும் தீர்மானத்தின் மேல், மகாதேசாதிபதியானவர் பதவியிலிருந்து விலக்கலாமொழிய வேறெவ்விதத்திலும் பதவியிலிருந்து விலக்கமுடியாது.

நீதியரசரின் சம்பளத்தைப் பாராளுமன்றமே தீர்மானிக்கும். நீதியரசர் ஒருவருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் அவரின் பதவிக் காலத்தின் போது குறைக்கப்படுதலாகாது.

இலங்கையில் நடைபெறும் குற்றங்கள், தவறுகள் என்பனவற்றை விசாரணை செய்து தீர்ப்பு வழங்க, உயர் நீதிமன்றத்துக்குத் தத்துவம் உண்டு. இன்ன இன்ன குற்றங்களை, உயர் நீதிமன்றம் விசாரிக்கலாம், இன்ன இன்னவற்றை மாவட்ட நீதிமன்றம் விசாரிக்கலாம், எதையெதை நீதிவான் நீதிமன்றம் விசாரிக்கலாம், என்பன பற்றிய விபரங்கள் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்

கோவைக்கான அட்டவணையில் அடங்கியுள்ளன. குறிப்பிட்ட ஒரு குற்றத்துக்கான வழக்கை எந்த நீதிமன்றத்தில் தொடுக்கலாம் என்று மலைக்க வேண்டியதில்லை. குற்றவியல் நடவடிக்கை முறைச்சட்டக் கோவையைப் புரட்டிப்பார்த்தால் புரிந்துவிடும். பொதுப்பண்டயாகச் சொல்வதானல், கொலை, கொலை முயற்சி, தற்கொலை முயற்சி, வன்புணர்ச்சி, அரசுக்கெதிரான சதி முதலிய பெருங்குற்றங்களை உயர்நீதிமன்றந்தான் விசாரித்துத் தீர்ப்புக் கூற முடியும். இப்படிச் சொன்னதும் வாசகர்களுக்கு ஒருவித மலைப்பு ஏற்படலாம். கொலைக் குற்றத்துக்கான வழக்கை நீதிவானும் விசாரிக்கிறார் தானே என்று எண்ணலாம். உண்மைதான்; அவர் விசாரிக்கிறார்தான். ஆனல் அவர் எப்போதாவது தீர்ப்புக் கூறுகிறாரா என்றால் இல்லை என்பது தான் மறுமொழி. சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டை விசாரித்து அந்தக் குற்றச்சாட்டில் உண்மையேதேனும் இருந்தால் அந்த வழக்கை உயர் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தும் பணியைத்தான் நீதிவான் செய்கிறார். நீதிவான் செய்யும் இந்த, மேலோட்டமான விசாரணை ''தாமே தீர்ப்புக் கூறாத விசாரணை'' அதாவது *Non Summary Inquiry* எனப்படும். பாரதூரமான வழக்குகளை நேரடியாக விசாரிக்கும் நியாயாதிக்கம் (*Original Jurisdiction*) மட்டுமல்லாமல் கீழ் நீதிமன்றங்களிலிருந்து, அதாவது மாவட்ட நீதிமன்றம், விண்ணப்ப நீதிமன்றம் போன்றவற்றிலிருந்து மேன்முறையீடு என்ற முறையில் ஆற்றுப்படுத்தப்படும் வழக்குகளை விசாரிக்கும் நியாயாதிக்கமும் உயர்நீதி மன்றத்திற்கு உண்டு.

மாவட்ட நீதிமன்றம், விண்ணப்ப நீதிமன்றம் என்பனவற்றின் தீர்ப்புக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம் என்று பொதுப்படையாகக் கூறினலும், சில முடிவுகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்ய இயலாது போதலும் உண்டு. அப்படியான சந்தர்ப்பங்களில், கீழ் நீதிமன்றம் தீர்ப்புக் கூறிய அந்த வழக்கை மறுபரிசீலனை செய்யும்படி கேட்கும் உரிமை வழக்காளிக்கு உண்டு.

பிழை விடாதவர் எவருமே இல்லை. கீழ் நீதிமன்ற நீதிபதிகள் சில சமயம் தவறுதல் கூடும். எனவே காலத்துக்குக்

காலம், நீதிமன்றங்களினுல் விளங்கப்பட்ட வழக்குகளுக்கான ஆவணங்களைத் தம்பாற்றருவித்து, அந்த வழக்குத் தீர்ப்புக்களின் குறைநிறைகளைப் பரிசோதிக்கும் தத்துவம் உயர்நீதி மன்றத்திற்கு உண்டு. உயர்நீதி மன்றமானது அசைசு நீதிமன்றமாகக் குற்றங்களை விளங்கும்போது யூரிமாரும் உடனிருப்பர். யூரிமாரின் துணிவுரைக்கு (*Verdict*) இணங்கவே நீதியரசரின் தண்டனைத் தீர்ப்பு அமையும்.

நீதிவான் நீதிமன்றங்களிலிருந்து மேன்முறையீடு செய்யப்படும் வழக்குகளை உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் விளங்கித் தீர்ப்பளிக்கலாம்; ஆனுல், மாவட்ட நீதிமன்றத் தீர்ப்புக்கெதிரான மேன்முறையீடாயின் குறைந்தது இரண்டு நீதியரசர்களாகுதல் இருத்தல் வேண்டும்.

## மாவட்ட நீதிமன்றம் District Court

உயர்நீதி மன்றத்திற்கு அடுத்தபடியில் இருக்கின்றது மாவட்ட நீதிமன்றம். ஒவ்வொரு நீதிநிருவாக மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நீதிமன்றம் என்ற முறையில், மேற்குச் சுற்றுலாப் பிரிவுக்கு 9 மாவட்ட நீதிமன்றங்களும், நடுச் சுற்றுலாப் பிரிவுக்கு 6 மாவட்ட நீதிமன்றங்களும், வடக்குச் சுற்றுலாப் பிரிவுக்கு 4 மாவட்ட நீதிமன்றங்களும், தெற்குச் சுற்றுலாப் பிரிவுக்கு 4 மாவட்ட நீதிமன்றங்களும், கிழக்குச் சுற்றுலாப் பிரிவுக்கு 3 மாவட்ட நீதிமன்றங்களும் உள்ளன. இந்தக் கணக்கின் படி இலங்கையில் எல்லாமாக 26 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. ஆனுல் உண்மையில் 28 மாவட்ட நீதிமன்றங்கள் இயங்குகின்றன. மாவட்ட நீதிமன்றத்தில் அமரும் நீதிபதியை மாவட்ட நீதிபதி என்போம்.

குற்றவியல் வழக்குகளையும், உரிமையியல் வழக்குகளையும் விசாரிக்கும் நியாயாதிக்கம் மாவட்ட நீதிமன்றத்திற்கு உண்டு. குற்றவியல் வழக்குகள் சம்பந்தப்பட்ட வரையில் எந்தெந்தக் குற்றங்கள் பற்றிய வழக்கை மாவட்ட நீதிமன்றம் விளங்கலாம் என்பதைக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை கூறும். உரிமை

யியல் வழக்கைப் பொறுத்தவரையில் 750 ரூபாவுக்குமேற்பட்ட பெறுமதி கொண்ட எந்த வழக்கையும் மாவட்ட நீதிமன்றம் விளங்கித் தீர்ப்புக் கூறலாம்; இதற்குக் குறைந்த பெறுமதி கொண்ட வழக்கை விண்ணப்பத் நீதிமன்றம் விளங்கும். குற்றவியல் வழக்குகளில் தண்டனை விதிக்கும்போது, குறிப்பிட்ட ஒரு தண்டனைக்கு மேல் விதிக்கும் உரிமை மாவட்ட நீதிபதிக்குக் கிடையாது. மாவட்ட நீதிபதி விதிக்கக் கூடிய ஆகக் கூடிய தண்டனை 2 வருடச் சிறைத்தண்டனை அல்லது ஓராயிரம் ரூபா குற்றப்பணம் அல்லது 2 வருடச் சிறைத்தண்டனை, ஆயிரம் ரூபாக் குற்றப்பணம் என்ற இரண்டும் கலந்த ஒன்று.

குறித்த சில வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறும் உரிமை மாவட்ட நீதிமன்றத்திற்கு மட்டுமே உண்டு. திருமண நீக்கம், கடனிறு வகையறவு, (*Insolvency*) மரண சாதனம் (பூதல்) என்பன பற்றிய வழக்குகளை விசாரிக்கும் நியாயாதிக்கம் மாவட்ட நீதிமன்றத்துக்கு மட்டுமே உண்டு. இது மட்டுமன்றி, உயர்நீதி மன்றம் மட்டுமே விசாரிக்கலாம் என்று விதிக்கப்படாத வழக்குகளை விசாரிக்கவும் மாவட்ட நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் உண்டு. அத்தோடு, புத்திசுவாதீனமற்றோர், பராயமடையாதோர், இளங்கணர் என்போர்மீதும், அவர்களின் ஆதனங்கள் மீதும் மாவட்ட நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் உண்டு.

நேரடி நியாயாதிக்கம் மட்டுமல்லாமல், மேன்முறையீட்டு நியாயாதிக்கமும் மாவட்ட நீதிமன்றத்திற்கு உண்டு. கிராம (ஊர்) நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றால் அதிருப்தி அடைந்துள்ள கட்சிக்காரர் ஒருவர் அந்தத் தீர்ப்புக்கெதிராக (பதினுன்கு நாட்களுள்) மாவட்ட நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 86ஆம் பிரிவானது, மாவட்ட நீதிமன்றங்கள் தடையுத்தரவெழுத்தாணைகளை (*Injunctions*) விடுப்பதற்கு ஏற்பாடு செய்கின்றது.

# விண்ணப்ப நீதிமன்றம்
# Court of Requests

விண்ணப்ப நீதிமன்றங்களை எப்படி யார் தாபிக்கலாம் என்பது பற்றி, நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 52ஆம் பிரிவு கூறுகின்றது. இலங்கையிலுள்ள நீதி நிருவாகப் பெரும்பாகம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விண்ணப்ப நீதிமன்றத்தை நீதியமைச்சர், கட்டளைமூலம், நியமிக்கலாம்.

மேற்குச் சுற்றுலாப் பிரிவில் 9 பெரும்பாகமும்
நடுச் சுற்றுலாப் பிரிவில் 9 பெரும்பாகமும்,
வடக்குச் சுற்றுலாப் பிரிவில் 5 பெரும்பாகமும்
தெற்குச் சுற்றுலாப் பிரிவில் 5 பெரும்பாகமும்
கிழக்குச் சுற்றுலாப் பிரிவில் 2 பெரும்பாகமும் உள்ளன.

மொத்தத்தில் 30 பெரும் பாகங்கள் இலங்கையில் இருப்பதால், 30 விண்ணப்ப நீதிமன்றங்கள் இலங்கையில் உள்ளன என்று நாம் எண்ண முடியும். மாவட்ட நீதிமன்றத்துக்கு அடுத்த படியிலுள்ளதான விண்ணப்ப நீதிமன்றம் சிறு சிறு வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கக் கூடிய நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ளது. குற்றவழக்குகளை விளங்கும் நியாயாதிக்கம் விண்ணப்ப நீதிமன்றத்திற்குக் கிடையாது. வழக்கிலே சம்பந்தப்பட்டுள்ள, கடன், சேதம் அல்லது கோரிக்கையின் தொகை 750ரூபாவுக்குக் குறைவானதாயின், அத்தகைய வழக்கை விண்ணப்ப நீதிமன்றத்திலே தொடுக்க முடியும். ஆனால் ஒன்று; குறித்த ஒரு விண்ணப்ப நீதிமன்றத்திலே மேற் சொன்ன மூன்று நோக்கங்களில் ஒன்றுக்காக நான் வழக்குத் தொடர விரும்பினால் எனது எதிராளி அந்த விண்ணப்ப நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டுள்ள இடத்தில் வசிப்பவராய் இருத்தல் வேண்டும் அல்லது வழக்கிலே கூறப்படும் தீங்கானது அந்நீதி மன்ற நியாயாதிக்க எல்லையுள் எழுந்ததாயிருத்தல் வேண்டும்.

ஈடு சம்பந்தப்பட்ட வழக்காயின், கோரப்படும் தொகையானது எழுநூற்றைம்பது ரூபாவுக்கு மிகாததாயிருந்தால், அந்தக்காணி அல்லது அதன் ஏதேனும் பகுதி அமைந்துள்ள இடத்தின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள விண்ணப்ப நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். காணியின் உரித்து அல்லது உரிமை அல்லது உடமை யாருடையது என்பதைப் பிணக்காகக் கொண்ட வழக்குகளையும் அங்கே தொடரலாம். முந்நூறு ரூபாவுக்கு மேற்படாத காணியொன்றைப் பாகப்பிரிவினை செய்தல், விற்றல் என்பன தொடர்பிலான வழக்குகளையும் விண்ணப்ப நீதிமன்றமொன்றில் தொடுக்கலாம். அங்கும் சம்பந்தப்பட்ட அந்தக் காணியானது நாம் வழக்கு வைக்க எண்ணியுள்ள நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துள் அமைந்ததாயிருத்தல் வேண்டும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

கல்யாணம் செய்வதாகக்கூறிப் பின் ஏமாற்றுதல், பெண்கெடுப்பு, திருமணமுறிவு, போன்றவழக்குகளை இந்த நீதிமன்றத்திலே தொடுக்க முடியாது. அதற்கு மாவட்ட நீதி மன்றத்திடம் போக வேண்டும்.

வேலை செய்ததற்குக் கூலியாகத் தமக்கு வரவேண்டியதை முதலாளி தரமறுத்தார் என்றுகூறி இந்த நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியும். வரவேண்டிய தொகை 750 ரூபாவுக்கு மேற்படுவதாயிருந்தாலும் இந்த நீதிமன்றத்திலே வழக்குத் தொடர முடியும். சில நீதி மன்றங்களில் பராயமடையாதோர் வழக்குத் தொடர முடியாது என்ற வரையறை உண்டு. ஆனால், வேலைக் கூலி தொடர்பானதாயின் பராயமடையாதோரும் இங்கே வழக்கு வைத்து நீதிபெறலாம்.

தடையுத்தரவெழுத்தாணை (*Injunction*) விடுக்கும் தத்துவம் விண்ணப்ப நீதிமன்றத்திற்கும் உண்டு. நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 86ஆம் பிரிவு இதற்கு வகை செய்கின்றது. விண்ணப்ப நீதிமன்றம் விடுக்குந் தடையுத்தரவை மீறினால் அம் மீறுகை நீதிமன்றத்தை அவமதித்ததாக முடியும். மீறுபவர் அதற்காகத் தண்டிக்கப்படுவர்.

விண்ணப்ப நீதிமன்றத்தில் நிகழும் விசாரணைகள் நடவடிக்கை முறைகள் என்பன மிகவும் எளிதானவை. வலுக் கட்டாயமான சம்பிரதாயங்கள் அந்த நீதிமன்றத்தில் இல்லை. நிவாரணம் அல்லது பரிகாரம் தேடி நீதிமன்றத்திற்கு வருவோரை அலைக்கழிக்கக் கூடாதென்பதற்காகவே அந்த நீதிமன்றத்தில் சம்பிரதாயங்கள் சட்டநுட்பங்கள் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை.

வழக்குத் தொடுக்கும் நடவடிக்கைமுறையைப் பொறுத்த வரையில் மாவட்ட நீதிமன்றத்திற்கும் விண்ணப்ப நீதிமன்றத்திற்கும் இடையே ஒரு வேறுபாடுஉண்டு. மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கும் போது, விதிக்கப்பட்ட முத்திரையுடன் கூடிய எழுத்திலான பிராதினை (*Plaint*) மாவட்ட நீதிமன்றத்திடம் அல்லது நீதிமன்ற அலுவலர் ஒருவரிடம் கொடுத்தல் வேண்டும். விண்ணப்ப நீதிமன்றத்தின் விடயத்தில் இந்தத் தேவைப்பாடு இல்லை. வழக்கு வைக்க விரும்புபவர் விண்ணப்ப நீதிமன்ற ஆணையாளர் முன் தோன்றித் தமது வழக்கைச் சொன்னால், ஆணையாளர் அவற்றை எழுதி, விதிக்கப்பட்ட முத்திரையை வழக்காளியிடம் இருந்து பெற்று வழக்கெழுதிய தாளில் அதை ஒட்டுவார்இதன் பிறகு, எதிராளியும் தமது மறுமொழியைச் சொன்னால் அவற்றை ஒரு தாளில் எழுதிக் கொள்வார். இது தான்மறுமொழி (*Answer*) ஆகும்.

இந்த வழக்குத் தாளையும் மறுமொழியையும் வைத்துக் கொண்டு, பிரச்சினைக்குரிய நிகழ்வுகளைப் பொறுக்கியெடுத்து அவற்றை விசாரித்துத் தீர்ப்பும் சொல்வார். இப்படியான வசதிகள் வேறெந்த நீதிமன்றத்திலும் கிடையா.

விண்ணப்ப நீதிமன்றத்திற்கு ஒரு விசேட நியாயாதிக்கமும் உண்டு. 1941ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க மகவேற்புக் கட்டளைச் சட்டம் (சுவீகாரக்கட்டளைச் சட்டம்) இந்த விசேட நியாயாதிக்கத்தை அதற்கு வழங்கியுள்ளது.

## நீதிவான் நீதிமன்றம் **Magistrate's Court**

நீதிவான் நீதிமன்றத்தைப் ''பொலீசுக் கோட்'' அல்லது பொலிசு நீதிமன்றம் என்று குறிப்பிடுதலும் உண்டு. ஆனால், நீதிவான் நீதிமன்றம் என்பதே பெருவழக்கில் உள்ளது. மாவட்ட நீதிமன்றத்துக்கு அடுத்த படியிலுள்ள குற்றவியல் நீதிமன்றம் இதுதான். இந்த நீதிமன்றத்துக்கு நடுவராய் இருப்பவர் நீதிவான் என்று வழங்கப்படுவர். நீதி நிருவாகப் பெரும்பாகம் ஒவ்வொன்றிற்கும் நீதிவான் நீதிமன்றம் ஒன்று இருக்க வேண்டுமென்று நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 52ம் பிரிவு ஏற்பாடு செய்கின்றது. மேற்குறித்த கட்டளைச்சட்டத்தின் 81ஆம் பிரிவு நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பற்றி விபரித்துக் கூறுகின்றது.

உயர்நீதி மன்ற நீதியரசர் மகாதேசாதிபதியினால் உரிமையோலை (*Letters Patent*) மூலம் நியமிக்கப்படுகின்றனர் என்று அறிந்தோம். நீதியரசர் பதினொருவரைக் கொண்ட நீதித்துறைப்பகுதியைப்பெரியநீதித்துறைஎன்றும்மாவட்ட நீதிபதி, விண்ணப்பநீதிமன்ற ஆணையாளர் நீதிவான் முதலியோரைக்கொண்ட பகுதியைச் சிறிய நீதித்துறை என்றும் வழங்கலாம். மாவட்ட நீதிபதி முதலாயினோரை நியமிப்பதற்கென நீதிச் சேவை ஆணைக்குழு என்று பெயர் படைத்த ஆணைக்குழு ஒன்றுண்டு. மாவட்ட நீதிபதி முதலானோரின் சம்பளம், பதவியுயர்வு இடமாற்றம் ஆகியவற்றை இந்த ஆணைக்குழு கவனித்துவரும். இந்த ஆணைக்குழுவுக்கு மூன்று உறுப்பினர் இருப்பார்; பிரதம நீதியரசர் தவிசாளராய் இருப்பார். மற்ற இருவரும் நீதிமன்ற நீதியரசராய் இருக்க வேண்டும் என்ற விதிப்புண்டு. இந்த இருவருள் ஒருவர், முன்னொருபோது உயர்நீதிமன்ற நீதியரசராய் இருந்து இப்போது ஓய்வு பெற்றுவிட்டவராயும் இருக்கலாம்.

இலங்கையில் இப்போது 31 நீதிவான் நீதிமன்றங்களும் ஒரு சிறுர் நீதிமன்றமும் உள்ளன. 31 நீதிவான் நீதிமன்றங்களும் 63 இடங்களில் அமர்கின்றன. எந்தெந்தத் தவறுகளை நீதிவான் நீதிமன்றம் விளங்கலாம் என்பது பற்றிக் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்ட கோவையின் அட்டவணை எடுத்துரைக்கின்றது.

வேறும் சில தவறுகளை நீதிவான் நீதிமன்றம் விசாரிக்கலாம் என்று வேறுவேறு சட்டங்கள்ஏற்பாடுசெய்துள்ளன. நீதிவான் நீதிமன்றம், ஆறுமாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் அல்லது அத்தகைய சிறைத் தண்டனை, குற்றப்பணம் என்ற இரண்டையும் விதிக்கத் தத்துவம் கொண்டுள்ளது. தண்டனைக்குரியவர் 16 வயதுக்குக் குறைந்தவராயின் அவருக்குச் சவுக்கடி கொடுக்கும் உரிமை நீதிவானுக்குஉண்டு (குற்றவியல் நடவடிக்கைமுறைச்சட்டக் கோவையின் 15ஆம் பிரிவு).

மேல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தும் நோக்கத்துடன், குற்றங்கள் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகளையும் நீதிவான் நடாத்துவார். பூர்வாங்க விசாரணையின் பிறகு, குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை (*Discharge*) செய்ய வேண்டும் என்று அவர் அபிப்பிராயப்பட்டால் அவ்வாறே செய்யலாம்; குற்றஞ்சாட்டப்பட்டவரைத்தகுதிவாய்ந்த நியாயாதிக்கம்கொண்ட நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டும் என்று அவர் கருதினல் மேலிடத்திற்குப் பாரப்படுத்தலாம்.

வேருெருவகையான சிறப்பான நியாயாதிக்கமும் நீதிவான் நீதிமன்றத்திற்கு உண்டு. 1889ஆம் ஆண்டின் பராமரிப்புக் கட்டளைச்சட்டம் (*Maintenance ordinance*) இத்தகைய நியாயாதிக்கத்தை நீதிவானுக்கு வழங்கியுள்ளது. கட்டியமனைவியையும் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளையும் தவிக்கவிடும் கணவன்மாரிடமிருந்தும், சட்டமுறையாகவல்லாது பிறந்த பிள்ளையின் தந்தையிடமிருந்தும் பராமரிப்புப்பணம் பெற்றுக் கொடுக்கும் அதிகாரம் நீதிவானுக்கு உண்டு.

## மாநகர நீதிமன்றம் Municipal Court

இந்த நீதிமன்றம், 1947ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 161ஆம் பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்ட ஒரு விசேட நீதிமன்றம் ஆகும். ஒவ்வொரு மாநகர சபைக்கும் மாநகர நீதிவான் ஒருவர் நியமிக்கப்படலாம். சாதாரண நீதிவான் ஒருவர் அவரது கடமைகளோடு சேர்த்து மாநகர நீதிவானுக நியமிக்கப்படுதலும் கூடும். கொழும்பு மாநகரசபையில் மாநகர நீதிவான் என்று வேருக ஒருவர் இருக்கிருர். மற்றைய மாநகரங்களில், சாதாரண நீதிவான்தான் மாநகர நீதிவானின் கடமைகளையும் புரிந்து வருகின்ருர். உரிமை வழக்குகளை விசாரிக்கும் உரிமை இந்த நீதிவானுக்குக் கிடையாது. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 163 (1) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் கட்டளைச்சட்டங்களின் துணைவிதிகளை மீறி மாநகர எல்லைக்குள் புரியப்படும் தவறுகளை விசாரித்தலே பெரும்பாலும் மாநகர நீதிவானின் பணியாகும்.

## ஊர் நீதிமன்றம் Rural Court

கிராமக்கோடு என்றும் இவை சாதாரணமாக வழங்கப் பெறுகின்றன. கிராமப்புறங்களில் நடைபெறும் சிறு சிறு வழக்குகளையும் பிணக்குகளையும் தீர்த்துவைப்பதற்கென்று தோற்றுவிக்கப்பட்ட நீதிமன்றங்கள் ஊர்நீதிமன்றங்கள் எனப்பெறும். நூறு ரூபாவுக்குக் குறைவான கடன், சேதம் அல்லது கோரிக்கையைப் பொருளாகக் கொண்ட உரிமை வழக்குகளையும், நூறு ரூபாவுக்குக் குறைந்த பெறுமதி கொண்ட காணி சம்பந்தப்பட்ட பிணக்குகளையும் விளங்கும் நியாயாதிக்கம் இந்த நீதிமன்றத்திற்கு உண்டு.

குற்றவியல் நியாயாதிக்கமும் இந்த ஊர் நீதிமன்றத்திற்கு உண்டு. கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படும்

விதிகளை மீறுதலாகிய தவறுகளையும் விசாரித்துத் தீர்ப்பளிக்கும் ஆற்றலை ஊர் நீதிமன்றம் உடையது.

ஊர் நீதிமன்றந்தான் விளங்கவேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ள தவறுகளையும், மேற்சொன்ன தவறுகளையும் விளங்கும் போது, ஒருவர் குற்றவாளியாகக் காணப்படின் அவருக்கு ஐம்பது ரூபா வரையிலான குற்றப்பணம் விதிக்க அல்லது 14 நாள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்க ஊர் நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் உண்டு. ஊர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் அதற்கே தனியானது. அதனது நியாயாதிக்கத்துள் உள்ள வழக்கை வேறெந்த நீதிமன்றமும் விளங்க முடியாது.

ஊர் நீதிமன்றத்தில் தலைமை தாங்கும் நடுவரை நீதிவான் என்ருே நீதிபதி என்ருே சொல்வதில்லை. ஆங்கிலத்தில் அவரை ''றூறல் கோட் பிறசிடென்ற்'' என்பார்கள். தமிழில் அவரைக் கிராமக் கோட்டு நீதிவான் என்கிருர்கள். அப்படிச் சொல்வது முறையல்ல; ஊர் நீதிமன்றத் தலைவர் என்பதே முறை. இவரும் நீதிச்சேவை ஆணைக்குழுவினலே தான் தேர்ந்தெடுக்கப்படுகின்ருர்.

ஊர் நீதிமன்றத் தலைவராய் இருப்பவர் வழக்கறிஞராகவோ வழக்குரைஞராகவோ இருக்க வேண்டும் என்ற நியதி உண்டு. ஆனுல், ஊர் நீதிமன்றத்தில் வழக்குரைஞருக்கோ வழக்கறிஞருக்கோ இடமில்லை. சம்பந்தப்பட்ட வழக்காளிகள் தாமாகவே தோன்றித் தம்முடைய வழக்கை எடுத்துரைக்க வேண்டும்; எதிரியும் அவ்வாறே செய்தல் வேண்டும். சாட்சிகளை விசாரித்த பின்னர், தலைவர் தம்முடிவைச் சொல்லுவார். தலைவரின் தீர்ப்போடு திருப்தியுருத கட்சிக்காரர் மாவட்ட நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

# காதி நீதிமன்றம் Kathi Court

காதி நீதிமன்றம் தோன்றுவதற்கு 1925ஆம் ஆண்டில் நடைபெற்ற *அரசன் எதிர் மிஸ்கின் உம்மா* என்ற வழக்குக் காரணமாய் இருந்தது என்பது முசுலிம்களின் சட்ட வரலாற்றை அறிந்தவர்களுக்குத் தெரியும். இந்த வழக்கின் விளைவாக 1929இல், முசுலிம் திருமண, திருமண நீக்கக்கட்டளைச்சட்டம் இயற்றப்பட்டது. இந்தக் கட்டளைச் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கிணங்கவே காதி நீதிமன்றங்கள் இலங்கையில் முதன்முதலாகத் தோற்றுவிக்கப்பட்டன. 1929ஆம் ஆண்டின் கட்டளைச்சட்டம் காதி ஒருவருக்குப் பல அதிகாரங்களைக் கொடுக்கவில்லை என்றே கூற வேண்டும். பராமரிப்புப் பற்றிய வழக்குகளையோ, ''கைக்கூலி'' பற்றிய தகராறுகளையோ விசாரிக்கும் அதிகாரம் காதி நீதிமன்றத்துக்கு இருக்கவில்லை. 1951ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டம் முன்னைய பல குறைகளை நீக்கிக் காதிநீதி மன்றத்துக்கு அளவு கடந்த அதிகார பலத்தைக் கொடுத்தது.

காதியானவர் நீதித்துறை சார்ந்த கடமையைப் புரிகின்றவராய் இருந்தும், பலகாலமாக அவர் நீதி அமைச்சராலேயே நியமிக்கப்பட்டு வந்தார். அத்தகையநியமனம் முறைகேடாக இல்லையா என்பதுபற்றி வெகு அண்மைக்காலம் வரைக்கும் பிரச்சினை எதுவும் ஏற்படவில்லை. *Jailabdeen Vs Dania Umma* என்ற வழக்கில் இந்தப் பிரச்சனை எழுந்தபோது நீதித்துறைப் பணியைப் புரிகின்ற காதிமார் நீதி அமைச்சரால் நியமிக்கப்படுதல், இலங்கை (அரசியலமைப்பு) பேரவைக் கட்டளையின் வரம்பை இகந்த (*Ultra Vires*) செயலாகும் என்றும், ஆகவே அவர்களின் தீர்ப்புக்கள் வெற்றும் வெறிதும் ஆனவை என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்கிணங்க முசுலிம்சட்டம் திருத்தப்பட்டது. இதன் விளைவாக இப்போது காதிகளை நியமிக்கும் பொறுப்பு நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பிட்ட ஒவ்வொரு பிரதேசத்திற்கும், ஒன்றுக்கு மேற்படாத காதி நியமிக்கப்படுவார். நன்னடத்தையும் நல்லொழுக்கமும் உடையவர்களே காதியாக நியமிக்கப் படலாம் என்று பன்னிரண்டாம் பிரிவு கூறுகின்றது. காதியை நியமித்தல், நீக்குதல், அவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கை என்பன நீதிச்சேவை ஆணைக்குழுவின் கையில் உள்ளன. காதி ஒருவர் இரண்டாண்டுகட்குப்பதவி வகிப்பார். இரண்டாண்டு முடிவடைந்ததும் அவர் மீளவும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையராவார்; காதியாக நியமிக்கப்படும் ஒருவர், காதி என்ற தன்மை யில் தமது கடமையைப் புரியத் தொடங்கு முன், விசுவாசச் சத்தியம் செய்து கொள்ள வேண்டுமென்பதோடு ஆயிரம் ரூபாவுக்கான பிணை முறி ஒன்றை எழுதிக் கொடுத்தலும் வேண்டும்.

காதி நீதிமன்றத்திற்கு மேலே, காதிமார் சபை என்ற ஒன்றும் உண்டு. காதி நீதிமன்றத்தின் தீர்ப்பினால் இடருறு வோர் காதிமார் சபைக்கு மேன்முறையீடு செய்ய முடியும். இந்த மேன்முறையீட்டுச் சபையில் ஐந்து முசுலிம்கள் இருப் பார்கள். மேன்முறையீடொன்றை விசாரிக்கும் போது மூவருக்குக் குறையாத காதிமார்கள் இருத்தல் வேண்டும். காதிமார் சபை கூறும் தீர்ப்பினால் இடருறுவோர் அந்தத் தீர்ப்புக்கெதிராக உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

காதி நீதிமன்றத்தில் வழக்கறிஞர்க்கோ வழக்குரை ஞர்க்கோ இடமில்லை. காதிமார்சபை முன்னே தோன்ற வும் வழக்கெடுத்துரைக்கவும் இவர்களுக்கு உரிமை உண்டு.

காதி நீதிமன்றத்தின் தத்துவங்களும் நியாயாதிக்க மும் பின்வருமாறு:—

1. திருமண நீக்கம்;

2. மகர், ''கைக்கூலி' என்பன பற்றிய விடயங்கள்;

3. மனைவி, மக்களைப் பராபரித்தல் பற்றிய விடயங்கள் முதலியன.

## இணக்கச் சபைகள் Conciliation Boards

தொட்டதற்கெல்லாம் நீதிமன்றத்துக்குச் செல்வது நம்மிடையே ஒரு பழக்கமாகிவிட்டது. இதனுல் சில்லறை, அற்ப விடயங்களுக்குக் கூட பெருமளவு நேரத்தையும் பணத்தையும் மக்கள் வீணுக்குகின்றனர்; நீதிமன்றங்களின் பொன்னுன நேரமும் கொன்னே கழிகின்றது. வழக்காடும் பழக்கம் மிகுந்துவிடுவதனுல் மக்களிடையே பூசலும் போட்டியும் மலிந்து வைரமும் வைராக்கியமும் ஏற்பட்டு விடுகின்றன. இதனுல் கிராமங்களில் நிரந்தரப்பிளவு நிலை யாகி விடுகின்றது. எனவே வழக்காடும் மனப்பான்மையைக் குறைத்து, பிணக்குகளை இணக்கமாகத் தீர்த்து, சமாதான நிலையை ஏற்படுத்துவதற்கெனப் புதுமுறையான மன்றங்கள் தாபிக்கப்படலாயின. எப்போது? 1958இல். இணக்கச் சபைகள் என்பது இவற்றுக்குப் பெயர்.

1958ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் அவற்றுக்கமையவுமே இந்தச் சபைகள் அமைக்கப்படுகின்றன. கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றிலும் இந்தச் சட்டமானது நடைமுறையிலிருத்தல் வேண்டும் என்று சட்டம் ஏற்பாடு செய்கின்றது. அத்துடன், கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் நீதியமைச்சர் குறிப்பிடக் கூடிய ஏனைய இடங்களிலும் இந்தச் சட்டம் நடைமுறையிலிருத்தல் கூடும்.

இன்றுள்ள நிலையில் ஏறத்தாழ 400 இணக்கச் சபைகள் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளன. குடியியல் (உரிமையியல்) குற்றவியல் தொடர்பான பிணக்குகளைக் கையாள்வதற்கு இச்சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. குடியியல் சம்பந்தப்பட்டவரையில், இணக்கச் சபைப் பிரதேசத்தினுள் உள்ள அசைவுள்ள ஆதனம் தொடர்பிலும், அசைவற்ற ஆதனம் தொடர்பிலுமான பிணக்குகளை இணக்கச்சபை விசாரிக்கலாம்.

குற்றவியல் தொடர்பில் குறிப்பிடப்பட்ட சில தவறுகள் தொடர்பில் மட்டுமே இச்சபைக்கு நியாயாதிக்கம் உண்டு. மேல்வாரியாகக் கூறுமிடத்து, தண்டனைச் சட்டக் கோவையில் உள்ள குற்றங்களான

(அ) காயம் விளைத்தல் (314, 325)

(ஆ) தடுத்து வைத்தலும் அடைத்து வைத்தலும் (332, 333)

(இ) வலோற்காரம் (343, 346, 349)

(ஈ) விலங்குகளுக்குக் காயம் விளைத்தலும் சொத்தழித்தலும் (ஐம்பது ரூபாவுக்குட்பட்ட சேதம்) (409, 410, 411, 412)

(உ) அத்துமீறல் (433, 434)

(ஊ) நிந்தனை செய்தல் (484)

(எ) அச்சுறுத்தல் (486)

ஆகியன தொடர்பிலான பிணக்குகளில் இணக்கம் ஏற்படுத்தி வைக்க முயலலாம். கொடுக்கல் வாங்கல், காணி வழக்குகள், கலியாணந்தள்ளுதல், மானநட்டம் முதலிய உரிமைவழக்குகளும் முதற்கண் இங்கேயே தொடரப்படுதல் வேண்டும் என்பதை மறக்கலாகாது.

மேலே கூறிய குடியியல் குற்றவியல் பிணக்குகளுக்குத் தீர்வுகாண விரும்புவோர் வேறு நீதிமன்றங்களில் இவை தொடர்பில் வழக்கு வைக்க முடியாதோ என்று சிலர் கேட்கலாம். முதற்படியாக இணக்கச் சபையிடம் செல்லாமல் வேறெந்த நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியாது என்று பொதுப்படக் கூறலாம். இணக்கச் சபையிடம் சமர்ப்பிக்க வேண்டிய பிணக்கை எடுத்த எடுப்பிலேயே நீதிவான் நீதிமன்றத்திடம் அல்லது விண்ணப்ப நீதிமன்றத்திடம் எடுத்துச் சென்றால் அந்த நீதிமன்றம் அதை ஏற்காது. இணக்கச்சபையிடம் செல்லும்படி ஆற்றுப்படுத்தும். நாம் கூறும் கருத்துக்குச் சான்றாக முற்றீர்ப்பு வழக்கொன்றைக் காட்டலாம். 70 சட்ட அறிக்கைகள் 276ஆம்

பக்கத்தில் காணப்படும் வழக்கைப் பார்க்கவும். இந்த வழக்கு வாடகைக்குக் குடியிருத்தல் சம்பந்தமான பிணக்கொன்றைக் கருவாகக் கொண்டது. பிணக்குக்குத் தீர்வு காண வேண்டிய வழக்காளி காலியிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். வழக்குக்கு மறுமொழி கூறிய எதிராளி அந்த வழக்கானது, மாவட்ட நீதிமன்றத்துக்கு வருமுன்னர் இணக்கச் சபையிடமிருந்து இசைவு பெற்றிருக்க வேண்டும் என்று வாதிட்டார். மாவட்ட நீதிமன்றம் எதிராளியின் வாதத்தை நிராகரித்தது. எதிராளி உயர்நீதி மன்றத்துக்கு மேன்முறையீடு செய்தார். உயர்நீதி மன்றம் எதிராளியின் வாதத்தை ஒப்புக்கொண்டு, மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை நிராகரித்து, அந்த வழக்குப்பற்றி இணக்கச் சபையின் சான்றிதழ்பெற்றிருக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. (71 பு. ச. அ. பக் 12 வேறு அபிப்பிராயம் கூறுகின்றது).

குடியியற் பிணக்கொன்றைத் தீர்ப்பதற்காக நீர் இணக்கச் சபையிடம் செல்கிறீர் என்று வைத்துக் கொள்வோம். இணக்கச் சபை இணக்கி வைக்கின்றது; நீர் சம்மதம் தெரிவித்து வீடு செல்கின்றீர்; ஆனால் வீடு சென்றதும் வேறுவிதமாகச் சிந்திக்கும் போது, அந்த இணக்கம் நல்லதல்ல என்று தோன்றுகின்றது. இணக்கச்சபை இணக்கம் செய்து வைத்து முப்பது நாட்கள் கழியுமுன், அந்த இணக்கலுக்கு நீர் சம்மதிக்கவில்லை என்று கூறி இணக்கச்சபைக்கு அறிவிக்கலாம். அன்றுமுதல் உம்முடைய பிணக்குத் தொடர்பில் அது ஏற்படுத்தி வைத்த இணக்கம் செல்லுபடியற்றதாகும். இணக்கம் செய்து வைத்து முப்பது நாட்கழிந்துவிட்டதானல், இணக்கச்சபை செய்து வைத்த இணக்கம் உம்மைப் பிணிக்கும் வலிமை கொண்டுவிடும். எப்படி என்று கேட்டால், இணக்கச்சபை செய்துவைத்த அந்த இணக்கத்தின் பிரதி ஒன்று, சம்பந்தப்பட்ட குடியியல் வழக்குக்கேற்ப, கிராம நீதிமன்றத்துக்கோ, விண்ணப்ப நீதிமன்றத்துக்கோ, மாவட்ட நீதிமன்றத்துக்கோ அனுப்பி வைக்கப்படும். அதன்மேல் அந்த இணக்கமானது அந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு என்றாற் போன்று கருதப்படும்.

இணக்கச்சபையிடம் நீர்போய், இணக்கம் எதுவும் செய்யப்படாவிட்டால் என்ன செய்வது? மற்ற நீதிமன்றங்களில் நீர்வழக்குத் தொடுக்கலாம். அவ்வாறு வழக்குத் தொடுக்கும் போது, உம்முடைய பிணக்கைத் தீர்த்து வைக்க முடியவில்லை என்று கூறும் இணக்கச்சபையின் சான்றிதழ் ஒன்றை நீர் வழக்குத்தொடுக்கும் நீதிமன்றத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தச் சான்றிதழ் இல்லாவிட்டால் உம்முடைய வழக்கை அந்த நீதிமன்றம் ஏற்காது. உமது எதிரியையோ எதிராளியையோ இணக்கச்சபை முன்னர் கொண்டுவர முடியாதிருந்தால், அப்பொழுதும் இணக்கம் ஏற்படுத்தமுடியவில்லை என்ற சான்றிதழைப் பெறலாம்.

இணக்கச்சபை எவ்வாறு நியமிக்கப்படுகின்றது? எவ்வாறு இயங்குகின்றது? என்பனபற்றியும் ஒருசில காண்போம். மாவிட்டபுரத்தில் ஓர் இணக்கச்சபை தாபிக்கப்பட இருக்கின்றது என்று வைத்துக் கொள்ளுவோம். உள்ளூரதிகாரசபை, கூட்டுறவுச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள் என்பன ஒவ்வொன்றும், தோதானவர்கள் என்று தாம் கருதும் ஆட்களை விதந்துரைத்து அவர்களின் பெயர்ப்பட்டியலை நீதியமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். இவர்களுள் இருந்து, பன்னிரண்டு ஆட்களுக்குக் குறையாத குழாம் ஒன்றை நீதிஅமைச்சர் தேர்ந்தெடுத்து அவர்களுள் ஒருவரை அக்குழாத்தின் தவிசாளராக (Chairman) நியமிப்பார். குறித்த ஏதேனும்பிணக்கை விசாரிக்கவேண்டி வரும்போது இப்பன்னிருவருள் மூவருக்குக் குறையாத ஆட்களைக் கொண்ட இணக்கச்சபை ஒன்றைக் குழாத்தின் தவிசாளர் நியமித்து அவர்களுள்ஒருவரைத் தலைவராகவும் நியமிப்பார். ஒரே இணக்கச்சபைப் பிரதேசத்துக்கு ஒன்றுக்குமேற்பட்ட இணக்கச்சபைகள் இருக்கின்ற சந்தர்ப்பத்திலே தான் இணக்கச்சபை ஒன்றுக்குக் குழாத்துறுப்பினர்ஒருவரைத்தலைவராக நியமிக்கநேரும். இன்றேல் பெரும்பாலும்தவிசாளரே, சபையின் தலைவராகவும் இருப்பார்.

இணக்கச் சபைகளின் நியாயாதிக்கத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் உயர் நீதிமன்றம் பின்வருமாறு கூறியுள்ளது:—

நீதிமன்றத்தின் தலையீட்டை நாடும் கட்சிக்காரரர் முதற்படியாக அவ்விடயத்தில் இணக்கத்தை ஏற்படுத்த முயல வேண்டும். அத்துடன் தலைவரிடமிருந்து பெறப்படும் கடிதம் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு முன் நிகழ் நிபந்தனையாயமையும் எனவும் அவர்கள் கருத்துரைத்துள்ளனர்.

14ஆம் பிரிவு நீதிமன்றங்களின் நீதிமுறைத் தத்துவங்களோடு தலையிட முற்படவில்லை. ஆனல் குற்றநடவடிக்கையில் வழக்குத் தொடருவதற்கு ஆட்களுக்குள்ள உரிமையில் ஒரு முன்நிகழ் நிபந்தனையைமட்டும் விதிக்கின்றது என்பதே அவர்களின் கருத்து. 73 பு. ச. அ. 217

இணக்கச்சபைகள் பற்றி மேற்கொண்டு விளக்கமும் விபரமும் வேண்டுவோர் 70, 73, 74ஆம் புதுச்சட்ட அறிக்கைகளில் இது தொடர்பாக உள்ள முற்றீர்ப்புக்களைப் பார்க்கலாம்:—

கட்சிக்காரர்க்கிடையே சமாதானம் ஏற்படுத்தலே இச்சபைகளின் முக்கிய நோக்கமாதலால் சட்டவறிஞர்க்கு இங்கே இடமில்லை.

## கைத்தொழில் நீதிமன்றங்கள்
## Industrial Courts

நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தில் விவரிக்கப்பட்ட நீதிமன்றங்கள் ஒருபாலாக, நிருவாக நியாயசபைகள் (*Administrative tribunals*) என்று குறிப்பீடு செய்யப்படும் நியாயசபைகள் சில, ஒருசில சட்டங்களின்கீழ்த் தாபிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்டுக் கூறப்படும் கருமங்கள் தொடர்பிலேதான் இந்த நியாயசபைகட்கு ஆதிக்கம் உண்டு. இத்தகைய நியாயசபைகளுக்கு உதாரணம்

வேண்டின், கைத்தொழிற்பிணக்குகள் சட்டம், வாடகை மட்டுப்பாட்டுச் சட்டம், உள்நாட்டு இறைவரிச்சட்டம் என்ற சட்டங்களின் கீழ்த் தாபிக்கப் பட்டிருக்கும் நியாய சபைகளை எடுத்துக் காட்டாகக் கூறலாம். இலங்கையிலே ஏற்பட்டுவரும் கைத்தொழில் அபிவிருத்தியின் பயனுக இந்த நியாயசபைகள் எம்முடைய மத்தியில் பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றுவருகின்றன. ஆகவே, தொழில் நியாய சபைகள், கைத்தொழில் நீதிமன்றங்கள் என்பனவற்றின் பணிகள் பற்றியும் பான்மை பற்றியும் அறிந்து கொள்வது அவசியம் என்று அபிப்பிராயப் படுகிறோம்.

கைத்தொழில்களிலே முதலாளி தொழிலாளி என்ற வர்க்கப் போராட்டம் மலிந்து காண்பதால் அங்கே பிணக்குகள் பல நாளுக்குநாள் அதிகரிந்து வருகின்றன. இவர்களுக்கிடையே எழும் பிணக்குகளை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கு என்று தோற்றுவிக்கப் பட்டவைதான் கைத்தொழில் நீதிமன்றம், *(Industrial Court)* தொழில் நியாய சபை *(Labour Tribunals)* என்பன. மகா தேசாதிபதியால் பெயர்சுட்டி நியமிக்கப்படும் ஐந்து பேரைக் கொண்ட ஒரு குழாத்திலிருந்து தொழிலுக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரினுல் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவரைக் கொண்டதுதான் இந்த நீதிமன்றம்; சிலவேளைகளில் இந்த நீதி மன்றம் மூன்று உறுப்பினரைக் கொண்டிருத்தலும் உண்டு. இந்த நீதிமன்றம் கைத்தொழில் சம்பந்தமான பிணக்குகள் எதையும் விசாரித்துத் தீர்ப்பளிக்கலாம். ஆனுல் ஒன்று; கைத்தொழில் சம்பந்தமான பிணக்கு என்ருல் என்ன? கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 48ஆம் பிரிவு, ''கைத்தொழிற் பிணக்கு''க்கு வரைவிலக்கணம் கூறுகின்றது.''தொழிலுடன் தொடர்புபட்ட, அல்லது தொழிலில்லாது போதலோடு அல்லது வேலை நியதி நிபந்தனைகளோடு தொடர்புபட்ட பிணக்கு, கைத்தொழில் சம்பந்தப்பட்ட பிணக்கெனப்படும்'' என்று அது வரைவிலக்கணம் வரைகின்றது. நியாயமானதாய் இருப்பதோடு ஒப்புரவு கொண்டதாயும் இருக்கும் தீர்ப்பினை வழங்க இந்நீதிமன்றத்துக்குத் தத்துவம் உண்டு.

## தொழில் நியாயசபைகள் Labour Tribunals

இனி, அடுத்ததாக தொழில் நியாய சபைகள் பற்றிச் சிந்திப்போம். இத்தொழில் நியாயசபையில் ஒருவர் மட்டுமே இருப்பார். இவர் தொழில் நியாயசபையின் தலைவர் என்று அழைக்கப்படுவார். இத்தலைவர் பகிரங்சேவை ஆணைக்குழுவால் (*Public Service Commission*) நியமிக்கப்படுகின்ருர். இவரை நியமிக்கும் அதிகாரி நீதி ஆணைக்குழுவாக இராமல் பகிரங்க சேவை ஆணைக்குழுவாக இருந்ததால் நியாயசபைத்தலைவரின் தீர்ப்புக்கள் சில தகராறுகளை விளைவித்து, சட்டமறிந்தோர் வட்டாரத்தில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தின. இது சம்பந்தமாக எழுந்த வழக்கொன்று மிகவும் சுவையாக அமைந்தது; உயர்நீதிமன்றம் இந்தப் பிரச்சினையை அலசி ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உயர் நீதிமன்ற நீதியரசர் ஐவர் ஒருங்கிருந்து இந்த வழக்கை விளங்கினர். இவர்களுள் மூவர் ஒருவிதமான முடிவையும், இருவர் வேறுவிதமான முடிவையும் கூறினர். இந்த இருவரும் தமிழ் நீதியரசர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இந்த வழக்கு அம்மட்டோடு நிற்கவில்லை. பிறிவிக் கவுன்சில் எனப்படும் கோமறைக் கழகத்திற்கு மேன்முறையீடு செய்யப்பட்டது. கோமறைக் கழகம், மேன்முறையீட்டை ஏற்று, இலங்கை உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பை நிராகரித்தது. இந்த வழக்கு 69 புதிய சட்ட அறிக்கைகள் 289இல் கொடுக்கப்பட்டுள்ளது. தொழில் நியாய சபைத் தலைவர்கள், நீதித்துறைப் பதவியை (*Judicial office*) வகிப்பவர்களல்லர் என்றும் அதன் காரணமாக நீதித்துறை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட வேண்டுமென்றில்லை எனவும் கோமறைக் கழகம் தீர்ப்பளித்தது.

வேலையிலிருந்து நீக்கப்படல், வேலை நியதிகள், வேலை நிபந்தனைகள், பணிக்கொடைகள் கொடுத்தல், நலனுதவிகள் முதலியவற்ருேடு உறவு கொண்ட விடயங்களில் நிவாரணமோ பரிகாரமோ செய்யும் அதிகாரம் இவற்

றிற்கு உண்டு. நாம் மேலே காட்டிய கோமறைக் கழகத் தீர்ப்பில், கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள். நியாய மானதும் ஒப்புர வானதும் என்று அவை கருதும் செயல்களைச் செய்ய அவற் றிற்குக் கட்டில்லாத் தற்றுணிபு இருக்கிறது என்பது வரை யறுத்துக் கூறப்பட்டுள்ளது. கட்டில்லாத் தற்றுணிபு உண் டென்பதை நினைக்கும் போது, பொதுவான சிவில் நீதிமன் றங்களுக்கு இல்லாத நியாயாதிக்கம் இவற்றிற்கு உண் டென்பது தெரிகிறது. ஏனென்றால், ஒப்பந்த நியதிகள் நிபந்தனைகள் என்பனவற்றுள் இவை கட்டுப்படாமல், ஒப் புரவு, முறைமை, நியாயம் என்ற தத்துவங்களின் அடிப்ப டையில் வழக்குகளுக்கோ பிணக்குகளுக்கோ தீர்ப்புக் கூற லாமாதலால் என்க. இத்தகைய நீதிமன்றங்கள் நியாய சபைகள் என்பன இருப்பதால், வரன்முறைப்பட அமைந்த நீதிமன்றங்கள் தம்முடைய பொழுதை அவசிய மான விடயங்களைத் தீர்ப்பதற்குச் செலவிட முடிகிறது.

---

# 4

# சட்டம் பலவிதம்

## ஆதிகாலம்

இலங்கையின் தொல்பழங் குடிகளாகத் தமிழரும் சிங்களவரும் வாழ்ந்துவந்துள்ளனர். இலங்கையின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு காலங்களில் இவ்விரு மக்களதும் ஆளுகைக்கீழ் இருந்து வந்துள்ளன. ஆளுகையின் நோக்கங்களுக்காகப் பல்வேறு சட்டங்களும் நிலவிவந்துள்ளன. தமிழருக்கென்று தனியான சட்டங்களும் சிங்களவருக்கென்று தனியான சட்டங்களும் இருந்தன. இந்தச் சட்டங்களை நிருவகிப்பதற்கென்று நீதிமன்றங்களும் இருந்துவந்துள்ளன. இந்தச் சட்டங்கள் பெரும்பாலும் பழக்கங்கள், வழக்கங்கள், மரபுகள், வழக்காறுகள் என்பனவாகவே இருந்தன. இவை எழுத்து மூலத்தில் இருந்தன என்பதற்குச் சான்றில்லை. இவையெல்லாம் ஆட்சி அதிகாரிகளினதும் மக்களினதும் நினைவிலே இருந்து பரம்பரை பரம்பரையாகக் கைமாறி வந்தன. இவ்வாறு காலந்தோறும் கைமாறி வந்த தமிழரின் வழக்காறுகள் தேச

வழமை என்ற பெயரில் இன்று நடைமுறையிலுள்ளன. சிங்களவரின் வழக்காறுகள் கண்டியச் சட்டம் என்ற பெயரில் வாழ்ந்து வருகின்றன. தேச வழமை, கண்டியச் சட்டம் என்பன இன்று எழுத்துருப் பெற்றுவிட்டன. 1500 ஆம் ஆண்டளவில் நமது நாடு பிறர்க்கடிமையாகி ஏறத்தாழ 450 ஆண்டுகள் அவர்களின் ஆதிக்கத்திலிருந்தும், எமது பண்டைய தமிழ்ச்சட்டமும் கண்டியச் சட்டமும் நின்று நிலவுவது எப்படி என்று காண்போம்.

## போர்த்துக்கீசர் காலம்

1505ஆம் ஆண்டளவில் போர்த்துக்கீசர் இலங்கையுள் நுழைந்த போது தமிழரின் சட்ட வழக்காறுகளும் சிங்களரின்வழக்காறுகளுமே நாட்டில் நிலவின. போர்த்துக்கீசர் ஈழநாட்டின் சட்ட நிருவாகத்தைப் பற்றி அதிகம் அக்கறை கொள்ளவில்லையாதலால், நாட்டின் சட்டத்தில் குறிப்பிடத்தக்க புதுமையோ மாற்றமோ ஏற்படவில்லை. இருந்த சட்டங்களை அவர்கள் அங்கீகரித்து அவற்றின் படியே மக்களை ஆண்டனர். கரையோரப் பகுதிகள் மட்டுமே போர்த்துக்கீசர் வசமிருந்தன. கண்டியை அவர்கள் ஆளவில்லை. கரையோரப் பகுதியை ஆண்டனராதலால் இலங்கையின் வடக்குப் பகுதியில் நிலவிவந்த சட்ட வழக்காறுகள் பற்றி அவர்கள் அறிந்திருந்தனர். சீதனம் சம்பந்தமான விடயத்தில் தமிழர் வழக்காற்றைப் போர்த்துக்கீசர் ஓரளவு மாற்றினர் என்றும் அறிகின்றோம்.

## இடச்சுக்காரர் காலம்

போர்த்துக்கீசரின் பிறகு 1656ஆம் ஆண்டளவில் இலங்கையைக் கைப்பற்றிய இடச்சுக்காரர் நாட்டின் நீதி நிருவாகத்தில் அக்கறை காட்டினர். ஆகவே நாட்டிலே நிலவிவந்த சட்டங்கள் என்ன என்ன என்பதை அறிந்து அவற்றின் படியே மக்களை ஆண்டனர். அவ்வாறு ஆண்டு கொண்டிருந்த போது இலங்கையில் வழங்கிவந்த சட்டம் எதுவும் எழுத்துருப்பெறாமல் இருந்ததைக் கண்டனர்.

வடக்கிலே வழங்கிவந்த வழக்காறுகள் முழுப்படியாக இருந்தமையாலோ என்னவோ அவற்றைத் தொகுக்கும்படி ஆளுநரான சிமண்ட்ஸ் (*Governor Simonds*) அவர்கள் கிளாஸ் ஐசாக்ஸ் (*Claas Isaks*) என்பாரைப் பணித்தார். அவர் யாழ்ப்பாணத்தில் பல காலம் வாழ்ந்தாராதலின் யாழ்ப்பாணத் தமிழரின் வழக்காறுகளைத் தெளிவாக விளங்கியிருந்தார். அவர் இந்த வழக்காறுகளை இடச்சு மொழியில்தான் தொகுத்தார். இது 1708 இல் முற்றுப் பெற்றது. யோன் பைறஸ் என்பார் இதனைத் தமிழில் மொழிபெயர்த்து, அது தமிழரின் வழக்காறுகளை முழுப்படியாகக் கொண்டுள்ளதா என்று பார்க்கும்படி முதலிமாரிடம் கொடுத்தார். முதலிமார் அது சரி என்று ஒப்புக்கொண்டனர். அதுவே தமிழரின் சட்டமாயிற்று. இந்தச் சட்டத் தொகுப்பு தேசவழமை என்ற பெயரை ஏற்றது. எழுத்துருப்பெற்ற தேசவழமை இடச்சுக்காரரின் ஆட்சிக் காலத்தின் போது பெற்ற மாற்றங்கள் பல. இதன் விளைவாக இன்றைய தேசவழமையில் இடச்சுச் சட்டக் கருத்துக்கள் பல புகுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் வடக்கிலிருந்த தமிழருக்குத் தேசவழமை இருந்தது போல ஏனைய பகுதிகளில் வாழ்ந்த சிங்களருக்குச் சிங்களச் சட்டவழக்காறுகள் இருந்தன, என்று முன்பே குறிப்பிட்டோம். அத்துடன் கண்டியநாடு தவிர்ந்த இடங்கள் இடச்சுக்காரரின் வசம் இருந்தன என்றும் குறிப்பிட்டோம். அப்படியாயின் இடச்சுக்காரரின் ஆட்சிக்குட்பட்டிருந்த இடங்களில் நிலவிவந்த சட்ட வழக்காறுகளை இடச்சுக்காரர் தொகுத்தனரா என்ற ஒரு வினா எழுதல் இயல்பு. ஆனால் திட்டவட்டமான ஒரு மறுமொழியைக் கூறுவதற்கு ஆதாரம் எதுவும் காணப்படவில்லை. காணப்படாத பட்சத்தில் சிங்களச் சட்ட வழக்காறுகள் இடச்சுக்காரரின் ஆட்சிக்காலத்தில் தொகுக்கப்படவில்லை என்று ஊகித்தல் பிழையாகாது.

இலங்கையரை ஆள்வதற்கு இடச்சுக்காரர் இலங்கையரின் சட்டத்தையே பயன்படுத்தினர் என்று கூறினோம்.

அப்படியாயின் இடச்சுக்காரரின் சொந்தச் சட்டமான உரோமரிடச்சுச் சட்டம் எப்படி இலங்கையிற் புகுத்தப் பட்டது? இடச்சுக்காரரின் அரசாங்கத்தில் தொழில் பார்த்த அலுவலர்களுக்கும், அவர்களுடைய சமயத்தைத் தழுவிக் கொண்டவர்களுக்கும் கரையோரப் பகுதியிற் குடிவந்து வாழ்ந்த இடச்சுக்காரருக்குமே முதன் முதலில் உரோயரிடச்சுச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. கரை யோரப் பகுதியில் வாழ்ந்த ஏனைய சிங்களவர் சிங்களச் சட்ட வழக்காறுகளுக்கமைய ஆளப்பட்டனரெனினும், சிங்களச் சட்ட வழக்காறு ஏற்பாடு செய்யாத விடயங்க ளிலும் உரோமரிடச்சுச் சட்டமானது குறை நிரப்பு சட்ட மாகப் பிரயோகிக்கப்பட்டது. இவ்வாறுக உரோமரிடச் சுச் சட்டம் சிங்கள வழக்காற்றுச் சட்டத்துள்ளும் மெது மெதுவாக நுழைந்தது. சிங்கள வழக்காற்றுச் சட்டம் எழுத்துருப் பெறுமல் இருந்ததன் விளைவாகவும் உரோமரி டச்சுச் சட்டம் வளம் நிறைந்த ஒன்றுக விளங்கியமையா லும் கரையோரப்பகுதியில் நிலவிய சிங்கள வழக்காற்றுச் சட்டம் மெல்ல மெல்ல மறைய அதன் இடத்தில் உரோம ரிடச்சுச் சட்டம் நுழைந்தது உரோமாபுரியிலே பிறந்து வளர்ந்து யேர்மனிநாட்டு வழக்காறுகளுடன் கலந்து செழித்துக் கொழித்து வளம் பெற்று கீழைத் தேயங் களிலே செங்கோலோச்சிய உரோமரிடச்சுச்சட்டம் எமது சட்டங்களிலும் பார்க்க முழுமை பெற்றிருந்தமை யால் இலகுவில் எமது சட்டங்களில் ஊடுருவிச் சென்று விட்டது.

## ஆங்கிலேயர் காலம்

1655ஆம் ஆண்டில் தொடங்கிய இடச்சுக்காரரின் ஆட்சி 1795இல் மறைய, ஆங்கிலேயர் எம்மை ஆள ஆரம் பித்தனர். 1796ஆம் ஆண்டு ஆங்கிலேயர் எம்மைக் கைப் பற்றியபோது இலங்கையைத் தொடர்ந்து ஆள்வதா திருப்பி ஒப்படைத்து விடுவதா என்பது பற்றித் தீர்க்க மான ஒரு முடிவுக்கு வராமல் இருந்தனர். ஆகவே இலங் கையில் நீதியை நிருவகித்தல் தொடர்பில் நிரந்தரமான

ஏற்பாடு எதனையும் அவர்கள் உடனடியாகச் செய்யாதிருந் தனர். இடச்சுக்காரர் இலங்கையை ஆங்கிலேயருக்கு ஒப்ப டைத்தபோது அவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கை யின்படி, அப்போது முடிவுறாதிருக்கும் சிவில் வழக்குகள் யாவும் ஏலவே நிலவி வந்த சட்டங்களின்படி தீர்மானிக் கப்பட வேண்டும் என்று இணங்கிக் கொள்ளப்பட்டது. ஆனால் குற்றவியல் வழக்குகள் பற்றியோ, அவ்வுடன்படிக் கையின் பின்னர் எழக்கூடிய சிவில் வழக்குகள் பற்றியோ ஏற்பாடெதுவும் செய்யப்படவில்லை. இந்நிலையில் 1796 தொடங்கி 1798 வரை சட்டமும் ஒழுங்கும் போர்ப்படை நீதிமன்றங்களாலும் ஏனைய சில நீதிமன்றங்களாலும் நிருவகிக்கப்பட்டுவந்தன. இடச்சுக்காரரா யிருந்த நீதிபதிகள் புதிய ஆட்சியாளரோடு ஒத்து ழைக்க மறுத்ததும் நிலைமையை மேலும் சிக்கலாக்கியது. இத்தகைய நிலையிலேதான் கவணர் நோத் (*Governor North*) அவர்கள் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இடச்சுக்காரர் ஆண்டபோது நடைமுறையிலிருந்துவந்த சட்ட நெறிமுறைகளுக்கிணங்க நீதிநிருவாகத்தை மேற் கொள்ளும்படி கவணர் நோத்துக்குப்பணிப்பு விடுக்கப்பட் டிருந்தது; ஆனால் தேவையேற்படும் பட்சத்தில் மாற்றங் களைச் செய்வதற்கான தற்றுணிவும் அவருக்கிருந்தது. இடச்சு நீதிநிருவாகத்தில் இருந்த சில குறைபாடுகளும், இடச்சு நீதிபதிகளின் வேண்டாவெறுப்பான மனப்பான் மையும், பாரதூரமான மாற்றங்களை அவசியமாக்கின. இதன்விளைவாக ஆங்கிலச்சட்ட நெறிமுறைகள் இலங்கை யிற் புகுத்தப்படலாயின. ஆங்கிலேயர், இடச்சுக்காரரிடமி ருந்து இலங்கையைக் கைப்பற்றியபோதுகூட, கண்டியப் பிரதேசம் பிரித்தானியர் ஆளுகைக்கு உட்படாமலே இருந்தது. 1815ஆம் ஆண்டின் கண்டிய உடன்படிக்கை யின் பிறகு, கண்டி ஆங்கிலேயரின் ஆளுகைக்கு உட்பட் டது. இந்த உடன்படிக்கையின்படி கண்டிய மக்களின் உரிமைகள், சிறப்புரிமைகள் என்பன, அதுகாறும் அவர் களிடையே வழக்கிலிருந்து வந்த சட்ட நெறிகள் வழக்கா றுகள் என்பனவற்றுக்கிணங்கப் பேணப்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன், சித்திர வதை, உறுப்புக்குறைத்தல், முதலிய தண்டனைகள் தடுக்

கப்பட்டு விலக்கப்பட்டன. இதனால் ஆங்கிலச் சட்ட ஏற்பாடும் மெல்ல நுழைந்தது. ஆனால் மேற்கூறிய உடன்படிக்கைக்கிணங்கக் கண்டியச் சட்டத்தின்படிதான் நீதிநிருவாகம் நடைபெற்றது. நீதியை நிருவகிக்க வேண்டிய பொறுப்பு சிவில் சேவையாளரினுடையதாய் இருந்ததால் அவர்கள், கண்டியில் நிலவிய சிங்கள வழக்காறுகளைக் கற்றறிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர்களுக்கு அவ்வப்போது உதவுவதற்கெனக் கண்டியப்பிரதானிகளும் அமர்த்தப் பட்டிருந்தனர். கண்டிய மாகாணங்களை நிருவாகஞ் செய்வதற்கென நியமிக்கப்பட்டிருந்த ஆணையாளர்சபை, கண்டியச் சட்ட வழக்காறுகளை, சன்னஸ், உறுதிகள், சீட்டுக்கள், மன்னனின் தீர்ப்புக்கள் என்பவற்றை ஆதாரமாக வைத்துக்கற்றறிந்தனர். கற்றறிந்த இவற்றை நூலுருவாக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அதுநிறைவேறவில்லை; எனினும், சில ஆசிரியர்களின் சொந்த முயற்சியால் வெளிவந்த நூல்களே இன்றைய கண்டியச் சட்டத்துக்கு ஆதாரமாய் அமைந்தன.

இதுகாறும் கூறியவற்றிலிருந்து போர்த்துக்கீசர் வருமுன்னர் இலங்கையில் வழக்கில் இருந்த தமிழர் சட்ட வழக்காறுகள், சிங்களர் சட்ட வழக்காறுகள் என்பன போர்த்துக்கீசர், இடச்சுக்காரர், ஆங்கிலேயர் என்போரின் வரவால் எவ்வாறு மாற்றமடைந்தன என்றும், புதுப் புதுச் சட்டமுறைகள் எவ்வாறு இலங்கையில் நுழைந்தன என்றும் கண்டோம்.

## முசுலிம் சட்டம்

இனி, இந்தக் கட்டுரையை முடிக்க முன்னர் இலங்கையின் சட்ட முறைகளில் ஒன்றாய் அமைந்துவிட்ட முசுலிம் சட்டம் பற்றியும் ஒருசில கூறுவாம்.

ஏனைய சட்டமுறைகள் போலல்லாது, முசுலிம் சட்டமுறை சமயத்தை அடிப்படையாகக் கொண்டது. அது இலங்கையிலுள்ள முசுலிம்களுக்கு, அவர்கள் இலங்கையின்

எந்தக் கோணத்தில் வாழ்ந்தாலும், ஏற்புடைத்தான ஒரு சட்டமாகும். உலகத்தின் ஏனைய பகுதிகளில் வாழும் முசுலிம்களுக்கு ஏற்புடைத்தாகும் பொதுவான முசுலிம் சட்டமே இலங்கைவாழ் முசுலிம்களுக்கு பெரும் பாலும் ஏற்புடைத்தான சட்டமாகும். பொதுவான முசுலிம் சட்டத்தின் தோற்றுவாயாக அமைவன, திருக்குறுன், அடித், சுன்னு, இயுமா, கியாஸ் ஆகியவை ஆகும். இலங்கைவாழ் முசுலிம்களின் சட்டமும் இவற்றையே அடிப்படையாகக் கொண்டது. ஆயினும், உரோமரிடச்சுச் சட்டம் இலங்கையின் பொதுச் சட்டமாய் இருத்தலின், முசுலிம் சட்டத்தில் காணப்படும் இடைவெளிகள் அல்லது சூனியங்கள் பல, உரோமரிடச்சுச் சட்டத்தால் குறை நிரப்பப்பட்டுள்ளன. உரோமரிடச்சுச் சட்டம் முசுலிம் சட்டத்தில் ஏற்படுத்திய பாதிப்புக்கள் பல; அதுபோலவே முசுலிம்சட்டமும் தேசவழமைச் சட்டத்தில் ஒரு சில தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

## முக்குவர் சட்டம்

இலங்கை முக்குவர் என்பார் பிரதானமாக கல்பென்ரின், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்த தமிழருள் ஒருவகுப்பினராவர். கல்பென்ரின் முக்குவர் கிறித்தவர்களாகவோ முகமதியர்களாகவோ இருந்தனர். அதனுல் தீவின் கரையோர மாகாணங்களைச் சேர்ந்த கிறித்தவ, முகமதிய மக்களுக்குரிய வழியுரிமைச் சட்டம் அவர்க்கு ஏற்புடையதாயிருந்தது. யாழ்ப்பாணம் மட்டக்களப்பு ஆகிய மாகாணங்களிலிருந்த முக்குவர்களில் சிறுதொகையினர் கிறித்தவராகவும் பெரும்பான்மையினர் சைவராகவும் இருந்தனர். யாழ்ப்பாணத்தினர் தேசவழமையைப் பின்பற்றினர். மட்டக்களப்பு முக்குவர் தமக்கெனத் தனிச்சட்டதைப் பின்பற்றினர். இதுவே முக்குவச்சட்டம் எனப்பட்டது.

முக்குவர் சட்டத்தின் விபரங்களைப் பெறலரிது. நம்பகமான தகவல்கள் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்திலும், விண்ணப்ப நீதிமன்றத்திலும் அளிக்கப்பட்ட

வழக்குத் தீர்ப்புகளில் இருந்து மட்டும் பெறக்கூடியனவா யுள்ளன. இம்முடிபுகளுள் சில உயர் நீதிமன்றத்தினுல் அவ்வப்போது மேன்முறையீட்டில் மீளாய்வு செய்யப்பட்டு சட்ட வலுவுடையனவாகியுள்ளன.

தாயவுரிமைமையைப் பொறுத்தமட்டில் முக்குவர்கள் இலங்கையரிலும் வேறுபட்டவர்களாய் இருந்தனர். முக்குவன் ஒருவன் இறந்தால், அவன் உயிரோடிருந்த காலத்தில் ஈட்டிய ஆதனம் அவனுடைய பெண்மக்களுக்கும் ஆண்மக்களுக்கும் இடையே சரிசமமாகப் பிரிக்கப்படும். ஆனுல், அவன், அவனது மூதாதையரிடமிருந்து பெற்ற ஆதனம், அதாவது முதுசொம், அவனுடைய சகோதரியின் ஆண் பிள்ளைகளுக்குச் சேரும்; இது தவறுகின்றவிடத்து மருமகனுடைய அல்லது மருமகளுடைய மகனுக்கும் மகளுக்கும், இதுவும் தவறின் அவர்களுடைய மகன், மகள் என்போர்க்கும் என்ற முறையில் 4 உறவுப் படிமை வரைக்கும் செல்லும். இந்தவுறவுப் படிமைக்குள் வழியுரிமையாளர் அகப்படாத பட்சத்தில் மட்டுமே அம்முதுசொம் அவரது சொந்தப் பிள்ளைகளை அடையும். மலையாள நாட்டு நாயர்களுள்ளும் இந்தத் தாயவுரிமை முறை காணப்படுகின்றது. முக்குவர் மலையாள நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

1876 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கக் கட்டளைச் சட்டம் முக்குவர் சட்டத்தின் கீழுள்ள வழியுரிமை ஏற்பாடுகளை அறவே நீக்கியுள்ளது. ஏனைய சட்டங்களான கண்டியர் சட்டம், முகமதிய சட்டம், தேசவழமை என்பன தொடர்பில் செய்யப்பட்ட விதிவிலக்கு ஏற்பாடுகள் முக்குவர் சட்டம் தொடர்பில் அக்கட்டளைச் சட்டத்தில் செய்யப்படவில்லை. முக்குவர் பற்றி மேலும் தெரிய வேண்டின் சட்டக்கல்லூரித் தமிழ்மன்றத்தின் வெளியீடான ''நீதிமுரசு'' (1968) பார்க்கவும்.

சட்டமாணவரும் சட்டக்கற்கையில் நாட்டம் கொண்டோரும் இலங்கையில் நிலவும் சட்டமுறைகள்

பற்றி அறிவதற்கு மேற்கூறிய செய்திகள் வழிகாட்டும்; வழி காட்டுதலே இக் கட்டுரையின் நோக்கமும்.

## பலவகைச் சட்டங்கள்

ஒரு நாட்டில் வழங்கும் சட்டங்களைப் பலவகையாகப் பகுக்கலாம். நாட்டின் பாதுகாப்பையும் அமைதியையும் பாதுகாக்கும் வண்ணம் அமைந்த சட்டங்கள் குற்றவியற் சட்டம் என்ற பிரிவினுள் அடங்கும். பொதுமக்களின் நலனைப் பாதுகாக்கும் சட்டம் உரிமையியற் சட்டம் என்ற பிரிவினுள் அடங்கும் என்று பொதுப்படையாகப் பாகுபாடு செய்தாலும், வேறுசில சட்டப் பிரிவுகளும் உள்ளன. அவற்றுள் சிலவற்றை இங்கே வரிசைப்படுத்திக் கூறுவோம்.

(1) அரசியலமைப்புச் சட்டம்
(2) தேர்தல்கள் சட்டம்
(3) வரிச் சட்டம்
(4) திருமணச் சட்டம்
(5) வழியுரிமைச் சட்டம்
(6) ஆதனம் பற்றிய சட்டம்
(7) கைத்தொழிற் சட்டம்
(8) பன்னாட்டிடைச் சட்டம் (சர்வதேசச்சட்டம்)
(9) ஆட்கள் பற்றிய சட்டம்
(10) வாடகைச் சட்டம்
(11) ஒப்பந்தச் சட்டம்
(12) தீங்கியற் சட்டம்
(13) வணிகச் சட்டம்
(14) நிருவாகச் சட்டம்

மேலே கூறியவற்றை விட வேறு சட்டப் பிரிவுகள் இல்லை என்பது கருத்தன்று. பொதுமக்களுக்கு அன்றாட வாழ்க்கையில் அவசியமாகும் சட்டப் பிரிவுகள் இவை என்பதால் அவற்றை வெளிப்படையாக எடுத்துக் காட்டினேம்.

இந்தச்சட்டப் பிரிவுகள் எந்தெந்தச் சட்டங்களை உள்ளடக்கியுள்ளன என்பதை மேலோட்டமாக அறிய முயல்வோம்.

## அரசியலமைப்புச் சட்டம்

அரசியலமைப்புச் சட்டம் என்கின்றபோது, 1946ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையைத்தான் நாம் கருத்திலே கொள்கிறோம். இந்தப் பேரவைக் கட்டளையின் பொருளைத் தெளிவாக விளங்கிக்கொள்வதற்கு 1947ம் ஆண்டின் இலங்கைச் சுதந்திரச் சட்டத்தையும் (376 ஆம் அத்தியாயம்) நாம் படித்தேயாக வேண்டும். இலங்கைச் சுதந்திரச் சட்டம் ஆக்கப்படுவதற்கு முன்னர் அரசியலமைப்புச் சட்டம் (379ஆம் அத்தியாயம்) ஆக்கப்பட்டது என்பதையும் நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இலங்கைச் சுதந்திரச் சட்டம் 1947ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஆக்கப்பட்டது எனினும் 1948ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் நான்காம் தேதியன்றுதான் அது நடைமுறைக்கு வந்தது. அரசியலமைப்புச் சட்டம் ஆக்கப்பட்ட பிறகே நாம் சுதந்திரம் பெற்றோமாதலின் சுதந்திரச் சட்டத்துக்கமைய அரசியலமைப்புச் சட்டம் சில மாற்றங்களை ஏற்றிருக்கிறது. நாம் சுதந்திரம் பெற்று ஏறத்தாழ இருபத்துமூன்று ஆண்டுகள் ஆகின்றன. இந்த இருபத்து மூன்று ஆண்டுகள் காலத்துள் அரசியலமைப்புச் சட்டம் பல தடவைகள் திருத்தப்பட்டுள்ளது. இப்போது, குடியரசுக்கான அரசியலமைப்பு ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறோம்.

## தேர்தல்கள் சட்டம்

தேர்தல்கள் என்றதும் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டந்தான் நம்மவரின் நினைவுக்கு வரும். ஆனால் உள்ளூராட்சி நிலையங்களான உள்ளூரதிகார சபைகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் தேர்தல்கள் நடைபெறுகின்றன. பாராளுமன்றத்திற்குப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுதல் பற்றியும் [மூதவையுறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுதல் பற்றியும்] இலங்கை (அரசியலமைப்பு) அரசப்பேரவைக் கட்டளை கூறுகின்றதெனினும், அதுதேர்தலைப் பற்றி

விரிவாக எதையும் கூறவில்லை. 1946ஆம் ஆண்டின் இலங்கை (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை இதைப்பற்றி விரிவாகக் கூறுகின்றது. பிரதிநிதிகள் சபைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை பற்றித்தான் மேற் சொல்லிய அரசப் பேரவைக் கட்டளை விளக்குகின்றது. அப்படியாயின், பாராளுமன்ற மூதவைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விதம் பற்றிக் கூறுகின்ற சட்டம் எது? இலங்கை அரசியலமைப்புப் பேரவைக் கட்டளையின் ஒன்பதாம் பத்தாம், பன்னிரண்டாம், பதின்மூன்றும், பதினான்காம் பிரிவுகளிலே தான் இதற்கான ஏற்பாட்டைக் காணலாம். மூதவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் போது எவ்வாறு வாக்களித்தல் வேண்டும் என்பது பற்றி ஒழுங்கு விதிகள் ஆக்கப்படலாம் என்று அரசியலமைப்புப் பேரவைக் கட்டளையின் 72ஆம் பிரிவு கூறுகின்றது. ஆகவே 72ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளையும் பார்த்தல் வேண்டும்.

உள்ளூரதிகார சபைகட்கான உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய முறை முதலியன பற்றி உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் கூறுகின்றது. பாராளுமன்றத் தேர்தற் சட்டம் முதலில் எமக்காக இங்கிலாந்தில் ஆக்கப்பட்டது. ஆனால் உள்ளூரதிகாரச்சபைகள் தேர்தற் சட்டம் நமது சட்ட சபையால் ஆக்கப்பட்டது. தேர்தல் சட்டம்பற்றி நாம் இவற்றை எல்லாம் எழுதிக் கொண்டிருக்கின்ற அதே வேளையில், நாமே நமக்கென அரசியலமைப்புச்சட்டத்தையாத்து இலங்கையைக் குடியரசாக்கும் முயற்சியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. புதிய அரசியலமைப்பின் கீழ் மூதவை என்று ஓர் அவை இராது. அத்துடன் இன்றுள்ள தேர்தல் சட்டங்கள் மாறி வேறு சட்டங்கள் வழக்குக்கு வந்தாலும் வரலாம். பொறுத்திருந்து பார்ப்பதே அறிவு.

## வரிச் சட்டம் Tax Laws

நாடு நமக்குப் பல சேவைகளை அளிக்கின்றது அது அவ்வாறு எமக்கு உதவ வேண்டுமாயின் அதற்குப் பணம் தேவை. அது எமக்குச் சேவை செய்வதற்குத் தேவையான பணத்தை அது எம்மிடமிருந்து வரியாகப் பெறுகின்றது. இந்த வரிகளை அது எவ்வாறு பெறலாம், எந்தெந்த நோக்கங்களுக்காகப் பெறலாம், என்பன பற்றிய விவரங்களைக் கொண்டிருக்கும் சட்டங்கள் வரிச் சட்டங்கள் எனப்பெறும். பின்வரும் சட்டங்கள் இவற்றுட் சில:—

(1) வருமானவரிச் சட்டம் *(Income Tax Act)*

(2) இலாபங்கள் மீதான வரிச் சட்டம் *(Profit Tax Act)*

(3) மதுவரிச் சட்டம் *(Excise Ordinance)*

(4) உண்ணாட்டிறைவரிச் சட்டம் *(Inland Revenue Act)*

(5) சுங்கவரிச் சட்டம் *(Customs Ordinance)*

(6) பிறநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்வரி.

வரி வசூலிப்பதற்கென்று மத்திய அரசினுல் இயற்றப்பட்ட சில வரிச்சட்டங்களையே மேலே கூறினோம். உள்ளூர் நிருவாகத்துக்கெனத் தாபிக்கப்பட்ட உள்ளூரதிகார சபைகளும் அவை பொதுமக்களுக்கு ஆற்றும் சேவைக்காக அவற்றின் எல்லைக்குட்பட்ட மக்களிடமிருந்து வீதவரி *(cess)* வருமதிகள் *(dues)*, கட்டணங்கள் *(fees)*, வீதங்கள் *(rates)*, ஆயம் *(toll)* தீர்வைகள் *(duty)* என்ற வகையில் வரிகள் பலவற்றை அறவிடுகின்றன. எந்த எந்தக் கருமங்கள் தொடர்பில் இவற்றை அறவிடலாம் என்ற விபரங்களை, மாநகர சபைகள் கட்டளைச்சட்டம், நகரசபைகள் கட்டளைச்சட்டம், பட்டின சபைகள் கட்டளைச்சட்டம், கிராமச் சபைகள் கட்டளைச்சட்டம் ஆகிய சட்டங்களிற் கண்டு கொள்ள முடியும். சில பொதுவான சட்டங்களின் கீழும் இவை வரிகளை அறவிட அதிகாரமளிக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமல்லாமல், இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவரி

டமிருந்தும் வரிகள் வசூலிக்கப்படுகின்றன. விசாவரி, தற்காலிக வாச அநுமதிவரி போன்ற வரிகள் அறவிடப்படுகின்றன.

பாராளுமன்றத்தின் சம்மதமின்றி மக்கள்மீது வரி எதையும் விதிக்கக் கூடாது என்பது பிரித்தானிய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை நெறிகளில் ஒன்று. இலங்கையும் அந்த நெறியை ஏற்றுள்ளது. ஆகவே பாராளுமன்றம் மட்டுமே வரிகளை விதிக்க முடியும் என்பது சொல்லாமலே புரியும். அப்படியாயின் உள்ளூரதிகார சபைகள் எப்படி வரி, ஆயம், கட்டணம் முதலியவற்றை மக்கள் மீது விதிக்கின்றன என்று கேட்டால், நாம் இந்நூலின் தொடக்கத்திலே குறிப்பிட்டது போல, பாராளுமன்றமானது இவற்றிற்குக் கையளித்த தத்துவங்களைப் பின்பற்றியே அவை அவ்வாறு விதிக்கின்றன என்று உணர்தல் வேண்டும்.

## திருமணச் சட்டம்

இலங்கையிலே, தமிழர், சிங்களவர்கள், முசுலிம்கள், பறங்கியர்கள், பிரித்தானியர் என்று பலர் வாழ்வதால் அன்னாரின் திருமணம், திருமணநீக்கம், திருமணத்தின் விளைவு, திருமணநீக்கத்தின்விளைவு, கணவன் மனைவி ஒருவரை ஒருவர் கைவிடல், பராமரிப்பு என்பன தொடர்பில் பல்வேறு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. பொதுத் திருமணக்கட்டளைச்சட்டம் தமிழர்க்கும், கீழ்நாட்டுச் சிங்களர்க்கும், பறங்கியர்க்கும்; கண்டியத் திருமண, திருமண நீக்கச்சட்டம் கண்டியச்சிங்களவர்க்கும்; முசுலிம்திருமண. திருமணநீக்கச்சட்டம் முசுலிம்களுக்கும்முறையேஏற்புடையனவாயுள்ளன. இவைமட்டுந்தான் திருமணவியல் பற்றிய சட்டங்கள் என்றுஎண்ணிவிட வேண்டா.

திருமணம் பற்றிய சில ஏற்பாடுகள் உரிமைவழக்கு நடவடிக்கைமுறைச்சட்டக்கோவையிலும்அடங்கியுள்ளன. திருமணஞ்செய்தஒருவர் திருமணநீக்கம்பெற விரும்பினால் அவர் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்பற்றி மேற்படி

சட்டக்கோவையின் பிரிவுகள் கூறுகின்றன. முசுலிம் அல்லாதார், ஒருவர்க்கு மேற்பட்ட மனைவியரைத் திருமணம் செய்தல் குற்றமாகும் என்று தண்டனைச் சட்டக் கோவையின் 365 ஆம் பிரிவு கூறுகின்றது. மனைவி கணவன் என்று ஆனதன்பிறகு அவர்களிருவருக்குமிடையில் நிலவவேண்டிய சட்ட உறவு பற்றிச் சான்று பற்றிய சட்டமும் கூறுகின்றது.

கட்டிய மனைவியைக் காப்பாற்ற வேண்டிய கடமை கணவனுக்கு உண்டு. அவன் அவ்வாறு செய்யத் தவறினால் அவனிடமிருந்து பராமரிப்புத்தொகை பெறும் உரிமை மனைவிக்கும் பிள்ளைகட்கும் உண்டு என்றும், அதை எவ்வாறு பெறமுடியும் என்றும் 1889 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கப் பராமரிப்புக் கட்டளைச்சட்டம் எடுத்தோதுகின்றது; உரிமைவழக்குநடவடிக்கைமுறைச்சட்டக்கோவையின் 619 தொடங்கி 622 வரையுள்ள பிரிவுகளும் இதுபற்றிக் கூறுகின்றன; மேற்படி கோவையின் 614 ஆம் 615 ஆம் பிரிவுகளையும் இது தொடர்பில் பார்க்கலாம்; வயோதிப காலத்தில் பெற்றோரைப் பராபரிக்க வேண்டிய பொறுப்புப் பிள்ளைகளுக்கு உண்டு; சில சந்தர்ப்பத்தில், கணவன் இயலாதவனாகும் காலத்தில், அவனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு பொருளுள்ள மனைவிக்கும் உண்டு.

1877 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆம் தேதி நடைமுறைக்கு வந்ததான திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச்சட்டம் (*Matrimonial Rights and Inheritance Ordinance*) கணவனுக்கோ மனைவிக்கோ சொந்தமான சொத்துக்களை அவர்கள் எவ்வாறு கையாளலாம் என்று கூறுகின்றது. இந்தச் சட்டம், கண்டியச் சிங்களவர்க்கோ, முசுலிம்களுக்கோ தேசவழமைத் தமிழருக்கோ ஏற்புடையதாகாது என்று இக்கட்டளைச்சட்டத்தின் இரண்டாம் பிரிவு கூறுகின்றது.

யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச்சட்டம் (*Jaffna Matrimonial Rights and In*

*heritance Ordinance*) யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும்.

மணமான பெண்களின் ஆதனக் கட்டளைச்சட்டமும் (*Married Women's Property Ordinance*) திருமணம்பற்றிய ஒரு சட்டமாகும். இதுவும், கண்டியர், முசுலிம்கள், தேசவழமைத் தமிழர்கள் ஆகியோர்க்கு ஏற்புடைத்தாகாத ஒரு சட்டம்.

## வழியுரிமைச் சட்டம்
## Law of Succession

பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை. அதனாலேதான் பொருளைப் பேணிப்பாதுகாக்கிறோம். போற்றாதார்க் கில்லைப் பொருளாட்சி என்கிறான் வள்ளுவன். நான் சேர்த்து வைத்த பொருள் என்னுடைய சந்ததியினருக்குத் தான் (ஆனால் தன்னுடைய பணத்தைத் தந்துவிட்டு மற்ற அலுவலைக் கவனி என்கிறார் வருமானவரி ஆணையாளர்; நட்சத்திரையன் தன்பணம் கேட்டதுபோல) போகவேண்டும் என்று சட்டம் உள்ளது. எவருடைய எப்பொருள் யார் யார்க்குப் போகவேண்டும் என்பது பற்றிக் கூறும் சட்டம் வழியுரிமைச் சட்டம் என்றும் பின்னுரிமைச் சட்டம் என்றும் வழங்கப்படும். இந்த வழியுரிமைச் சட்டமும் இரு வகைப்படும். ஒருவரின் ஆதனம் தொடர்பில் இறுதிவிருப் பாவணம் இருப்பின் அத்தகைய ஆதனம் அந்தஇறுதிவிருப் பாவணத்தை எழுதியவர் இறந்த பின் எவ்வாறு வாரிசுகளுக்கு (பிறங்கடைகளுக்கு) பகிரப்படும் என்பது பற்றிக் கூறும் சட்டம் ''இறுதிவிருப்பாவணவழியுரிமைச் சட்டம்' என்று வழங்கப்படும். இறுதிவிருப்பாவணம் எதையும் எழுதாமல் ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய சொத்துக்கள் யார் யாருக்குப் போய்ச் சேருதல் வேண்டும் என்பது பற்றிக் கூறும் சட்டம் ''உரிமைத் தத்துவ வழியுரிமைச் சட்டம்'' எனப்படும்.

பின்னுரிமை தொடர்பிலான வழக்குகளை எப்படித் தொடுக்க வேண்டும் என்பது பற்றி உரிமைவழக்கு நடவ

டிக்கைமுறைச்சட்டக் கோவையில் சட்ட ஏற்பாடுகள் உள்ளன. (516)

திருமண உரிமைகளும் வழியுரிமையும் கட்டளைச் சட்டம், யாழ்ப்பாணத் திருமண உரிமைகளும் வழியுரிமைகளும் கட்டளைச்சட்டம் ஆகியன வழியரிமை பற்றிய சட்ட ஏற்பாடுகளை அடக்கியுள்ளன.

கண்டியர், முசுலிம் ஆகியோர்க்கும் பின்னுரிமை தொடர்பிலான தனித்தனிச் சட்டங்கள் உள்ளன.

## ஆதனம் பற்றிய சட்டம் Law of Property

ஆதனம் என்றாலும் சொத்து என்றாலும் ஒன்றே; உடைமைகள் எல்லாம் ஆதனம் என்று கூறலாம். ஆதனத்தை இரண்டுவகையாகக் கூறலாம்; ஒன்று அசைவற்ற ஆதனம் மற்றது அசைவுள்ள ஆதனம். இவற்றிற்கான வரைவிலக்கணங்களைச் சட்டங்களில் ஆங்காங்கே கண்டு கொள்ளலாம்; காணி, வளவு, வீடு என்பன அசைவற்ற ஆதனங்கள்; காறு, சயிக்கிள், காப்பு, சங்கிலி என்பன அசைவுள்ள ஆதனங்கள்.

ஆதனங்கள் சில அரசாங்கத்துக்குச் சொந்தமாக உள்ளன.வேறு சில தனியாட்களுக்குச் சொந்தமாக உள்ளன. அரசாங்கத்துக்கும், மக்களுக்கும்சொந்தமாயுள்ள ஆதனங்கள்பற்றியும், அவற்றை விற்றல், வாங்குதல், ஈடுவைத்தல், வாடகைக்குவிடுதல், வாடகைக்கெடுத்தல், குத்தகைக்கு எடுத்தல், குத்தகைக்கு விடுதல் பற்றியும் அவை தொடர்பில் எழும் பிரச்சனைகள் பற்றியும் கூறுகின்ற சட்டம் ஆதனம் பற்றிய சட்டம் எனப்படும்.

ஆதனம் பற்றிய சட்டம் வெவ்வேறு பல சட்டங்களை உள்ளடக்கியுள்ளது. அவை என்ன என்னஎன்பதை சுருக்கமாக அறிந்துகொள்ளுதல் இப்போதைக்குப் போதும் அவை வருமாறு:—

(1) முடிக்குரிய காணிகள் சட்டம்.

(2) திருமணமான பெண்கள் ஆதனக்கட்டளைச் சட்டம்.

(3) நம்பிக்கைப் பொறுப்புகள் கட்டளைச் சட்டம்.

(4) பாகப்பிரிவினைச் சட்டம்.

(5) ஈட்டுச் சட்டம்.

(6) வாடகை மட்டுப்படுத்தல் சட்டம்.

ஆகிய சட்டங்களே பொதுவில் ஆதனம் பற்றிய சட்டம் என்று அழைக்கப்படலாம்.

## வாடகை மட்டுப்பாடு Rent Restriction

ஒருவருக்குச் சொந்தமான காணியை அல்லது கட்டடத்தை மற்றொருவர் பயன்படுத்தும் பொழுது, அப்பயன்பாட்டின் பிரதிபயனாகக் கொடுக்கப்படுவதனையே வாடகை எனப் பொதுவாகச் சொல்கிறோம். இன்னும், ஓர் அசைவுள்ள பொருளின் பயன்பாட்டுக்குக் கொடுக்கப்படுவதும் வாடகை என்று சொல்லப்படுகிறது.

ஆனால் சுதந்திர அடிப்படையிற் பார்க்கும்பொழுது, இவர்கள் இருவரும் தத்தமக்கு அதிகம் வாய்ப்பான நிபந்தனைகளை வகுத்துக் கொள்ளலாம். வீட்டுடைமைக்காரன் தான் விரும்பிய காலத்துக்கு விரும்பிய தொகையை வாடகையாகப் பெற முயலலாம்; குடியிருப்பவனும் தனது வசதிப்படி வாடகை செலுத்துவதற்கு ஏற்பாடு செய்துகொள்ளலாம். எனினும் இருசாரார்க்குமிடையேயும் நீதி நியாயம் என்பன நிலவவேண்டும் என ஒரு நாட்டின் அரசாங்கம் சில வரையறைகளை வகுத்தலியல்பு. இவ்விடயம் சம்பந்தமாக இலங்கையின் தேவைகளுக்கென ஆக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகளை நோக்குவோம்.

1942 ஆம் ஆண்டிற்றான் இலங்கையில் வாடகைகள் பற்றிய முதற் சட்டம் ஆக்கப்படலாயிற்று. அவ்வாண்டு

ஏப்பிரில் மாதத்தில் யப்பானியர் கொழும்பு மீது குண்டு வீசியதன் விளைவாகப் பலர் தாமிருந்த வீடுகளையும், வியாபாரம் செய்து வந்த இடங்களையும், கைவிட்டு விட்டு உள்ளூர்களுக்குச் சென்றிருந்தனர். அபாயநிலை நீங்கிய காலத்திலே மக்கள் திரும்பிவரத் தொடங்கியதும் ; வீடு முதலியவற்றிற்குப் பெரும் போட்டி ஏற்படலாயிற்று. பலர் தாம் முன்பிருந்த இடங்களையே எவ்விதமும் பெற்றுவிட வேண்டும் எனப் பெரிதும் பாடுபட்டனர். இத்தகைய சங்கடத்தைச் சமாளிப்பதற்கெனவே 1942 ஆம் ஆண்டு 60 ஆம் இலக்கச் சட்டம் ஆக்கப்பட்டது. அச் சட்ட ஏற்பாடுகள் குறிப்பிட்ட சில இடங்களுக்கு மட்டுமே ஏற்புடையனவாயிருந்தன. மக்கட்டொகைப் பெருக்கத்தினலும் இருப்பிட வசதிக் குறைவாலும் வாடகை மட்டுப்படுத்தல் பற்றிய ஏற்பாட்டை நிரந்தரமானதொருவடிவத்தில் வகுத்தமைத்தல் அத்தியாவசியமானதாகக் காணப்படவே 1948 இல் புதியதொரு சட்டம் உருவாக்கப்பட்டது. இச்சட்டங்கூட 1953, 1961, 1964, 1965 ஆகிய ஆண்டுகளிற்றிருத்தப்பட்டுள்ளது. இவ்விதமாகக் காலத்துக்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டு இன்று நடைமுறையிலிருக்கின்ற சட்ட ஏற்பாடுகளே இங்கு குறிப்பிடப்படுகின்றன.

1948 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டம் 1949 சனவரி முதலாந் தேதியன்று நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் முன்னைய சட்டம் வழங்கி வந்த அந்த இடங்களுக்கும் அமைச்சரால் குறிப்பிடப்படும் அத்தகைய வேறு இடங்களுக்கும் மட்டுமே ஏற்புடையதாகும். இத்தகைய இடங்களிலும் கூட எல்லாக் கட்டடங்களுக்கும் ஏற்புடையதாகாது.

1-5-53 இன் பிறகு கட்டப்பட்ட புதிய வீடுகளுக்கிருந்து வந்த விலக்கு 1-5-61 இலிருந்து 1961 ஆம் ஆண்டின் திருத்தத்தால் நீக்கப்பட்டது. இத்தகைய வரையறைகளுக்குட்படவே சட்டம் இயங்குகின்றது.

சட்டம் ஏற்புடைய வீடு ஒன்றை வாடகைக்குப் பெற்றவர் அதற்கான அதிகாரம் பெற்ற வாடகையைச் செலுத்தல் வேண்டும். வாடகை ஒரு குறித்த வீட்டின் முழுமைக்கே ஏற்புடையதாகும். காணியும் வீடும் சேர்ந்திருக்குமிடத்து அவை பிரித்து வேறாகக் கணிக்கப்படுவதில்லை. கட்டடம் இல்லாத வெறும் புற்றரை இச் சட்டத்தினுள் கட்டடம் எனப்படாது.

ஒரு வீட்டுக்குத் துணியப்பட்டுள்ள வாடகைக்குக் கூடுதலான எத்தொகையையும் வீட்டுச் சொந்தக்காரர் அறவிடக்கூடாது. அது மட்டுமல்லாமல் அதனைக் கோருதல், அல்லது பெறுதலும் குற்றம்; குடியிருப்பவரும் அத்தகைய ஏதேனும் தொகையைக் கொடுத்தலோ அல்லது கொடுக்க முற்படுவதோகூடக் குற்றமாகும். — (பிரிவு 3).

முற்பணம் பெறுதல் தொடர்பிலும் மூன்று மாத வாடகைத் தொகையை மட்டுமே முற்பணமாகப் பெறல் வேண்டும். அதற்கு மேற்பட்ட ஏதேனும் தொகையைப் பெறுதலோ கொடுத்தலோ குற்றமாகும். அவ்விதம் கொடுக்கப்படும் எத் தொகையையும் நீதிமன்றங்கள் மூலம் திரும்பப் பெறமுடியாது. இத்தொகை சட்டவிரோதமான ஒப்பந்தத்தின் அடிப்படையிற்றரப்பட்டதாதலின் மீளப் பெற முடியாததாகின்றது. — (பிரிவு 8 )

கொடுக்கப்பட்ட முற்பணம் மீள அறவிடப்படாததாயினும் செலுத்தப்பட்ட கூடுதல் வாடகைத் தொகை மீள அறவிடப்படலாம். இதற்கெனச் சிறப்பு ஏற்பாடு 15 ஆம் பிரிவிற் றரப்பட்டுள்ளது. எனவே கூடுதல் வாடகைத் தொகை செலுத்தப்பட்டிருப்பின், அத்தகையதான மூன்று வருடத்துட்படும் மேலதிக தொகை வாடகை செலுத்தப்படாத காலத்துக்கு ஈடாகக் கணக்கிடப்படலாம்.

வாடகைப்பணம் சாதாரணமாக மாதவீதமாகச் செலுத்தப்படுதல் வேண்டும். எத்தேதியன்று செலுத்துவதற்குரியதாகின்றதோ அத் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கிடையே செலுத்தப்படல் வேண்டும். அத்தகைய காலம் கழிந்துபோனல் வாடகை செலுத்தப்படாததாகவே கருதப்படும்.

வாடகைப்பணம் முதலியன செலுத்தப்பட்டதும் சொந்தக்காரன் அதற்கான பற்றுச்சீட்டு வழங்குதல் வேண்டும். அவ்விதம் சொந்தக்காரனுக்கு நேரே செலுத்த விரும்பாவிடின் அதிகாரம் பெற்ற அலுவலர்க்குச் செலுத்தலாம். அத்தகைய அலுவலர்க்குச் செலுத்தப்படும் தொகை வீட்டு உடைமைக்காரருக்குச் செலுத்தப்பட்டதாகவே கொள்ளப்படும்.

வீடு வாடகைக்கு எடுத்தவர், வீட்டு உடைமைக்காரனின் எழுத்திலான அனுமதியின்றிக் கீழ்வாரக்குடி வைத்திருத்தலாகாது. எனினும் கீழ்வாரக்குடி அவ்வீட்டின் திட்டமான வேருகவுள்ள இடத்தினைப் பயன்படுத்துவதாதல் வேண்டும்.— *(சுப்பையா பிள்ளை எதிர் முத்துக்கருப்ப பிள்ளை)*. வீட்டுச் சொந்தக்காரனும் தான் வாடகைக்குக் கொடுத்த வீட்டில் ஏற்கனவே இருந்துவந்த வசதிகளைத் தடைசெய்தலாகாது.

வாடகை ஒப்பந்தம் எவ்விதம் இல்லாதுபோகலாம் எனப் பார்ப்போம். குடியிருப்பவர் வீட்டினை விட்டுச் செல்ல அறிவித்தல் கொடுத்திருப்பின் தாமாகவே விட்டுச் செல்லலாம். ஆனல் சொந்தக்காரன் வீட்டினைப் பெற வேண்டின் அது சில நிபந்தனைகள் மீது நிகழலாம். இது தொடர்பிலான ஏற்பாடு காலத்துக்குக் காலம் திருத்தப்

பட்டுள்ளமையின் சிறிது விரிவாகப் பார்த்தல் நன்று. 1948 ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டத்தின்படியுள்ள காரணங்கள் நான்கு. அவை:—

(1) குடியிருப்பவர் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலத்துக்கு வாடகை செலுத்தத் தவறுதல்;

(2) குடியிருப்பவர் தாம் விட்டுச் செல்வதற்கு அறிவித்தல் கொடுத்திருத்தல்;

(3) அவ்வீடு நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி அவ்வீட்டுச் சொந்தக்காரனின் அல்லது அவர் குடும்பத்தில் எவரேனும் உறுப்பினருக்கு இருப்பிடமாகப் பயன்பட அல்லது அவர்களின் வியாபாரம், தொழில் அல்லது முயற்சி எதற்குமாகத் தேவையானதெனக் கொள்ளப்படுதல்;

(4) குடியிருப்பவர், அல்லது அவரின் கீழ் வாரக்குடியாயிருப்பவர் முதலியோர் அயலவருக்குத் தொல்லை விளைத்ததன் காரணத்தினுல் குற்றப்பட்டல், அல்லது சட்டவிரோதமான செயல்களுக்கு அல்லது துர் நடத்தையான அலுவல்களுக்குஅந்த வளவுகள் பயன்படுத்தப்படுதல், அல்லது நீதிமன்றத்தின் எண்ணப்படி குடியிருப்பவரின் செயலால் வீடு சீரழிந்துவிட்டதெனக் கொள்ளப்படுதல்.

இவை காரணமாகக் குடியிருப்பவரை ஒரு வீட்டிலிருந்து அகற்றமுடியும். 1961 ஆம் ஆண்டின் திருத்தம் வாடகை செலுத்தப்படவில்லை என்ற காரணத்தின் மீது வழக்குத் தொடர வேண்டுமாயின் மூன்றுமாத அறிவித்தல் கொடுக்கவேண்டும் என விதிக்கிறது. அத்துடன் குடியிருப்பவரின் நோய் முதலிய காரணத்தினுல் வாடகை செலுத்தப்படாது போயிற்று என்ருல் அதைப் பின்னர் செலுத்துவதற்கும் தவணைப்பணங்களாகச் செலுத்துவதற்கும் வகை செய்கிறது.

1966 ஆம் ஆண்டின் திருத்தம் 100 ரூபாவுக்குக் குறைந்த வாடகை செலுத்துவோரைத் தனி வகுப்பாக்கியுள்ளது. அவர் விடயத்தில் தரப்பட்டுள்ள காரணங்கள்:—

(1) மூன்று மாத வாடகை செலுத்தப்படாமை;

(2) அனுமதியில்லாக் கீழ்வாரக் குடி வைத்தல்;

(3) அவ்வீடு சட்டவிரோதமான செயலுக்கு அல்லது துர்நடத்தைகளுக்குப் பயன்படுத்தப்படல்;

(4) வீண் அழிவுக்குட்படுதல்;

என்பன. மேலும் 100 ரூபாவுக்கு மேற்பட வாடகை செலுத்துபவர் விடயத்தில், அத்தகைய வீட்டினைத் தமது தேவைக்கு அல்லது தம் குடும்பத்தோருக்குப் பெற விரும்பும் உடமைக்காரன் குடியிருப்பவருக்கு ஒரு வருட அறிவித்தல்எழுத்திற் கொடுத்தல் வேண்டும்.

சொந்தக்காரனின் குடும்ப உறுப்பினரெனக் குறிப்பிடப்படுவது, அவன் மனைவியையும் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என்போரையும் அவரிற்றங்கியிருக்கும் தாய், தந்தை, சகோதரன், சகோதரி என்போரையும் உள்ளடக்கும்.

குடியிருப்பவர் ஒருவரும், வீட்டு உடைமைக்காரனும் ஒருமித்து வாழுமிடத்து ஒரே ஒரு மலகூட வசதியுடைய வீட்டில் ஆட்கள் பலரைக் கொண்டுவந்து வைத்திருத்தல் தொல்லை எனக் கொள்ளப்பட்டு அங்கிருந்து அகற்ற நீதிமன்றம் இடங்கொடுத்தது. — (இதுவே *மல்லிகப்பிள்ளை எதிர் அஹமது மரிக்கார்* என்னும் வழக்கின் தீர்ப்பு—53, பு. ச. அ. 161). *தாமோதரம்பிள்ளை எதிர் கோவிந்தசாமி* (47. பு. ச. அ. 197) என்ற வழக்கில் வானொலி திருத்துவதில் இரவில் நெடுநேரம் சத்தம் செய்தலும் தொல்லையின்பாற்படும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. சட்டவிரோதச் செயல்களுக்குப் பயன்படுத்தப்படுதலின் கீழ்

களவெடுத்த பொருள்களை வைத்திருந்த குற்றத்துக்குத் தண்டிக்கப்படுதலும் அடங்கும்.

இனி, பிரதான குடியிருப்பாளர் இறக்குமிடத்து ஒரு வீட்டிற் குடியிருப்போர் தொடர்ந்திருந்து வருவதற்கும் இச்சட்டத்தில் ஏற்பாடு உண்டு. பிரதான குடியிருப்பாளர் இறந்தால் அவருடன் வாழ்ந்தோர் அவர் இறந்த மாதத்தில் கடைசி நாளிலிருந்து இரு மாதத்திற்குள் தாம் தொடர்ந்திருந்து வரப்போவதாக வீட்டுச் சொந்தக்காரனுக்கு அறிவித்தல் வேண்டும். ஏனெனில் ஒருவர் இறக்குமிடத்து அவர் செய்த ஒப்பந்தம் முடிவுக்கு வருவதன் காரணமாகவே ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவேண்டி ஏற்பட்டதாதலின், இத்தகைய சட்ட ஏற்பாடு தேவையானதாகின்றது.

வீட்டு உடைமைக்காரர்க்கும் குடியிருப்போர்க்கும் இடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்கென நேரே நீதிமன்றங்களுக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை. நீதிமன்றங்களைப் பார்க்கிலும் செலவு குறைந்த வழியில் ஏற்ற நிவாரணம் பெறக்கூடியதாக வாடகைக் கட்டுப்பாட்டுச் சபைகள் நிறுவப்பட்டுள்ளன. இச்சபைகளின் முன்னர், கட்சிக்காரர்களே தம் வழக்கினை எடுத்துரைக்கலாம். அல்லது தமக்கு வேண்டிய வேறொருவரைத் துணைக் கொள்ளலாம். சட்டவறிஞர்கள் தேவையில்லை.

இத்தகைய சபைகள் வாடகைகளுக்குப் பற்றுச்சீட்டு வழங்கவும், வாடகை ஒப்பந்தமளிக்கவும் தேவையான பழுதுபார்த்தல் வேலைகளுக்கு அதிகாரமளிக்கவும், அதிகாரம் பெற்ற வாடகையைத் தீர்மானிக்கவும் தத்துவமுடையன. இவற்றின் தீர்ப்புகளுக்கெதிராக மேன்முறையீடு செய்வதற்கு வாடகைப் புனராய்வுச் சபையொன்றும் உண்டு.

வாடகைக்குக் குடியிருப்பவர்களைக் கண்டபடி அகற்றுது தடுப்பதற்கு வகை செய்வதற்கெனத் தனியொரு சட்டமும் ஆக்கப்பட்டுள்ளது; 1970 இன் 28ஆம் இலக்கம்.

## தொழிலாளர் பற்றிய சட்டங்கள்
## Labour Laws

முதலாளி தொழிலாளர் என்போர்க்கிடையிலான போராட்டம் இன்றோ நேற்றோ தொடங்கிய ஒன்றல்ல. சிவிகை பொறுத்தவனுக்கும் சிவிகைமீது ஊர்ந்தவனுக்கும் போராட்டம் அன்றே இருந்தது. ஆனால் காலத்தின் மீது நம்பிக்கைவைத்த காலம் அந்தக்காலமாதலால் தொழிலாளர் முதலாளிமாரிடம் நியாயமும் நீதியும் கோரமுற்படவில்லை. நல்ல காலமாக இன்று நிலைமை மாறிவிட்டது. தொழிலாளர்களின் நலனைப் பேணும் சட்டங்கள் பல தோன்றிவிட்டன. அவற்றையே தொழிலாளர் சட்டம் என்கிறோம்.

தொழிலாளர், சேவையாளர், வேலையாட்கள் ஆகியோரின் நலனுக்கான சட்டங்கள் *1865* ஆம் ஆண்டிற்கு முன்னரும் இலங்கையில் நிலவி வந்தனவெனினும், *1865* ஆம் ஆண்டிலே அவையெல்லாம் ஒன்று திரட்டப்பட்டு *1865* ஆம் ஆண்டின் *11* ஆம் இலக்கக் கட்டளைச் சட்டமாக வெளியிடப்பட்டன. அதன்பிறகும், சட்டங்கள் பல இயற்றப்பட்டுள்ளன. *1871, 1889, 1912, 1921, 1923, 1927* ஆகிய ஆண்டுகளிலும் அதன்பின்னரும் தொழிலாளர் பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டன என்று இலங்கையின் சட்டவரலாறு கூறுகின்றது.

இலங்கைச் சட்டவாக்கத் தொகுப்பில் தொழிலாளர் பற்றிய சட்டங்கள் பல இடம்பெற்றிருப்பதைக் காணமுடியும். அவற்றுட் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறோம்.

தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் சேமத்தையும் நலனையும் பாதுகாத்தல். (அத்தியாயம் *128*), கடையிலும் அலுவலகங்களிலும் வேலைபார்த்தல், வேலைநேரம், அங்கே வேலைசெய்வோரின் ஊதியம், என்பனவற்றை ஒழுங்குபடுத்தல் (அத்தியாயம் *129*) சுரங்க வேலைகளில் பெண்கள் வேலைக்கமர்த்தப்படுதலைத் தடுத்தல் (*130*), கைத்தொழிற் பிணக்குகளைத் தடுத்த

லும்பிணக்குகளை விசாரித்துத் தீர்த்துவைத்தலும் (அத்தியாயம் 131), தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களின் சம்பளங்களையும் வேறு வேதனங்களையும் ஒழுங்குபடுத்தலும் சம்பளச் சபைகளைத் தாபித்தலும் (136) வீட்டு வேலையாட்களைப் பதிதல் (137), தொழிற்சங்கங்களைப் பதிதல் (138), தொழிலிலீடுபட்டிருக்கும்போது காயமடையும் வேலையாட்களுக்கு நட்டஈடு கொடுத்தல் (139), பெண்வேலையாட்களுக்குப் பிள்ளைப்பேற்று நலவுதவிகள் வழங்குதல் என்பன தொடர்பில் சட்டங்கள் பல இயற்றப்பட்டுள்ளன.

இவைமட்டுமன்று; அண்மைக்காலத்தில் வேறுபல சட்டங்களும் ஆக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சில வகையைச் சேர்ந்த ஊழியர்க்குப் பகிரங்க விடுமுறைகள் வழங்குதல், குறிப்பிட்ட சில வகையைச் சேர்ந்த ஊழியர்களுக்குச் சகாயநிதி ஒன்றை ஏற்பாடுசெய்தல் பெண்கள், இளைஞர்கள், பிள்ளைகள் என்போர் வேலைக்கமர்த்தப்படுதலை ஒழுங்குபடுத்தல் என்பன தொடர்பிலும் சட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல் தொழிலாளர்களின் உரிமைகளைக் காப்பாற்றவெனத் தொழிலாளர் நீதிமன்றங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. தொழில்தருநர் தன்னிட்டப்படி தொழிலாளியை ஒரு மாதச் சம்பளத்தோடு வேலையிலிருந்து நீக்கமுடியாது. அவ்வாறு நீக்கினுல் அந்தப்பதவியில் மீள அமர்த்தும்படி தொழிலாளி கேட்கமுடியும். பழையநாட்களில் முதலாளி தொழிலாளி உறவு, அந்தஸ்து அடிப்படையாக இருந்து பின்னர் ஒப்பந்த அடிப்படையாக வந்தது. இப்போது ஒப்பந்த அடிப்படையிலிருந்து அந்தஸ்து அடிப்படைக்கு மாறுகின்றது. *(That is, in those days it was from status to contract; now from contract to status.)* முதலாளி தொழிலாளி உறவு அவர்களுக்கிடையிலான நியதி நிபந்தனைக்குள்மட்டும் இன்று அடங்கியிருக்கவில்லை. இந்த நியதிநிபந்தனைகளை இன்றைய தொழிலாளர் சட்டங்கள் *(Labour Laws)* மட்டுப்படுத்துகின்றன.

இச்சட்டங்கள் இயற்றப்பட்டதன் விளைவாக தொழிலாளர் அளப்பரிய நன்மைகள் அடைந்துள்ளனர். முத

லாளி தொழிலாளி என்ற வேறுபாடும் பெருமளவு குறைந்துள்ளது. அபேதவாதக் கொள்கைகளை, அதாவது சோசலிசக் கொள்கைகளை நாட்டிலே வேரூன்றச் செய்வதற்கு மேலே கூறியனவற்றை ஒத்த சட்டங்கள் இன்னும் பல தேவை.

## பன்னாட்டிடைச் சட்டம் எனப்படும் சர்வதேசச் சட்டம்: International Law

நாகரிகம் அடைந்துள்ள நாடுகள் அவற்றின் பரசுபர கொடுக்கல் வாங்கல்களின்போதும் பேச்சுவார்த்தைகளின்போதும் கடைப்பிடிக்க வேண்டிய சட்டம்தான் பன்னாட்டிடைச் சட்டம் என்று பொதுப்படையாகக் கூறலாம்.

மக்கள் மட்டுமல்ல நாடுகள்கூட அவற்றுடைய உறவுமுறைகளை நெறிப்படுத்துவதற்குச் சட்ட திட்டங்களை அவாவிநிற்கின்றன. மக்களைக் கொண்ட சமுதாயம் ஒன்று உள்ளமைபோல, நாடுகளைக் கொண்ட சமுதாயம் ஒன்று உண்டு. நாடுகள் ஒன்றோடொன்று உறவாடியபோழ்து எழுந்த பிரச்சனைகளின் விளைவாக, நாடுகளாகிய சமுதாயம் அநுசரிக்க வேண்டிய சட்டதிட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளன. இவ்வாறு காலந்தோறும் ஆக்கப்பட்ட சட்டதிட்டங்கள் பன்னாட்டிடைச் சட்டம் என்று வழங்கப்பெறும். இந்தச் சட்டத்தை அடிப்படையாக வைத்தே உலகநாடுகள் வெவ்வேறுநாடுகளுடன் உறவாடும் போது தங்கள் தங்கள் நடவடிக்கைகளை நெறிப்படுத்துகின்றன. இப்படியான சட்டம் ஒன்று இல்லாவிட்டால், மக்களுக்குள்ளே பிணக்குகள் தோன்றுவதுபோல, நாடுகளுக்கிடையேயும் பிணக்குகள் தோன்றி உலக அமைதியைப் பங்கப்படுத்திவிடும்.

நாடுகளின் ஆள்புலம்; அவற்றின் நியாயாதிக்கம்; கடற்கொள்ளை; ஆள்புலத்தைக் கொள்ளுதலும் அதனை இழத்தலும்; ஒரு தேசம் வேறொரு தேசத்துக்கு வழியுரிமையாளராகவருதல்; மற்ற நாட்டின் அலுவல்களில் தலையிடு

தல்; தேசியம்; நாட்டிலிருந்து வெளியேற்றலும், புகலிடமளித்தலும்; இராசதந்திர முகவர்களும் அவர்களின் சிறப்புரிமைகளும்; நாட்டிடை உடன்படிக்கைகள்; ஐக்கியநாடுகள் சபை; சர்வதேச நீதிமன்றம்; சர்வதேச அமைப்புக்கள் ஆகியன தொடர்பிலான வசதிகள், ஒழுங்குவிதிகள் என்பனவற்றின் தொகுதியே பன்னாட்டிடைச் சட்டம் எனப்படுவது. இவற்றைப்பற்றி அறிந்திராவிட்டால் நாடுகள் தத்தம் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியாது.

பன்னாட்டிடைச் சட்டங்கள் உலகநாடுகளால் மதிக்கப்படுவதை உறுதிசெய்து கொள்ளும் நோக்கத்துக்காக சர்வதேச நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அது ''ஏக்'' என்ற இடத்தில் உள்ளது. சட்டங்களும் நீதிமன்றமும் இருந்த போதும், நாடுகள் பல சர்வதேசச் சட்டத்தைப் பலதடவைகள் மீறியுள்ளன. சட்டத்தைமீறும் நாடுகள்மீது தண்டனைவிதிக்கக்கூடிய ஏற்பாடு சர்வதேசச் சட்டத்தில் இல்லாததாலேயே சர்வதேசச் சட்டத்தை நாடுகள் சட்டை செய்யாமல் இருக்கின்றன. சட்டத்துக்குத் தண்டனை அம்சம் பிரதானம் என்றும் தண்டனையம்சம் கொண்டிராத பன்னாட்டிடைச் சட்டம் சட்டமேயல்ல என்றும் வாதாடுவாரும் உளர். இது காரணமாகத்தான் சர்வதேசச் சட்டம் என்று ஒன்று இருப்பதைப் பற்றியே பலர் அறியாமல் இருக்கிறார்கள்; சர்வதேசச் சட்டத்துக்குப் பல்லும் இல்லை; நஞ்சுமில்லை. யார் பயப்படுவார்கள்?

# 5

# அரசியலமைப்புச் சட்டம்

## நாட்டின் தலையாய சட்டம்

"நாடென்ப நாடாவளத்த, நாடல்ல நாடவளந் தரு நாடு" என்ற சொற்றொடர் பொருளாதாரத்துக்கு மட்டுமல்லாமல் அரசாட்சிக்கும் அத்துணை பொருந்தும். நாடொன்று தன்னைத் தானே கட்டியாளவல்லதாயிருத்தல் வேண்டும். இறைமையும் (*Sovereignty*) சுதந்திரமும் கொண்டதுதான் நாடு என்பது சொல்லாமே விளங்குமாதலின் அந்த இறைமையின் பண்பால் அது அதன் கீழடங்குகின்ற மக்களை முறைப்படி ஆள்வதற்காகப் பணிகள் பலபுரிய வேண்டியுள்ளது. இந்தப் பணிகளைப் புரிவதற்காகவும் நிறைவேற்றுவதற்காகவும், பல்வேறு நிறுவனங்களும் அமைப்புக்களும் அரசினால் தாபிக்கப்பட்டு நிறுவப்பட வேண்டியுள்ளன. அரசினுடைய இந்த முக்கியமான நிறுவனங்களைத் தாபித்து ஒழுங்குபடுத்தல் தொடர்பிலான அடிப்படைச் சட்ட நெறிமுறை விதிகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியிருக்கும் சிறப்பு அதிகாரம் படைத்த

ஏற்பாட்டுக்கு அரசியலமைப்புச் சட்டம் (*Constitution*) என்பது பெயர். பெரும்பாலான நாடுகளில் அரசியலமைப்புச் சட்டம் எழுத்துருப்பெற்றிருப்பினும் எழுத்துருப்பெறு அரசியலமைப்புச் சட்டங்களும் சில நாடுகளில் உள. இங்கிலாந்து இதற்கு உதாரணம். அரசியல் என்ற சொல் அரசு+இயல் என்று பிரியும்; அரசின் இயல்புபற்றி, அமைப்புப்பற்றி, அதாவது நாட்டின் ஆட்சிபற்றி, சட்டவாக்கம், ஆட்சிநிருவாகம், நீதி நிருவாகம் என்ற முப்பெரும் அரச இயல்பற்றிக் கூறும் ஏற்பாடுகளின் தொகுப்பே அரசியலமைப்புச் சட்டம் என்று கூறுவது ஒருவாறு பொருந்தும். அரசின் இயல்பற்றிக் கூறுவது அரசியலமைப்புச் சட்டம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகின்ற அதேவேளையில், அரசியலமைப்புச் சட்டம் தொழிற்படும் முறையை நாம் முழுவதாக விளங்கிக் கொள்ளவேண்டுமானால், அரசாங்க நிறுவனங்கள், அமைப்புக்கள் என்பன பற்றிப் பேசும் மற்றைய சட்டங்களையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம். அரசின் சட்டவாக்கம் பற்றித் தெரிய வேண்டுமானால் அரசியலமைப்புச் சட்டத்தை மட்டும் தெரிந்து கொண்டால் போதாது. சட்ட வாக்கங்களைச் செய்யும் சட்ட மன்றத்துக்கு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படும் முறைபற்றிப் பேசும் இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆட்சிநிருவாகம் பற்றித் தெரிய வேண்டுமானால் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரங்களையும் நிருவாக ஒழுங்குவிதிகளையும் தெரிந்து கொள்ள வேண்டும். நீதித்துறை, நீதிநிருவாகம் என்பனபற்றித் தெரிய வேண்டுமானால் நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டம், ஊர் நீதி மன்றங்கள் கட்டளைச் சட்டம் முதலியவற்றை அறிந்து கொள்ளல் வேண்டும். ஆனால் இவையெல்லாவற்றைப் பற்றியும் அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்ல முடியாததலால் மிக முக்கியமான அடிப்படையான சட்ட ஏற்பாடுகளே அரசியலமைப்பில் உள்ளன.

மற்றெல்லாச் சட்டங்கள் போல, அரசியலமைப்புச் சட்டமும் ஒரு சட்டந் தான். ஆனால் அதற்கு ஒரு வேறு

பாடு உண்டு. இதுஒரு புனிதமான சட்டம். சில சாதாரண சட்டங்களைத் திருத்த வேண்டுமானால் சாதாரணப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றிவிடலாம். இப்போது நடைமுறையில் இருக்கும் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தை அவ்வாறு எளிதாகத் திருத்த முடியாது. அதன் 29(4) என்னும் பிரிவு நிபந்தனை ஒன்றை விதிக்கின்றது. அதாவது பிரதிநிதிகள் சபையுறுப்பினரின் மொத்த எண்ணிக்கையினரில் மூன்றிலிரண்டு பங்கினர் வாக்களித்தாலன்றி அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த முடியாது. அரசியலமைப்பின் சிறப்புத்தன்மையை இந்த நிபந்தனை ஓரளவுக்கேனும் காத்துவந்தது, காத்து வருகின்றது என்பதை மறுக்கமுடியாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னுமொரு பிரச்சினையையும் கருத்திற் கொள்வது நல்லது. இந்தப் பிரச்சினை மிகவும் முசுப்பாற்றியானது, அதாவது சுவையானது. மேலே நாம் குறிப்பிட்ட இருபத்தொன்பதாம் பிரிவுதான் சட்டம் ஆக்கும் தத்துவத்தை இலங்கைப் பாராளுமன்றத்துக்கு அளித்தது. அந்த 2/3 பெரும்பான்மை என்ற மட்டுப்பாட்டை விதித்ததும் அந்தப் பிரிவுதான். அது அவ்வாறே இருக்கட்டும். பிரச்சினை என்னவென்றால், மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையிருக்குமானால் அந்த 29ஆம் பிரிவையும் பாராளுமன்றம் திருத்த முடியுமா அல்லது அழிக்க முடியுமா? இந்தப் பிரச்சினை பலகாலமாகப் பலரை அலைக்கழித்து வந்திருக்கின்றது. வெவ்வேறு ஆட்கள், வெவ்வேறு கருத்துக்கள் கூறுகிறார்கள். சிலர் 29 ஆம் பிரிவை மாற்றமுடியும், அழிக்க முடியும் என்கிறார்கள். வேறு சில சட்ட விற்பன்னரும் நீதித்துறை நிபுணரும் முடியவே முடியாது என்கிறார்கள். யார் கூறுவதுசரியென்பது புரியவில்லை. முடியவே முடியாது என்பவர்கள் ஒரு காரணம் கூறுகின்றார்கள். அதாவது *The Creature Cannot Destroy The Creator* என்ற ஒரு தத்துவத்தை மதிக்கவேண்டும் என்கிறார்கள். அதாவது சட்டமாக்கற்றத்துவத்தையும் திருத்தும் தத்துவத்தையும் பாராளுமன்றத்துக்கு அளிப்பதே இந்த இருபத்தொன்பதாம் பிரிவு. இந்தப் பிரிவுதான் சட்ட

மாக்கற்றத்துவம் என்ற பிள்ளையின் தாய். இந்தப்பிள்ளை தாயைக் கொல்ல முனைவது முறையல்ல என்கிறார்கள் இவர்கள். ஏதோ ஞாயம் இருப்பதுபோல் தோன்றுகின்றதல்லவா?

புதிய குடியரசு அரசியலமைப்பின் மூலம் வெகுவிரைவில் குடியரசாகவிருக்கும் நாங்கள் பழைய இலங்கை அரசியலமைப்புப் பேரவைக்கட்டளை (379ஆம் அத்தியாயம்) எனப்படும் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தைப்பற்றி ஆராய்வது பயனில்லையென்றாலும், பழைய அரசியலமைப்புச் சட்டத்தில் அடங்கியுள்ள கோட்பாடுகள் பல, புதிய அரசியலமைப்புச் சட்டத்திலும் அடங்கியிருக்கும் என்பதாலும் ஏறத்தாழ இருபத்துமூன்று ஆண்டுகள் வரை அது ஈழத்தாயின் புனிதச் சட்டமாய் இருந்ததென்பதாலும் மேலோட்டமாகவாகுதல் அதைப்பற்றிக் கூறுவது பயன் தரும்.

## அரசியலமைப்பு Constitution

இலங்கை 1948ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றது. இச் சுதந்திரத்தை வழங்கியவர்கள், நம்மை அதற்கு முன்னர் ஆண்ட ஆங்கிலேயர்கள். எனவே, எமக்குச் சுதந்திரம் வழங்கப் பிரித்தானிய மன்னரின் பக்கிங்காம் மாளிகையிலிருந்து (15 - 5 - 1946 இல்) கட்டளைபிறப்பிக்க வேண்டியிருந்தது. இக்கட்டளை 1946ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப்பேரவைக்கட்டளை என்று பெயர் பெறும். எமது 1956ஆம் ஆண்டின் சட்டத்தொகுப்பில் 379ஆம் அத்தியாயமாக இது இடம் பெற்றுள்ளது. காலந்தோறும் தேவைகளுக்கேற்ப மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

இந்த அரசியலமைப்பு வழங்கியுள்ள ஆட்சிமுறை, அரசின் முதல்வராகவும் விடயத்துக்கேற்ப மன்னனின் அல்லது இராணியாரின் பிரதிநிதியாகவும் இருப்பதற்கு மகா தேசாதிபதி ஒருவரையும், சட்டவாக்க அதிகாரம்

கொண்ட பிரதிநிதிகள் சபை, மூதவை (மூதவை இப்போது அழிக்கப்பட்டுவிட்டது.) என்ற இரு சபைகளையும், நிருவாகத்துறை ஒன்றையும், நீதிநிருவாகத்துறை ஒன்றையும் கொண்டமைந்தது. மூதவை உறுப்பினர் தெரிவு செய்யப்படும் விதம், மூதவை உறுப்பினர்களாயும், பிரதிநிதிகள் சபையுறுப்பினராயும் இருப்பதற்கான தகைமைகள், மூதவையும் பிரதிநிதிகள் சபையும் செயற்படும்முறை அவ்வுறுப்பினர்க்குள்ள சிறப்புரிமைகள், சட்டமாக்கற்கான நெறிமுறைகள் என்பனவற்றை மூன்றும்பாகம் விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

பிரதிநிதிகள் சபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்துக்கென, இலங்கை பல தேர்தற்றொகுதிகளாகப் பிரிக்கப்படல் வேண்டும் எனவும், இதற்காகத் தொகுதி நிருணய ஆணைக்குழு ஒன்று காலந்தோறும் நியமிக்கப்படல் வேண்டும் எனவும் நான்காம்பாகம் ஏற்பாடு செய்கின்றது.

நிருவாகப் பொறுப்பு, மகாதேசாதிபதியிடத்தும் அமைச்சரவையிடத்தும் பொறுப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களுள் ஒருவர் முதலமைச்சர் ஆவார்; ஏனைய இருவர் நிதியமைச்சரும் நீதியமைச்சரும் ஆவார். முதலமைச்சர் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்களுக்குப் பொறுப்பாவார். நீதியமைச்சரும் வேறோர் அமைச்சரும் மூதவையுறுப்பினர்களாகவிருத்தல் வேண்டும் என்கிறது சட்டம்.

நீதித்துறை பற்றிய ஏற்பாடுகள் 6ஆம் பாகத்தில் உள்ளன. பிரதம நீதியரசர், கனிட்ட நீதியரசர் ஆகியோரின் நியமனம் பற்றியும், நீதிச்சேவை ஆணைக்குழு பற்றியும், நீதித்துறை அலுவலரை நியமித்தல், இடம் மாற்றல், வேலையிலிருந்து நீக்குதல், ஆகியன பற்றியும் இப்பாகம் கூறுகின்றது.

பகிரங்கசேவை ஆணைக்குழு, நிதி ஏற்பாடுகள் முதலியன பற்றியும் அரசியலமைப்பில் சட்ட ஏற்பாடுகள் உள்ளன.

இன்று நின்றியங்கும் அரசுமுறை, இந்த அரசியலமைப் பின் அடிப்படையிலானது. ஆயினும் இந்தஅரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதன் முன்னர் நிலவிவந்த சில நிறு வனங்கள் மாற்றமின்றிச் செயற்பட்டு வருகின்றன. பொலீசார் பற்றிய ஏற்பாடுகள், நீதி மன்றங்கள் பற்றிய ஏற்பாடுகள் என்பவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

## இலங்கைக் குடியரசுக்கான புதிய அரசியலமைப்பு

பிறர் எவரதும் ஆதிக்கத்துட்படாத முற்றுன சுதந்திரம் வாய்ந்த நாடாக இலங்கையை அமைத்துக் கொள்ளச் சிலகாலமாக வழிவகைகள் ஆலோசிக்கப்பட்டு வந்துள்ளன. சென்ற ஆண்டில் பாராளுமன்றத் தேர்தல் கள் முடிந்து இப்போதுள்ள அரசாங்கம் பதவி ஏற்றதும் இவ்விடயத்துக்குக் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டது. அரசியலமைப்பு விடயங்களுக்கென ஓர் அமைச்சே தோற்றுவிக்கப்பட்டது.

இன்றுள்ள பிரதிநிதிகள் சபை அரசியல் நிர்ணய சபையாகத்தன்னை அமைத்துக் கொண்டு அதுவே புதிய அரசியலமைப்பினை ஆக்கிக்கொள்ள மக்களால் அதிகாரம் அளிக்கப்பட்ட நிறுவனமாக அமைய ஏற்பாடு செய்யப்பட் டது. அதற்கு வேண்டிய ஆலோசனைகளைச் சமர்ப்பிப்ப தற்கு வழிகாட்டு விடயக்குழுவொன்றும் அமைக்கப்பட் டது. இவ்வித ஏற்பாட்டின்படி வழிகாட்டுவிடயக்குழு, அர சியலமைப்பை வகுப்பதற்கு முன்னேடியாகச் சில அடிப் படைத் தீர்மானங்களைவகுத்து அரசியல் நிர்ணயசபைக்குச் சமர்ப்பித்தது. அவ்விதமான 38 அடிப்படைத் தீர்மானங் கள் 10-7-1971 அன்று, அரசியல் நிர்ணயசபையினுல் ஏற் றுக் கொள்ளப்பட்டன. இவற்றின்படியே புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு வருகின்றது. இக்கட்டுரையும் அவற்றைப் பின்பற்றியே எழுதப்படுகின்றது. புதிய அரசி யலமைப்பு வெளிவரும்வரை விரிவான ஏற்பாடு எதனையும் நாம் குறிப்பிடக் கூடிய நிலையிலில்லை. எனவே தெரிந்த அள விலேயே பின்வரும் குறிப்புக்கள் தரப்படுகின்றன.

குடியரசின் தலைவராகச் சனாதிபதி ஒருவர் நியமிக்கப்படுவர். அவரே ஆயுதந்தாங்கிய படையின் தலைவருமாவர். பிரதம அமைச்சராற் பெயர் குறிக்கப்படும் ஒருவர் உரிய பதவிச் சத்தியத்தை செய்து கொண்டதும் சனாதிபதியாவர்.

நாட்டு மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தேசிய சபையாக அமைவர். தேர்தலுக்கான ஏற்பாடுகள் இப்போதிருப்பனவேயாகும். தேசிய சபையே மிக உயர்ந்த ஆற்றல் வாய்ந்த தாபனமாயிருக்கும்.

அமைச்சர் அவை ஒன்று (Council of Ministers) ஆட்சிப் பொறுப்புடையதாயிருக்கும். அவர்களின் தலைவர் பிரதம அமைச்சராவர். தேசிய சபையின் நம்பிக்கையைப் பெருமளவில் பெறக்கூடிய ஒருவரைச் சனாதிபதி பிரதம அமைச்சராக நியமிப்பார். பிரதம அமைச்சரின் ஆலோசனையோடு ஏனைய அமைச்சர்களையும் சனாதிபதி நியமிப்பார்.

நீதிநிருவாகம் பற்றிய ஏற்பாடுகள் 20 முதலாகவுள்ள அடிப்படைத் தீர்மானங்களில் அடங்கியுள்ளன.

இலங்கை எங்கணும், நீதிமன்றங்களினதும் நீதிபரிபாலனஞ் செய்வதற்கு சட்டமார்க்கமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள நியாய சபைகளினதும் மொழி சிங்கள மொழியாக இருக்கும். அதன்படி, அந்த நீதிமன்றங்களிலும், நியாய சபைகளிலும் கையாளப்படும் வழக்குரைகள், நீதிமன்ற நடவடிக்கைகள், தீர்ப்புக்கள், கட்டளைகள் என்பனவும், நீதிமுறைச் செயல்கள் சட்ட நிறைவேற்றம் சார்ந்த செயல்கள் என்பனபற்றிய பதிவேடுகளும் உட்படவுள்ள அவற்றின் பதிவேடுகள் சிங்கள மொழியிலிருக்கும். எனினும், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே முதனிலை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நிறுவனங்களின் விடயத்திலே, தேசிய சபை தனது சட்டத்தினால் அல்லது அதன் பிரகாரம் வேறுவிதமாக ஏற்பாடு செய்யலாம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே ஏதேனும். நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் முன்னருள்ள கட்சிக்

சாரர்களும், விண்ணப்பக்காரர்களும் தமது வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணைகள், மனுக்கள் என்பனவற்றை தமிழில் சமர்ப்பிக்கலாம். அத்துடன், நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழில் பங்குபற்றலாம். மேற்படி எல்லாச் சந்தர்ப்பங்களிலும், அத்தகைய நீதிமன்றத்தின் அல்லது நியாய சபையின் பதிவேடுகளின் பொருட்டு சிங்கள மொழிபெயர்ப்பொன்று தயாரிக்கப்பட ஏற்பாடு செய்யப்படும்.

நீதிமன்றம் ஒன்றின் அல்லது நியாயசபை ஒன்றின் நடவடிக்கைகளையறிந்து அவற்றில் பங்குபற்றுவதற்கு அங்கு உபயோகப்படுத்தப்படும் மொழியுடன் பரிச்சயமில்லாதவரான வழக்கொன்றின் கட்சிக்காரர், விண்ணப்பக்காரர், நீதிபதி, யூரிமார் அல்லது நியாயசபை உறுப்பினர் ஒவ்வொருவரும், நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் நடவடிக்கைகளை அறிந்து அவற்றில் பங்கு பற்றுவதற்கு வசதி செய்வதற்காக அரசினால் வழங்கப்படும் பேச்சு மொழிபெயர்ப்பையும், எழுத்து மொழிபெயர்ப்பையும் பெறும் உரிமையுடையவராவார். வழக்குரைகள், விண்ணப்பங்கள், பிரேரணைகள் அல்லது மனுக்கள் என்பவற்றை நீதிமன்றத்தில் அல்லது நியாய சபையில் உபயோகப்படுத்தப்படும் மொழியிலே உத்தியோக பூர்வமாக மொழிபெயர்த்துப் பெறும் உரிமையும், சிங்களத்திலே அல்லது தமிழிலே அத்தகைய பதிவின் எந்தவொரு பாகத்தையும், சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள முறைக்கு ஏற்பப், பெறும் உரிமையும், அத்தகைய உரிமையிலடங்கும்.

சட்டவாக்கங்களைச் சிங்கள மொழியில் வெளியிடுவதற்கும் தமிழ்மொழியில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கும் பொறுப்பளிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும்.

மிக முக்கியமான சட்டவாக்கங்கள் (இவை அட்டவணைப் படுத்தப்பட வேண்டியன) சிங்கள மொழியிலும், தமிழ் மொழிபெயர்ப்பிலும் வெளியிடப்படும் வரை, அல்லது குறிப்பிடப்படவேண்டிய ஒரு காலம்வரை, இவற்

றுள் எக்காலம் குறைந்ததோ அதுவரை, நீதிமன்ற மொழிகள் தொடர்பான அரசியலமைப்பின் ஏற்பாடுகளை செயற்படுத்தலை இலகுவாக்குவதற்கு உகந்தது என இயைபான அமைச்சர் கருதும் ஏதேனும் ஒழுங்கு விதிக்கு அமைய நீதிமன்ற மொழி சார்பாக, இப்போதுள்ள ஒழுங்குகள் தொடர்ந்து இருந்து வரும்.

சட்டமியற்றும் ஏற்பாடுகளுள், சட்டத்துக்கான சட்ட மூலங்களை ஆராய்வதற்கான ஏற்பாடுகளும், அந் நோக்கத்துக்கான அரசியலமைப்பு நீதிமன்றத்தின் அமைப்புப் பற்றிய ஏற்பாடுகளும் 27 முதல் 30 வரையான தீர்மானங்களில் உள்ளன.

அரச சேவைகளுக்கு ஆட்களை நியமனம் செய்தல் முதலிய விடயங்களுக்கான ஏற்பாடுகள் 31ஆம் தீர்மானத்தில் அடங்கியுள்ளன.

அடிப்படைச் சுதந்திரங்கள், உரிமைகள் என்பன தொடர்பிலும் அரச கொள்கைக் கோட்பாடுகள் பற்றியும் சமயங்களுக்கான பாதுகாப்புப்பற்றியும் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அரசியல் நிர்ணய சபை (அதாவது இப்போதைய பிரதிநிதிகள் சபை) முதல் தேசியசபையாகக் கருதப்படும் அரசியலமைப்பு ஆரம்பமாவதற்கு நேர் முன்னர் பிரதம அமைச்சர் பதவியை வகிப்பவர் அரசியலமைப்பின் கீழ் முதலாவது பிரதம அமைச்சராக இருப்பார்.

## பாராளுமன்றத் தேர்தல்கள்

1946ஆம் 1947ம் ஆண்டுகளின் இலங்கை (சுதந்திரமும் அரசியலமைப்பும்) அரசவைப் பேரவைக் கட்டளைகள் மூலம் இலங்கை சுதந்திரம் அடைந்து பாராளுமன்ற அரசியல் முறையைப் பெற்றது. முடியின் (இராணியாரின் அல்லது இராசாவின்) பிரதிநிதியாக விளங்குபவர் மகாதேசாதிபதி அவர்கள். பாராளுமன்றம், மூதவை, பிரதி

கள் சபை என்ற இரண்டு சபைகளைக் கொண்டது. மூதவை உறுப்பினர் தொகை முப்பது. இவர்களுள் பதினைந்து பேர், பிரதிநிதிகள் சபையினால் தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள். மற்றைய பதினைந்து பேர்களும் மகா தேசாதிபதியால் நியமிக்கப்பட வேண்டிவர்கள். மூதவை உறுப்பினரின் பதவிக்காலம் சாதாரணமாக ஆறு ஆண்டுகளாகும். எனினும் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மூன்றில் ஒரு பங்கினர் பதவியிலிருந்து நீங்குதல் வேண்டும். தொடக்கத்தில் உறுப்பினராக நியமிக்கப்பட்ட முப்பது பேர்களுள் வகைக்கு ஐவர் ஐவராக, யார் யார் இரண்டாண்டு முடிவிலும் அடுத்த இரண்டாண்டு முடிவிலும் பதவியிலிருந்துவிலக வேண்டும் என்பது மூதவையின் முதற் கூட்டத்திலே திருவுளச்சீட்டு மூலம் தீர்மானிக்கப்பட்டது. அன்றுமுதல் செப்ரெம்பர் 1971 வரை மூதவை, பிரதிநிதிகள் சபைபோல் கலைக்கப்படாது, தொடர்ந்து பணியாற்றி வந்தது.

பிரதிநிதிகள் சபைக்கான உறுப்பினர்கள் பொதுத் தேர்தல்கள் மூலம் தெரியப்படுவர். தேர்தல் தொடர்பான விரிவான ஏற்பாடுகளை வகுத்துத் தந்துள்ளது இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் அரசப் பேரவைக் கட்டளை. இதன் விரிவினைப் பிறிதோரிடத்தில் தந்துள்ளோம்.

இலங்கையின் முதற்பாராளுமன்றத்துக்காக பிரதிநிதிகள் சபை உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் 1947 ஆம் ஆண்டில் நடைபெற்றன. அப்பொழுதிருந்த உறுப்பினர் தொகை 101; தெரிவு செய்யப்பட்டோர் 95, நியமனம் பெற்றோர் 6. தேர்தல் தொகுதிகள் 89. தேருநர் குறிப்பிட்ட தகுதியுடையோராதல் வேண்டுமென்பதோடு 21 வயதுக்கு உட்படாதோராயுமிருத்தல் வேண்டும். தேர்தல்கள் ஒரே நாளில் அல்லாது வெவ்வேறு நாட்களில் நடைபெற்றன. முதன் முதலில் பாராளுமன்றம் 25–11–47 இல் கூடியது. திரு. டி எஸ் சேனநாயகா முதற் பிரதமரானார். சேர். ஹென்றி மொன்க்மேசன் மூர் அவர்கள் நாட்டின் மகா

தேசாதிபதியானுர்கள் முதலமைச்சராக விருக்கும் காலத்திலேயே திரு. டி. எஸ். செனுநாயகா இறந்ததனுல், அப்போது அவரின் அமைச்சரவையிலிருந்த திரு. டட்லி செனுநாயகா அதன்பின் பிரதமரானுர். இதற்கு உறுதுணையாகவிருந்தவர் அப்போது மகா தேசாதிபதியாகவிருந்த சோல்பரிப்பிரபு அவர்கள்.

அடுத்த பாரளுமன்றப் பொதுத்தேர்தல் 1952 ஆம் ஆண்டில் நடைபெற்றது. தேர்தல்களின் முடிவில் 10-6-52 இல் பாராளுமன்றம் கூடியது. திரு. டட்லி செனுநாயகாவே முதலமைச்சராகவிருந்தார். எனினும் அடுத்த ஆண்டில் அதாவது 1953 இல் சேர் ஜோன் கொத்தலாவலை முதலமைச்சர் பதவிக்கு வந்தார்.

சாதாரணமாகப் பாரளுமன்றத்தின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகவிருப்பினும், கலைக்கப்பட்டதால் அதற்கடுத்த தேர்தல் 1956 ஆம் ஆண்டில் நடைபெறலாயிற்று . அக்காலத்தில் சேர் ஒலிவர் குணதிலகா அவர்கள் நாட்டின் மகா தேசாதிபதியாக விளங்கினுர். ஏப்பிரல் 4 முதல் 11ஆம் தேதிவரை தேர்தல்கள் நிகழ்ந்தன. 19-4-56 இல் கூடிய பாராளுமன்றத்தில் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா முதலமைச்சராகப் பதவியேற்று 26–9–59 இல் அவர் அகால மரணம் அடையும் வரை பிரதமராகப் பணியாற்றினுர். அவர் இறந்ததைத் தொடர்ந்து திரு. டபிள்யூ. தகநாயகா 20-3-60 வரை இடைக்காலப் பிரதமராக விருந்தார்.

அடுத்து 1960 இல் நடந்த தேர்தல் பல வழிகளில் முக்கியமானது. தேர்தற்றெகுதிகள் 89 இலிருந்து 145 ஆக அதிகரிக்கப்பட்டன. அக்குரணை, மட்டக்களப்பு, மூதூர், கொழும்பு தெற்கு ஆகிய நான்கும் இரு உறுப்பினர் தொகுதிகளாகவும், கொழும்பு மத்தி மூன்று உறுப்பினர் தொகுதியாகவும் வகுக்கப்பட்டமையின் 145 தோகுதிகளுக்குமான உறுப்பினர் தொகை 151 ஆயிற்று. நியமன உறுப்பினர் ஆறுபேரோடும் பிரதிநிதிகள் சபை உறுப்பினரின் மொத்தத் தொகை 157 ஆயிற்று

தேருநர்க்கான வயதெல்லை 21 இலிருந்து 18ஆகக் குறைக்கப்பட்டது. பிரதமராகவிருந்த திரு. தகநாயகா தேர்தலில் தோல்வியுறவே, அவர் பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டி ஏற்பட்டது. 20–3–60 இல் திரு. டட்லி சேனநாயகா பிரதமரானார். அவருக்கு போதிய பாராளுமன்றப் பலமில்லாதிருந்தமையினால், விரைவில் பாராளுமன்றத்தைக் கலைக்கநேரிட்டது. அதன் காரணமாக அவ்வாண்டிலேயே மற்றுமொரு தேர்தல் நடைபெறலாயிற்று.

1960 யூலை 20 ஆந் தேதி நடைபெற்ற தேர்தலில் கூடிய பலம் பெற்ற திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா பிரதமரானார். ஏறத்தாழ ஐந்தாண்டுகளின் பின்னர் அடுத்த தேர்தல் நடைபெறவே, 22–3–65இல் நடந்த தேர்தலில் திரு. டட்லி சேனநாயகா பிரதமர் பதவிக்கு வந்தார்.

இறுதியாக நடந்ததேர்தல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவைத் திரும்பவும் பிரதமர் பதவியிலுய்த்தது. 27–5–70 இலிருந்து அவரே ஆட்சிப் பொறுப்பைத் தாங்கி வருகிறார்.

நாட்டின் ஆட்சி ஒரு கட்சியிலிருந்து மறு கட்சிக்கு மாறி மாறி வந்துள்ளதனால் பொருளாதாரச் சீர் குலைவும் வேலை வாய்ப்பின்மையும் மக்களிடத்து அதிருப்தியும் அதிகரித்து வந்துள்ளன. இவை இன்றைய அரசியலில் இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளன. தகுந்த தீர்வுகாண்பதற்கு ஆழ்ந்த அரசியல் ஞானமும், செயற்றிற வன்மையும் தீர்க்கதரிசனமும் பொதுமக்கள் ஒத்துழைப்பும் இன்றியமையாதன. மக்கள் ஆர்வம் பெற ஆவன செய்தல் வேண்டும்.

தொகுதி நிருணயம்பற்றி அரசியலமைப்பின் 40 முதல் 44 வரையிலான பிரிவுகள் ஏற்பாடு செய்துள்ளன. முதலில் இருந்த தொகுதிகள் 1959ஆம் ஆண்டில் மீள ஆராயப்பட்டன. ஏறக்குறைய 75000 பேருக்கு ஓர் உறுப்பினராகக் கணிக்கப்பட்டது. அத்துடன் இடப்பரப்பின் விசுத்

திரணத்தைப் பொறுத்தும் மேலதிக பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. அவ்விதம் திரும்ப வகுக்கப்பட முன்னரும் பின்னரும் உள்ள விவரங்கள் கீழ் வருமாறு:—

| | 1959 இன் முன்னர் | | 1959 இன் பின்னர் | |
|---|---|---|---|---|
| | சனத் தொகைப்படி | இடப்பரப் பின்படி | சனத் தொகைப்படி | இடப்பரப் பின்படி |
| மேல்மாகாணம் | 19 | 1 | 34 | 1 |
| மத்தியமாகாணம் | 13 | 2 | 21 | 2 |
| தென் மாகாணம் | 10 | 2 | 17 | 2 |
| வடமாகாணம் | 05 | 4 | 09 | 4 |
| கீழ்மாகாணம் | 03 | 4 | 07 | 4 |
| வடமேல் மாகாணம் | 07 | 3 | 13 | 3 |
| வடமத்திய மாகாணம் | 01 | 4 | 04 | 4 |
| ஊவா மாகாணம் | 04 | 3 | 07 | 3 |
| சப்பிரகமுவ மாகாணம் | 08 | 2 | 14 | 2 |
| | 70 | 25 | 126 | 25 |
| மொத்தம் | 95 | | 151 | |

## பாராளுமன்றத் தேர்தல்கள் பற்றிய சட்டம்

எமது அரசியல்முறை இலங்கை (அரசியலமைப்பு) அரசப்பேரவைக் கட்டளையால் எமக்கு வழங்கப்பட்டது எனப் பிறிதோரிடத்தில் குறிப்பிட்டுள்ளோம். அந்த அரசியலமைப்பிற்கிணங்க, சட்டமாக்கற் பொறுப்பும் நிருவாகப் பொறுப்பும், பாராளுமன்றத்துக்குரியன. பாராளுமன்றம் என்னும் பொழுது மூதவை$ பிரதிநிதிகள் சபை என்பன இரண்டும் அடங்கும். மூதவைக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் முறை மேற்கூறிய அரசப் பேரவைக்கட்டளையிலேயே அடங்கியுள்ளது. எனினும், பிரதிநிதிகள் சபைக்கு உறுப்பினர்கள் தெரியப்படல் வேண்டும் எனவும், தெரிவானது, தொகுதிகளின் அடிப்படையிலாதல் வேண்டும் எனவும், உறுப்பினர்க்கிருக்க வேண்டியதகைமைகள் யாவை எனவும், அந்த அரசப் பேர

$ மூதவை இப்போது அழிக்கப்பட்டு விட்டது.

வைக் கட்டளை குறிப்பிட்டிருந்தபோதும், உறுப்பினரைத் தெரிவு செய்யும் விதம்பற்றி விரிவாக அங்கு குறிப்பிடப் படவில்லை. எனவே அதற்கென வேருக ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. அதுவும் அரசப் பேரவைக் கட்டளை ஒன்றன் மூலமே செய்யப்பட்டது. இலங்கை (பாராளு மன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை என்பது அதன் பெயர். இது, காலப் போக்கில் சில மாற்றங்களும் அடைந்துளது.

இந்த அரசப் பேரவைக் கட்டளையின் ஏற்பாடுகளைச் செயற்படுத்த தேர்தல்கள் திணைக்களம்என்றுஒன்றுஉண்டு. அது தேர்தல்கள் ஆணையாளரின் கீழ் இயங்குகின்றது. மகா தேசாதிபதியவர்களால் நியமிக்கப்படும் இந்த ஆணையா ளர் எந்த அமைச்சருக்கும் கீழ்ப்பட்டவராகாமல் பாராளு மன்றத்துக்கே நேரடியாகக் கீழ்ப்பட்டவராவர்.

பிரதிநிதிகளைத் தெரிவு செய்பவர் தேருநர் (*Electors*) ஆதலின், அத்தேருநரின் தகைமைகள் பற்றியும், தேருநர் வாக்களிப்பதற்கு வாய்ப்பாகத் தேர்தற்றெகுதிகள், வாக்கெடுப்பு மாவட்டங்கள், வாக்கெடுப்பு நிலையங்கள் என்பவற்றை வகுத்தல் பற்றியும், அவற்றுக் கேற்பத் தேருநர்களைப் பதிவு செய்தல், பதிவைப் புதுக்குதல் திருத் துதல் என்பன பற்றியும் உள்ள முதனிலை நடவடிக்கை கள் பற்றி 4ஆம் பிரிவிலிருந்து 23ஆம் பிரிவு வரையுள்ள பிரிவுகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேர்தற் றெகுதிகளாக வகுத்தல், தெரியப்படவுள்ள உறுப்பினரின் தொகையைப் பொறுத்தது. இத்தொகை அரசிய லமைப்பு அரசப் பேரவைக் கட்டளையிற் குறிப்பிட்டவாறு அல்லது தொகுதி நிர்ணயம் பற்றிய தீர்ப்பிற்கிணங்க அமையும்.

இலங்கையின் நிருவாக மாவட்டங்களே தேர்தல் மாவட்டங்களாகவும் உள்ளன. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் கீழும் பல தேர்தற்றெகுதிகள் அடங்க லாம். எனவே ஒவ்வொரு தேர்தல் மாவட்டம் தொடர்பி லும் ஒருவர் அல்லது அதிலுமதிகமானேர் தேர்ந்தனுப்

பும் அலுவலராக (*Returning Officers*) நியமிக்கப்படலாம். மகா தேசாதிபதியே, தேர்தலில் போட்டியிட முன்வரும் வேட்பாளர்களின் நியமனப் பத்திரங்கள் பெறற்குரிய நாளையும், தேர்தல் நடைபெற வேண்டிய நாளையும் குறிப்பிடுவார். நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பிப்பதற்குமுன்னர் கட்டுப்பணம் செலுத்த வேண்டும். இத்தகைய கட்டுப்பணம்தொடர்பிலும், சின்னங்கள் பெறுதல் தொடர்பிலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கு சில சலுகைகள் உள.

நியமன நாள் தேர்தலின் தொடக்கத்தைக் குறிக்கும் முக்கிய நாள். அன்று, குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் உரியமுறைப்படி நியமனப்பத்திரங்கள் அதற்கென அதிகாரம் பெற்ற அலுவலரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏதேனும் தக்க காரணம் கொண்டு ஏதேனும் நியமனப்பத்திரம் ஏற்கப்படலாகாது என எதிர்ப்புத் தெரிவிக்கப்படலாம். எதிர்ப்பு ஆராயப்பட்டு அந்த எதிர்ப்பு ஆதாரமற்றது எனக் காணப்பட்டால் நியமனப்பத்திரம் ஏற்கப்படும்.

இவ்விதமாக ஏற்கப்பட்ட நியமனப்பத்திரங்களின் அடிப்படையில் ஒரு தேர்தற்றொகுதிக்கு வேண்டிய உறுப்பினரின் எண்ணிக்கையினரே நியமனம் பெற்றிருப்பின் அவர் உறுப்பினராகத் தெரியப்பட்டவராவர். (பிரிவு 24–34). கூடிய எண்ணிக்கையினர் நியமனம் பெறின் தேர்தல் போட்டியடிப்படையில் நடைபெறும் (பிரிவு 35).

வாக்கெடுப்புத் தானங்கள் தோறும் மக்கள் நேரிற் சென்று வாக்களிப்பர். அவ்விதம் நேரிற் சென்று வாக்களிக்க வசதி ஏற்படாது என்று எதிர்பார்க்கக்கூடிய அரசாங்க அலுவலர் முதலியவர்களுக்குத் தபாலில் வாக்களிக்கும் வாய்ப்புண்டு. அவர்கள் தேர்தல் நாளுக்கு முன்னரேயே வாக்களித்துவிடுவர். முன்னர், 21 வயதுக்கு மேற்பட்ட பிரசை மட்டுமே வாக்களிக்கலாம். இப்போது இவ் வயதெல்லை 18 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. தேர்தல் தொகுதி ஒன்றுக்குரிய வாக்குப்பெட்டிகள் யாவும் வாக்கெடுப்பின் பின்னர் அதற்குரிய இடத்திற்குக் கொண்டு

வரப்பட்டு வேட்பாளர் அல்லது அவர்களின் முகவர்கள் முன்னிலேயில் எண்ணப்படும். கூடுதல் வாக்குப் பெற்றவரே உறுப்பினராகத் தெரியப்பட்டவராவர். வாக்கு எண்ணு தலேப்பற்றிச் சந்தேகிப்பவர் அதனே மீளவும் எண்ணும்படி கேட்கலாம். இவ்விதமாகப்பல தேர்தற்ருெகுதிகளுக்குத் தெரியப்பட்ட உறுப்பினரே பிரதிநிதிகள் சபை உறுப்பின ராகப் பதவிச் சத்தியம் செய்து பதவி ஏற்பர் (பிரிவு 36–51)

தேர்தல் தொடர்பில் நடைபெறக் கூடிய தவறுகள் பற்றியும் இவ் அரசப் பேரவைக் கட்டளே ஏற்பாடு செய் துள்ளது. சில தவறுகள் தேர்தலேயே செல்லுபடியற்ற தாக்க வல்லன (பி. 76–77). தவற்றின் காரணமாக ஒரு வர் தண்டமிறுப்பது மட்டுமல்லாமல் சில ஆண்டுகளுக்கு தேருநராகவோ, பிரதிநிதிகள் சபை உறுப்பினராகவோ, மூதவையுறுப்பினராகவோ இருக்கத் தகுதியிழந்தவருமா வார் (பி. 52). வேறும் குறிப்பான சில தவறுகள் ஆள் மாருட்டம் செய்தல் (பி. 54) உண்டாடல் (பி.55) தகாத செல்வாக்கு (பி. 56) கைலஞ்சம் (பி. 57) என்பனவாகும். இவற்றுக்கான தண்டனே: ஆள்மாருட்டத்துக்குப் பன்னி ரண்டு மாதத்துக்கு மேற்படும் கடூழியமறியலும், ஏனேயவற் றுக்கு ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணம் அல்லது ஆறுமாதத்துக்கு மேற்படாத இருவகையில் ஒரு வகை மறியல் அல்லது இவை இரண்டும் ஆகும். அத்துடன் 7 ஆண்டுகளுக்கு தகைமையிழப்பும் தண்டனேயாக விதிக் கப்படும்.

தேர்தற்கான முகவர்களே நியமனஞ் செய்தல், உறப் படக்கூடிய செலவுகள் என்பனபற்றிய ஏற்பாடுகள் அடுத்துவரும் பிரிவுகளில் உள்ளன.

பலர் போட்டியிட்டாலும் தெரிவு செய்யப்படுவது ஒருவரேயாவர். தோற்றவர்கள் வாளாவிருந்து விடுவ தில்லே. தேர்தல் செல்லுபடியாகாது எனத் தெரிவிக்கு மாறு உயர்நீதிமன்றத்துக்கு மனுச் செய்யலாம். இவ்விதம் மனுச் செய்வதற்கும் மனு மீதான விளக்கத்துக்குமான ஏற்பாடுகள் 78 முதல் 82 வரையிலான பிரிவுகளில்

அடங்கியுள்ளன. தேர்தல் நீதிமன்றம் மனுவை விளங்கி அதன் மீது தீர்ப்பளிக்கும்.

அவ்விதம் தேர்தல் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம். (பிரிவு 82 அ).

தேர்தல் நீதிமன்றத்திடம் கேட்கக்கூடிய நிவாரணங்கள் பின்வருமாறு:

(அ) தேர்தல் வெற்றுனது என வெளிப்படுத்தல்;

(ஆ) தெரிவு செய்யப்பட்ட ஆள் தெரிந்தனுப்பப்பட்டது முறையற்றது என வெளிப்படுத்தல்;

(இ) வேறொரு வேட்பாளர் முறைப்படி தெரிவுசெய்யப் பட்டார் என்றும் அவர் தெரிந்தனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்றும் வெளிப்படுத்தல்;

(ஈ) வெற்றிபெருத வேட்பாளர் ஒருவர் சட்டமுறையான கூடுதல் வாக்குகளைத் தாமே பெற்றுர் என அவ் வாசகத்தைக் கோரினுல், வாக்குச் சீட்டுக்களை மீளவாராய்தல் என்பன.

## அவசரகாலமும் அரசாங்க பலமும்

**பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக் கும் கொல்குறும்பும் இல்லது நாடு.** அப்படியான நாட்டிலே அமைதி இருக்கும்; அரசாட்சி இருக்கும்; ஆனந்தம் இருக்கும். ஆனுல், பாழ் செய்கின்ற உட்பகையும், கொலை விளைவிக்கும் குறும்புச் செயல்களும் மலிந்து காணப்பட்டால், அங்கே ஆளுவோரை அலைக்கழிப்பதற்கென்று குழுக்கள் பல கூடி விட்டன என்பது தான் அர்த்தம். இந்தக் கொடிய குழுக்களை அழித்து, அதன் மூலம் குறும்புச் செயல்களை நிர்மூலமாக்கி, நாட்டிலே நிலவும் உட்பகையை உரித்தெடுத்தல் அரசனின் கடன்; அரசாங்கத்தின் கடன். இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டிய

கட்டுப்பாட்டை உடைய அரசாங்கம், செயலில் இறங்கும் போது "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ் களை கட்டதனோடு நேர்" என்ற குறளின்படி ஒழுகலாம் என்று நீதிசாத்திரம் கூறுகின்றது.

நீதிசாத்திரம் கூறுகின்றதான இந்த உரிமையை இக்கால அரசுகள், நாட்டின் சட்டங்களாக இயற்றியுள்ளன. இலங்கையில் அப்படியான ஒரு சட்டம் உள்ளது. பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் என்பது அதன் பெயர் (*Public Security Ordinance*).

ஆங்கிலேயர் எம்மை ஆண்டபோது இப்படியான பிரத்தியேக சட்டங்களை வைத்திருந்தார்களோ தெரியவில்லை. ஆனால், கிளர்ந்தெழுந்த இலங்கையரை அடக்குவதற்கு அவர்கள் வெவ்வேறு வழிகளைக் கையாண்டு கிளர்ச்சிகளை அடக்கினார்கள் என்று வரலாறு கூறுகின்றது; தண்டனைச்சட்டக் கோவையிலுள்ள 114ஆம் பிரிவும் அவர்களுக்குப் பயன்பட்டது. எது எப்படியிருந்தபோதும், பொதுமக்கள் பாதுகாப்புக்கட்டளைச்சட்டம் என்றசட்டம் 1947ஆம் ஆண்டிலே இயற்றப்பட்டது. இவ்வாறு இயற்றப்பட்ட சட்டம் பின்னர், 1949ஆம், 1953ஆம், 1959ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டது. இன்றுள்ள இலங்கைச் சட்டவாக்கத் தொகுப்பில் இது 40ஆம் அத்தியாயமாக அமைந்துள்ளது.

பொது மக்களைப் பாதுகாத்தல், பொது அமைதியைப் பாதுகாத்தல் என்பனவற்றுக்காக அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கும், சமுதாயத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவு முதலியவற்றையும் ஏனைய சேவைகளையும் பேணிவருவதற்கு ஏற்பாடு செய்வதற்குமாகவே இந்தக் கட்டளைச்சட்டம் இயற்றப்பட்டது. இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் இந்தச் சட்டம் இயற்றப்பட்டதால் இதனைக் கட்டளைச்சட்டம் (*Ordinance*) என்கிறோம்; சுதந்திரமடைந்ததன் பிறகு இலங்கைப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்கள் அதிகாரச்சட்டங்கள் (*Acts*) எனப்படுகின்றன.

இந்தச் சட்டமானது, அவசரகால ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்காகவும் வேறும் சில நோக்கங்களுக்காகவும் இயற்றப்பட்டது என்று மேலே குறிப்பிட்டோம். அவசர கால ஒழுங்குவிதிகள் என்றால் அவசரகாலத்தை முன்னிட்டு ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள் என்று பொருளாகும். அவசர காலம் என்றால் நெருக்கடியான, அல்லது இக்கட்டான நிலை என்று கருத்து; அதாவது பொதுமக்களின் பாதுகாப்புக்கு அல்லது பொது அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டால் அத்தகைய நிலையை அவசரகால நிலைமை என்று கூறலாம். அவசரகால நிலைமை ஒன்று நாட்டிலே நிலவுவதாக மகா தேசாதிபதி அபிப்பிராயப்பட்டால் அவர் அந்த நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கு அவசியமாகக் கூடிய ஒழுங்குவிதிகள் எல்லாவற்றையும், முதல் அமைச்சரின் விதப்புரையின்மீது ஆக்கலாம் என்று பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் ஐந்தாம் பிரிவு கூறுகின்றது. மகாதேசாதிபதி கூட, முதல் அமைச்சர் விதப்புரைத்ததற்கிணங்கவே இந்த அவசர கால ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் என்பதை நாம் மறந்து விடலாகாது.

மகாதேசாதிபதி ஆக்கக்கூடிய இந்த ஒழுங்குவிதிகள் மிகவும் பரந்தவை; விரிவானவை. ஆட்கள் எவரையும் பிடித்துத் தடுத்து வைத்தல், காணிதவிர்ந்த வேறெவ்வாதனத்தையும் கைப்பற்றுதல், எந்த வளவினுள்ளும் நுழைதல், தவறுளர்களைக் கைப்பற்றி அவர்களை விசாரித்துத் தண்டனை அளித்தல் முதலிய நோக்கங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கும் தத்துவம் மகாதேசாதிபதிக்கு உண்டு.

நடைமுறையில் உள்ள எந்தச் சட்டத்தின்மீதும் மேலோங்கிநிற்கும் ஆற்றல் இந்த அவசரகால ஒழுங்குவிதிகளுக்குண்டு; அவசரகால ஒழுங்குவிதிகள் நடைமுறையிலிருக்கின்றவரைக்கும், அவசரகால ஒழுங்குவிதிகளுக்கு முரணுயுள்ள சட்டதிட்டம் எதுவும் பயனெதுவும் அற்றதாதல் வேண்டும்.

இது மட்டுமா? அவசரகால ஒழுங்குவிதிகள், அல்லது அவற்றின் கீழாக்கப்பட்ட கட்டளை, விதி, பணிப்பு எதுவும் சரியானதா பிழையானதா என்ற பிரச்சினை எதையும் எவரும் கேட்க முடியாது; அதனை நீதிமன்றத்தில் பிரச்சனைக் குட்படுத்தலுமாகாது.

அவசரகால ஒழுங்குவிதியைப் பின்பற்றி, அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, விதி அல்லது பணிப்பைப்பின்பற்றி அரசாங்கத்தால் அல்லது வேறெவரேனும் ஆளால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல் அல்லது அலுவல் எதற்குமாக அரசாங்கத்துக்கெதிராக அல்லது ஆளுக்கெதிராக வழக்கோ, குற்றவழக்கோ, வேறு சட்ட நடவடிக்கையோ தொடுக்கவோ எடுக்கவோ முடியாது.

ஊரடங்குச் சட்டம் என்றால் இப்போது எல்லோர்க்கும் தெரியும். ஆங்கிலத்தில் இதை "கேர்பியூ" (*Curfew*) என்பார்கள். ஊரடங்குச் சட்டம் என்று ஒரு தனிச்சட்டம் இல்லை. கசற்றில் வெளியிடப்பட வேண்டிய ஒழுங்கு விதியில் குறிப்பிட்ட நேரம் தொடங்கிக் குறிப்பிட்டநேரம் வரை ஆளெவரும், பகிரங்கத் தெருவிலோ, பகிரங்க இடத்திலோ, புகைவண்டி நிலையத்திலோ, பூங்காவிலோ, பொழுதுபோக்கிடத்திலோ, பொதுத்திடலிலோ, கடற்கரையிலோ நிற்கக்கூடாது என்று விதிக்கும் ஒழுங்கு விதியைத்தான் பாமரமக்கள், ஏன் படித்தவர்கள் கூட, ஊரடங்குச் சட்டம் என்கிறார்கள்.

1959ஆம் ஆண்டுக்கு முன்பெல்லாம், இந்த ஒழுங்கு விதி, (ஊரடக்க ஒழுங்குவிதி) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் ஐந்தாம் பிரிவின் கீழ் முதலமைச்சரின் விதப்புரைக்கிணங்க, மகாதேசாதிபதியால் மட்டுமே ஆக்கப்படக் கூடியதாயிருந்தது. 1959ஆம் ஆண்டின் எட்டாம் இலக்கச் சட்டத்தால்பொதுமக்கள்பாதுகாப்புக் கட்டளைச் சட்டம் திருத்தப்பட்டுப் புதியவொரு பாகம் (III ஆம் பாகம்) புகுத்தப்பட்டபோது, இந்த நிலைமை மாறியது. மூன்றும்பாகத்தின்படி, முதலமைச்சரானவர்

மகாதேசாதிபதியைக் கலந்தாலோசிக்காமலே, ஊரடக்க ஒழுங்குவிதியைப் பிறப்பிக்கலாம். அதற்கான தத்துவத்தை 16ஆம் பிரிவு அவருக்கு வழங்கியுள்ளது. இங்கே ஒன்றை நாம் உற்றுநோக்கல் வேண்டும். ஐந்தாம் பிரிவின் கீழ் ஊரடக்க ஒழுங்குவிதி பிறப்பிக்கப்பட வேண்டுமானால் ஒரு சில நிப்ந்தனைகள் இருக்கவேண்டும்; முதலாவதாக, அவசரகால நிலைமையானது கசற்றின் மூலம் பிரகடனப் படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்; இரண்டாவதாக முதலமைச்சர் அவ்வாறு செய்யும்படி விதப்புரைத்திருத்தல் வேண்டும். இத்தகைய நிபந்தனை எதுவும், 16ஆம் பிரிவுக்கமையத் தொழிற்படும் முதலமைச்சருக்குத் தேவை இல்லை.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் மூன்றும்பாகம் முதலமைச்சருக்கு விரிவான அதிகாரங்களை வழங்கியுள்ளது. அவசரகால நிலைமை நிலவுகின்றதென்று மகாதேசாதிபதி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவர் பிரகடனம் ஒன்றைக் கசற்றில் வெளியிட்டு, இரண்டாம் பாகத்தின் ஏற்பாடுகள், அன்றிலிருந்தே அல்லது அப்பிரகடனத்திற் குறிப்பிட்டிருக்கக் கூடிய நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படுத்தலாம். இரண்டாம் பிரிவின் ஓராமுட் பிரிவின் கீழான பிரகடனத்தால் நடைமுறைக்கிடப்பட்ட இரண்டாம் பாகத்தின் ஏற்பாடுகள், மேற் சொன்ன பிரகடனம் முன் கூட்டியே நீக்கப்பட்டாலொழிய அல்லது மேற்கொண்டு நீட்டிக்கப்பட்டாலொழிய ஒரு மாதத்துக்கு நடைமுறையிலிருக்கும்.

மேலே கூறிய பிரகடனம் பற்றி எவ்வளவு வெள்ளென வாக முடியுமோ அவ்வளவு வெள்ளெனவாகப் பாராளுமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும். மேற்படி பிரகடனம் வெளியிடப்பட்ட நேரத்தில் பாராளுமன்றமானது அதனது அமர்வுகளைப் பத்துநாட்களுக்கு மேற்படப் பின் போட்டிருந்தால், பத்துநாட்களுக்குள் பாராளுமன்றம் கூட வேண்டும் என்று கூறும் பிரகடனம் ஒன்று ஆக்கப்படுதல் வேண்டும்.

1959ஆம் ஆண்டின் எட்டாம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறுன பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் முதல் அமைச்சருக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தாமலே ஊரடங்கு கட்டளையை அவர் பிறப்பிக்க முடியுமென்று முன்னேரிடத்தில் யாம் குறிப்பிட்டிருந்தோம். பன்னிரண்டாம் பிரிவு வேறுபல அதிகாரங்களை அவர்க்கு வழங்கியுள்ளது. நாட்டின் அமைதிக்குப் பங்கம் வந்து விட்டதென்றும், நாட்டின் அமைதியைக் கட்டிக்காப்பதற்குப் பொலீசாரின்பலம் போதாதென்றும் முதல் அமைச்சர் கருதினுல், ஆயுதந் தாங்கிய படைகளாகிய தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றை உதவிக்கு அழைக்கலாம். இலங்கையின் அண்மைக்கால வரலாற்றை அலசிப்பார்த்தோமானுல், மற்றநாடுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, அவசரகால நிலைமை அடிக்கடி பிரகடனப்படுத்தப்பட்டதாகச் சொல்ல முடியாது. வெள்ளையரின் ஆட்சியின்போது 1949இல் ஒருமுறை அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டது. பின்னர் 1958 மே மாதத்தில் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1961இலும் அப்படியான ஒரு இக்கட்டு ஏற்பட்டது. இப்போதும் 1971 ஏப்பிரில் மாதத்தில் அத்தகைய நெருக்கடியான ஒரு நிலைமையை நாம் அனுபவித்தோம். அவசரகால நிலையில் அரசாங்க பலம் எத்தகையது என்பதை உணர்வதற்கு 1971ஆம் ஆண்டு நிலவிய ஆட்சிமுறை நல்லவொரு சான்று.

---

# 6

# திருமணங்களும் சமூகங்களும்

## திருமணச் சட்டங்கள்

இலங்கை ஒரு சிறிய தீவாக இருந்தபோதும் சட்ட முறைகள் பல இலங்கையில் வழக்கில் உள்ளன என்று முன்னரே கண்டோம். இலங்கையரின் திருமணத்தைப் பொறுத்த வரையிலும் வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கண்டியர் திருமணமும் திருமண நீக்கமும் (1951) என்ற சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கவே கண்டியச் சிங்களர் திருமணம் செய்து கொள்கின்றனர். ஆனல், அவர்கள் விரும்பினுல் பொதுத் திருமணச் சட்டத்தின் கீழும் திருமணம் செய்து கொள்ளலாம். முசுலிம் திருமணமும் திருமண நீக்கமும் (1953) என்ற சட்டம் முசுலிம்களின் திருமணம், திருமண நீக்கம் என்பவற்றுக்கு ஏற்புடைய சட்டமாக உள்ளது. பொதுத் திருமணச் சட்டத்தின்கீழ் முசுலிம்கள் திருமணஞ் செய்யவோ மணநீக்கம் செய்யவோ முடியாது. தமிழர்க்கும் கீழ் நாட்டுச் சிங்களவர்க்கும் பொது திருமணப்பதிவுக் கட்டளைச் சட்டம் ஏற்புடையதாகும். இலங்கைவாழ் பறங்கியர், ஆங்கிலர் என்போருக்கும் பொதுத்திருமணச் சட்டமே ஏற்புடையது.

தமிழர், சிங்களவர், முசுலிம்கள் என்று பல்வேறினத்தார் இலங்கையில் வாழ்ந்தபோதும் ஒவ்வொருவருக்கும் தனித்தனிச்சட்டம் இருக்கவேண்டுமா என்ற கேள்வி உங்கள் மனதில் எழுவது இயல்பு. இத்தகைய கேள்வி முன்பும் பலர் மனதில் எழுந்தது. எனினும் தீர்வு எதுவும் இன்றைவரை காணப்படவில்லை.

கண்டியச் சிங்களவராய் இருந்தாலுஞ்சரி, கீழ் நாட்டுச் சிங்களவராய் இருந்தாலுஞ்சரி, அவர்கள் எல்லோரும் சிங்களவரே; அப்படியிருப்பவும் ஒரு சாரார்க்குக் கண்டியத் திருமணமும் திருமணநீக்கமும் சட்டமும், இன்னொரு சாரார்க்குப் பொதுத்திருமணச் சட்டமும் என்று விதித்திருப்பது விந்தையாக உள்ளது.

அதேவேளையில், வெவ்வேறு இனத்தவராய் உள்ள தமிழர்க்கும் கீழ்நாட்டுச் சிங்களவர்க்கும் ஒரே சட்டம் (பொதுத்திருமணக் கட்டளைச் சட்டம்) இருப்பது வேடிக்கையாகவும் விசித்திரமாகவும் தோன்றுகின்றது.

கண்டியருக்கு ஒக்கத்தக்க முறையிலும், முசுலிம்களுக்கு வெறுப்பில்லாத வகையிலும் கண்டியச் சட்டத்தையும் முசுலிம் சட்டத்தையும் பொதுத்திருமணச் சட்டத்துள் அடக்கி ஒருபடித்தான திருமணச் சட்டங்களை இயற்றுதல் விரும்பத்தக்கது. முசுலிம்களின் திருமணம், திருமண நீக்கம் என்பன சமயஞ் சார்ந்தனவாதலால் சமயச்சார்ச்சி அற்ற சட்டத்தை முசுலிம்கள் மீது திணிக்கக்கூடாது என்று முசுலிம்கள் வாதாடலாம். ஆனால், பொதுத் திருமணச் சட்டத்தின் கீழ், கண்டியர்களைப்போல முசுலிம்களும் திருமணஞ் செய்யலாம் என்று ஏற்பாடு செய்வதில் தீங்கென்ன என்பது விளங்கவில்லை. இலங்கை மக்களின் பொது நலனை முன்னிட்டு எல்லோரும் கொஞ்சம் விட்டுக் கொடுப்பார்களானால் அனைத்திடர்ப்பாடும் அகன்று விடும்.

இனி இன்றுள்ள திருமணச் சட்டங்களைப் பற்றி சுருக்கமாகச் சிலவற்றை ஆராய்வோம். முதலாவதாகத் திருமணம் என்ற விடயத்தைச் சிந்திப்போம்.

## திருமணத்துக்கான வயதும் சம்மதமும்

திருமணத்துக்கான வயதின் கீழெல்லை கண்டியச் சட்டத்தால் ஆளப்படுவோருக்கும் பொதுத்திருமணச் சட்டத்தால் ஆளப்படுவோருக்கும் ஒன்றுகவே உள்ளது; அதாவது ஆணுக்குப் பதினறு; பெண்ணுக்குப் பன்னிரண்டு; ஆனல் பறங்கிப் பெண்ணுனல் 14. முசுலிம்களுக்கு இந்தக் கீழெல்லை வரையறை இல்லை. பொதுத் திருமணச் சட்டத்தால் ஆளப்படுவோர், 21 வயதுக்குக் குறைந்தவராயின், பெற்ரோரின் சம்மதத்தைப் பெருமல் திருமணம் செய்ய முடியாது; கண்டியச் சட்டத்தால் ஆளப்படுவோரின் விடயத்தில் பெண் பதினறு வயதுக்குக் கூடியவளாயும் ஆண் பதினெட்டு வயதுக்குக் கூடியவனுகவும் இருந்தால் பெற்ரோரின் சம்மதத்தைப் பெற வேண்டியதில்லை. திருமணவயதின் கீழெல்லை என்ற ஒன்று முசுலிம்களுக்குக் கிடையாது; சம்பந்தப்பட்ட முசுலிம் எந்தப் பிரிவை (கஞபி, சாபி, சுன்னி) சேர்ந்தவர் என்பதைப் பொறுத்து அவரவர்க்கேற்ற சட்டப்படி அவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம். பக்குவப்பட்டதும் முசுலிம் பெண் திருமணம் செய்யலாம் என்று அவர்களின் சமயச் சட்டம் கூறுகின்றது. பக்குவப்படுதல் (*Puberty*) என்பது அந்த அந்தச் சமயப் பிரிவின் சட்டத்தைப் பொறுத்ததேயொழிய, ஆளைப் பொறுத்ததல்ல; இதற்கிணங்க ஒரு சமயப் பிரிவின் சட்டப்படி அதனுல் ஆளப்படும் பெண் ஒன்பது வயதிலேயே பக்குவப்பட்டுவிடுகிருள். அதாவது அவள் ஒன்பது வயதிலேயே சட்டப்படி திருமணம் செய்யலாம்.

## 12 வயதுக்குக்குறைந்தவர்கள் செய்து கொள்ளும் திருமணம்

மேலேகூறியதை ஒரளவுக்கேனும் ஒத்த சட்டஏற்பாடு ஒன்று, கண்டியச் சட்டத்திலும் இருக்கின்றது. 12 வயதுக்குக் குறைந்த கண்டியர்கள் செய்துகொள்ளும் திருமணம் அவர்கள் திருமண வயதடைந்த பின்னரும் ஒராண்டு காலத்துக்கு கணவன் மனைவியராய் வாழ்ந்துவிட்டால்,

அல்லது அதற்கிடையில் அவர்களுக்கு ஒரு பிள்ளை பிறந்து விட்டால், செல்லுபடியான திருமணமாகக் கருதப் படும் என்று சட்ட ஏற்பாடு உள்ளது.

பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த பெண்ணுடன், அவள் சம்மதித்தாலுஞ் சரி, சம்மதிக்காது விட்டாலுஞ் சரி உடலுறவு கொள்பவர் வன்புணர்ச்சி (363ஆம் பிரிவு) என்ற குற்றத்துக்கு ஆளாவார் என்று தண்டனைச் சட்டக் கோவை கூறுகின்றது. 12 வயதுக்குக் குறைந்த பெண்ணைத் திருமணஞ் செய்யும் கண்டியர் அல்லது முசுலிம், 363ஆம் பிரிவின் கீழான குற்றத்துக்கு ஆளாகாரோ என்றால் ஆளா கார். தண்டனைச் சட்டக்கோவை ஒரு பொதுச் சட்டம்; கண்டியச் சட்டம், முசுலிம் சட்டம் என்பன சிறப்புச் சட் டங்கள். சிறப்புச் சட்டத்தின் ஏற்பாடுகள், பொதுச் சட் டத்தின் ஏற்பாடுகளின்மீது மேலோங்கி நிற்கும். தண்ட னைச் சட்டக்கோவையின் நான்காம் பிரிவு இதையே கூறு கிறது.

பொதுத் திருமணச் சட்டத்தால் ஆளப்படும் ஒருவர், பராயமடையுமுன் திருமணம் செய்தால் அந்தத் திரு மணம் பதியப்பட்டதாயினுஞ் சரி சம்பிரதாயப்படி செய் யப்பட்டதாயினுஞ்சரி, அது வெற்றும் வெறிதுமாதல் வேண்டும் என்று சட்டம் கூறுகின்றது. ஆனால் கண்டியச் சட்டத்தில் நிலைமை வேறு. அதாவது அந்தத் திருமணம் சூனியம் (*Void*) தான்; ஆனால் அவர்கள் பராயமடைய முன்னர் அவர்கள் இருவருக்கும் குழந்தையொன்று பிறந்து விட்டால் அல்லது அவர்கள் இருவரும் பராயமடைந்த பிறகு அவர்களிருவரும் ஓராண்டுக்காலத்துக்குக் கணவன் மனைவியராய் வாழ்ந்தால் அவர்களுடைய அந்தப் பாலிய திருமணம்கூடச் செல்லுபடி கொண்டதாகிவிடும்.

பெற்றோரின் சம்மதம் பெறாமல், கண்டியச் சட்டத் தின் கீழ்த் திருமணம் செய்யும் பதினாறு வயதடையாத பெண்ணுக்கோ, பதினெட்டு வயதடையாத ஆணுக்கோ தண்டனை எதுவும் இல்லை; பொதுத் திருமணச் சட்டத்தின் கீழ்த் திருமணம் செய்யும் பராயமடையாதவருக்கு (21 வயதடையாதவர்) அத்தகைய தண்டனை உண்டு. ஏனும் இந்த ஏற்றத்தாழ்வு?.

## தடுக்கப்பட்ட உறவு முறைகள்
## Prohibited degrees

ஆள் ஒருவர், குறிப்பிட்ட சில உறவு முறைகளில் (*Degree of relationship*) உள்ளவரைத் திருமணம் செய்தல் இயலாது என்று பொதுத் திருமணச் சட்டம் கூறுகின்றது. உதாரணமாக ஒருவர் அவரது சகோதரியின் மகளைத் திருமணம் செய்தல் இயலாது (இந்தியத் தமிழரின் நிலை வேறு). பொதுத் திருமணச் சட்டம் கூறுவதைத்தான், கண்டியர் திருமணச் சட்டமும் கூறுகின்றது. ஒருசில சிறு வேறுபாடுகளைத் தவிர முசுலிம் சட்டமும் மேற்சொன்ன சட்டங்களோடு ஒத்துப் போகின்றது. சட்டத்தால் தடுக்கப்பட்ட உறவுமுறையில் உள்ளவரைத் திருமணம் செய்வது குற்றம். இக்குற்றத்திற்கு தண்டனையும் விதிக்கப் பட்டிருக்கின்றது. ஆனல் இந்தத் தண்டனை வெவ்வேறினத்தார்க்கு வெவ்வேருக இருப்பது விந்தையாக உள்ளது. ஒரே குற்றத்துக்கு வெவ்வேறு தண்டனை ஏன் என்பது புரியவில்லை. பொதுத் திருமணச் சட்டத்தால் ஆளப்படும் ஒருவர், தடுக்கப்பட்ட உறவு முறையிலுள்ள ஒருவரைத் திருமணஞ் செய்தால் ஆயிரம் ரூபாக் குற்றப்பணம் தண்டனையாக விதிக்கப்படுகிறது; கண்டியத் திருமணச் சட்டத்தின் கீழ், 100 ரூபாக் குற்றப் பணம் அல்லது இரண்டு ஆண்டு மறியல் தண்டனையாக விதிக்கப்படுகிறது; முசுலிம் திருமணச் சட்டத்தின் கீழ் மூன்ருண்டு மறியல் தண்டனையாக விதிக்கப்பட்டுள்ளது.

இன்றுள்ள சட்டப்படி, ஒன்றுவிட்ட சகோதரர்கள் திருமணம் செய்து கொள்ள முடியும்; அதாவது, நீர் பெண்ணுயின் உம்முடைய தாயின் சகோதரியின் மகனை அல்லது உம்முடைய தந்தையின் சகோதரனின் மகனை, திருமணம் செய்து கொள்ளலாம்; ஆணுயின், உம்முடைய தாயின் சகோதரியின் மகளை அல்லது உம்முடைய தந்தையின் சகோதரனின் மகளைத் திருமணம் செய்யலாம்; தமிழர் பண்பாட்டில் ஒன்றுவிட்ட சகோதரனையோ, சகோதரியையோ திருமணம் செய்ய முடியாது. சிங்களர் சமுதாயத்திலும் இதுவே நிலைமை; ஆங்கிலர் புகுத்திய சட்டம் அப்படியே இருக்கிறது; இதிலே மாற்றம் வேண்டும்,

## திருமண வாக்குறுதியை மீறுதல்

பெண்களுக்கு மெல்லியலார் என்பது வேறொரு பெயர். இந்த மெல்லியலார் எளிதில் ஏமாறிவிடும் இயல்பினர். இந்த இயல்பைச் சாதகமாகப்பயன்படுத்தி ஆண்கள் பலர், பெண்ணினத்தை மாசுபடுத்தியதாக வரலாறுகள் உண்டு. கட்டிய மனேவியைக் கைவிட்டான் கோவலன். திருமணம் புரிவதாய் சகுந்தலைக்கு வாக்குக்கொடுத்த துசியந்தன் அவளை ஏற்க மறுத்தான். இவை எல்லாம் பழைய கதைகள். ஆனுல் இன்றும் இப்படியான செயல்கள் பல நிகழ்கின்றன. திருமணவாக்குறுதியை மீறும் நிகழ்ச்சிகள் நாள் தோறும் நடைபெறுகின்றன. 'கட்டுவேன்' என்று கூறிய காதலன்வேருெருத்திக்குத் தாலிகட்டினுன் என்றும், 'உங்களையன்றி வேருெருத்தரை ஏறெடுத்தும் பாரேன்' என்றவள் வேருெரு காதலனைத் திருமணம் செய்தாள் என்றும் செய்தித்தாள்களில் படிக்கின்ருேம். இப்படியாக ஆணுே, பெண்ணுே வாக்குறுதியை மீறும்போது, அத்தகைய மீறலால் இன்னலுறும் ஆளுக்கு என்ன பரிகாரம் உண்டு என்பதைக் கவனிப்போம்.

கலியாண வாக்குறுதியை மீறுதலுக்கெதிராக வழக்கெடுக்கும் உரிமை, இன்னலுறும் அந்த ஆளுக்கு உண்டு. ஆனுல் அந்த வாக்குறுதி எழுத்துருவில் சான்றுப்படுத்தப்படல் வேண்டும். திருமணப்பதிவுக் கட்டளைச்சட்டம் இந்த விடயத்தை மிகவும் அழுத்தம்திருத்தமாகக் கூறுகின்றது. வாக்குறுதியை மீறியவருக்கெதிராக வழக்குத் தொடுக்கமுடியும் என்ருலும், வாக்குக்கொடுத்தபடி தம்மைத் திருமணம் செய்து கொள்ளும்படி கேட்கும் உரிமை, அவ்வாறு வழக்குவைக்கும் ஆளுக்குக்கிடையாது.

வாக்குறுதி என்ற சொல்லைக் கருத்தூன்றி நோக்குதல் வேண்டும். காதலன் காதலிக்கு, அல்லது காதலி காதலனுக்கு எழுதும் காதல் கடிதங்கள்கூட கலியாண வாக்குறுதிகள் ஆகலாம். ஆனுல் அத்தகைய கடிதங்கள் வாக்குறுதி ஒன்றைத் தெளிவாகக் கொடுப்பனவாக அமைதல் வேண்

டும். 9ஆவது புதுச்சட்டவறிக்கையில் கூறப்பட்டிருக்கும் ஒருவழக்கு மிகவும் சுவையான சம்பவத்தைக் கூறுகின்றது. வழக்காளியாகிய பெண், எதிராளியாகிய ஆணுடன் காதல்கொண்டிருந்தாள். வழக்காளியின் தகப்பன் தனது மகளைத் தூண்டி அவளது காதலனிடமிருந்து திருமண வாக்குறுதி ஒன்றைப் பெறுமாறு கூறினார். அவளும் அவ்வாறே காதலனுக்கு எழுதினாள். கடிதத்தைக் கண்ட காதலன் பின்வருமாறு மறுமொழி எழுதினான்:—

''உன்னுடைய அப்பா சொல்வதுபோலச் செய்ய எனக்கு இட்டமில்லை; ஏனென்றால், என்கண்மணியாகிய உன்னை நான் நம்புகிறேன். அதே நேரத்தில் என் கண்மணி நீயும் என்னை ஏன் நம்பக்கூடாது? என்னுடைய சொற்களில் உனக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் நான் என் செய்ய!'' என்று காதலன் மறுமொழி எழுதினான். இந்த எழுத்தில் நிபந்தனையற்ற கலியாணவாக்குறுதி ஒன்று இருக்கின்றது என்று நீதிமன்றம் தீர்மானித்தது.

வேறொரு வழக்கையும் பார்ப்போம் (38 புசஅ 261). காதலன் காதலிக்குக் கடிதம் ஒன்று கிறுக்கினான். ''நான் மணப்பதாய் இருந்தால் உன்னையே மணப்பேன் என்று நீ நிச்சயமாக நம்பலாம். அவ்வாறு உன்னைத் திருமணஞ் செய்ய முடியாது போனால் நான் தனியனாகவே வாழ்வேன்'' என்று எழுதினான். இந்தக் கடிதத்தில் நிபந்தனையற்ற கலியாண வாக்குறுதி எதுவும் இல்லை என்று நீதிமன்றம் தீர்மானித்தது. வாக்குறுதி என்பது தெளிவானதாயும், ஐயத்துக்கிடமற்றதாயும், நிபந்தனையெதையும் கொண்டிராததாயும் இருத்தல் வேண்டும் என்பது சட்டத்தின் கருத்து.

இனி, இப்படியான ஒரு கலியாணவாக்குறுதியை ஒருவன் அல்லது ஒருத்தி மீறினால், அத்தகைய மீறலால் அவதிப்படும் ஒருவர் என்ன செய்யலாம்? வாக்குறுதியை மீறியவர்க்கெதிராக வழக்குத்தொடுக்கலாம். இது உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் வாக்குறுதி செய்தபடி, தம்

மைத் திருமணம் செய்து கொள்ளும்படி வழக்குத் தொடுக்கலாமா? முடியாது; முடியவே முடியாது; சட்டம் அதற்கு இடம்தராது. அப்படியாயின் வழக்குத் தொடுப்பதாற் பயன் என்ன? பயன் உண்டு. திருமணவாக்குறுதி கொடுத்தவரை நம்பியதன் விளைவாக ஒருவர் பணநட்டம் அடைந்திருந்தால் அவர் அவற்றை மீட்டுக்கொள்ள முடியும். அத்துடன் அவர் தமது மானநட்டம் தொடர்பிலும் எதிராளியிடமிருந்து நட்டஈடு கோரலாம். இந்த நட்டஈடு பெரும்பாலும், நட்டஈடு கோருபவரின் சமூக அந்தஸ்தைப் பொறுத்தது.

கலியாண வாக்குறுதியை மீறுதல் சில சமயங்களில் குற்றமாகக் கருதப்படமாட்டாது; அதாவது,

(1) வழக்காளி வேறு ஆட்களுடன் 'தவருக' நடந்தார் என்று எதிராளி நிரூபித்தால்; அல்லது

(2) நியாயமில்லாத நிபந்தனைகளை வழக்காளி விதிக்கிருர் என்று நிரூபித்தால் —

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற மறுத்தல் குற்றமாகாது. அவ்வாறு மீறும் ஆளுக்கெதிராக வழக்கெடுக்கவும் முடியாது.

## திருமண நீக்கச் சட்டம்

திருமணமே செய்யக் கூடாது என்று கூறும் சட்டம் எந்தநாட்டிலும் இருப்பதாகத் தெரியவில்லை. அதே போலத் திருமணம் செய்துதான் ஆகவேண்டும் என்று கூறும் சட்டமும் கிடையாது. திருமணம் செய்வதோ தனிக்கட்டையாய் வாழ்வதோ அவரவர் விருப்பம்; பெற்ரேரும் கேட்க முடியாது; மற்ரேரும் கேட்க முடியாது.

ஆனல், திருமணம் செய்து விட்டால், அந்தத் திருமணத்தை நீக்கும் உரிமை மக்களுக்கில்லை. அங்கே அரசு குறுக்கிடுகின்றது. உம்மிட்டப்படி நீர் திருமண நீக்கம்

பெறமுடியாது; சட்டத்திலே விதிக்கப்பட்டுள்ள முறையிலே தான் திருமணநீக்கம் பெறமுடியும் என்று அரசு குறுக்கிடுகின்றது.

குறித்த சில காரணங்கள் இருந்தால்தான் மணநீக்கம் பெறமுடியும் என்று சட்டங்கள் கூறுகின்றன. கண்டியச் சட்டம் சில காரணங்களைக் கூறுகின்றது; பொதுத் திருமணச் சட்டம் சில காரணங்களைக் கூறுகின்றது; முசுலிம் திருமண திருமணநீக்கச் சட்டமும் காரணங்களை எடுத்துரைக்கின்றது. இந்தக் காரணங்களை, முகாந்தரங்களை (*grounds*) இப்பொழுது நோக்குவோம்.

திருமணநீக்கத்தைப் பொறுத்த வரையில் மூன்று சட்டங்களும் மூன்று விதமாக நிற்கின்றன. முசுலிம்களின் விடயத்தில், காரணம் எதுவும் காட்டாமலே கணவனோ மனைவியோ மணநீக்கம் பெறமுடியும்; இது ஒரு கோடி முனை; பொதுத் திருமணச்சட்டத்தால் ஆளப்படும் தமிழர், கீழ்நாட்டுச் சிங்களவர் ஆகியோர் திருமணநீக்கம் பெறுவதென்றால் பெரியபாடு பட வேண்டியுள்ளது; இது அடுத்த கோடிமுனை; இவை இரண்டிற்கும் இடையில் நிற்கின்றது கண்டியச் சட்டம். கண்டியச் சட்டத்தின் கீழ் கணவன் மனைவியர் இருவரும் திருமணநீக்கத்துக்குச் சம்மதித்தால், அதாவது இருவயினொத்த சம்மதம் தெரிவித்தால் திருமணநீக்கம் பெறமுடியும்.

பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒருவர் திருமணநீக்கம் பெறவிரும்பினால் பின்வரும் மூன்று காரணங்களில் ஒன்றையேனும் நிருபித்தாகுதல் வேண்டும்:—

(அ) அலவல் (பிறர் துணைப்புணர்ச்சி) (*Adultery*)

(ஆ) வேண்டுமென்றே அந்தரிக்கவிடுதல் (*Malicious Desertion*)

(இ) மாற்றவியலா மலட்டுத்தன்மை (*Incurable Impotence*)

இம் மூன்று காரணங்களில் முன்னைய இரண்டும் திருமணஞ்சார் தவறுகள்; அதாவது திருமணக் கடமைகளில் கண

வன், அல்லது மனைவி தவறினர் என்ற குற்றத்தத்து வத்தை (guilt principle) அடிப்படையாகக் கொண்டவை.

பொதுத்திருமணங்கள் சட்டத்தில் ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கும் இந்தக் காரணங்கள் போதா என்பது ஒரு சிலரின் அபிப்பிராயம். காரணம் காட்டாமலே முசுலிம் களைப் போலத் திருமணநீக்கத்துக்கான வாய்ப்புத் தமக் கும் வேண்டுமென்று கூறுவாரும் உளர்.

கணவன் ஒருவன் கொலைக் குற்றத்துக்காக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருப்பின் அதைக் காரணமாக வைத்து மணநீக்கம் கோர வாய்ப்பிருந்தால் அது நன் றென்று பெரும்பாலோர் கருதுகின்றனர். என்ன செய்தும் தீர்க்க முடியாத மூளைப்பிசகு கணவனுக்கோ மனைவிக்கோ இருக்குமாயின் அவன் அல்லது அவள், ஆண்டைக்கேற்பது ஏற்ப, திருமணநீக்கம் பெறக்கூடியவராக இருத்தல் வேண் டும் என்ற கருத்து மேற்கு நாடுகளிலும் வலுப்பெற்று வரு கின்றது.

இவையெல்லாம் பொதுமக்கள் நேரடியாகச் சம்பந் தப்படும் பிரச்சனைகளாதலின் பொதுமக்கள் இவற்றைப் பற்றிச் சிந்தனை செய்தல் அவசியம்.

சட்டத்தின் முன் எல்லோரும் சமம் என்று வரட்டுச் சித்தாந்தம் பேசிவிட்டு, சட்டத்திலே இந்த முரண்பாடு களை வைத்திருத்தல் முறையென்று எவர்க்கும் தோன்ருது. கீழ் நாட்டுச் சிங்களவர், தமிழர் என்போர்களும் இரு வயினெத்த சம்மதம் தருவதின் பேரில் திருமணநீக்கம் பெறும் வண்ணம் சட்டத்தை ஏன் திருத்தக் கூடாது? சட் டத்தை அப்படித் தளர்த்தினல் குடும்பங்கள் குலைந்து விடும் என்றும், திருமண நீக்கம் அதிகப்படியாக நிகழும் என்றும் அஞ்சுவோர் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். இருவயினெத்த சம்மதத்தால் திருமணநீக்கம் பெறுவதற் கான வாய்ப்புள்ள கண்டியச் சிங்களக் குடும்பங்கள் சிதறிப் போய் விட்டனவா? காரணமே காட்டாமல், நினைத்த வுடன் மணக்கவும் வெறுத்தவுடன் தணக்கவும் வாய்ப்

புப் பெற்றுள்ள முசுலிம் குடும்பங்கள் சிதறிவிட்டனவா? கணவன் மனைவியராய் வாழமுடியாது என்று கணவனும் மனைவியும் நன்முக நம்புகிற பட்சத்தில், அவர்களை ஒட்ட வைக்க முயல்வதோ அவர்கள் திரும்பவும் ஒட்டுவார்கள் என்று நம்புவதோ புத்திசாலித்தனமாகத் தோன்றவில்லை. கணவன் மனைவியர் ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் பிரியவிரும்பியும், சட்டம் இடம் தராத காரணத்தினுலே தான், கணவனே மனைவியோ அலவலை(பிறர் துணைப்புணர்ச் சியை)விழைய அல்லது வேறு தவறுகளைப்புரிய நேர்கிறது. இது ஒரு மணவினை சார்ந்த குற்றமாதலின் திருமணநீக்கத் துக்கான காரணமாகவும் அமைகின்றது. ஒருவரையொரு வர் விரும்பாத கணவன் மனைவியர் இருவரும், அல்லது கணவன் அல்லது மனைவி இந்தக் குற்றத்தைப் புரிந்து அதன் மூலம் திருமணநீக்கம் பெறும் வரை காத்திராமல் அவர்களிருவரும் சம்மதம் தெரிவிப்பதன் பேரில் அவர்க ளைப் பிரிவதற்கு விடுவதே நல்லது.

## திருமணச் சட்டத்தில் சீர்திருத்தம் தேவை

திருமணம், திருமணநீக்கம் பற்றிய சட்டங்களை ஆராய்ந்து அவற்றிடையேயுள்ள வேறுபாடுகள், ஒவ்வா மைகள் ஆகியவற்றை அகற்றி, எல்லா இனத்தார்க்கும் ஏற்புடைத்தாகும் வண்ணம் ஒருசீரான சட்டமொன்றை ஆக்குவதற்கான ஆணைக்குழு ஒன்று பத்துப்பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்டது; *A. R. H*, கனக ரத்தினே, கியூ. சி. குழுத்தலைவராய் இருந்தார்.

அது சில காலம் ஆராய்ச்சி செய்து அதனது அறிக்கை யைச் சமர்ப்பித்தது. ஆனுல் நோக்கம் நிறைவேறவில்லை. ஆணைக்குழுவின் உறுப்பினருக்குள் உடன்பாடு காண முடி யாது போனமை தான் இதற்குக் காரணமாயிருக்கலாம். பழைய நிலைமை தொடர்ந்து இருக்க வேண்டும் என்று சிலர் விரும்பியதால், புதுமை விரும்பிகள் எதனையும் மேற் கொள்ள முடியவில்லை. இதன் பயனுக இந்த ஆணைக்குழு விதப்புரை எதையும் எடுத்துரைக்க முடியாது போயிற்று.

அறிக்கை என்று அவர்கள் சமர்ப்பித்ததில் கூறப்பட்டிருப்பனவெல்லாம் ஆணைக்குழு உறுப்பினர் கொண்டிருந்த தனிப்பட்ட அபிப்பிராயங்களேயொழிய ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அல்ல. முசுலிம் திருமணமும், திருமணநீக்கமும் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவானது தொடக்கத்திலிருந்தே அஞ்சியதாகத் தோன்றுகின்றது. இது ஆணைக்குழுவில் இருந்த முசுலிம் உறுப்பினர்களின் எதிர்ப்பின் உக்கிரம் காரணமாக இருந்திருக்கலாம். எடுத்துக் காட்டாக ஒன்றைப் பார்ப்போம். முசுலிம்களின் திருமண வயதை உயர்த்த வேண்டும் என்று ஆணைக்குழுவிற் பெரும்பாலானோர் விரும்பியும் அது கைகூடவில்லை; இளமையிலே விவாகம் செய்வதாலும், அடிக்கடி பிள்ளைப் பெறுவதாலும் முசுலிம்களில் பலர் இளம் வயதிலே இறந்து விடுகிறார்கள் என்பதால், அவர்களுக்குத் திருமண வயதின் எல்லையை நிர்ணயித்தல் வேண்டும் என்று ஆணைக்குழு கருதியது. ஆனால் ஒரு தீர்மானத்திற்கு வர அதனால் முடியவில்லை. முசுலிம் உறுப்பினரைப் பகைக்க விரும்பாமையே காரணமாய் இருக்கலாம்.

இருவயினொத்த சம்மதம் இருந்தால் திருமணநீக்கம் செய்து கொள்ளலாம் என்ற விடயத்தில் ஒரு முடிவுக்கு வந்தால் கண்டியர்களைப் பொதுச் சட்டத்திற்குள் கொண்டுவந்து விடலாம்; ''பின்ன'' திருமணம், ''தீக'' திருமணம் என்ற திருமணங்கள் வேண்டும் என்று பிடிவாதம் செய்யாவிட்டால் எஞ்சியுள்ள சிறு முரண்பாடும் நீங்கியிருக்கும். இந்த நிலையில் முசுலிம்களும் சற்றுவிட்டுக் கொடுத்திருந்தால் ஒருசீரான திருமணச் சட்டம் தோன்றுவதற்கு வழிபிறந்திருக்கும்.

மூன்று சட்டங்களையும் ஆராயப்புகுந்த ஆணைக்குழு, முசுலிம் சட்டம், கண்டியச்சட்டம் ஆகியவற்றில் பல பிரேரணைகளை ஆராயத் தவறிவிட்டது. முசுலிம்களிடையே நிலவும் பலதார மணமுறையை நீக்குவதற்கான நடவடிக்கை எதையும் குழு ஆராயாதது ஏனென்று விளங்கவில்லை. ஆராய வேண்டிய கண்டியச்சட்டத்தையும் முசு

லீம் சட்டத்தையும் புறக்கணித்துவிட்டுப் பொதுத் திருமணச் சட்டத்தில் பெரும் பொழுது போக்கப்பட்டுள்ளது.

சட்டத்தால் தடுக்கப்பட்ட உறவு முறைகளில் உள்ளவர்களை மணத்தலாகிய குற்றத்துக்கு வெவ்வேறு தண்டனைகள் வெவ்வேறு சட்டங்களின் கீழ் விதிக்கப்பட்டுள்ளன இதை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தலவசியம்.

இன்றுள்ள சட்டப்படி ஒன்றுவிட்ட சகோதரர்கள் திருமணம் செய்துகொள்ள முடியும். ஆனால் தமிழர் பண்பாட்டிலோ வழக்காற்றிலோ இப்படிச் சகோதரர்கள் திருமணஞ் செய்து கொள்ள முடியாது. சிங்களச் சகோதரர்களும் தமிழரைப் போலவே. ஆகவே இங்கேயும் திருமணச் சட்டம் திருத்தப்படல் நன்று.

இன்று வழக்கிலிருக்கும் சட்டப்படி, 12 வயதுக்குமேற்பட்ட பெண்ணும் 16 வயதுக்கு மேற்பட்ட ஆணும் திருமணம் செய்து கொள்வதற்குத் தடை எதுவும் இல்லை. இந்த நிலை மாற வேண்டும். அதாவது திருமண வயதின் கீழெல்லை உயர்த்தப்படல் வேண்டும். சமுதாய நலனையும் பொருளாதார நலனையும் அடிப்படையாக வைத்தே இத்தகைய மாற்றம் வேண்டும் என்று கல்விமான்கள் கூறுகின்றார்கள். பெண்ணின் வயதை 23 ஆகவும் ஆணின் வயதை 25 ஆகவும் உயர்த்துவதால் நன்மை விளையும் என்று நம்புகிறோம்.

கண்டியச் சட்டத்தால் ஆளப்படும் பராயமடையா ஒருவன் அல்லது ஒருத்தி அவரது பெற்றோரின் சம்மதமின்றித் திருமணஞ் செய்தால், அவருடைய பெற்றோர் அந்தத் திருமணத்தைத் தள்ளுபடி செய்யவோ அவர்க்குத் தண்டனை பெற்றுக் கொடுக்கவோ முடியாது. ஆனால் பொதுத் திருமணக் கட்டளைச் சட்டத்தின் கீழ், நிலைமையே வேறு; அந்தக் கணவன் மனைவியர் இருவரில் யார் குற்றவாளியோ அவருடைய ஆதனத்தைச் சுத்தவாளியின் பேருக்கு எழுதும்படி அல்லது அவர்கள் இருவர்க்கும் பிறக்கும் பிள்ளையின் பேரில் எழுதும்படி பணிக்கும்படி நீதிமன்றத்தைக்

கோரும் உரிமை பெற்ருேருக்கு அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு உண்டு. ஏனிந்த ஏற்றத் தாழ்வு? இங்கேயும் சட்டத்தில் திருத்தம் தேவை.

இருவயினைத்த சம்மதத்தின் பேரில், பொதுத் திருமணச் சட்டத்தால் ஆளப்படுவோரும் திருமண நீக்கம் பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று முன்னர் ஆலோசனை கூறப்பட்டது. இந்த ஆலோசனை ஏற்கப்படுமாயின், இருவயினைத்த சம்மதத்தைக் கொடுக்கின்ற கணவன் மனைவியர் இருவரும் இருபத்தொரு வயதுக்கு மேற்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்றும், திருமணமாகி மூன்ருண்டுகளானவர்களாய் இருக்க வேண்டும் என்றும் நிபந்தனை இருத்தல் நல்லது; அத்துடன் அந்த மூன்ருண்டுக் காலத்தில் குறைந்தது ஓராண்டுக்கேனும் அவர்கள் பிரிந்து தனித்து வாழ்ந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் சேர்த்தல் வேண்டும் என்று வேறு சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள்.

சட்ட ஆராய்ச்சி நிறுவகம் என்ற ஒரு நிறுவகம் இப்போது நியமிக்கப்பட்டிருப்பதால் அது இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் என்று நினைக்கிருேம். அது சீர்தூக்கிப் பார்க்கும் என்று நாம் எதிர்பார்ப்பதும் தவறு. நாம் சிந்திக்கின்ற வகையில் சிந்திக்கின்றவர்கள் இல்லாதிருக்கலாம். எனவே எமக்குத் தோன்றுகின்ற சட்டச் சீர்திருத்தக் கருத்துக்களை எல்லாம் அந்த நிறுவகத்தின் பரிசீலனைக்கும் ஆலோசனைக்கும் அனுப்பிவைத்தல் நமது கடன்; நாட்டுக்குச் செய்யும் தொண்டு.

## பராமரிப்புச் சட்டம் Maintenance

கட்டிய மனைவியைக் கடைசிவரை காப்பாற்ற வேண்டியது கணவனின் கடமை; பெற்ற பிள்ளையை அது பெரிய பிள்ளையாக வளரும் வரை பாதுகாக்க வேண்டியதும் தந்தையின் கடமை. உலகம் எங்கணும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு கடமை இது. மனிதாபிமானம் வற்புறுத்தும் இந்தக் கடமையைச் சட்டமும் மனிதன் மீது சுமத்

தியுள்ளது. பராமரிப்புச் சட்டம் எனப் பெயரிய ஒரு சட்டம் இத்தகைய கடப்பாட்டைக் குடும்பத் தலைவன் மீது சுமத்தியுள்ளது. போதிய வசதிகள் படைத்த ஒருவன் தனது மனைவியைப் பராமரிக்கத் தவறினுல் அல்லது சட்டப்படியான திருமணத்தின் விளைவாகவாயினும் அல்லது வேறு விதமாகவாயினும் தமக்குப் பிறந்த பிள்ளையைப் பராமரிக்கத்தவறினுல், அந்தத் தந்தையிடமிருந்து பராமரிப்புக் கோரும் உரிமை மனைவிக்கு உண்டு. இச்சட்டத்தின் கீழ் பராமரிப்புக்கான விண்ணப்பத்தை விளங்கித் தீர்ப்பளிக்கும் உரிமை நீதிவான்நீதிமன்றத்துக்கு மட்டுமே உண்டு; வேறெந்த நீதி மன்றத்துக்கும் கிடையாது. முழுக்க முழுக்க குற்றவியல் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு இந்த உரிமையியல் நியாயாதிக்கமும் உண்டு.

உழைக்கும் ஒருவர் பராமரிப்பு இறுத்தேயாக வேண்டும்; அல்லாவிடினும் ஆளொருவர் உழைக்கக் கூடியவர் என்றும் ஊதியம் பெறக்கூடியவர் என்றும் எண்பிக்சப்பட்டால், அவர் எப்பாடுபட்டும் பராமரிப்புத் தொகையைக் கட்டித்தாணுக வேண்டும். வழக்குகள் பலவற்றில் இப்படியான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பராமரிப்புக்கோருபவரிடம் பொருளும் பணமும் உண்டு என்று எதிர்வாதியான கணவன் சாக்குப் போக்குச் சொல்ல முடியாது. 44 புதிய சட்ட அறிக்கையில் காணப்படும் ஒரு வழக்கில் இப்படியாகத் தீர்ப்பளிக்கப் பட்டிருப்பதைக் காணமுடியும்.

பெண் ஒருத்தி, எவரிடமிருந்து பராமரிப்புக் கோருகின்றுளோ அவர் தன்னைச் சட்டப்படி திருமணம் செய்தவர் என்பதை நிரூபித்தால் மட்டுமே பராமரிப்புத் தொகை பெற உரித்துடையவள் ஆவாள். பெண்ணொருத்தி கட்டிய கணவன் அல்லாத வேருெருவனுடன் தகாத உறவு முறை கொண்டு வாழ்ந்தால் கணவனிடமிருந்து பராமரிப்புக் கோரும் உரிமை அவளுக்குக் கிடையாது; கணவன் மனைவி ஆகிய இருவரும் தனித்தனியே வாழ விரும்பி இருவயினுைத்த சம்மதத்துடன் பிரிந்து வாழ்கின்ற சந்தர்ப்பங்களி

லும் மனைவி பராமரிப்புக் கோர முடியாது. நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான காரணமின்றிக் கணவனுடன் வாழமறுக்கும் மனைவி பராமரிப்புக் கோருவதற்கான உரிமையை இழந்தவளாவாள். கணவன் பிறர்மனை விழையும் பழக்கமுடையவன் என்ற காரணத்தால் அல்லது மனைவியைக் கொடுமைப்படுத்தி ஆய்க்கினைப் படுத்துகிறான் என்ற காரணத்தால் கணவனைப்பிரிந்து வாழும் மனைவி பராமரிப்புக்கோர உரிமை உடையள்.

91 ஆம் அத்தியாயமான பராமரிப்புக் கட்டளைச் சட்டம், முசுலிம்களுக்கு ஏற்புடையதாகாது. பராமரிப்புக்கான ஏற்பாட்டை அவர்களுடைய திருமண, திருமணநீக்கக் கட்டளைச் சட்டத்தில் காணலாம். அந்தச் சட்டத்தில் உள்ளபராமரிப்புப் பற்றிய ஏற்பாடு திருப்தியானதாக இல்லை என்று முசுலிம்கள் பலர் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். திருத்தப்படவேண்டும் என்றுஅபிப்பிராயப்படுகின்றார்கள். தன்னுடைய கணவன் வேறொரு பெண்ணுடன் தகாத்தொடர்பு வைத்து வாழ்கிறான் என்ற காரணத்தின் மீது கணவனிடமிருந்து பராமரிப்புக் கோரும் உரிமை முசுலிம் பெண்ணுக்கு இல்லை. தன்கணவன் வேறொரு பெண்ணுடன் கூடிவாழ்கிறான் என்பதற்காக அவனுடன் வாழமறுக்கும் உரிமை முசுலிம் பெண்ணுக்கு இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது (33. பு.ச.அ. 277).

கணவனிடமிருந்து பராமரிப்புக் கோரும் உரிமை, பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் மனைவிக்கு உண்டு என்று கூறுகின்ற அதேவேளையில், இதையொத்த ஓர் உரிமை கணவனுக்கும் உண்டு என்பதை அறிந்துகொள்வது அவசியம். நோய்காரணமாக அல்லது வேறு இயலாமை காரணமாகக் கணவன் ஒருவன் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள இயலாதவனாக இருக்கும் சூழ்நிலைகளில், அவனைப் பராமரிக்கும் பொறுப்பு மனைவியைச் சார்ந்தது என்று திருமணமான பெண்களின் ஆதனக் கட்டளைச் சட்டம் கூறுகின்றது. கண்டியர் சட்டம், முசுலிம் சட்டம்,

தேசவழமை ஆகிய சட்டங்களால் ஆளப்படுவோர்க்கு நாம் மேலே கூறியது பொருந்தாது.

தம் தந்தையிடமிருந்து பராமரிப்புப் பெறும் உரிமை பிள்ளைகள் எல்லோர்க்கும் உண்டு. சட்டமுறையான திருமணத்தில் பிறந்த பிள்ளை, அவ்வாறின்றி வேறுவகையில் பிறந்த பிள்ளை என்ற வேறுபாடு இங்கே இல்லை. சட்டமுறையான திருமணத்தில் பிறந்த பிள்ளையாயின் அந்தப் பிள்ளை அல்லது அந்தப் பிள்ளையின் தாய் எந்த நேரத்திலும் பராமரிப்புக்கோரி விண்ணப்பிக்கலாம். ஆனுல், சட்டமுறையாகத் திருமணம் செய்யாத ஒருத்தியின் வயிற்றில் பிறந்த பிள்ளையாயின் அந்தப் பிள்ளை பிறந்து ஓராண்டு கழிவதற்குமுன், அல்லது அந்தப் பிள்ளையின் தந்தையென அந்தப் பிள்ளையின் தாயால் குறிப்பிடப்படுபவர் அந்தப் பிள்ளை பிறந்தபோது இலங்கையில் இல்லாதிருந்தால் அவர் இலங்கைக்கு வந்த பின்னர் பன்னிரண்டு மாதங்கள் கழியுமுன்னர், விண்ணப்பித்தல் வேண்டும்; இல்லாவிட்டால், பராமரிப்புப் பெறுவதற்கான உரிமையை அந்தப் பிள்ளை இழந்துவிடும். பிள்ளையின் தந்தையெனக் குறிக்கப்படுபவர் அந்தப் பிள்ளை பிறந்த பன்னிரண்டு மாதங்களில் எந்த ஒரு காலத்திலும் அந்தப் பிள்ளையைப் பராபரித்திருந்தாலும் அந்தத் தந்தையிடமிருந்து பராபரிப்புக்கோர முடியும்; இப்படியான சந்தர்ப்பத்தில் அப்பிள்ளை பதினறு வயதடையுமுன்னர் எக்காலத்திலும் பராமரிப்புக்கோரி விண்ணப்பிக்கலாம். இந்தச் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றிலும் அந்த எதிராளிதான் பிள்ளையின் தந்தை என்பதை நிரூபிப்பது விண்ணப்பக்காரியின் பொறுப்பாகும்.

பிள்ளைகளுக்கான பராமரிப்புத் தொடர்பில் இன்ஞென்றையும் நினைவில் நிறுத்துதல் வேண்டும். பிள்ளை பதினறு வயதடையும்வரையே தந்தையிடமிருந்து பராமரிப்புத்தொகை பெறமுடியும். பதினறு வயதடைந்த பிள்ளை ஒன்று அதற்குக் கொடுக்கப்பட்டுவரும் பராமரிப்புத் தொகையைத் தொடர்ந்தும் பெறவிரும்பினுல் அது நீதி

வான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும். அதுவும் அதனுடைய பதினறு வயது முடிவடைய முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பித்தால் மேலும் இரண்டு ஆண்டுகட்கு, அதாவது அது பதினெட்டு வயது அடையும் வரை பராமரிப்புப் பெறும் வண்ணம் நீதிமன்றம் கட்டளை ஒன்றை ஆக்கும். பராமரிப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பராமரிப்புக் கோரும் ஒருவர் நூறு ரூபாவுக்குட்பட்ட ஒரு தொகையையே பராமரிப்புத் தொகையாகப் பெறமுடியும். சட்டம் அவ்வாறுதான் ஏற்பாடு செய்துள்ளது. இந்தச் சட்ட ஏற்பாட்டுக்குத் திருத்தம் தேவை என்பது பலரின் அபிப்பிராயம்.

பராமரிப்பைப் பற்றிப் பேசும்போது உரிமைவழக்கு நடவடிக்கை முறைச்சட்டக் கோவையில் காணப்படும் சில ஏற்பாடுகளையும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். 614 ஆம், 615 ஆம் பிரிவுகள் இதைப்பற்றிக் கூறுகின்றன. திருமண நீக்கத்துக்கான (*Divorce*) அல்லது நீதிமுறையான பிரிவுவாழ்க்கைக்கான (*Judicial Separation*) வழக்கொன்று மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அந்த வழக்கு முடியும்வரை ''அலிமனி'' (*Alimony*) எனப்படும் ஒரு தொகையைக் கணவனிடமிருந்து பெற்றுத் தரும்படி நீதிமன்றத்தைக் கேட்கலாம். இந்தத் தொகை ''அலிமனி பெண்டென்ரே லைற்றே'' (*Alimony pendente lite*) என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும். இத் தொகை கணவனுடைய வருமானத்தின் ஐந்திலொரு பகுதிக்குக் குறைந்ததாயிருத்தலாகாது. முறையானது என்று நீதிமன்றம் கருதினல், வழக்கு முடிவடைந்து அவர்களின் திருமணத்தை நீக்கி முழுமையான தீர்வை வழங்கப்பட்டதன் பிறகும் அந்த ஆடவன் அந்தப் பெண்ணுக்கு 'அலிமனி' ஒன்றை, வாராவாரம் அல்லது மாதாமாதம் அல்லது முழுத்தொகையாகக் கொடுத்தல் வேண்டும் என்று கட்டளையிடலாம். இது ''பேமனண்ட் அலிமனி'' (*Permanent Alimony*) எனப்படும்.

## பிள்ளையின் கட்டுக்காவல்

## தாய்க்கா தகப்பனுக்கா?

''தாயோடு அறுசுவைபோம் தந்தையொடு கல்வி போம்'' என்று அவ்வை பாடினுள். அட்டில் தொழில் தான் அன்னையின் கடமை; ஏனைய எல்லாம் தந்தையின் உரிமை என்ற நிலைதான் பண்டைத் தமிழ்நாட்டில் நிலவி யது. பண்டைத் தமிழ் நாட்டில் என்ன, சட்டக் கருவூல மாய்த் திகழ்ந்த உரோமாபுரியிலே கூட அப்படித்தான் இருந்தது. மனைவி கூடக் கணவனின் அடிமைப் பொருளா கவே மதிக்கப்பட்டாள். ஆனல் அந்த நிலை இன்றில்லை. எவ்வளவோ மாறிவிட்டது; விழித்தெழுந்த பெண்ணினம் இந்த நிலைமையை எவ்வளவோ தூரம் மாற்றிவிட்டது. ஆகவே தாயானவள் பிள்ளையின் வாழ்க்கையில் உரிமை பாராட்டக்கூடிய நிலையை எய்திவிட்டாள். அப்படியா னல் தந்தையின் நிலை என்ன? பிள்ளை வளர்ப்பில் தந்தைக்கு அக்கறை கிடையாதா? தாய்க்கும் சில உரிமை கள் உண்டு; தந்தைக்கும் சில உரிமைகள் உண்டு. அப்படி என்றால் யாருடைய உரிமை மேலானது? தந்தையின் உரி மைதான் மேலான உரிமை என்பதை ஒப்புக் கொள் கிறோம். இங்கே பிள்ளைகள் மீது பெற்றோருக்கு இருக்கும் உரிமை என்று கூறும்போது, உரிமை என்ற சொல் கடமை யையும் உள்ளடக்குகின்றது. பராயமடையாத பிள்ளைக ளின் மீது தான் பெற்றோருக்குத் தத்துவம் அல்லது அதிகா ரம் உண்டு. அந்தத்தத்துவங்கள் வருமாறு:—

1. பிள்ளைகளின் கட்டுக்காவல்;
2. பிள்ளைகளின் கட்டுப்பாடு;
3. அவர்களின் கல்வி;
4. பராயமடையாச் சிறுவர் திருமணஞ் செய்யும் போது அதற்கான சம்மதம்—

முதலியன அடங்கும். மேலே கூறிய நான்கு விடயங்களி லும் தகப்பனுக்கா தாய்க்கா உரிமை உண்டு என்பதனை

ஆராயும் போது வேறும்பல சூழ்நிலைகளைக் கருத்திலே கொள்ள வேண்டும்.

பிள்ளையின் தாயும் தகப்பனும் கணவனும் மனைவியுமாய் வாழ்கின்றவிடத்து, பிள்ளையின் கட்டுக்காவல், கட்டுப்பாடு, கல்வி என்பனவற்றை நெறிப்படுத்தும் உரிமை தகப்பனுக்குத்தான் சட்டப்படி உண்டு; ஆனால் பராயமடையாத பிள்ளைகள் எல்லோரதும் பாதுகாவலன் (*Upper Guardian*) நீதிமன்றம் என்ற தன்மையில், தகப்பனுடைய இந்த உரிமையில் நீதிமன்றம் தலையிடலாம்; அவ்வாறு நீதிமன்றம் தலையிட்ட சந்தர்ப்பங்கள் பல உண்டு; பராயமடையாத பிள்ளை, தந்தையின் கட்டுக்காவலில், கட்டுப்பாட்டில் இருப்பது பிள்ளையின் உடனலத்துக்கு அல்லது உளநலத்துக்கு அல்லது ஒழுக்க வாழ்வுக்குக் குந்தகமாக இருக்கும் என்று நீதிமன்றம் நம்பினால், அது அந்தப் பிள்ளையைத் தகப்பனின் கட்டுக்காவல், கட்டுப்பாடு ஆகியவற்றிலிருந்து பிரித்துத் தாயிடம் கொடுக்கலாம் (57புசஅ568). பிள்ளையின் அலுவல்களில் தகப்பனுக்கு முதன்மையான உரிமை உண்டு என்பது உண்மையேயானாலும் பிள்ளை மிகவும் குழந்தையானதாய் இருந்தால் (2 அல்லது 3 வயது) தகப்பனின் இந்த உரிமையை நீதி மன்றம் பறித்துத் தாயிடம் அல்லது வேறு தக்கார் யாரிடமும் கொடுக்கலாம். இப்படியாகத் தந்தையின் உரிமை பறிக்கப்பட்ட கதையொன்றை 58 புதுச்சட்ட அறிக்கைகள் என்ற தொகுதியின் 262ஆம் பக்கத்தில் காணலாம். சம்பந்தப்பட்ட பிள்ளை விவரந்தெரிந்த பெண்பிள்ளையாய் இருப்பின் அவளின் விருப்பத்திற்கிணங்க, நீதிமன்றம் அவளைத் தாயுடனோ, தந்தையுடனோ வசிக்கவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு.

இனி, அடுத்த சூழ்நிலையை அதாவது தாய் தந்தையர் மணநீக்கம் செய்திருக்கும் அல்லது சட்டப்படி பிரிந்து வாழும் சந்தர்ப்பத்தில் பிள்ளையை வைத்திருந்து, வளர்த்துக் கட்டுப்படுத்திக் கல்வியூட்டும் உரிமை யாருக்கு உண்டு என்பதை எண்ணிப் பார்ப்போம். மணநீக்கம் அல்லது சட்

டப்படியான பிரிவு, யாருடைய கூடுதலான பிழையால் ஏற்பட்டதோ அவரிடம் பிள்ளை கொடுக்கப்பட மாட்டாது. திருமணஞ்சார் தவற்றை (*Matrimonial Offence*) இழைத்தவர் தகப்பனாய் இருந்தாலும், பிள்ளை அவரிடம் கொடுக்கப்படமாட்டாது; தாயிடமே சேர்ப்பிக்கப்படும்; பிள்ளையைப் பேணிப் போசித்து வளர்ப்பதற்கு வேண்டிய வளமும் வசதியும் தகப்பனிடந்தான் உண்டு என்ற வாதம் இங்கே செல்லாது; திருமணஞ்சார் தவற்றை இழைத்தவரிடம் பிள்ளையை நீதிமன்றம் ஒப்படைக்காது.

மூன்றாவதாக, தாயோ, தந்தையோ இறந்து போய் விட்ட சூழ்நிலையைப்பார்ப்போம். தந்தை இறந்துவிட்டார் என்று வைத்துக் கொள்வோம்; பிள்ளையின் கட்டுக்காப்பு முதலிய உரிமைகள் தாய்க்கு வந்து சேரும். திருமணஞ்சார் தவறு ஒன்றைப் புரிந்தார் என்ற காரணத்தால் பிள்ளைகள் மீதான உரிமை பறிக்கப்பட்ட தகப்பன், தாய் இறந்ததும், அப்பிள்ளைகளின் கட்டுக்காவல் முதலிய உரிமைகளை இயல்பாகப் பெற்று விடுவார்; அத்தகைய தாயின் நிலையும் இதுவே ஆனால் இங்கும், ''மேலான பாதுகாவலன்'' என்று சட்டம் விதித்துள்ள நீதிமன்றத்தின் தற்றுணிபுதான் முற்றும் முடிவுமான தீர்ப்பாகக் கொள்ளப் படும்.

கட்டுக்காவல், கட்டுப்பாடு, கல்வி என்பன தகப்பனின் தனியுரிமை என்றும் அதன் விதிவிலக்குச் சூழ்நிலைகளையும் கூறினோம். பிள்ளையின் கட்டுக்காவல், கட்டுப்பாடு, கல்வி என்பனபற்றிய உரிமை தகப்பனிடம் அல்லது தாயிடம் இருந்து நீக்கப்பட்டிருக்கிறது என்பதால் அந்தப் பிள்ளையின் திருமணத்துக்கான சம்மதத்தைக் கொடுப்பதற்கான தாயின் அல்லது தந்தையின் உரிமை அவரிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படல் ஆகாது. அந்த உரிமை அவருக்கு என்றும் உண்டு; அதாவது எந்த நிலையிலும் அந்த உரிமை தாய் தந்தையர் இருவருக்கும் உண்டு. தந்தை இறந்துவிட்டால் தாய்மட்டும் சம்மதம் கொடுக்கலாம்; தாய் புத்தி சுவாதீனமற்றவராய்

இருந்தால் தந்தைமட்டும் சம்மதம்கொடுக்கலாம்; தந்தை புத்தி சுவாதீனமற்றவரானுல் தாய்மட்டும் சம்மதம் கொடுக்கலாம்.

இறுதியாக ஒன்று; பிள்ளையின் தேசிய இனத்தை அல்லது வதிவுரிமையை (*Domicil*) மாற்றும் உரிமை தந்தைக்கு மட்டும் உண்டு. ''கணவன் எவ்வினம் மனைவி அவ்வினம்'' என்பது சட்டச்சித்தாந்தம். ஆகவே இந்த உரிமை தந்தையின் தனியுரிமையாக இலங்குகின்றது. இயலாமையுற்ற தாய் தந்தையரைப் பராமரிக்க வேண்டிய கடப்பாடு பிள்ளைகளுக்கும் உண்டு என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

## கன்னிமை கெடுத்தல் அல்லது கற்பழித்தல்

## Seduction

தண்டனைச் சட்டக்கோவையின் 363ஆம் பிரிவாகிய *Rape* என்ற குற்றத்தைக் கற்பழித்தல் என்று கூறும் பிழை வழக்கம் ஒன்று நடைமுறையிலிருப்பதால் இந்தக் கட்டுரையில் அதைப்பற்றித்தான் குறிப்பிடுகிறோம் என்ற எண்ணம் சிலருக்கு ஏற்படலாம். 363ஆம் பிரிவிற் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றம் குற்றவியலைச் சார்ந்தது. இந்தக் கட்டுரையிலே உரிமையியல் சார்ந்த ஒரு தவற்றை எடுத்து விளக்குகிறோம். இந்தத் தவற்றை ஆங்கிலத்தில் *Seduction* (சிடக்சன்) என்பார்கள். இதைக் கற்பழித்தல் என்றோ கன்னிமைகெடுத்தல் என்றோ கூறுவதுதான் பொருத்தம். ''றேப்'' (வன்புணர்ச்சி) என்ற குற்றத்தை விலைமகள் மீதும் புரியலாம் என்பதால், கற்பிலாத விலைமகள் மீது கூடப் புரியப்படக் கூடிய குற்றத்தைக் கற்பழித்தல் என்று கூறுதல் பொருந்தாது என்று அபிப்பிராயப்படுகிறோம். எனவே தான் ''கற்பழித்தல்'' என்ற சொல்லை *Seduction* என்ற சொல்லின் தமிழ்மொழி பெயர்ப்பாக இந்தக் கட்டுரையில் எடுத்தாள்கிறோம். வன்புணர்ச்சி என்பது பற்றிப் பிறிதோரிடத்திலும் கூறியுள்ளோம். கன்னிமை கெடுத்தல் அல்லது கற்பழிப்புக்கான உரிமைவழக்கைப்

பொறுத்தவரையில் ஆங்கிலச் சட்டத்துக்கும் உரோமரிடச்சுச் சட்டத்துக்குமிடையே வேறுபாடுகள் பல உள்ளன. இதுதொடர்பில் ஆங்கிலேயர் சட்டம் எமது சட்டம் அல்ல என்பதால் அதைவிடுத்து உரோமரிடச்சுச் சட்டத்தில் நாட்டங் காட்டுவோம்.

பெண்ணொருத்தியின் நிறை (*Chastity*) அழியுமாறு அவளைத் தூண்டி, அவளுடைய கன்னிமையைக்கெடுப்பவர் கற்பழித்தல் என்கின்ற உரிமைத் தீங்கைப் புரிந்தவராகிறார்; அத்தகைய தீங்கைப் புரிபவர் அவளுடைய கன்னிமை கெட்டமைக்காகவும் அதன்விளைவாக அவளுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய திருமணவாய்ப்புத் தடங்கல்களுக்காகவும் அவளுக்கு நட்ட ஈடுகொடுத்தல் வேண்டும்'' என்பது சட்டம் என்று மக்கரன் (*Mc Kerron*) அவர்கள் தமது நூலிலே கூறியுள்ளார்கள்.

உரோமரிடச்சுச் சட்டத்தின்படி அவ்வாறு கன்னிமை கெடுப்பவர், ஒன்றில், அப்பெண்ணைத் திருமணஞ் செய்தாக வேண்டும்; இன்றேல் அவருக்கு நட்ட ஈடுகொடுத்தல் வேண்டும். இன்றைய இலங்கைச் சட்டத்தின்படி, நட்ட ஈடுகொடுத்தல் ஒன்றே பரிகாரமாய் உள்ளது. திருமணம் செய்யும்படி கட்டளையிடும் தத்துவம் நீதிமன்றத்துக்குக் கிடையாது. பொதுத் திருமணங்கள் கட்டளைச்சட்டத்தின் 20ஆம் பிரிவு இவ்வாறு கூறுகின்றது.

ஆணொருவன், தன்னுடைய கன்னிமையைக் கெடுத்து விட்டான் என்று கூறி அத்தீங்கிற்குஇலக்கான பெண் வழக்குத் தொடுக்க முடியும். அவளது கன்னிமை கெடுக்கப்பட்டவுடனேயே அவள்வழக்கெடுக்கலாம்; அதாவது ஊனுறுபுணர்ச்சி ஒருதரம் நிகழ்ந்திருந்தாலே போதும். தன்னைத் திருமணம் செய்யும்படி கோரி அல்லது நட்ட ஈடு தரும்படி கோரி அந்த ஆணுக்கெதிராக அவள் வழக்கெடுக்க முடியும். *Abeydeera Vs Podisingho 28 NLR 158* என்ற வழக்கில் மேற் சொன்னவாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஆண், தன்னுடைய கன்னிமையைக் கெடுத்தான் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு வழக்காளியைச் சார்ந்தது.

கன்னிமை கெடுத்தான் என்பதை எதிராளி மறுத்துரைக்காத பட்சத்தில், பெண்ணின் சான்றின்படி நீதிபதி தீர்ப்பளிக்கலாம்; அதாவது அப்பெண் கூறும் சான்றை ஒப்புறுதிப்படுத்தாமலே நீதிபதி தீர்ப்பளிக்கலாம். கன்னிமை கெடுத்தான் என்ற கூற்றை எதிராளி மறுத்துரைத்தால், நீதிபதியானவர், அப்பெண்ணின் சான்றை, (அது வேறு சான்றால் ஒப்புறுதிப்படுத்தப்பட்டாலொழிய) நம்பக்கூடாது. ஆகவே அவள் சார்பில் தீர்ப்பளிக்கவும் கூடாது என்று *Grange Vs Perera 31 NLR 85* என்ற வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஒப்புறுதிப்படுத்துகின்ற சான்றானது அந்த வழக்காளியும் எதிராளியும் நடந்து கொண்ட விதங்கள், அவர்கட்கிடையே ஊனுறுபுணர்ச்சி நிகழ்ந்திருக்கலாம் என்பதற்குச் சான்றும் ஊன்றும் அளிப்பதாய் இருந்தனவெனக் காட்டுதல் வேண்டும். இதை இன்னும் விளக்கமாகச் சொல்வதானால், ஒப்புறுதிப்படுத்தும் சான்றானது பின்வரும் அம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(1) எதிராளியானவர் வழக்காளியைத் திருமணஞ்செய்வதாக வாக்குறுதியளித்து வழக்காளியை அவருடைய வீட்டுக்குப் போய்ச் சந்தித்து வந்தார்;

(2) வழக்காளி இரவு நேரங்களில், எதிராளியின் அறைக்குச் சென்று அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்;

(3) காமஞ்சார்ந்த (சல்லாபமான) கடிதங்கள் வழக்காளி எதிராளி என்போர்க்கிடையில் பரிமாறப்பட்டன;

(4) காதற்கவிதைகள் இவர்கள் இருவர்க்குமிடையில் கொடுத்து மாற்றப்பட்டன.

இவைகளை ஒப்புறுதி (*Corroborate*) செய்ய முடியுமானால் வழக்காளி வழக்கை வெல்லுதல் சாத்தியம்.

வழக்காளியும் எதிராளியும் தவறாக நடந்து கொள்வதற்கு வாய்ப்பு இருந்தது என்று வெறுமனே கூறுதல், 'கன்னிமை கெடுக்கப்பட்டேன்' என்னும் வழக்காளி கூற்றை ஒப்புறுதி செய்வதாக அமையாது.

வழக்காளி தன்னுடைய வழக்கை நிலைநிறுத்த வேண்டுமானால், கன்னிமை கெடுக்கப்பட்டதேதியன்று தாம் ஒரு கன்னியாக இருந்தார் என்பதை வற்புறுத்த வேண்டும். ஏனென்றால் கன்னிமைச் சவ்வு (*Virgo intacta*) அறுதலே இந்தத் தீங்கிற்கு அடிப்படை. (*Lucinahamy Vs Diashamy 11 N L R 242*). திருமணஞ் செய்யாதிருக்கும் ஒவ்வொரு பெண்ணும் கன்னி என்பது சட்ட ஊகமாதலால், கன்னிமை கெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் தேதியில் வழக்காளி கன்னிமை உடையவளாய் இருக்கவில்லை என்பதை நிரூபிக்கும் பொறுப்பு எதிராளியைச் சார்ந்தது. ஆகவே, கன்னிமை கெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் தேதியன்று கன்னியாய் இராத பெண், அல்லது கைம்பெண், அல்லது திருமணமாகியிருக்கும் பெண் கன்னிமைகெடுக்கப்பட்டதாகக் கூறி வழக்கெடுக்க உரிமையற்றவராவார். கன்னிமை கெடுக்கப்படுதலை ஊக்கியவள் வழக்காளியாயின் அவ்வழக்காளி, வழக்கில் வெற்றிபெற முடியாது என்று வூற் (*Voet*) அவர்கள் கூறியுள்ளார்கள். வழக்காளியானவள், எதிராளியிடமிருந்து பணமோ பொருளோ பெற்றாள் என்ற காரணத்தால் வழக்காளியின் வழக்கு வைக்கும் உரிமை அற்று விடாது. ஆனால் அவ்வழக்காளி, எதிராளி கொடுத்த பணத்துக்கீடாகத் தமது கன்னிமையை விற்றார் எனின் வழக்கெடுக்கும் உரிமை அவருக்குக் கிடையாது. தன்னைக் கெடுத்தவர் ஏலவே திருமணம் செய்தவர் என்பதை நன்றாகத் தெரிந்தும் அவருடன் ஊனுறுபுணர்ச்சி கொள்ளும் பெண் வழக்காளி, வழக்கிலே வெற்றிபெற முடியாது. கன்னிமை கெடுக்கப்பட்டதன் பிறகு வேறொருவரை மணந்த பின்னர் அவர் இத்தகைய வழக்கைத் தொடுக்க முடியாது. கன்னிமை கெடுத்தவரைத் திருமணஞ் செய்ய மறுக்கும் பெண்ணும் இத்தகைய வழக்கில் வெற்றி பெறமுடியாது.

இத்தகைய வழக்குகளில் இன்னலுற்றவருக்கு அளிக்கப்படும் நட்ட ஈடானது மனத்தளவிலான தொழிய உண்மையான நட்டமல்லவாதலால், இத்தொகை, சம்பந்தப்பட்ட பெண்ணின் சமூக அந்தஸ்தைப் பொறுத்து அமையும்.

## சமூகத்தகுதியீனங்கள் Social Disabilities

மக்களுக்கிடையில் உயர்வு தாழ்வு கற்பிப்பது சாதி; ஒருவனை உயர்ந்தவன்என்றும் மற்றவனைத்தாழ்ந்தவன்என்றும் பாகுபடுத்தி வேறுபடுத்தி, மனிதகுல ஒற்றுமையைச் சிதைத்து வருவது சாதி; எனவே தான் சாதியால் வரும் பாகுபாடு வேண்டாம் என அரசு வேண்டியிருக்கின்றது. இந்தியாவும் சட்டம் வகுத்தது. இலங்கையும் ஒரு சட்டத்தை ஆக்கியுள்ளது. மனிதப்பண்பால், தன் உணர்வால் மனம் திருந்தாத சமூகம் சட்டத்தாலாதிருந்திவிடும்? சட்டத்தையுமே எதிர்த்துப் போராடியது. ஆளும் அதிகாரம் படைத்த அரசு முதலில் ஆக்கிய சட்டத்திலிருந்த குறைகளை நீக்கி, கூடிய அதிகாரத்துடனுன மற்றுமொரு சட்டத்தையும் ஆக்கியுள்ளது; இவை தரும் நலன்களைச் சிறிது ஆராய்வோம்.

ஒருவரின் சாதி காரணமாகச் சமூகத்தில் தகுதியீனம் எதனையும் அவர்மீது சுமத்தலாகாது என விதிக்கும் சட்டம் 1957ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கச் சட்டமாக ஆக்கப்பட்டது. இஃது அவ்வாண்டு ஏப்பிரில் 13ஆந் தேதி நடைமுறைக்கு வந்தது. சட்டமாக்கும்முறைக்கிணங்க, என்ன என்னசெயல்கள்தகுதியீனத்தைச்சுமத்துவனவாகும்என்று கூறி அவற்றைச் செய்வதைத் தவறுகளாக்கி விரிக்கின்றது ஒரு பிரிவு. அத்தவறுகளுள் எதனையாவதுபுரிபவர் தண்டிக்கப்படுவர் எனத் தண்டனையை விதிக்கின்றது வேறொரு பிரிவு. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் சில பின்வருமாறு:—

(அ) (1) கல்வி நிலையத்தில் மாணவராக அல்லது ஆசிரியாகச் சேர்தல்;

(2) கடை சந்தை முதலிய இடங்களுக்குச் செல்லல், வாங்குதல்;

(3) உணவுச்சாலையில் உணவு அருந்துதல், உணவு கொடுக்கப்படுதல்;

(4) வாடிவீடு முதலியவற்றில் தங்கு வசதி பெறுதல்;

(5) பொதுக் கிணறு முதலியவற்றில் தண்ணீர் மொள்ளுதல்;

(6) சலூனுக்குள் செல்லுதல், சேவை பெறுதல்;

(7) சுடுகாட்டைப் பயன்படுத்தல்;

(8) எவ்வகையனவுமான உடை, தலைப்பாகை, பாத அணி முதலியன அணிதல்;

(9) போக்குவரத்து வாகனம், மரக்கலம் முதலியவற்றை பயன்படுத்தல்;

(10) ஆலயம், தேவாலயம், கோவில், கிறித்துவக் கோவில், பள்ளிவாசல், வேறு சமய வழிபாட்டு இடம் என்பவற்றுள் செல்லல், அங்கே தங்கி நிற்றல்;

(11) சட்டமுறையான ஏதேனும் தொழிலைப் புரிதல்—

ஆகியவற்றில் சாதிகாரணமாகத் தடைசெய்தல் அல்லது மறித்தல் தவறு ஆகும்.

(ஆ) அச்சமயத்தைப் பின்பற்றும் வேறு ஆட்கள் செல்லக் கூடியதான வழிபாட்டிடத்தினுள் நுழைதல், தொழுதல் என்பவற்றைத் தடை செய்தலும்;

(இ) பகிரங்க அலுவலராயுள்ளவர் இவை தொடர்பில் தமது கடமையைப் புரியத்தவறுதலும்;

(ஈ) பொதுமக்கள் செல்லக்கூடிய வேறு ஏதேனும் இடத்தினுள் செல்வதனைத் தடைசெய்தலும்

தவறுகளாகும்.

அண்மைக் காலங்களில் சாதிப்பாகுபாட்டுக்கெதிராக எழுந்த கிளர்ச்சிகளின் பயனாகத் தொடரப்பட்ட சில வழக்குகளில் இச்சட்டம் உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக் குட்படலாயிற்று. வெவ்வேறு கருத்துகளும் அளிக்கப்படலாயின, செல்வந்திநாதன் எதிர் நாகலிங்கம் 69புசஅ419.

காங்கேசன்துறைபொலிசுப்பரிசோதகர்எதிர்சுந்தரலிங்கம் மல்லாகம் நீநீ 4700 உநீ 1162/68- இவ்வழக்கில் இச்சட்டம் அரசியலமைப்பின் 29 (2) (ஈ) என்னும் பிரிவுக்கும் தேசவழமையின் 4 ஆம் பிரிவுக்கும் முரணுனது என வாதிடப்பட்டது. ஆனுல் பிரதம நீதியரசர் எச். என். ஜீ. பர்ணுந்து அதனை ஏற்க மறுத்து விட்டார். அத்துடன் இச்சட்டம் புதிய உரிமைகளை வழங்கவில்லை; ஏற்கனவே இருந்து வந்த உரிமை எதனையேனும் மறுப்பதனையே தடை செய்கின்றது என்று செவ்வந்திநாதனின் வழக்கில் நீதியரசர் ரி. எஸ். பர்ணுந்து கூறியதனையும் கண்டித்துள்ளார். பாராளுமன்றம் எக்குறைபாட்டை நீக்கக் கருதி இச்சட்டத்தை இயற்றியதோ அது கைகூடாவிதமாக இச்சட்டத்துக்குக் குறுகிய பொருள் கொடுத்தல் முறையாகாது எனவும் நீதியரசர் கருத்துத் தெரிவித்தார். எனினும் இரு தீர்ப்புகளும் ஒரே அளவு பலம் கொண்டனவாதலின், (தனி ஒரு நீதியரசர் தீர்ப்பானமையின்) பின்னைய தீர்ப்பு முன்னைய தீர்ப்பினை வலுக்கெடுக்கும் ஆற்றல் கொண்டதல்ல.

நிலைமையிவ்வாருதலின், அரசாங்கம் திருத்தச்சட்டம் ஒன்றன் மூலம் அதனைச் செம்மைப்படுத்த எண்ணி 1971ஆம் ஆண்டின் 18ஆம் இலக்கச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. அதன்படி

(அ) பொதுக்கிணறு முதலியவற்றின் நீரைப் பழுதாக்கலும்,

(ஆ) கல்வி நிறுவனத்தின் கிணறு முதலியவற்றின் நீரை அங்குள்ள ஒருவர் பயன்படுத்துவதனைத் தடைசெய்தலும்,

(இ) அந்நிறுவனத்தின் முயற்சியில் பங்குபற்றுவதனைத் தடைசெய்தலும்—

தவறுகளாக்கப்பட்டுள்ளன.

பொலிசாருக்கும் கூடுதலான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்ட ஏற்பட்டிற்கு முரணுகப் பூட்டப்

பட்ட கதவினையோ படலையையோ திறக்கவும், வைக்கப் பட்ட தடையை அகற்றவும், தவறு புரியக்கூடியவர் என நியாயமாக நம்பக் கூடிய ஆளைப்பிடியாணையின்றிக் கைது செய்யவும் அதிகாரமுண்டு.

தண்டனை அளவின் மேல் எல்லை முன்னர் 6 மாத மறிய லும் 100ரூபா குற்றப்பணமுமாகவிருந்தது. இப்பொழுது அது மூன்றுண்டாகவும், மூவாயிரம் ரூபாவாகவும் உயர்த் தப்பட்டுள்ளது. அத்துடன் உரிமம் ஒன்றின் கீழ் நடை பெறும் வியாபாரம் தொடர்பில் இச்சட்டத்தின் கீழான தவறுபுரியப்பட்டால் அந்த உரிமமே பறிமுதலாகும். அத னல் மூன்றுஆண்டுகளுக்குஅவ்வியாபாரத்தைச் செய்யவிய லாது. செய்தால் அச்செயல் வேறு தண்டனைக்குரியது. அதன் மேலெல்லை இரண்டாண்டு மறியலும், ஓராயிரம் ரூபாக் குற்றப்பணமும் ஆகும்.

சான்று அளித்தல்தொடர்பிலும் சலுகைஅளிக்கப்பட் டுள்ளது.சாதி காரணமாகத் தகுதியீனம் சுமத்தப்பட்டுள் ளது என்றுகூறும் ஒருவரே பொதுவாக அதனை நீதிமன்றத் தில் நிரூபிக்க வேண்டும்.இதுவே வழமையானநெறி.ஆனல் சலுகையின்படி,தகுதியீனம்சுமத்தப்பட்டுள்ளதுஎனஒருவர் முறையிட்டால் நீதிமன்றமும் அது அவ்விதமே என ஏற்றுக் கொள்ளும். குற்றஞ்சாட்டப்பட்டவர் அதாவது எதிரி அது அவ்விதமல்ல என்று காட்டுதல் வேண்டும். இதன் காரணமாக எண்பிப்புப் பொறுப்பு வழக்காளியிலிருந்து எதிரிக்கு மாற்றப்பட்டுள்ளது. நடவடிக்கை முறையிலும் ஒரு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின் கீழான தவறுகள் நீதிவானின் முன் அனுமதியின்றி, அதா வது பிடியாணையின்றிக் கைது செய்யக்கூடிய தவறுகளா கும் எனவும் விதிக்கப்பட்டுள்ளது.

# சொற்றொகுதி

## தமிழ் - ஆங்கிலம்

### அ

அக்கறை — *Interest*
அச்சுறுத்தல் — *Intimidation*
அச்சுறுத்திப்பறித்தல் — *Extortion*
அசைசு நீதிமன்றம் — *Assize Court*
அசைவற்ற ஆதனம் — *Immovable property*
அசைவுள்ள ஆதனம் — *Movable property*
அடமானம் வைத்தல் — *Hypothecate*
அடல்ரறி (அலவல்) — *Adultery*
அடுத்தடுத்த — *Consecutive*
அடைத்துவைத்தல் — *Confine*
அத்தியாயம் — *Chapter*
அத்துமீறல் — *Trespass*
அப்பாவி — *Innocent person*
அப்போதைக்கு — *For the time being*
அபத்தமுடிவு — *Reductio ad absurdum*
அமர்வுகள் — *Sessions*
அமைப்புச்சட்டம் — *Constitution*

அரசப் பேரவைக்கட்டளை — *Order-in-Council*
அரசன் தீங்கிழையான் — *King can do no wrong*
அலவல் — *Adultery*
அலவுதல் — *Adulter*
அலவுவாள் — *Adulteress*
அலவுவான் — *Adulterer*
அவதூறு — *Defamation*
அழைப்பாணை முதலியன — *Process*
அழைப்புக் கட்டளை — *Summons*
அற்பத்தில் அக்கறை சட்டத்துக்கில்லை — *De minimis non curat lex*
அற்பமான — *Frivolous*
அற்றோணித்தத்துவம் — *Power of attorney*
அறிவித்தல் வெளியிடப்பட்ட ஆதனம் — *Notified property*
அறிவு — *Knowledge*
அறுதியிடுவாக்கு — *Casting vote*
அனுமதி — *Permission*
அனுமதிச்சீட்டு — *Permit*
அனுமானம் — *Inference*

## ஆ

ஆட்கடத்தல் — *Abduction*
ஆட்கவர்தல் — *Kidnapping*
ஆட்கள்பற்றிய சட்டம் — *Law of Persons*
ஆட்கொணர் எழுத்தாணை — *Writ of Habeas Corpus*
ஆட்சி — *Possession*
ஆட்சிக்காரன் — *Possessor*
ஆணை — *Fiat*
ஆணையீட்டெழுத்தாணை — *Writ of mandamus*
ஆத்திரமூட்டல் — *Provocation*
ஆதன இழப்பு — *Forfeiture of property*
ஆதனக்காப்புரிமை — *Right of defence of property*
ஆதனம் — *Property*
ஆதனம் பற்றிய சட்டம் — *Law of property*
ஆதிக்கமுள்ள குடிமனை — *Dominant Tenement*

ஆதியிலிருந்தே — *Ab initio*
ஆய்க்கினையபராதங்கள் — *Pains and Penalties*
ஆய்நிகழ்வு — *Fact in issue*
ஆயத்தம் — *Preparation*
ஆவணம் — *Document; Instrument*
ஆள்நிலை வழக்கு ஆளுடன் முடியும் — *Actio personalis moritur cum persona*
ஆள்புலம் — *Territory*
ஆளிலாச் சொத்து — *Res nullius*
ஆளிலாச் சொத்து அரசின் சொத்து — *Quod nullius est, est domini regis*
ஆற்றுதல் — *Perform*
ஆற்றுப்படுத்தல் — *Refer*
ஆற்றுப்படை — *Reference*

## இ

இசைவிலாப் புணர்ச்சி — *Rape*
இடக்கர் — *Obscene words*
இடத்து வழங்கு சட்டம் — *Lex situs*
இடருற்றவர் — *Aggrieved person*
இடாப்பு — *Register*
இடைக்கால — *Interim*
இணக்கச் சபைகள் — *Conciliation Boards*
இணக்குதல் — *Compound*
இயைவான நிகழ்வு — *Relevant fact*
இரட்டுறவு — *Ambiguity*
இருதுணைநிலை — *Bigamy*
இருபுறமும் கேட்க — *Audi alteram partem*
இருவகையிலொருவகை — *Of either description*
இலச்சினை — *Seal*
இளங்கணர் — *Ward*
இளந்தவருளர்க்கான நீதிமன்றம் — *Juvenile court*
இறந்து பிறக்கும் பிள்ளை — *Still born child*
இறப்பு வாக்குமூலம் — *Dying declaration*
இறு — *Defray*

இறுதிவிருப்பாவணம் — *Will, Testament.*
இறுதி விருப்புத் தெரிவிப்பவர் — *Testator*
இறுதி விருப்புத் தெரிவியாத — *Intestate*
இறுதி விருப்புப் பற்றிய — *Testamentary*

ஈ

ஈடு — *Mortgage*
ஈடு பெறுவோன் — *Mortgagee*
ஈடு வைப்போன் — *Mortgagor*

உ

உசாவல் — *Reference*
உட்கை — *Collusion*
உட்பிரிவு — *Subsection*
உடந்தை அளிப்பவர் — *Abettor*
உடலுக்குக் காயம் விளைவித்தல் — *Causing hurt to the body*
உடற்றண்டனை — *Corporal punishment*
உடற்றண்டனைக் கட்டளைச் சட்டம் — *Corporal punishment ordinance*
உடைமை — *Possession*
உண்மையான — *Truly*
உதாரணம் — *Example*
உயர் நீதிமன்றம் — *Supreme court*
உயிர்போக்கல் — *Homicide*
உரித்து — *Title*
உரித்தாக்கற் கட்டளை — *Vesting order*
உரித்தைக் கைவிடும் கட்டளை — *Divesting order*
உரிமை — *Right*
உரிமை ஓலை — *Letters patent*
உரிமைகோருமறிவித்தல் — *Notice of claim*
உரிமை கோருநர் — *Claimant*
உரிமையாளர் — *Proprietor; Heir*
உரிமை துறக்கும் அறிவித்தல் — *Notice of disclaimer*
உரிமையியல் — *Civil*
உரை நிகழ்த்து — *Address (the court)*

உரோமரிடச்சுச் சட்டம் — *Roman - Dutch-Law*
உள்ளூராட்சிச் சட்டம் — *Local Govt Law*
உள்ளூர் நியாயப்பிரமாணம் — *Local law*
உள்மறைவான — *Latent*
உளவுந்தல் — *Motive*
உறுதல் — *Incur*
உறுதிகேள் எழுத்தாணை — *Writ of Certiorari*

ஊ

ஊகம் — *Presumption*
ஊர்நீதிமன்றம் — *Rural court*
ஊரடங்குச்சட்டம் — *Curfew*
ஊழியர் — *Employee*
ஊறு } *Injury*
ஊறுபாடு } *Injury*
ஊனுறு புணர்ச்சி — *Carnal intercourse*

எ

எடுத்துக்காட்டு — *Illustration*
எண்பிப்பு — *Proof*
எண்பிப்புப் பொறுப்பு — *Burden of proof*
எத்தனம் — *Attempt*
எதிர்வாதம் — *Defence*
எதிர்வாதி — *Respondent*
எதிராளி — *Defendant*
எதிரி — *Accused*
எழுதாச்சட்டம் — *Lex non scripta*

ஏ

ஏமாற்றுதல் — *Cheating*
ஏற்பாடுகள் — *Provisions*
ஏற்ற மாற்றங்களுடன் — *Mutatis mutandis*

ஐ

ஐயம் — *Doubt*
ஐயத்தின் நற்கூறு — *Benefit of the doubt*

## ஒ

ஒப்பந்தச் சட்டம் — *Law of contract*
ஒப்பந்தம் மீறல் — *Breach of contract*
ஒப்புதல் — *Admission*
ஒப்புறுதிப்படுத்து — *Corroborate*
ஒருகட்சி — *Ex parte*
ஒரேகருத்து — *Common intention*
ஒழுக்க முறைக்குரிய — *Disciplinary*
ஒழுங்கற்ற — *Irregular*
ஒழுங்குபடுத்தல் — *Regulate*
ஒழுங்குவிதி — *Regulation*
ஒற்றி — *Usufructuary mortgage*

## ஓ

ஓம்படை — *Trust*
ஓய்வூதியம் — *Pension*
ஓரக்குறிப்பு — *Marginal note*

## க

கட்புலக்காட்சி — *Visible representation*
கடப்பாடுகள் — *Obligations*
கடமை — *Duty*
கடனாழ்நிதி — *Sinking fund*
கடனிறுவகையறவுச் சட்டம் — *Law of Insolvency*
கடும்பொறுப்பு — *Strict liability*
கடூழிய — *Rigorous*
கருத்து — *Intention*
கருத்தொருமை — *Consensus ad idem*
கலகம் — *Riot*
கவலையீனம் — *Negligence*
கவனத்துட்படுத்தல் — *Cognisance*
களவாடிய பொருள் — *Stolen property*
கற்பழிப்பு — *Seduction; Defilement*
கனவானே — *Your Honour*
கனிட்ட நீதியரசர் — *Puisne Justice*

கா

காட்டப்படலாம் — *May be cited*
காதி நீதிமன்றம் — *Quazi court*
காப்புவாசகம் — *Proviso*
காயம் — *Hurt*
காலவரையறை விதித்தல் — *Prescription*

கி

கிராம நீதிமன்றம் — *Rural court*

கீ

கீழ்க்குடிவாரக்காரன் — *Sub-tenant*

கு

குடியியல் — *Civil*
குடிவாரக்காரன் — *Tenant*
குடிவாரம் — *Tenancy*
குத்தகைக்கு விடுதல் — *Lease out*
குத்தகைக்குக் கொடுப்போன் — *Lessor*
குத்தகைக்கெடுப்போன் — *Lessee*
குழாம் — *Panel*
குழுமம் — *Firm*
குற்றங்களை இணக்கமாகத் தீர்த்தல் — *Compounding of offences*
குற்றச்சாட்டுக்களை இணைத்தல் — *Joinder of charges*
குற்றச்சாட்டு — *Charge*
குற்றச் செயல் — *Actus reus*
குற்றஞ் சாட்டப்பட்டவர் — *Accused*
குற்றத் தீர்ப்பு — *Conviction*
குற்றப்பணம் — *Fine*
குற்றப்பத்திரிகை — *Indictment*
குற்றப்பொறுப்பாளி — *Guilty*
குற்றம் புரியக் கூடியவர் — *Doli Capax*
குற்றம் புரிய முடியாதவர் — *Doli incapax*

குற்றமனம் — *Mens rea*
குற்றமான (மனித) உயிர் போக்கல் — *Culpable homicide*
குற்றமான கையாடல் — *Criminal misappropriation*
குற்றமான நம்பிக்கை மோசம் — *Criminal breach of trust*
குற்றவழக்கு — *Prosecution; Criminal Case*
குற்றவியல் — *Criminal*
குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை — *Criminal Procedure Code*
குற்றவியல் வலோற்காரம் — *Criminal force*
குற்றவிறுப்பு — *Penalty*
குற்றவொப்புதல் — *Confession*

## கூ

கூட்ட நடப்பெண் — *Quorum*
கூட்டாளிகள் — *Partners*
கூட்டுக்குற்றவாளி — *Accomplice*
கூற்று — *Statement*

## கை

கைப்பற்றல் — *Seize*
கைம்பெண் — *Widow*

## கொ

கொலை — *Murder*
கொள்ளப்படுகின்ற — *Purported*
கொள்ளை — *Robbery*

## கோ

கோமறைப் பேரவை } *Privy Council*
கோமறைக் கழகம் }

## ச

சட்டம் — *Law, Act*
சட்டஅறிஞர் — *Lawyer*

சட்டத்தின் ஆட்சி — *Rule of Law*
சட்டத்தின் முன் அனைவரும் சமம் — *All are equal before law*
சட்டத்துறைத் தலைமையதிபதி — *Attorney General*
சட்டந்தெரியாமை எவரையும் மன்னியாது; சட்டந்தெரியாமை சாக்காகாது — *Ignorantia legus niminem excusat*
சட்டப்படியான பிரிவு வாழ்க்கை — *Judicial Separation*
சட்டமாக்கல் — *Legislation*
சட்டவரைநர் — *Legal Draftsman*
சட்டவாக்கம் — *Legislation*
சட்டவிடயம் — *Matter of law*
சட்டவிரோதம் — *Illegal*
சட்டவுருப் பெறுதிருக்கும் சட்ட மூலங்கள் — *Pending bills*
சட்டவுரைஞர் — *Counsel*
சத்தியக்கடுதாசி — *Affidavit*
சத்தியம் — *Oath*
சதி — *Conspiracy*
சவுக்கடி — *Whipping*

## சா

சாட்சி — *Witness*
சாட்சி முதல் விசாரணை — *Examination - in - Chief*
சாட்சி முரணுகிறார் எனக் காட்டுதல் — *Contradict the witness*
சாட்டுதல் — *Assign*
சாப்பின் ஆய்வு — *Post mortem; autopsy*
சான்றுளர் — *Witness*
சான்று — *Evidence*
சான்று பற்றிய சட்டம் — *Law of Evidence*

## சி

சிவில் — *Civil*
சிறப்பறிஞர் — *Specialist*
சிறப்பான நியாயப்பிரமாணம் — *Special law*
சிறப்புரிமைகள் — *Privileges*

## சு

சுங்கச் சேகரிப்பாளர் — *Collector of Customs*
சுங்கவரிகள் — *Custom duties*
சுடுகாடு இடுகாடு கட்டளைச் சட்டம் — *Cemeteries and Burials Ordinance*
சுடுபடைக்கலம் — *Fire arms*
சுத்தவாளி — *Innocent; not guilty*
சுருக்கப் பெயர் — *Short title*
சுருக்க முறை — *Summary manner*
சுற்றுலா — *Circuit*

## செ

செய்கை — *Act*
செய்யாது விடுகை — *Omission*
செய்யெனும் ஆணை — *Mandatory Injunction*
செயல் — *Act*
செயலே செப்பும் — *Res ipsa loquitur*
செயற்கோவை — *Transaction*

## சே

சேமிப்புகள் — *Savings*
சேவையாளர்கள் — *Servants*

## சொ

சொத்தழிவு — *Mischief*
சொத்தாண்மை } *Ownership*
சொத்துவம் } *Ownership*
சொந்தக்காரர் — *Owner*
சொல்லக் கேட்ட சான்று — *Hearsay evidence*
சொல்லமைப்பு — *Expression*
சொலிசிற்றர் செனரல் — *Solicitor General*

## சோ

சோந்தை — *Lien*

## ஞா

ஞாபகந்தீட்டுதல் — *Refresh memory*

## த

தகாத செல்வாக்கு — *Undue influence*
தகுதிவாய்ந்த நீதிமன்றம் — *Competent Court*
தட்டிக்கழித்தல் — *Evasion*
தடுத்து வைத்தல் — *Detain*
தடைசெய் — *Obstruct*
தடையீட்டெழுத்தாணை — *Writ of Prohibition*
தடையெச்சரிக்கை — *Caveat*
தண்டவியல் — *Penology*
தண்டனை — *Punishment*
தண்டனைச் சட்டக் கோவை — *Penal Code*
தண்டனைத் தீர்ப்பு — *Sentence*
தண்டனையளி — *Sentence*
தத்துவம் — *Power*
தலைப்பு — *Title*
தலைவர் — *President*
தவணை தவறுதல் — *Default*
தவணை தவறுநர் — *Defaulter*
தவறுளர் — *Offender*
தவறு — *Offence*
தவறுதலாக — *Per incuriam*
தவிசாளர் — *Chairman*
தள்ளிவைத்தல் — *Set aside*
தற்காப்புரிமை — *Right of private defence*
தற்றுணிபு — *Discretion*
தனித்தனியாகவும் கூட்டாகவும் — *Severally and jointly*

## தா

தாக்கு — *Assault*
தாயுறுதி — *Title Deed*
தான் விழை விடை வினா — *Leading question*

## தி

திரட்டு — *Return*
திருட்டு — *Theft*
திருமணம் — *Marriage*
திருமண வழக்கிடைப் பராபரிப்புப்படி — ***Alimoni pendente lite***

## தீ

**தீ எண்ணம்** — *Mala fide*
**தீங்காளர்** — *Wrong doer*
**தீங்கியல்** — ***Tort***
**தீங்கியற் சட்டம்** — *Law of **Torts***
**தீங்கு** — *Tort; Delict*
**தீங்கு விளைக்கும்** — *Offensive*
**தீங்கெண்ணத்துடன்** — *Maliciously*
**தீங்கெண்ணம்** — *Malice*
**தீர்ந்த** பிரச்சனை — *Res adjudicata*
**தீர்ப்**பிடைக்கூற்று — *Obiter dictum*
**தீர்ப்பு** — *Judgment*
**தீர்க்கமான** தொகைக்கான கோரிக்கை — ***Liquid Claims***
**தீர்மானம்** — *Resolution*
**தீர்வை** -- *Decree*
**தீர்ப்புப்** பெற்ற கடன் கொடுத்தவர் — ***Judgment Creditor***
**தீர்ப்புப்** பெற்ற கடனாளி -- ***Judgment debtor***

## து

துடிபிள்ளைத்தாய்ச்சி — *Quick with Child Woman*
துணிபுரை — *Verdict*
துணைமையான சட்டவாக்கம் — ***Subsidiary legislation***
துணைவிதி — *Bylaw*
துர்ப்பழக்க வழக்கங்கள் — ***Corrupt practices***
துலக்கமான — *Conspicuous*
துறைபோக்கி — *Pass Port*

## தூ

தூண்டுதல் — ***Inducement***

## தே

தேவைக்கெடுத்தலைக் கைவிடுங்கட்டளை — *Derequisitioning order*

தேவைக்கெடுத்தற் கட்டளை — *Requisition order*

## தொ

தொடுநோய் — *Contagious disease*
தொல்லை — *Nuisance*
தொழில்தருநர் — *Employer*
தொழில் பெறுநர் — *Employee*
தொற்றுநோய் — *Infectious disease*

## தோ

தோம்பு — *Pedigree*

## ந

நடவடிக்கை — *Proceedings*
நடவடிக்கைமுறைச்சட்டம் — *Adjective law*
நடுக்கட்டல் — *Sequestration*
நடுவர் — *Arbitrator*
நம்பிக்கைத்துரோகம் — *Breach of trust*
நம்பிக்கைப் பொறுப்பாளர் — *Trustee*
நம்பிக்கைப் பொறுப்பு — *Trust*
நல்லெண்ணம் — *Good faith; bona fide*
நன்கொடை — *Grant*

## நா

நாட்டாயிடைச் சட்டம் — *International law*

## நி

நிகழ்வு — *Fact*
நிகழ்வு விடயம் — *Matter of fact*
நிபந்தனைக் கட்டளை — *Order nisi*
நிபந்தனை மன்னிப்பு — *Conditional pardon*

நிபுணர் — *Expert*
நிபுணர் சான்று — *Expert evidence*
நியதிச்சட்டங்கள் — *Statutes*
நியாயசபை — *Tribunal*
நியாயப்பிரமாணம்(சட்டப்பிரமாணம்) — *Law*
நியாயமானகாலம் — *Reasonable time*
நியாயாதிக்கம் — *Jurisdiction*
நிலையா அவதூறு — *Slander*
நிவர்த்திசெய்யக்கூடியது — *Curable*
நிவாரணங்கள் — *Remedies, Relief*
நிறைகுழாம் — *Full Bench; Collective Court*

நீ

நீதித்துறை — *Judiciary*
நீதிமுறை — *Judicial*
நீதிமுறைத்தற்றுணிபு — *Judicial discretion*

நு

நுண்ணுய்வு — *Investigation*

நே

நேர்மையீனமாக — *Dishonestly*

நொ

நொத்தாரிசு — *Notary*

ப

பகுத்துணர்வுடைய — *Judgmatic*
பகுதி — *Part*
பங்கம் — *Prejudice*
பங்குடையவர் — *Share holder*
பட்டினசபை — *Town Council*
பணப்பொருளக்கறை — *Pecuniary interest*
பணவிடைஞ்சல் — *Pecuniary embarassment*
பணிப்பாணை — *Precept*

பத்தி, நிரல் — *List*
பதவிவழி — *Ex officio*
பதிலிப்பத்திரம், பதிலி — *Proxy*
பதிவுச்சுவடி } *Record*
பதிவேடு }
பந்தி — *Paragraph*
பயந்துபணியவை — *Overawe*
பராதீனப்படுத்தல் — *Alienate*
பராயமின்மை — *Nonage; Minority*
பரிகாரம் — *Remedy*
பருவநீதிமன்றம் — *Assize court*
பழிசுமத்தல் — *Imputation*
பறைசாற்றுதல் — *Proclamation*

## பா

பாகம் — *Part*
பாதகம் — *Prejudice*
பாரதூரமான காயமுண்டுபண்ணுதல் — *Causing grievous hurt*
பாரப்படுத்து — *Commit*
பாராளுமன்றச் செயலாளர் — *Parliamentary secretary*
பாரியதும் திடீரானதுமான ஆத்திரமூட்டல் — *Grave and sudden provocation*
பாலிய — *Juvenile*

## பி

பிடியாணை — *Warrant*
பிடியாணையின்றிக் கைது செய்யக்கூடிய தவறு — *Cognisable offence*
பிணிக்கும் வலிமை — *Binding force*
பிணைமுறி — *Bail bond*
பிணையாள் — *Surety*
பிரபு அவர்களே — *My Lord!*
பிராது — *Plaint*
பிரிவு — *Section*

பிரிவுக்குழாம் — *Divisional bench*
பிரேதப்பரிசோதனை — *Postmortem*
பிரேரணை — *Motion*
பிறங்கடை (வாரிசு) — *Heir*
பிறன்வினைப் பொறுப்பு — *Vicarious liability*
பின்வாங்கு (கைவாங்கு) — *Withdraw*
பின்னடி — *Descendant*
பின்னிணைப்பு — *Appendix*

## பு

புதுப்புனைவு உரிமைகள் — *Patent rights*
புதுவதாக — *De novo*

## பூ

பூப்பழிவு — *Defloration*

## பெ

பெண் — *Female*
பெண்மைகெடுத்தல் — *Seduction*
பெறுமானப்படி — *Ad valorem*

## பே

பேணல்கள் — *Savings*
பேணுதல், (தாபரித்தல்) — *Maintenance*
பேராளர் — *Delegate*

## பொ

பொது, (பகிரங்க) — *Public*
பொதுமக்கள் வாக்கெடுப்பு — *Plebiscite*
பொதுவிதிவிலக்குகள் — *General exceptions*
பொய்ச்சாட்சி — *Perjury*
பொய்புனைதல் — *Fabricate*
பொய்யாவணம் புனைதல் — *Forgery*
பொருணிலைச்சட்டம் — *Substantive law*
பொருத்தமற்ற குற்றப்பிணைப்பு — *Misjoinder of charges*

ாருள்கோடல் — *Interpretation*
ாருளமைத்தல் — *Construe*
ொறுப்பு — *Responsibility; burden*

## போ

போகவிடு — *Release*
போர்ப்படை நீதிமன்றம் — *Courts Martial*
போலியாக்கல் — *Counterfeit*

## ம

மக்களின் நலனே சட்டநோக்கு ஆகட்டும் — *Salus populi suprema lex esto*
மகவேற்பு — *Adoption*
மட்டுப்படுத்தல் — *Regulate*
மட்டுப்பாடு — *Restriction*
மணநீக்கம் (மணமுறிவு) — *Divorce*
மதுபோதை — *Intoxication*
மரணசாதன — *Testamentary*
மரணசாதனத் தத்துவக்காரர் — *Executor*
மரணசாதனத் தத்துவக்காரர், உரிமைத் தத்துவக்காரர் பற்றிய சட்டம் — *Law of executors and administrators*
மரணசாதனத் தத்துவப்பத்திரம் — *Probate*
மரணம் — *Death*
மரணவிசாரணை — *Inquest*
மறுகட்சியின்றி — *Ex parte*
மறுதலி — *Rebut*
மறைமுக அவதூறு — *Innuendo*
மறைமுக ஆதரவு — *Connivance*
மன்றுடியார் (சொலிசிற்றர்) — *Solicitor*
மன்னித்து மறத்தல் — *Condonation*
மனங் குற்றமின்றிச் செயல் குற்றமில்லை — *Actus non facit reum nisi mens sit rea*
மனுதார் — *Petitioner*
மாட்சிமைதங்கிய — *His(Her) Majesty*
மாற்றுந்தாய் — *Step mother*

## மீ

மீப்பார்ப்போர் — *Supervisors*
மீள்நோக்கு — *Revision*
மீளஉயிர்ப்பித்தல் — *Resuscitation, Revival*
மீளாய்வு — *Review*

## மு

முகத்தோற்றமளவில் — *Exfacie*
முகாந்தரம் — *Grounds*
முடிவான — *Conclusive*
முடியின் உரிமைகள் காலத்தால் அழியா — *Nullum tempus occurit reges*
முடிவான கட்டளை — *Order absolute*
முதல்நிலையான (பூர்வாங்க) — *Preliminary*
முதற்றோற்றமளவில் — *Prima facie*
முதன்மைச்சட்டவாக்கம் — *Principal enactment*
முதனிலை நியாயாதிக்கம் (ஆரம்பநியாயாதிக்கம்) — *Original jurisdiction*
முதுகண்ணர் — *Warden*
முற்றுக்கட்டளை — *Order nisi*
முற்றுனதும் முடிவானதும் — *Final and Conclusive*
முறைகேடாக அடைத்துவைத்தல் — *Wrongful confinement*
முறைகேடாகத் தடுத்துவைத்தல் — *Wrongful restraint*
முறைகேடானபேறு — *Wrongful gain*
முறைமணப்பிள்ளை — *Legitimate Child*
முறைப்பாட்டாளர் — *Complainant*
முன்னைய நிகழ்ச்சிகள் — *Precedents*

## மூ

மூலாதாரமான சான்று — *Substantive evidence*

## மே

மேற்செலென் எழுத்தாணை — *Writ of procedendo*
மேன்முறையீட்டாளர் — *Appellant*

மேன்முறையீட்டு நியாயாதிக்கம் — *Appellate jurisdiction*
மேன்மைதங்கிய — *His(Her) Excellency*

## மோ

மோசடியாக — *Fraudulently*

## ய

யாதுரிமை எழுத்தாணை — *Writ of Quo warranto*

## வ

வசதியுரிமை — *Easement; Servitude*
வசைச்சாட்டு — *Imputation*
வதந்தி — *Rumour*
வம்புப்பிறவி — *Bastard*
வமிசாவளி — *Pedigree*
வரம்பிகந்த (விறலிறந்த) — *Ultra vires*
வரி — *Tax*
வருவாய் — *Revenue*
வலுவழித்தல் — *Overrule*
வலோற்காரம் — *Force*
வழக்கறிஞர் — *Proctor*
வழக்கறிஞரில்லாக் கட்சிக்காரர் — *Unrepresented party*
வழக்காடி — *Litigant*
வழக்காளி — *Plaintiff*
வழக்கிடை — *Interlocutory*
வழக்கின்குணநயம் - *Merits of the case*
வழக்கு — *Suit; Case*
வழக்குத்துணை — *Next friend*
வழக்குமூதல் — *Cause of action*
வழக்குரைஞர் — *Advocate*
வழக்கெடுப்போர் பக்கச்சாட்சி — *Prosecution witness*
வழக்கெதிர்ப்பார் சாட்சி — *Defence witness*
வளவு — *Premises*
வளாகம் — *Campus*
வன்புணர்ச்சி — *Rape*

வா

வாக்குமூலம் — *Deposition*
வாக்குறுதி — *Promise*
வாங்குவோனே விழித்திரு — *Caveat emptor*
வாரத்துக்குப் பயிர்செய்பவர் — *Tenant cultivator*
வானிடிந்து வீழினும் வழங்குக நீதி — *Fiat justice ruat caelum*

வி

விசாரணை — *Inquiry*
விசுவாசம் — *Allegiance*
விட்டுவிடுதல் — *Discharge*
விடுதலைசெய் — *Acquit*
விண்ணப்பகாரர் — *Applicant*
விதி — *Rule*
விதிப்பாணை — *Mandate*
விதிமுறையான — *Formal*
விதிமுறையிலாத — *Informal*
விரிவுப்பெயர் — *Long title*
விருப்புடன் — *Voluntarily*
வில்லங்கம் — *Encumbrances*
விலக்காணையிடுதல் — *Proscribe*
விளக்கம் — *Trial; Explanation*
விழைந்தவருக்குத் தீங்கு ஆமாறு இல்லை — *Volenti non fit injuria*

வீ

வீடுஅத்துமீறல் — *House Trespass*

வெ

வெளிப்படுத்து — *Declare*
வெளிப்படையான — *Patent, overt*
வெளியேற்றும் அறிவித்தல் — *Quit notice*
வெற்றும் வெறிதும் ஆதல் — *Null and void*

வே

வேண்டுமென்று — *Voluntarily; Willfully*

Shanthan and Shailly.